உ

கடவுள் துணை.

அகத்தியமுனிவரருளிச்செய்த

பெருநூல்

# வயித்தியகாவியம்

௲௫௱.

இஃது

திருவாவடுதுறை

## சண்முகதேசிகரால்

பார்வையிடப்பட்டு,

நுங்கம்பாக்கம்

இரத்தநமுதலியாரவர்களது

சண்முகவிலாச

அச்சுக்கூடத்திற்பதிப்பிக்கப்பட்டன.

அக்ஷய௵ - ஐப்பசி௴.

உ

சிவமயம்.

# அகத்தியமுனிவர்

அருளிச்செய்த

# வயித்தியகாவியம் - ௲௫௱.

[redacted]

K.S.

## காப்பு.

பாருடன்கணேசன்பாதம்பணிந்துமுக்குணங்களாய்ந்து ... ...*
வாதடத்தொகுதியெல்லாம்வகுத்தருத்திரமதாக்கி ... ... ... *
யாகமவிதியின்ஞாலத்தடர்ந்திடும்நோய்களெல்லாம் ... ... ...*
போகநல்மருந்துசொல்வோம்புலத்தியாபொருந்திக்கேளே... (௧)

## நூல் - நாடிவகை.

பொருந்திக்கேள் பொருந்திக்கீழே புகன்றேறுஞ் சுழியைப்பற்றி, யெழுந்ததோர் நாடிதானு மெழுபத்தி ராயிரந்தான், தெரிந்ததோ ரிவற்றில் பத்துத் தெசநாடி யிவற்றில் மூன்றும், பரிந்ததோர வாதபித்தம் படலையு மறிந்துபாரே....................................... (௨)

அறிந்துதா னிதற்குநாம மறைந்தன ரறிவுள்ளோர்கள், தெரிந்ததோ ரிடைதான்வாத மியன்றபின் கலைதான்பித்தஞ், செறிந்துகொள் சுழிதானையஞ் சேர்விட மெங்கேயென்னில், பிறிந்துகொள் மலமாம் வாதம் பேர்பெறு நீராம்பித்தம்.......................................(௩)

பித்தத்தின் கீழேஐயம் பெரியதோர் விந்திற்சேருங்,குத்தமே சேருமையங் குறிதனைக் குறித்துக்காணும், பித்தத்தைப் பிரித்து நன்றாய் பேசுவோம் பேதம்போக்கிப், பத்தத்தைக் குறியாயெண்ணிப் பரிவுடனறிந்துபாரே.......................................(௪)

பாரப்பா இடையிடக்கால் மாறியேகபாலஞ்சாடி, சாரப்பா வலக்கரத்திற் சார்ந்திடும் பின்கலைதான், சேரப்பா இடதுகாலிற் சென்றுதான் கபாலத்தேறிப், போரப்பா விடக்கரத்திற் பொருந்திப்போஞ் சுழினைகேளே..........................................(௫)

கேளப்பா புருவமத்திச் சுழினையா மிடைபின் மூன்றில், நாளப்பா நவதாதா நடந்திடும் நாடிபாரு, தேளப்பா நாடிபத்துந் தசவாயுவுடனே சேரும், சூளப்பா தசதானங்கள் சொல்லுவேன் சொல்லுவேனே ........................................ (சு)

## வேறு - நாடிஸ்தானம்.

சொல்லுகிறேன் காமியந்தான் குதிகால்சந்து- சொற்பெரிய [illegible]ந்திகர மார்புகண்டஞ், சொல்லுகிறேன் புருவமத்தி காதுமூக்கு - தொகைபத்தில் வாழ்ந்திருக்குந் தாதுமூன்றுஞ் - சொல்லுகிறேன் கரத்தெழுந்த நாடிமாறில் - சோதிக்கில் தசதானந் துடிப்புக்காணில் - சொல்லுகிறேன் சாகான்காண் பிணிதான்தீருந்- துஞ்சுகிறவிபரமதைச் சூட்டுறேனே ........................................ (எ)

துஞ்சியெழும் வாதபித்த ருயிர்தானப்பா-சூக்ஷமாய்த் தூன்றிய [illegible] சுழன்றுதேய்ந்து-மிஞ்சியே யஸ்திபற்றிக் குறுகித்தம்மில்- மேவியே மார்புள்ளே வாங்குமாகில், அஞ்சியே பட்சமொன்றி லடங்குஞ்சிவன்-அரகரா அவத்தையிது அறிந்துஇந்தப் - பஞ்சியேசூஸ்திரமாம் வாதபித்தம்-பக்குவத்தை நன்றாய்ப்பார்த் தறிதநன்றே......... (அ)

## வேறு - சமதாது.

அறிவது வாதந்தானு மாத்திரை யரைதானேடில்-செறிவது பித்தமப்பா சேர்சமனொன்றும் பின்னும் - பிறிவது அய்யந்தானும் பிரண்டது கால்தானேடி- மறிவது சமனதாகில் மயக்கமு மில்லைதானே.

## வாதகுணம்.

காணப்பா வாதமீறில் கால்கைகள் பொருந்திநோகும் : பூணப்பா குடல்புரட்டும் மலஞ்சலம் பொருமிக்கட்டும், ஊணப்பா குளிருங்காச்ச லுடம்பெல்லாம் குத்துவாய்வு-வீணப்பா குதமிறுக்கும் வேர்வையும் வேர்க்குந்தானே........................................ (௯)

## பித்தகுணம்.

தானென்ற பித்தமீறில் சடமெல்லாங் காந்தல்காணு- மூனென்ற வாந்திவாய்நீ ரூறியே ஒழுகுஞ்சால-வானென்ற மட்டில்வேகும் மண்டையில் குத்துண்டாகும்-தேனென்ற விக்கல்மூர்ச்சை செவியடைப்புண்டாம்பாரே........................................ (௰க)

## சேத்துமகுணம்.

'பாரப்பா அய்யமீறில் பாசத்தி னனல்தான்மீறும் - நேரப்பா இளைக்கும்தேகம் நெஞ்சுடன் விலாவுநோவாந்-தாரப்பா சுரமுஞ்சாயும்

சாதமு மொருக்குநாளில்-ஓரப்பா ரொத்தங்கக்கு முட...
பேருமே............................................

### நாடி நடை.

ஆமப்பா வாதந்தானு மனநடை கோழியாமை - தாமப்பா பி...
தந்தானும் தவளையைப்போலே பாயும்- போமப்பா அய்யந்தானு...
சர்ப்பம்போ லோடுமோடும் - நாமப்பா கண்டுசொன்றேம் நரம்
பொன்றில் நாடிமூன்றே ............................................ (௰௩)

### நாடி நிறம்.

மூன்றுபேர் நிறமுஞ்சொல்வேன் முதல்வாதங் கறுப்புச்செம்
மை-மான்றிய பசுமைபச்சை மஞ்சளா யிருக்கும்பித்தம் - தோன்றிய
வெண்மையப்பா சோர்வில்லா வையமாகும்- ஊன்றிய நிறங்கள்சொ
ல்னேன் உத்தமாறிவார்தானே ............................................ (௰௪)

### பஞ்சபூதவகை.

தானென்ற வஞ்சுபூதஞ் சதையெல்லாம் பிருதிவாகு- மானென்ற
ரொத்தந்தண்ணீர் மைந்தனேயப்புவாகும்- தேனென்ற வெதுப்புத்தா
னும் தேயுவின்கூறேயாகும்-மானென்ற வாசிதன்னில் வருகெந்தமறி
தல்வாய்வே ............................................ (௰௫)

அறிந்திடு மெல்லாமொன்று யாலிக்குந் திரவானந்தான் - பிறிந்
திடும் பூமிதானும் பேரொழு நாசிதன்னில்-செறிந்திடு மப்புத்தானுஞ்
சேர்ந்திடும் நாவிலேதான்-முறிந்திடு வன்னிதானு மூன்றிடுங் கண்ணி
லேதான்-பறிந்திடும் வாய்வுதானும் பரிசிக்கு மெங்கும்பாரே.. (௰௬)

பாரப்பா காதிலேதான் பரிசிக்கும் வானமைந்தா - போரப்பா
வஞ்சுபேர்க்குள் பொல்லாத பேர்தான்மூவ - ராரப்பா வாதம்வாய்வு
அப்பனே பித்தம்வன்னி-நேரப்பா வையமப்பு நிறைந்தவை யிதுமூ
ன்றுமே ............................................ (௰௭)

ஆமப்பா மூன்றுபேர்க்குள் ஆதாரம் வாய்வேயாகும்- ஏமப்பா
வாய்வுசேரி லெண்பில முடைத்தாய்நிற்கும்- வேமப்பா வன்னிகூடில்
வெந்துநீருக மாளும் - நோமப்பா சிக்கிநின்ற நோயெல்லாந் தணிக்
குந்தானே ............................................ (௰௮)

### தோஷகுணம்.

தானென்ற வன்னிவாய்வு தாண்டிமேற் கொண்டுதானால்- தானெ
ன்ற சுரத்தாற்றூடங் கனதாப மிகுதியாகுந்- தானென்ற வன்னியோ
டு அப்புவுஞ் சாருமாகில்-தானென்ற சீததோஷம் சார்ந்திடுந் தப்பில்
லாதே ............................................ (௰௯)

# ...வகத்தியமுனிவரருளிச்செய்த

...ரத் தோஷிந்தானுஞ் சார்ந்திடும் வாறுகேளாய்- கப்பில் ...தங் கடுந்தோஷிஞ் சாத்தியமாகும்-செப்பில்லாப் பித்தத் ...ால் வெண்மையாகிச்- செப்பில்லா வையதீதாடுஞ் சிவப் ...டனும் வாயுமாமே.......................................................... (உ௰)

வாய்வுதா னடங்கிற்ருனல் மைந்தனே தோஷிம்போகும்- வாய் வுதா னுப்பித்தானல் மண்ணொடு நீருமொன்றும்-வாயுவுஞ் சலந்தான் ரெண்டால் மைந்தனே வன்னிமாறும்- வாய்வுதா னண்டஞ்சேரில் ம ண்டல ஓசையாமே......................................................... (உக)

## தோஷக்குறி.

ஆமப்பா ஓசையேமு மலமொளி விழியஞ்சாகும்- நாமப்பா நா சிமூன்றும் நாவினி ரெண்டதாகும் - ஓமப்பா விந்தநீர்மை யுணர்ந்த வர் யோகியாகும்-வேமப்பா நாசிதன்னில் விழுகுறி விளம்பக்கேளே.

## மரணக்குறி.

கேளபபா தினந்தான்மூன் று கெடியிடை கலைதான்பாயில்-வாள பபா வருடமொண்டில் மறலியூர் புகுவான் பண்பாய்-நீளபபா தினமி ரண்டும் பின்கலை தானேபாயில்-மூளபபா தேகந்தானு மூவாண்டில் மரணமாமே........................................................ (உரு)

மரணமாந் தினமாம்பத்து வுபயத்தில் வாங்குமாகில்-மரணமாந் திங்களொன்றில் மைந்தனே கண்டுகொள்வாய்- மரணமா மூக்குவிட் டு வாய்வழி வாய்வுபாயில்-மரணமாந் தினத்தால்மூன்றில் வளம்பெற வறிந்துபாரு- மரணமா மலங்கள்மூன்றும் வற்றிருல் பட்சமொன்றே.

## வேறு.

ஒன்றுக வாய்நீருரி ரவிமே லுமியத்-தன்றுகத்தானு மிரவிமறைந் திருந்தாக்கால்-ஒன்றுகமூன் றதிங்கள் பொறுத்தவுடன்பொன்றிடுவார் நன்றுகநிழலலையில் வீழ்வார்காண் பட்சமொண்டே............ (உ௫)

## வேறு - தோஷவகை.

காணபபா தோஷிங்கள் பிறக்கும்போது - காணுநீ குறிசொல்வோ ம் கருதிபபாரு-தோணபபா வுன்னுக்கு வுதடுகாஞ்சு - சுகமான காது பல் குளுகுமாகில்- வீணபபா தினமூன்றில் மரணமாகும் - மேலான வன்னிக்குத் தோஷிமென்பார் - ஊணபபா வற்றிநின்ற பித்தத்தோர்க் கு - உடம்பு பருத்தாதினு லுனக்கக்கேளே........................(உசு)

கேளபபா மதியாறில் சாவுண்டாகும்- கேடிலையத்தால் விளைந்த தேகமானல்- நாள்பபா திங்களொன்றில் சாவார்சாவார்- நலமானசிவ கலை நாட்டங்கேளு - வேளபபா மேலேறி நடந்துதானல்- மேன்மை

யுடன் சீவகளை விடுபடாது-தாளபபா கீழ்னோக்கி நடந்துதானால்- தவ
றுவருஞ் சீவகளை நாடிதானே ....................................... (௨௭)

வேறு. தானென்றநாடி கீழேதாண்டியே வாங்குமாகில்- தானென்ற
வுயிர்தான்மாளுஞ் சாதகமின்னங்கேளு - தானென்றமூன்றுநாடி தன்
வசங் குறைந்து பின்னும், தானென்ற வாதபித்தந் தம்பித்து அய்யமீ
றில்,தானென்ற திடங்கொண்டாலுஞ் சாவதுதிண்ணமாமே .... (௨௮)

தோஷநிவிர்த்தியறிய.

ஆமப்பா வாதபித்தத் தாண்மையை அறிந்துகொண்டு, நாமப்
பா மருந்துசெய்ய நலமுறுதோஷந்தீரும், வேமப்பா பித்தமானால்
வெம்பிடு முயிர்தான்காணும்,போமப்பா வாதம்நிற்கில் பொருந்திய
மருந்துநல்கே ....................................... (௨௯)

நல்கியேமூன்றுநாடி நரம்பெல்லாங் குதித்துப்பொங்கி,இல்கிய
மேலின்மேலே யேறித்தானோடுமாகில்,மல்கிய மரணமில்லை மறிந்தது
கீழேசாடி,லுல்கிய வுயிருக்கீன முற்றும்நீ யறிந்துகொள்ளே... (௩௰)

அறிந்திட வுந்திக்கீழே யமளியாய் குதிக்குமாகில்,எறிந்திட வுயி
ரையுண்ணு மெய்யுமா தோஷிமப்பா,செறிந்திடா துந்திதானுஞ் சே
ரிடம்வாய்வுக்கப்பால்,மறிந்திடா தசநாடிக்கு மகத்தான்வீடாம்பாரே

பாரப்பா நோயுள்ளோர்கள் பக்குவம் பார்த்துநீயும்,வாரப்பா
வுமிந்திட்டாக்கால் மைந்தனே தூரப்போகில், காரப்பா தாக்கித்தா
னால் குறைந்தவன் சாகான்கேளு; சாரப்பா கிட்டவீழிற் சாவது சடு
திகாணே ....................................... (௩௨)

மந்தம்வருமாறு.

காணப்பா முறைபாடெல்லாம் காண்பது மந்தத்தாலே, பூணப்
பா மந்தமானால் புகுந்திடும் வாய்வுதானும், வாணப்பா நோய்களெ
ல்லாம் வாயுவால் வளரும்பாரு, மூணப்பா வப்புவன்னி மூத்தோஷ
மூன்றும்பாரே. ....................................... (௩௩)

பாரப்பா பந்தமுண்டாம் பரிசன முறைக்கக்கேளு, காரப்பா
மிகுந்துமெத்தக் கபளிக்கு மன்னத்தாலே, வாரப்பா விறைச்சியாலும்
மாட்பண்டத்தாலுந் தானுஞ், சோரப்பா மேதிபபாலால் சேர்ந்திடு ம
ந்தந்தானே ....................................... (௩௪)

தானென்ற வன்னத்தாலே தலைபட்ட வுடம்பிதயபா, தானென்ற
வன்னமபபா தனிபபழி கொண்டுமீறில், தானென்ற வன்னமெல்லாஞ்
சகலவித் தாகும்பாரு, தானென்ற தாதுக்கெல்லாந். தத்துவமுறைக்க
க்கேளே....................................... (௩௫)

கேளப்பா வெட்டைபித்தங் கெடியானவாதம்வாய்வு, வாளப்பா அய்யிஞ்சிதம் வாழ்ந்திடு மன்னத்தாலே, பாளப்பா வன்னந்தானும் பகையுடன் பழியுங்கொள்ளும், வேளப்பா வன்னத்தாலே மேகங்கள் பிறப்பைக்கேளே.......................................... (௫௬)

## மேகம்பிறக்கும் வகை.

மேகங்கள் பிறந்துநின்ற விதங்களை விளம்பக்கேளு, ஆகங்க ளிழந்தபோதும் அப்பனே தினமுஞ்சென்று, போகங்கள் செய்யும்போதும் புகழ்மந்தங் கூடும்போதும், பாகங்கள் பசியினோடும் பருகுஞ்சையோகத்தாலே. .......................................... (௫௭)

சையோகஞ் செய்யும்போதுந் தனிநின்ற சுழியேயோடும், அய்யனே அமுதந்தன்னை அடக்கியே அனல்தான்கொள்ளு, மெய்யடா விந்துகாணில் விழவிழப் புண்ணுங்காணும், மையடா மேகத்தாலே வளர்ந்தது கிரந்திபாரே .......................................... (௫௮)

கிரந்தியால் விரணமுண்டாம் கெடியதிற் றியாமேகம், முரந்திய விரண்டினாலே யுலைவாயில் சூலைகாணும், பரந்திய மூன்றினாலே பலபலமேகங்காணும், துரந்தியலிங்கத்தாலே தொல்லைநோயெய்துங்காணே

தொல்லையாஞ் சுரத்தினாலுஞ் சூழ்கின்ற வாயுவாலு, மல்லையேசெய்யுமாகி லன்னத்தைக் காட்டிடாதே, வல்லையேவன்னிராசன் வழியது செய்வேயானால், தொல்லையேதில்லையப்பாசூழ்நோயும்வாய்வுதானே.

வாயுவே மிகுந்ததானால் மைந்தனே மேல்மூச்சேறும், வாயுவே மிகுந்ததானால் மலர்ந்திடும் விரணமெல்லாம், வாயுவே மிகுந்ததானால் மலஞ்சல மிரண்டுங்கட்டும், வாயுவினாலேயப்பா வளருத்திர ரோகமாமே. .......................................... (௬௧)

## ருத்திரரோகம்.

ஆமப்பா ருத்திரரோகத் தாண்மையை யுரைக்கக்கேளு, வேமப்பா வென்பிற்பாய்ந்து மிகநெஞ்சிற் குத்துண்டாக்கி, போமப்பா பித்தந்தன்னைத் தம்பித்துப் போகொட்டாமல், பாமப்பா பேசும்போது பதையாமற் சாவார்பாரே. .......................................... (௬௨)

## வேறு - சுகசன்னி.

பதைபாமல் செய்கின்ற சன்னிமார்க்கம்- பாய்கின்ற விதங்கேளு பண்பாய்நீயும், திதையாம லெண்ணையுடன் தீர்த்தமாடி - நிரம்பவே தயிர்கூட்டிப் பொசித்தபின்னுங், குதையாத மந்தமுடன் புணர்ச்சிக்கூ

ட்டில் - கூட்டியே வாயுதான் கபாலத்தேறி, அதையாமல் போகிக்கு மோகஞ்செய்யும் - அபபனே யசதியொடு சன்னியாமே...... (சங)

## வேறு.

சன்னிதான் ரூேன்றுபோதுஞ் சடமெல்லாம் வேர்வைகாணும் கன்னிதன் சுகத்தால்மைந்தா கண்கள்தான் சிவபபேயாகும், வன்னிதான் காற்ருலையா மகத்தான தோஷிமாகு, மின்னிதான் சுகத்தில்நன்ருய் விழுந்திடுங் காயந்தானே. .......................................... (சச)

## மூலரோகம்.

காயத்தில் மூலரோகங் கண்டிடும் விதங்கள்கேளாய், பாயொத்த பசியில்லாமல் பட்சிக்கி லடக்கில்வாய்வு, மாயத்தி லிருத்திக்கொண்டு மலமதை யடக்கும்போதும், ஒபத்த குண்டலிக்கு ளூட்புகும் வாய்வுதானே. .......................................... (சரு)

காணபபா வாயுவாலுங் கனத்தந்த வபானன்றன்னைப, பூணபபா மலத்தைக்கட்டிப புகையெனக் கருக்கிநாளுந், தோணபபா முளையைபபோலச் சுருக்கிமூன் மலந்தான்வீழில், ஆணபபா அபானந்தன்னை அழுந்தவே யிறுக்கும்பாரே. .......................................... (சசு)

இறுக்கிய மூலமென்று எழுமண்ட மூலமொன்று, வறுக்கியே புண்ணுய்சீதான் வடிகின்ற மூலமொன்று, உருக்கியே வாயுவாலேயுதிரந்தான் கட்டிநின்று, தருக்கிய கிரிச்சினங்கள் தான்ரத்த மூலமாமே

மூலமே யெழுந்தபோது மூலத்தில் கனல்தான் மாளும், மூலமே யெழுந்தபோது முளைவிந்து நாசமாகும், மூலமே யெழுந்தபோது முழங்கவே யிளைச்சலாகும், மூலமே யெழுந்தபோது முகிவில்லாக் கழிச்சல்தானே. .......................................... (சஅ)

## வேறு.

கழிச்சலென்ற கிராணியிலே விதமாரபபா - கண்டபித்த மனல்வாதம் வாயுவாகும், அழிச்சலென்ற அய்யநீர் மூன்றுங்கூடி - அபபனே பேதிக்கும் பிலந்தான்போகுந், தெழிச்சலென்ற வாய்வுதான் மேகபேதி-திரமான மூலத்தின் தோஷிபேதி, பழிச்சலென்ற சங்கானபேதியொன்று-பாரபபா வாயுவொன்று ஆறுமாச்சே. .......................................... (சகூ)

## வேறு - மேகத்தின்குணம்.

ஆச்சபபா மேகங்களு அபபனே மூன்றதாகும், நீச்சபமாமே கந்தன்னை நிசஞ்சொன்னேன் காணுகாணு, காச்சபபா மஞ்சள்போல

க் கவிசணந் தன்னிற்கண்டால், வீச்சபபா பித்தமேகம் விளம்பினூர் விரும்பிக்காணே.......................................................(௫௧)

விரும்பியே சிலைதானும் வெளுத்திடில் வாதமேகம், மருவிய கவிசணந்தான் மயிலதினிறமேயானல், திரும்பியஅய்யத்தாலேசேர்ந்திடு மேகமாகும், சுரும்பிய மூன்றுலப்பா தோன்றிடுங் குணங்கள்கேளே

கேளப்பா பித்தம்வாய்வு கெடியுடன் சேருமாகில், தாளப்பாஞாளமான தமரிலே யெரித்து வேகும், வீழப்பா நீராக்கட்டும் விஷம் பொசிந் திழியும்பாரு, பாரப்பா சிலநேரந்தான் பளிச்செனப் பிறங்குந்தானே.......................................................(௫௨)

தானென்றவாய்வொதுங்கில் தண்டினில்நோவுகாணும் - வானென்றமந்தத்தாலே வாயுவுட்புகுந்தேசாடும் - கானென்றவெரிச்சல்காணும் கல்லடைப்பாகும்பின்னே - மானென்றவாதம்வாய்வு மருவிடில் வெள்ளைகாணே.......................................................(௫௩)

வெள்ளைதான்மெத்தவீழில் மேனியும்பொருமிக்காணும்- கள்ளமேசரீரமெல்லாங் கறுப்புடன்றழும்புமோடுந்- தள்ளவேதாதுநட்டந் தாகமுமிகுதியுண்டா- முள்ளதுசொன்னேம்நாமு மூற்றுணர்ந்தறிந்துகொள்ளே.......................................................(௫௪)

அறிந்திடாவாயுவோடே அய்யம்வந்தெய்துமாகில்- பிறிந்துநீர் பொசிந்திடாது பிறவெள்ளைவீழ்ந்திடாது - எறிந்திடுந்தீயேபோல இளைப்புடனிருமலுண்டாம் - மறிந்திடும்புகைச்சல்காணும் வலித்திடு மேகந்தானே.......................................................(௫௫)

வலித்திடும்வாதந்தானும் வளரய்யம்பித்தந்தானு - மொலித்திடு மகத்தாமேகம் மொழுகிடுஞ்சரந்தான்மாறி-சலித்திடுந்தாகமீறுஞ் சாப்பிட்டாலுடனேகாந்தும்- வலித்திடும்வாய்நீரோடு மழுங்கிவாயினிக்கும்பாரே.......................................................(௫௬)

இனித்திடும்வாதமேகத் தியல்புநல்லெண்ணெபோலும் - பனித்திடுங்கள்ளுப்போலும் பதியில்நீர்போல்தானுடும் - கனித்திடுமேனியெல்லாங் காய்ந்திடும்வெளுத்துப்போகும் - தனித்திடுமேகந்தானும் சாத்திகமையந்தானே.......................................................(௫௭)

அய்யமும்பித்தமுந்தா னணைந்திடுங்காலந்தன்னில் - கொய்யுறுமொத்தந்தானும் கொப்புளித்தோடுந்தண்டில்-மையுறுங்கண்ணிஞட்கு மகே●தரம்பெரும்பாடாகும்- தொய்யுறுமேகமுண்டாந் தொடர்ச்சியைமுறைபாய்க்கேளே.......................................................(௫௮)

முறைகேளுஒன்பதப்பா முயற்சியால் வந்தமேகந், துறைகேளு
கெர்ப்பத்தாலுஞ் சூழ்கின்ற மேகமொன்று, நரைபூத்த கூந்தல்நல்ல
நாயகன் மோகத்தாலு, மறைபோற்றுங் கெற்பத்தாலும் வளர்ந்தது
மேகந்தானே. ........................................................................ (௫௯)

வளர்ந்திடுங் கெற்பத்தாலு மருவிய மேகமஞ்சு, முளர்ந்திடு தந்
தியாகு முள்ளத்தில் மேகந்தானே, யளந்திடும் வெள்ளைகொட்டு மா
காதமாமேகந்தான், தளர்ந்திடுமத்தி மீறித்தணலெனும் புருக்கியாமே.

தணல்போலக் காயுமேகந் தண்ணீர்தான் பகையாமேகம், மு
ணக்கவே முழுகுமாறில் முருக்குமா மேகந்தானும், பிணக்கவே பசி
தான்கெட்ட பேரொழு மேகந்தானும், வணக்கவே சையோகத்தைவர்
ச்சிக்கு மேகமாமே. ........................................................................ (௬௧)

ஆமப்பா கடுவெஸ்துண்டா லாகிய மேகம்பின்னு, மோமப்பா பா
ஷாணத்தா லுற்றிடுஞ் சிலமேகங்கள், நாமப்பா சொன்னோமிந்தநாடி
யாஞ் சூத்திரந்தன்னில், ஓமப்பா விதுதானேழு மஞ்சுமூன் றென்ப
தாமே. ........................................................................ (௬௨)

குன்மவரலாறு.

ஆகியமேகந்தானு மப்பனே யிருபத்தொன்று, மேகியகுன்மந்
தானு மெழுந்ததோர் விதங்கள்சொல்வோம், பாகிய பித்தத்தோடுவா
தமும் பரிந்துசேரில், வாகிய வாய்நீரூறும் வாந்தியு மாகும்பாரோ ()

பாரப்பா வாய்வுவாதம் பரிவுடன் அபானத்தேங்கில், ஓரப்பா
கும்பிதன்னி லுருண்டுதான் மிகவேநோகும், சோரப்பா நெஞ்சில்கு
த்துங் குடலையு முருக்கிக்கொண்டு, வாரப்பாவலிக்குமெத்த வாதமாய்
வழங்கும்வாய்வே. ........................................................................ (௬௪)

வழங்கிய அப்புவோடு வாதமு மொன்றேயானால், தழங்கிய அன்
னசாரம் சந்திக்க வொட்டாதப்பா, புழங்கிய நிதானம்தப்பிப் பிடிய
ன்ன மேறில்குத்து, முழங்கிய முறுக்குமேறில் உயிரையும் வதைக்கும்
பாரோ. ........................................................................ (௬௫)

வதையுறு வாயுவோடு மேகமு மருவுமாகில், பதையுறு மலஞ்சல
ங்கள் பரிவுடன் கட்டிக்கொள்ளு, மதையுறு மிடதுபக்க மைந்தனே
வலதுபக்கம், பிதையுறுமுறுக்கிக்குத்தும் பெருஞ்சூலை குன்மமாமே.

சூலைவருமாறு.

குன்மமோ ரிதுதானுலில் கூறிலெண் விதமாம்பாரு, வன்னமா
ம்நோய்கட்கெல்லா மகாநோய்தான்பொல்லாதாகும், கன்மமாஞ் சு

டத்துக்கெல்லாங் காணுங்கா ணிந்தரோகம், நன்மையாந் தன்மத்தோர்க்கு நடந்தாலும் நாடிடாதே .................................... (சுஎ)

நாட்டிய பித்தசூலை நடத்திய வுறவைக்கேளும், ஊட்டிய வன்னமுண்ண ருசிதப்பி வாந்தியாகும், மாட்டிய லகைகால்சந்து வகையுந்தன் மேலும்நோகு, நீட்டியவங்கங்கேதான் நின்றெரிந்தூறுங்காணே

காணப்பா வாதசூலை காட்டுந்தன் குறியேதென்னில், காணப்பா கைகால்சந்து குலைச்செல்லாங் கடுத்து நோகும், காணப்பா வயிறுவிம்மிக் கனத்துடன் சுரப்புங்காணும், காணப்பா தேகமெத்த கனத்திடு மிளைப்பதன்றே.................................... (சுகூ)

இளைத்திடும் வாதசூலைக் கெய்திய குணங்கள்சொல்வோம், குளைத்திடுங் கைகால்நெஞ்சு குத்துடன் வரண்டிருக்கும், தளைத்திடு மார்பில்சென்று தாக்கிமே லேறிவெட்டு, மளைத்திடுஞ் சீய்தான்கக்கும் ஆகாத் வையுமாமே.................................... (எய)

ஆகாத வாதபித்த மணைந்திடுஞ் சூலைகேளு-வாகான கால்கள் கையில் வளமுடன் கரடுகட்டுந் - தாகான மேனியெல்லாந் தடிப்புடன் வெடிப் புண்ணுகி - போகாத அசாத்தியமாகிப் புணர்ச்சியால் கொல்லுந்தானே.................................... (எக)

கொல்லிய வையத்தோடு பித்தமுங் கூடித்தானல் - வல்லியம் போலக்குத்து மைந்தனே யெழும்புதோறும் - மல்லிய சரீரம்நோகும் வரிசையாய் சுரமுங்காணும்- மெல்லிய தனுத்தான்வற்றும் விடங்கக்கு மிருமுந்தானே.................................... (எஉ)

தானென்ற வய்யத்தோடு சமவாத சூலைகேளு - ஊனென்ற சடந்தானேகும் ருசிதப்பும் பாலம்புண்ணும்-கானென்றகாலிலாணி எலும்பெலாங் கறுத்துக்கெட்டு - கோனென்ற கழிச்சல்வாங்காக் குளிர்சுரமாறலாகி-மானென்ற தாதுநட்டம் மறுசூலை யாறம்பாரே..... (எங)

ஆறுகுஞ் சூலையப்பா அதிலொன்றில் மூன்றுசூலை - வேறுகும் பதினெட்டாகும் வெவ்வேறு சூலையில்லை-கூறுக விதனலப்பா குணங்கள்தான் கோடியாகும்-பேறுகு மிவர்கள்பேரைப் பிரித்துரை செய்வோம்பாரே.................................... (எச)

பாரப்பா கெர்ப்பகாரம் பரிவுடன் வாய்வுதெய்வு- சேரப்பா புத்தியோடு சென்றிடிற் கருத்தான்மாளும் - வாரப்பா புழுத்தானுண்ணில் மலடெனச் சொல்வாரப்பா-ஆரப்பா விதனைப்போக்கில் ஆண்பிள்ளைஜெனிக்குந்தானே.................................... (எரு)

செனிக்கின்ற குழவிதானுந் திடத்துடன் பிறக்கும்போது- கனிக்கின்ற சிய்நீர்போலே கலந்துள்ளே கட்டிநிற்கும்-பனிக்கின்றவிடுப்புக்கைகால் பாவியே நொந்துகுத்துந்-தனிக்கின்ற பசிதால்போகுந் தடித்திடு மமுதம்பாரே........................................ (எசா)

பாரிய வாய்வுதானும் பரிவுடன் குழிதான்சேரில் - தாரிய கழிச்சலாகிச் சதாநித்தமுறுமிச்சாடும்- வாரிய தேகமெல்லாம் வலியெழுமிடைதாஞ்ஞெகும்-மாரியனெனக்குச்சொன்ன ஞய்ந்தவர் சித்தர்தானே.

தானென்ற கெர்ப்பத்தோடு தரித்திடுஞ் சோவைகட்டில்-வானென்ற மத்துப்போல வாயுவுமுருளும்பாரு- ஊனென்றபசிதான்போகு மூளைந்துதா னிவைச்சலுண்டாம் - மானென்ற கழிச்சல்மீறும் வருஞ்சூத வாயுவாமே........................................ (எஅ)

சூதான கெர்ப்பகாலஞ் சுற்றியே விந்துகொள்ளில் - வாதானமேகமீறி வழங்கியே செனிப்பிக்குங்காண், போதான வுடம்பதெல்லாம் புண்போலே மிகவும் நோகும், நீதான மயக்கமாகி நிற்சிவ ஞகுவானே........................................ (எகூ)

ஆகின்ற வாறுசூலை கெர்ப்பத்தி லடர்ந்த நோய்காண், பாகின்ற வவைதான்குழில் பலித்திடாக்கருவுமப்பா, வாகின்ற திதுதான் போக்கில் மலடிதான் பெறுவாள்பிள்ளை, யாகின்றநோய்கட்கெல்லா மறைந்திடு முறைபாடாமே........................................ (அய)

## கெர்ப்பசன்னி.

முறையான கெர்ப்பந்தன்னில் முயன்றதோர் சன்னிகேளு, உறையான சிய்நீர்க்குள்ளே யுறைந்திடில் வாய்வுமீறில், விறையான தேகம் வேர்க்கும் மெய்யெல்லா மயக்கமாகும், துறையான மலத்தான்கட்டுஞ் சோபிக்குந் துணிந்துபாரே........................................ (அக)

பாரப்பா மாதர்க்கெல்லாம் பச்சுடம் பாகுங்காலம், தாரப்பா வனுயோகிப்பள் தனிபழங் காடியுண்பாள், ஆரப்பா மாங்காய்தின்பா ளப்பனே மாவுதின்பாள், கூரப்பாசன்னியெய்துங் கொண்டிடுஞ் சன்னிகேளே........................................ (அ௨)

கொண்டிடு மலடிக்கப்பா கூடிடு மெட்டுசன்னி, வண்டிதான் ருதுகாலத்தில் மாத்தின்பாள் மோர்தானுண்பாள், தண்டியே யணைவாள்பின்னுந் தனிச்சூதக் காயுந்தின்பாள், ஒண்டிய பெண்களுக்கு ஒரொட்டுச் சன்னியாமே........................................ (அ௩)

ஒரொட்டுச் சன்னியப்பா யுற்றதோர் பெண்களுக்கு, வாரொட்டுப் புருஷனுக்கு மகத்தான சுகசன்னிதான், நேரிட்டுப்பார்க்கும்போது

நெகிழ்ந்ததுவெவ்வேறுகும், பாரொட்டு மெச்சவேதான் பகர்ந்திடும் கண்ணோய்கேளே.............................................................(அச)

## கண்ணோய்வகை.

கேளப்பா பொடிச்சூடாலும் கிளர்வெய்யி லதுகாய்ந்தாலும், வாளப்பா மின்னார்தம்மை மருவியே நித்தநித்தம், காளப்பா முழுக்கிலாதல் கண்ணினால் கனல்தான்பார்த்தால், தாளப்பா பாஷாணத்தால் தானெழுங் கண்ணோய்பாரே.........................................(அரு)

கண்ணினோய் தானுண்டாகுங் காரண மின்னஞ் சொல்வோம், பண்ணான மேகத்தாலும் பகர்வெட்டை வாயுவாலும், தண்ணானப்புவாலுந் தனிமலக்கட்டினாலும், புண்ணான விரணத்தாலும் பொருந்தின காரத்தாலே.................................................(அசு)

காரமாஞ் சாரத்தாலுங் கடிரசந்தூமத்தாலும், நீரமாஞ்சரக்குகட்ட நிலையுறு புகையினாலும், பாரொத்த பேதியாலும் பலபல தண்ணீராலும், வீரமாமிவற்றில்கண்ணில்செழித்திடும் வியாதிதானே(அஎ)

## குஷ்டவகை.

வியாதிகள் மூவாறுக்கும் விளங்கிய குட்டங்கேளு, உபாதியா மேகத்தாலும் சூழ்கின்ற கிரந்தியாலும், பயாதிய மாறதாகும் பலவண்டி ஞூளெயெட்டாம், பயாதியாம் புழுவானாலும் அய்யமாம் பதினெட்டாமே.................................................(அஅ)

ஆமப்பா நோய்கட்கெல்லா மாகுதான் மூன்றுநாடி, காமப்பால் வளர்ந்தெந்நாளுங் கருவியே கலந்துசேர்ந்து வேமப்பாவெந்துநீறி விடமெல்லாம் பிளந்துபின்னுஞ், சாமப்பா பிறக்குமந்தத் தாதுவின் விளக்கங்காணே.................................................(அகூ)

காணப்பா நாடிசொன்னேன் கலந்திடுங் கருவுஞ் சொன்னேன் தோணப்பா நோயுஞ்சொன்னேன் சூட்சமும் வகுத்துச் சொன்னேன், பூணப்பா யவத்தைசெய்யும் பூட்டையும் விரித்துச்சொன்னேன், வீணப்பா சொல்லவில்லை விதிமுறை வணங்கிக்கேளே... ... ...(கூய)

கேட்டிடும் நாடிபத்தில் கெடியெழு நாடிதள்ளி, நாட்டிடுநாடி மூன்றில் நயம்படுமிடையேவாதம், மாட்டிடும்பின் கலைதான்பித்த மப்பது சுழிதானாகும், வாட்டிடு மவமேவாத மருவிடும் பித்தநீரோ(கூக)

பித்துற்ற அய்யம் விந்து பிரிந்ததற் பூதங்கேளு, உத்தநல் வாதம்வாய்வு ஓங்கிய பித்தந் தேய்வு, சுத்துற்ற அய்யந் தண்ணீர் சோர்

வில்லைப் பின்னவாதம், பத்துற்ற பிராணன் பித்தம் பகையுறு சமா
னையே............................................................(௯௨)

அய்யமா நாடிமூன்று லழிக்கவு மாக்கலாகும், நய்யமே யொ
ன்றில்மூன்று நாடியாம் நல்லதாகி, ஐமயுறுங் கருவிக்கெல்லாம் வாச
ல்காப் பவரோயாகிச், செய்யுறு தொழில்கட் கெல்லாஞ் சித்துட னகி
த்துமாமே............................................................(௯௩)

ஆமப்பா வெழுபத்திரா யிரநாடி பத்தில்மூன்றாய், சோமப்பா
வுந்திக்கீழே சுழிதனைப் பற்றிநிற்கும், காமப்பால் விளைத்தெந்நாளுங்
கறுவிய வத்துப்பின்னும், சாமப்பா விளக்குமந்தத் தாதுவின் வள
க்கந்தானே............................................................(௯௪)

வளர்ந்திடுந் தாதுதன்னை வகையதில் துகையேசொன்னேன், வ
ளர்ந்திடும் வியாதிக்கெல்லாம் மணியொடு மருந்தைச்செப்ப, வள
ர்ந்திடுஞ் சரக்குக்கெல்லாம் வகைவகை சுத்திகேளு, வளர்ந்திடும்நோ
ய்களெல்லா மருந்தினு லொழியுங்காணே..........................(௯௫)

## வேறு - ரசசுத்தி.

காணபபா சூதமொரு பலந்தான் வாங்கி, கல்வத்தி லமர்த்திடே
மஞ்சள் தூளால், தோணபபா மத்தித்து ஓட்டடையின் தாளுஞ் - சுக
மான வெற்றிலையின் சாறுவிட்டு, ஊணபபா தனித்தனியே கடிகை
மூன்று- உறத்தோய்ததுத் திரும்பவதை யூறப்போட்டு, பூணப்பா தா
ழைநீர் மலாக்காய்நீரும்-புகழான செம்பரத்தம் பூவின்சாறே (௯௬)

சாருகும்வெற்றிலையின் பாகல்கிழங்குந் - தன்சாறுமைமங்கோலக்
சாறுங்கூட, மாருமல ம்மான்பச் சரிசிச்சாறும் - வாயுவுறு சாரணைச்
சா றரசம்பட்டைச்சாறும், கூருகுங் கொன்றையுட பட்டைச்சாறுங்
கொத்தோடே மும்மூன்று கடிகைமத்தி, வாருக விப்படியே மத்திச்
சாக்கால்-வாலைபோற் பிரகாசம் வருந்தான்பாரே...............(௯௭)

## திரவியசுத்தி.

பாரப்பா ஒரிருபத் தைந்துசுத்தி - பாடுகிறேன் திரிகடுகு திரிப
லையுமிக்க, சீரபபாமாமஞ்சள் கற்கண்டுசக்கரையும் - சீரானசம்பழு
முந்திரிகையுடனே, போரபபா கொம்மூட்டி பொன்மூசுட்டை - நா
ரிபுளியாரை கொடிவேலி மணத்தக்காளி, நீரபபா கற்றாழை வாய்வி
ளங்கம்கெந்தி- நேர்ந்த கருஞ்சீரகமுங் கோஷ்டந்தானே... ..(௯௮)

கோஷ்டமொடு நாயுருவி யிருபத்தைந்துங்- கூறுனநீர்கொண்டு
ங்கியாழங்கொண்டும், ஆட்டமூடன் மத்தித்துக் கடிகைமூன்று - அப்ப

...னைவெவ்வேறே செய்தாயானால், ஊட்டலாங்குளிகை அவிழ்தத்துக் ...கெல்லாம் - உத்தமனே வேதையாம் நோயுந்திரும், பாட்டெல்லாஞ் ...சூதத்தா லல்லோசித்தர் - பாடினார் நூல்தோறும் பாடினாரோ....(கூகூ)

## கெந்தகசுத்தி.

பாடியதோர் கெந்திக்குச் சுத்தியென்ன - பசுவிநெய்யி லிட்டுரு ...ங்கிப் பாலில்சாய்ப்பாய், ஆடினதோர் சுத்தியப்பா அவிழ்தத்துக்கா ...கும் - அப்படியே யேழுதர முருக்கிச்சாய்ப்பாய், நாடினதோர் ம ...னோசிலையின் சுத்திசொல்வோம் - நறுக்குவாய் பணம்போலே நன்று ...ப்நீதான், மூடினதோர் கிழிகட்டி யாட்டு நீரில் - மூதிரவே தோளா ...ந்திர மெரித்துவாங்கே........................................(ஙா)

## மனோசிலைசுத்தி.

எரித்திடுவாயுளுந்து வெந்ததண்ணீரிலிட்டு - எரித்திடுவாய்மனோ ...சிலைதான் சுத்தியாச்சு, மறித்திடுவோரில்லையப்பா துறைக்கெல்லாமா ...கும் - மகத்தான தாளகத்தின் சுத்திகேளு, பரித்திடுவாய் பணம்போ ...லே தாளகத்தைவெட்டி - பருஞ்சீலை தனைமுடிந்து கிழிதான் கட்டி, அரித்திடுவாய் தோளாந்திரங் கோமயத்தினாலும் - அப்பனே காடியா ...லவித்திடாயே...........................................(ஙக)

## தாளகசுத்தி.

அவித்திடுவாய் சுண்ணநீர் பூசினிக்காய்நீரில் - ஆவின்பால்அரசம் ...பட்டைக்கியாழத்தாலும், அவித்திடுவாய் மூன்றுதின மூறப்போட்டு அரகரா வெடுத்திடவே சுத்தியாகும், அவித்திடவே சாதிலிங்கஞ் சுத் ...திகேளு - அப்பனே குப்பிவைப்பை நொறுக்கிக்கட்டி, அவித்திடுவா ...ய்பழச்சாற்றில் முலைப்பால் தன்னில் - அடைவாக விருசாம மூறப் ...போடே...........................................(ஙஉ)

## லிங்கசுத்தி.

ஊறவே லிங்கமது சுத்தியாகும் - ஊட்டுவாய் துறைக்கெல்லாமு ...றைத்துப்போகும், சிறிநின்றநாகசுத்தி தன்னைக்கேளு - செப்பரிய எ ...ண்ணெயாம் பாலுமாகு, மீறவே மோராகுங் காடிநீராம் - வெண்மாட் ...டுக் கோமயமாம் பழச்சாறுகும், வீறவே யெருக்கம்பா லிவைகள் ...தன்னில் - வெந்துருக்கிச் சாய்த்திடவே சுத்தியாமே...... ......(ஙா)

## நாகசுத்தி.

சுத்தியென்ற நாகமப்பா மணிக்கட்டாகுஞ் - சூதத்துக்காகுமது ...நீற்றுக்காகுஞ், சித்தியென்ற செந்தூர மருந்துக்காகுஞ் - சித்தரெல் ...லாஞ் சுத்திதன்னைத் திறந்தாரில்லை, பத்தியுட னிருவங்க மிபபடித்

தாஞெருக்கிய- பாங்காகச்சாயபபா சுத்தியாகும், வெற்றியுறும் வெ ள்ளைக்குச் சுத்திசொல்வேன்- வெட்டடா பணம்போலே பொடியா ய்த்தானே............................................(௧௦௪)

## பாஷாணசுத்தி.

தானென்ற பொடியதனை கிழிபோல்கட்டி - தனிச்சுண்ணநீருள் ளே தோளாந்திரமாட்டு, தேனென்ற ஆவின்பால் சாணிப்பாலால்- நி றவாமல் மூடியதை யெரித்துவாங்கு, வானென்ற பாஷாணம் சுத்தி யாகும் - மாட்டுவாய் துறைக்கெல்லாம் சிததியாகுந் தேனென்ற எலி விஷத்தின் சுத்திகேளு- சிறுகீரை யாவின்பால் காணச்சாறே... (௧௦௫)

## எலிவிஷசுதகி - நாவிசுத்தி.

சாறுகளில் தோளாந்திர மாகவாட்டித - தயவாக வெடுததிடவே சுததியாச்சு, வேருகு நாவியுட சுததிசொல்வேன் - வெண்பருததியிலை ச்சாற்றி லிருசாமம்போட்டு- மீருமல் கோமயததி லிபபடியேசெய் து - மீண்டுமதை யேரண்ட யிலையில்சுற்றி - மாருமலிலைவாட்டி யெ டுததுக்கொண்டு மைந்தனே துலறக்கெல்லா மாட்டு மாட்டே.(௧௦௬)

மாட்டுவாய் சீந்தியுட கியாழததிட்டு-மருவியதைதத தோளாந்திர மெறிததுவாங்கி, ஊட்டுவாய் கோமயததால் கழுகச்சுததி- யுற்றெருக் கம்பாலிலே யூறப்போட்டு, கோட்டுவாய் கோப்பாலிற் கழுவச்சுற்றி குற்றபரும் நாவிசுற்றி கூர்ந்துகேளு, ஆட்டுகிற அயப்பொடியின் சு ததிதன்னை - அறையுறே னன்ருக அறையுறேனே..................(௧௦௭)

## அயப்பொடிசுத்தி.

அறையுறேன் அயக்கிண்ண மொன்றுவாங்கி - அப்பனேயெள் ளெண்ணெ யதற்குள்விட்டு, குறையாமலொருசாமம் வறுததுநன்ருய்க் குமுறவே காடிவிட்டுக் கழுவச்சுததி மூறையாகக் கருவேலம் பட் டைச்சாற்றில்-முசியாம லிருசாமம் வேகவைத்து, நிறையாகக் காடி யிலே கழுவிபபோட்டு-நீட்டுவா யிந்தசுத்தி நிலைத்தபோக்கே. (௱௮)

## அப்பிரகசுததி.

போக்காக அப்பிரக சுத்திதன்னைப்- பூடடுகிறேன் அப்பிரகம் படிதா ஞென்று, வாக்காகக் கோமயந்தான் படிதான்மூன்று - வகைகண்டு சு மஞக விரவிவைத்து, வீக்குவாய் ரெண்டுபடி நீர்தான்வத்த - வெந்த பின்பு சுணைப்புள்ள நெல்லில்சேர்த்து, தாக்கியே கிழிகட்டிப்புளித்த காடி - தனில்விட்டுக் கசக்கிடவே கரையும்பாரே, .................(௱௯)

## தாம்பிரசுத்தி.

கறைத்தந்தக் காடியெல்லாந் தெளியவைத்துக்-கலக்காம லிருத்
தப்பா உலரவைத்து, நிறைத்ததொரு செந்தூரம் பற்பம்பண்ணு-நி
லைத்தந்த நோய்களெல்லாம் நீறாய்ப்போகும், தறைக்குளோளிர் தாம்
பிரத்தின் சுத்திகேளு - சல்லிபோல் தாம்பிரத்தை நறுக்கிவாங்கி, நி
றைத்திடுவாய்ப் புளித்தமோர் காணச்சாத்தில் - நீயேழு தரங்காச்சித்
துவைத்திடாயே. .................................................. (௱௰)

## காந்தசுத்தி.

துவைத்திடுவா யேழுதர மெருக்கம்பாலில் - சொல்லுகிறேன் ந
ல்லெண்ணை கோமயத்தில், துவைத்திடுவாய் பழச்சாற்றி லாவின்பாலி
ல் - சுருக்கான கற்றாழை பொன்னாங்காணி, துவைத்திடுவா யிதுகளி
லே காச்சிக்காச்சிச் - சுத்தியாந் தாம்பிரத்தைச் சூட்டுசூட்டு, துவைத்
திடவே காந்தசுத்தி சூட்டநீகேள்-தூசிபற்றுங் காந்தத்தைத் துண்டா
ய்வெட்டே.................................................. (௱௰௧)

## நிமிளைசுத்தி.

வெட்டியதோர் காந்தத்தில் சம்பிரச்சாறு - வெகுநாளைக்காடி
யுடன் புளித்தமோரில், கொட்டிடுவாய் மூன்றுதினம் வற்றவற்ற-கூட்
டாத துறைக்கெல்லாம் லோகத்தோடும், மட்டில்லைக் காயசித்தி யோ
கசித்தி - யப்பனே நிமிளைசுத்தி அதையக்கேளு, வட்டியுறு நால்வகை
யு நொறுக்கிக்கொண்டு - வாழையுட கிழங்குநீர் வாங்குவாங்கே (௱௰௨)

## துத்தசுத்தி.

வாங்கியேநிமிளையிட்டு எரித்துமைந்தா - வைத்திடவே சுத்திய
மயக்கமில்லை, பாங்கியாந் துத்தத்தின் சுத்திசூட்டப் - பணம்போலே
பொறுக்கியதைக் கிழியாய்க்கட்டி, ஆங்கியாம் அமூரியிலே யேழுசாம
மாவினுட நீர்தனிலே யிரண்டுசாமந், தேங்கியதைத் தோளாந்திர மெ
ரித்துவாங்கு-சித்திபெறச் சுத்தியாம் லோகத்துட்டே....... (௱௰௩)

## குக்கில்சுத்தி.

ஊட்டவுந்தான் குக்கில்தன்னைச் சுத்திசெய்ய- உத்தமனே யிடித்
ததனைக் கிழிதான்கட்டி, மூட்டுவாய் திரிபலையுந் தேவதாரம்-முதிர்ந்
துநின்ற பேய்ப்புடலின் கியாழம்பண்ணி, ஆட்டுவாய் தோளாந்திரம்
நாலுசாமம் - அதின்பிறகு பேய்ப்புடலின் பத்திரிகூடக், காட்டுவாய்
நிம்பத்தோல் கியாழம்வாங்கி- காச்சடா குக்கிலுட களங்கம்போமே.

### தொட்டிசுத்தி.

களங்கம்போம் ஆவின்பால் நாலுசாமம் - காச்சிடவேசுத்தியாம் கலருஞ்சித்தி, களங்கம்போம் தொட்டிக்குச் சுத்திசொல்லில் - கட்டித ணைநொறுக்கியதைக் கல்வத்திட்டுக், களங்கமாம்நெய்தேனுஞ் சரியாய்ச்சேர்த்து- கலக்கியேயூறவைப்பாயெட்டுநாள்தான், களங்கறவுந்தோ ளாந்திரங்காணச்சாற்றில்- காச்சடாதொட்டியங்கேசுத்தியாச்சே (௱௰௫)

### கற்பூரசிலாசுத்தி.

ஆச்சப்பாகற்பூரச் சிலையைவாங்கி- அடைவாக நொறுக்கியதைக் கிழிகட்டிவைத்து- பாச்சப்பாஆவின்பால்தோளாந்திரமாகப்-பால்வற் றமட்டுமங்கேயெரித்துப்பின்னுங்- காச்சப்பாஅயக்கிண்ணிக்குள்ளே வைத்துக்- கடியதொருஅல்லியுட நீரிலாட்டு - மூச்சப்பா சலாசத்துச் சுத்தியாச்சு மூட்டிடுவாய்துறைக்கெல்லாம் மூட்டுமூட்டே.. (௱௰௬)

### நேர்வாளசுத்தி.

மூட்டவே நேர்வாளஞ் சுத்திகேளு - மூமூமேதிச் சாணியிலே வாளம்போட்டு-ஆட்டுவாய் கமலாக்கினி யாலேயப்பா-ஆறவிட்டு எடுத்ததனைத் தோடுபோக்கி-மூட்டுவாய் குற்றமதுஞ் சுத்தியாகு - முறவாகுஞ் சரக்கோடு ஊட்டுபந்தாம்-நீட்டியே சுத்திவகை மெத்தவுண்டு- நினைவுகொண்டு இவ்வளவுஞ் சொன்னேன்பாரே............ (௱௰௭)

### லோகமாரணம்.

பாரப்பா லோகமாரணங்கள் சொல்வோம் - பரப்பிலே விடுகாதே யடக்கியாடு - ஆரப்பா வகையாகச் சொன்னோமோது - அடைவாகச்சொல்லுகிறேன் அடக்கம்விட்டு-நேரப்பா வெள்ளீயந்தாளகத்தால் மாளும்- நிலையாதகாரீயம்மனோசிலையால்மாளும்- காரப்பாவுருக்கதுவும் லிங்கத்தால்மாளுங் - கடியகெர்த்தி தாம்பிரத்தைக் கவ்வுந்தானே.

கவ்வுமடா வெள்ளிதன்னை மாட்சிகமுண்ணும் - களங்கமில்லாப் பொன்னதனை நிமிளையுண்ணும் - கவ்வுமடா லோகங்கள் தகடுதட்டிக் காட்டுவாய் தகட்டுக்குச் சரக்குநேராய்க்-கவ்வவே சம்பீரச்சாறுவிட்டுக்-களங்கமற ஆட்டியே தகட்டில்பூசு- கவ்வவே சட்டிக்குள் தகட்டைவைத்து-கவிழ்த்தியே யோடுகொண்டு மூடுமூடே............ (௱௰௯)

மூட்டியேசந்துவாய் சீலைசெய்து-முதிரவதைக் கெசபுடமாய்ப் போடுபோடு- நீட்டியிடு லோகங்கள் வெவ்வேறாக - நீட்டியே புடம்போடு வன்னமேறும்-ஆட்டிநின்ற காந்தத்தைச் செந்தூரிக்க- அறைகிறேன் சுத்திசெய்த காந்தத்தைவாங்கி-தாட்டியொரு சட்டிக்குள் காந்தமிட்டு-நலமாக மேல்சட்டி கவிழ்த்துமூடே..................(௱௨௰)

## காந்தசெந்தூரம்.

கவிழ்த்தியபின் குழிவெட்டி மூன்றுபத்துக் - கனத்தெருவைக் குழிக்குள்ளே யடக்கியந்த, கவிழ்த்துவைத்தசட்டிதனை யெருமேல் வைத்துக் - கடடாகமுபபதெரு மேமேலமூடி, கவிழ்த்தியனலூடடிநீயெரித்துவாங்கு-கனலாறிக் காந்தத்தை வாங்கி மைந்தா, கவிழ்த்தியதோர் பச்சரிசிக் கழுநீரோடு- கருவாழைக் கிழங்கினுட சாறுவாங்கே(௧௨௧)

வாங்கபபா ஆவாரஞ்சா றிளநீர்சாறும் - வகைநாலுஞ் சமனாக அளந்துநீயும், வாங்கடாதினமிரண்டு ஆட்டிச்சாற்றால் - வடம்பபோல் பிடித்ததனை ஆறவைத்து, வாங்கடா சட்டிக்குள் ளடையை வைத்து- மறுசட்டியாலதனை மறைத்துமூடி, வாங்கடா சீலைசெய்து கசபுடத்திற்போடு - வாகாக ஆறியபின் னெடுத்திடாயே ................ (௧௨௨)

எடுத்ததொரு வில்லைதனைக் குமரிவேர்நீரி - லிறக்கியதை யாட்டியே கெசபுடமேபோடு, எடுத்திடுவா யாறினபின் காணாவேர் மாம்படடை - இலவுங்கப பட்டையுட னெல்லிமுள்ளி, யெடுத்திடித்து இவைசமனாய்க் கியாழம்வைத்து - இயல்பாக ஆட்டியதைச் சட்டிக்குள்ளிட்டு, எடுத்திடவே முன்போலே சீலைசெய்து - இதமாக முன்போலே புடத்தைபபோடே.......................................... (௧௨௩)

புடம்போடு இபபடித்தா னாலுவாட்டி - பேரான பழச்சாற்றில் மூன்றுவாட்டி, புடம்போடு பருத்தியிலைச் சாற்றினாலும் - பிசகாமல் ஆல்விழுதின் சாற்றினாலும், புடம்போடு மூன்றுதினம் பகரக்கேளு- பிறகுநீ நெல்லிமுள்ளிச் சாற்றாலாட்டிப, புடம்போடு வீரர்தினந் தான் சிவந்துபோகும் - பேரானகாந்தசித்தித் திறந்தானன்றே(௧௨௪)

## லோகசெந்தூரம்.

நன்றாக லோகசெந்தூரஞ் சொல்வோம்- நட்பாக லோகமோர் பலந்தான்மூன்று, குன்றாத சூதமொருபலந்தான்வாங்கு- கொடுகெந்தி ரெண்டுபலந் தூக்குதூக்கு, ஒன்றாகச் சூதமுடன் கெந்திரெண்டு மூறவாட்டு கல்வத்தில் கடிகைரெண்டு, துன்றாக இளகியது மயனமாகும் - தூளான லோகத்தை யிதனிற்சேரே. ........................ (௱௨௫)

சேர்த்தங்கே குமரியுட சாறுவிட்டு - சிதறாம லிருசாம மாட்டிவாங்கி, சேர்த்தங்கேயுண்டைபண்ணி ஆமணக்கிலையில்- திடமாக அமைத்தந்த இலையால்மூடி, சேர்த்தேதான் ரவியில்வைப்பாய் கடிகையீராறு - சென்றதற்பின் தீச்சுட்டாப் போலேசூடாஞ், சேர்த்து நெல்லிற் புதைத்திடுவாய் தினந்தான்மூன்று- திரும்பவதைத் தூளாக ஆட்டிவாங்கே. ................................................ (௱௨௬)

வாங்கினதோர் செந்தூரந் தங்கம்போலாம் - மாரணத்தில் செந் தூர மாயிற்றப்பா, பாங்கான தங்கங்கள் லோகம் வெள்ளி-பரிவானதா ம்பிரங்கள் சூதங்காந்தந், தாங்கிநின்ற மாரணத்தால் செந்தூரஞ்சித்தி-தாரணியில் வாய்திறந்து சாற்றவேண்டாம், தேங்காத மாரணத்திற் சி த்தியாகுஞ்-செய்யடா துறைக்கெல்லாந் தெளிந்துதானே. ...(௲௨௭)

## அப்பிரகசெந்தூரம்.

தெளிவான அப்பிரக செந்தூரஞ்சொல்வேன்-சார்வாகு மப்பிர கஞ் சுத்திசெய்து, வளியாகுஞ் செம்பொன் னெரிஞ்சியிலாட்டி-மைந் தனே சட்டிக்கு ளடைபோலப்பி, நெளியாம லப்பிரக மதன்மேல் வைத்து - நேராக வடையதனை மேலும்வைத்து, அளியாகச் சட்டி கொண்டுகவிழ்த்துமூடி அப்பனேகெசபுடந்தான் போடுபோடே. ()

போட்டதொரு அப்பிரகந் திரும்பவாங்கி- புகழாகக் கல்லுரலில் தூளாய்நீதான், ஆட்டியே வாங்கிமைந்தா மைபோலாட்டி-அடைவா கக்கியாழத்தா லடைதான்தட்டி, நாட்டுவாய் மாம்பட்டை தேற்றாங் கொட்டை - நயமாகப் பொடியாக்கி ஒட்டிவிட்டு, மூட்டியேஅடை யதனை ஓட்டில்வைத்து - முன்போலே சீலசெய்து மூடுமூடே. ()

மூட்டியே புடந்தீர்ந்து தூளாயாட்டி - முன்போலே மூன்று தரங் கெசபுடந்தான்போடு, நீட்டியேநெல்லிமுள்ளிச் சாற்றாலாட் டி- நீரோடவாழையுட கிழங்கிநீறு, மூட்டியே கலந்தாட்டிஅடைதா ன்செய்து-வுறப்போடு முன்போலே புடத்தில்நீயும், நாட்டியே யிப் படிதான் கெசபுடந்தான்போடு-நயமாக வெடுத்ததனையாட்டுஆட்டே

எடுத்திடுவாய் தூளதனைக் குமரிச்சாற்று - விதமாக ஆட்டியதை யடைதான்செய்து, தொடுத்திடுவாய் மூன்றுபத்துப் புடந்தான்முன் போல் - சுகமாகஅப்பிரகம் அருணன்போலாம், விடுத்திடுவாய் வியா திகளை யுண்ணவென்றால்-வெண்பஞ்சில் பொறிபட்டால் போலப்போ க்குந், தடுத்திடுமே ஆயித்தும் நரைதிரையுந்தள்ளுஞ் - சதிரானசகத் திரத்தெண் வியாதியாமே.... ........... ................... (௲௯௧)

## மண்டூரச்செந்தூரம்.

வியாதிபோம் மண்டூரச் செந்தூரங்கொண்டால் - மைந்தனே வைக்கின்ற வரிசைகேளு, நயாதிபோய்ச் சகத்திரமாம் வருஷிஞ்சென் ற-நத்தங்கள் தனில்கிடக்குங்கரியகிட்ட,மபாதிபோய்க் கொண்டுவந்து தூளாயாட்டி- அப்பனே தான்றிமரக் கரியினாலே, நியாதியோயுலையி லிட்டுச் சிவக்கவூதி - நீலாவின் கோமயத்தி லூறப்போடே. ... (௲௯௨)

ஊறியபின் பெடுத்ததனி லூறல்வாக்கும் - உலர்த்தியதைத்தூ ளாக்கிக் குகையிலூட்டு, மாறியதோர் மண்டூரஞ் சிவப்புமாச்சு - மற்

றுமதைச் செந்தூர மாகக்கேளு, வீறுடனே மூன்றுநாள் நாகவல்லி ச்சாற்றால்- வீரமுடன்சுட்டுவாய் வற்றவற்ற, வாருகநொச்சிச்சாறு வெள்ளாட்டுப்பால்நீ - மைந்தனே மூன்றுதிரங் கொதிக்கவையே... ()

வைப்பதுதா னெப்படித்தா னென்றுநீயும் - வயணங்கேள் வெ வ்வேறு தினந்தான்மூன்று- வைத்ததனை வத்திவிச்சுப் பின்புவாங்கி-வரி சைபெற வொருசாமங் குமரிச்சாற்றால் - வைத்தாட்டி மடக்கிலிட்டு மேலுங்கீழும்- வைப்பதுதா னிலைதான் மறைத்துச்சுற்றி- வைத்திடு வாய் சீலைமண்தான் ரெண்டுசெய்து- வராகபுட மறுபதுதான் போடு போடே.................................................. (கருச)

போட்டிடுவாய் மண்டூரச் செந்தூரமாச்சு- போக்கதிலே வியா திகளைப் பிடிங்கித்தின்னும்-மாட்டிடுமே மகோதரங்கா மாலைபாண்டு- வருஞ்சோகை பெருவயிறு வலிமயக்கம் - ஆட்டியதோர் ஈளைமுதல் மேகந்தானு- மாக்கைவலிகிராணியிவை யெல்லாந்தீரு- மூட்டிடவே யனுபான முறைக்கக்கேளு உத்தமனேவியாதிகண்டுவுறவுமீசரோ.கருரு

உருக்குச்செந்தூரம்.

உறவுசேர் வுருக்கிலே செந்தூரத்தை- யுரைக்கிறேன் உளிபத்து வாங்கிவந்து - உறவாக வுலையிலிட்டு அருணன்போல - ஊதியதை யா விளீர் வெள்ளாட்டுநீரில்-உறவாகச் சமன்கலந்து வைத்தாயானால்-உதி ருமடா கருக்கதுவுந் தோய்க்கத் தோய்க்க - உறவாக வுதிர்ந்தபொடி யெல்லாம்வாரி-யுறவாட்டுக் கரிப்பானீ ரூட்டிக்காணே...... (கருசு)

காணப்பா ஆட்டியதை வில்லைதட்டி-காயவைத்துச் சட்டிக்குள் ளாவிலையைப்பரப்பி, பூணப்பா வில்லைதனை யிலைமேலிட்டு - புகழாகப் பின்னுமந்த யிலைபால்மூடி, ஆணப்பா மேல்சட்டி யிட்டுமூடி - யுற வாகச் சீலைசெய்து வுலரவைத்து, தோணப்பா கெசபுடத்தி லாட்டிவா ங்கிச் - சொல்லுகிறே னந்தரத்தா மரையின்சாறே. .......... (ஈருஎ)

சாறுவிட்டு ஆட்டுநீ கசபுடந்தான்போடு- தனிக்குமரிச்சாற்றினால் கெசபுடந்தான்செய்து, கூறுடனே யெடுத்துப்பார் முருக்கம்பூப் போல் - கொள்ளியது செந்தூரங் கொடியசித்தி, மாறுபடா நோய்க ளெல்லாந் திரிபலையும் வெல்லம் - வரிசையுடன் பொடிகூட்டி வைத் துக்கொண்டு, ஆறியதோர் செந்தூரம் பணந்தான் தூக்கி - அப்பனே தேனிலே குழைத்துக்கொள்ளே. ................................ (ஈருஅ)

கொள்ளவேதூலவுடல் சூட்சமாகும்-குறைந்திருந்தசூட்சவுடல் நெய்ப்பில்கொள்ள- மெள்ளவே பழுத்திருக்கும் மயனம்போலே-மீற வரும் நாடிகள் வெருவியோடும், விள்ளவேநாவேது பாவுமேது

மேலோர்கள் அயங்கிட்டம் ரெண்டுங்கொண்டார், அள்ளவேகுறையா து கடலிலேற்றம் - அறிந்துநீ லோகத்தை யணைத்துஆடே. ...(ாகூகூ)

அமிர்தசஞ்சீவிகுளிகை.

ஆடவே யமிர்தசஞ்சீவி சொல்வோம்-அப்பனே சூதமொன்று கெந்தியொன்று, நீடவே கல்வத்தில் சாமமொன்று-நீட்டிநீ யாட்டை யிலே மயனமாகும், ஊட்டவே சுருத்திருக்கு மப்பிரகபற்ப-முயரிந் த லோகபற்பந் தாம்பிரபற்பம், நாட்டவே தாளகமும் நாவிலிங்கம் நலமான மனோசிலையுங் கங்குலிட்டம்பாரே. ................... (கசம)

பாரப்பா யத்தித்திப் பிலியினோடே - பாங்கான அதிவிடையம் சொன்னமாஞ்சி, சீரப்பா விதுவெல்லாம் ரசகெந்தியுடனே - சேர்சம ஞயிஞ்சிச்சார் சிவதைச்சாறும்,வாரப்பாசிறுகீரை யிவைகடம்பில் மா ட்டியே யாட்டுவாய் தினந்தானொன்று, போரப்பா கஞ்சாவின்சாற் றிலும்- பொருந்தியே தினமொன்று புகட்டியாட்டே. ...... (கசக)

ஆட்டடா பழச்சாற்றி லாரைச்சாற்றி- லப்பனே யாரவைத்துக் குப்பிக்கேற்றி, மூட்டடா சீலைசெய்து தாழிக்குள்ளே-முதிரவேமண விட்டுக் குப்பிவைத்து, நீட்டடா மேலுமந்த மணல்பரப்பி-நினைவாக விருசாம மெரித்துவாங்கு, மீட்டடா வாறியபின் தூளாயாட்டி - மே லான மாத்திரைதான் செய்யக்கேளே. ........................ (கசஉ)

சூசிகாப்ரணம்.

கேளப்பா யிஞ்சிநீர் தன்னலாட்டி - கிருபையுடன் குன்றியிடை குளிகைகட்டி, சூளப்பாதோஷிமுதல் சன்னிக்கெல்லாம் -சூட்டிடவே துஞ்சிநின்ற வுயிர்கள்மீளும், நாளப்பா சூசிகாபரணஞ் சொல்வோம் நாடியுயர் பதின்மூன்று சன்னிதீரும், வாளப்பாசூதமொன்று காந்த மொன்று-வாகான தாம்பிரமய லோகந்தானே. .............. (கசங)

லோகமுடன் அப்பிரக மாறும்நேராய்- நொறுக்கியதை நேர்சு மனயக் கெந்திகூட்டி, லோகமுறும் நொச்சிவேர் சித்திரமூலம்-நுணு க்கமுடன் சரியாகக் கியாழம்வைத்து, லோகமுறும் பொடியிட்டுத் தி னந்தான்மூன்று - நோகவதை யாட்டிநீ வாங்கிப்பின்பு, லோகமுறும் நாயுருவி கரிப்பான்மத்தை- நோயகலப் பேயத்தித் தக்காளிகாணே()

காணப்பா சித்திரப்பாலாடை கொட்டான்-கரந்தையொடு வெ ள்ளைக் காக்கணமுமிக்கப், பூணப்பா காயாத பழுபாகல்தன்லைப்-புக ழ்சீந்தி சாரணையும் பேய்ச்சுரைகளெல்லாம், தோணப்பா பேய்த்துள சி யிவைநீர்வாங்கி - தோய்த்தந்த நீர்சுவற ரவியில்வைப்பாய், நாணப் பா தினமொன்று சாறதொன்று-நயமாகவிரவியதை ரவியில்போடே

போட்டபின்பு பாவங்க ளின்னுங்கேளு, புகழ்கோழி மீன்மஞ்ஞை பன்றிவெள்ளா, டாட்டதனின்பித்துகளில் வெவ்வேருட்டி-யதில் வைத்துத் திப்பிலியின் கியாழத்தாலு, மூட்டவதை மூன்றுநாள் பாவனைதான்செய்து-முசியவரை யெருக்கிலைவேர் கியாழத்தாலு, மாட்டியதைப் பாவனைதான் செய்துமைந்தா - வதில்சமனுய் நாவிதனைச்சமன் தான்சேரே. .................................................. (கசசு)

சேர்த்ததொரு சூரணத்தை முன்சொன்னபுடத்தில்-திரும்பநீயூறவைத் தெடுத்துக் கொண்டு, சேர்த்திடுவா யனுபானம் நோய்கள் சன்னி-செயல்கண்டு முறையுடனே செய்துநீயும், சேர்த்திடவேயறு சூலை பெருவயிறுகுன்மந்- தீராதபாண்டுவுடன் வலிதான்குட்டஞ் சேர்த்திடவுஞ் சயமுமிகு வாதந்தானுஞ்- செல்லாதவீக்கமுடன் வரட்சிபோமே. .................................................. (கசஎ)

## இரசபூபதி.

வரட்சிபோம் வெட்டைபோம் வலுக்குந்தேகம்-மைந்தனே சஞ்சீவி மகத்தாஞ்சித்தி, யிறைச்சியொடு நரம்பெல்லாமமிர்தமூறு-மிரதமென்ற பூபதியை யியம்பக்கேளு, வரட்சிபோ மமிர்தபற்பந்தாம்பிரபற்பம்-வாங்காத நாவியிவை நேர்தான்தூக்கி, குறைச்சிடாக்கெந்திரெண்டுதிரிகடுகுதிரிபலையும்- கூறுகவிவையெல்லாம்நொறுக்கிடாயே.

நொறுக்கியபின் தழுதாழை கண்டங்காரி - நொச்சியடர் பேயத்திமட்டி யிவைகளெல்லாம், நறுக்கியதோர் கொடிவேலி யாடுதின்னாப்பாளை - நாட்டடா கியாழமிட்டு வாங்கிமைந்தா, சிறுக்கடா விருபதுநா ளாடடிவாங்கி-சீரானவுளுந்தளவு குளிகைகட்டி, சுருக்கானசன்னிகளுக் கீந்தாயானல் - தொடடவுடன் பதின்மூன்றுந் தூள்நீறுமே.()

## பஞ்சவத்திரயிரதம்.

நீறுமென்ற பஞ்சவத்திர யிரதஞ்சொல்வேன்-நெருப்பான காலாக்கினி ருத்திரனைச்சொல்வேன், ஏறுமென்ற நாவிகெந்தி வெண்காரஞ்சூத - மியல்பான மிளகுடனே யிடைதானேராய், மாறுமென்ற மத்தஞ்சா றதுகொண்டாட்டு - வகையாகத் தினமொன்று வழித்தருடடி, ஆறியே யுலர்ந்தபின்பு தூளாயாட்டி - யப்பனே செப்பிலே யடைத்துவையே. .................................................. (கரு௰)

## காலாக்கினிருத்திரன்.

அடைத்ததொரு பொடிகுன்றி யிடைதான்தூக்கி-ஆகாதசன்னிக்கு யளித்தாயானல், உடைத்திடுமோர் பன்னிரண்டுசன்னிபின்பு-வோர்சன்னி விரோதசன்னி யொன்றுகூடித், துடைத்திடுமோர் தோஷிங்க

ள் பலவுந்தீருந்-துருசானகாலாக்கினிருத்திரங்கேளு,படைத்தசத்திசா
ரமெவாச் சாரந்தானும்·பாங்கான நவாச்சார யிந்துப்பூவே. (கஙக)

இந்துவொடு பொட்டிலுப்பு வளையலுப்பு - இயல்பான காச்க
ப்பு கல்லுப்பாதி, மைந்தனே சரிக்கடடிக் கல்வத்திட்டு, மாடடியதி
லோரிடைதான் சூதம்விடடு, தொந்தமுற வோர்தினந்தான் மத்தித்து
வாங்கி, சூடடவே மேல்மருந்தைத் திறையாய்நீயும், சிந்துவெனும்
பெருங்காயங் கடுகோத்தை, சிலைபுங்கம் வித்துமிடை நேராயாடடே

ஆடடியதோர் மருந்துக்குள் சூதம்விடடு-அப்பனேமூடியதை
த்தோளாந்திரமாக, ஆடடுவாய்பழங்காடி பாண்டத்திலிடடு,வுறவாகத்
தினமொன்று யரைத்துவாங்கு, மாடடுவாய் மத்தஞ்சார் நொச்சிச்சா
று - வாகான கரிப்பான்சார் மணத்தக்காளி, கூடடுவாய் பொன்முசுட
டை கொடிவேலி யிஞ்சி-குறுவெள்ளைக் காக்கணங் கொடடான்கரந்
தைச்சாறே. ........ .................... ........................ (ஙஙரு)

சாறுகளி லொவ்வொருநா ளாடடிவாங்கி- தனித்துயினி பாவனை
க்குத்தூளாயாடடி,வீறுபுகழ்மிளகதற்கு நேராயாடடி-விரவியதைம
யில்பித்து வராகப்பித்து, மீறிவளர்மீன்பித்து வெள்ளாடடின்பித்து
வெவ்வேறே தினமொன்றுவிரவிநீயும், ஆறியபன்னிரண்டுகுன்றி வெ
ல்லந்தேனி - லூடடடா தயிறுஞ்சோ றுண்ணச்சொல்லே. ... (கஙச)

உண்டையிலே வெடடைவந்து மேவித்தானு- லுடன்தலையில் கு
ளிர்ந்தசெல முறவாய்நீயும், வுண்ணயிலே சன்னிபோந் தோஷம்போ
கு -முயிர்பறிக்கு மடடகுன்மங் கவுசிபோகு, முண்ணயிலே பெரு
வயிறுபாண்டுமோடு, மோகோகோ கிரிச்சனங்க ளாறுமோடும்,உண்
ணயிலே சாரமுங்காரமூறும் - வுத்தமனேவேறுவகையுரைக்கிறேனே

## சன்னிவாதாங்குசம்.

உரைக்கிறேன்சன்னிவா தாங்குசத்தை- யுத்தமனேசூதமொன்று
கெந்தியொன்று, நிரைக்கிறேன்அறிதாரம் நாவிமாட்சி-நேரான பொ
ன்மாடசி தாம்பிரபற்பந், தரைக்குயர்ந்த யப்பிரகஞ் சத்திசாரஞ்-சங்
குமுடி சாரமெவாச் சாரந்தானும், பெரைக்குயரும் கடகசிங்கி பெ
ருங்காயம்வசம்பு - பேய்ப்புடலும் பொன்முசுடடைகடுக்காய்சுக்கே

சுக்குடனே கஞ்சாவும் நிலப்பனையின்மூலந்- துஞ்சாதநிம்பத்தி
ன் பிசினும்நேராய்ப், பக்குவஞ்சேருற்றமா தாளிச்சாற்றால்-பழச்ச
ற்றால் தினமொன்றுவெவ்வேறாக, வுக்கிரமாயாடடியே கடலைபோலே
யுருடடியே தசமூல கியாழந்தன்னில், தக்கதோ ரிஞ்சிச்சா றிவற்றிலூ
டடிச் - சாதகமாய் வியாதிபோம் வகையைக்கேளே. .......... (கஙஎ)

## வட்வானலரசம்.

வியாதியெனும் பதின்மூன்று சன்னிதானும்- விக்கலுரும் வாந்தியொடு வெட்டைதானும், வியாதியெனும் கரப்பன்முதல் புண்கள்தீரும்-மேலான வடவானல் ரசத்தைக்கேளு, வியாதிபோம் சூதமொன்று கெந்தியொன்று - மேலான வப்பிரகந் தாம்பிரபற்பம், வியாதிபோங் காந்தமாட் சீகந்தாரம் - வீறான நீலாஞ் சனமுந்தூக்கே.... ()

தூக்கடா கடல்நுரையு மிவைதானேராய்- துடியான இந்துப்பு பொட்டிலுப்பு, தூக்கடா வெடியுப்பு காச்சுப்புதானும் - சுகமான வட்டுப்பு யஞ்சும்நேராய், தூக்கடாசதிரக்கள்ளிப பாலாலோர்நாள்-துருசாக யாட்டியதைக் குகையிலிட்டுத், தூக்கியே குளிகைக்குட் குகையைவைத்துச் - சோர்வின்றி வாய்மூடி யெருவடுக்கே.... (கருகூ)

அடுக்குவது குழிகீழுமேலுமப்பா- யப்படியேகஜபுடமா யோர்நாள்மட்டும், எடுத்திடுவாய் மறுநாளில் தூளாயாட்டி-யிருக்கமட்டுக்குன்றியிடை யிஞ்சிச்சாற்றில், கொடுத்திடுவாய் மூன்றுதினம் பொடியைக்கேளு-கூறானதிப்பிலியின் பொடியைத்தூவிப, படுத்திடுமேதனுவாத முகவாதசன்னி- பாங்கான நடுவாதம் பாருங்காணே. ...(கூய)

பாருமப்பா தளர்வாதம் வத்துவாதம் - பரவிநின்ற துடிவாதம் பிலங்குவாதம், பாருமப்பா சுழல்வாதம் பிரளிவாதம் - படபடர்த்து மூர்ச்சிக்கும் படராம்வாதம், பாருமப்பா வனுபான கியாழங்கேளு பாங்கான வாமணக்குச் சிற்றாமுட்டி, பாருமப்பா வேர்க்கொம்பு வாதமுடக்கிவேரும்- பட்சிக்க விவையெல்லாம் பறக்குந்தானே. (கசுக)

## சொர்னசாந்தவயிரவம்.

தானென்ற சொர்னசாந்த வயிரவத்தைச் சொல்வோம்-சார்வாகவென்பது வாதந்தீரும், தானென்ற சூதமொன்று லோகமொன்று-காளகமுந்தானொன்று நிமிளையொன்று, தானென்றகெந்தியொன்றுநாபியொன்று-தாம்பிர பற்பமொன்று சித்திரமூலம், தானென்றவெண்காரம் நொச்சிவேருஞ் - சமன்சேர்த்துக்கல்வத்தில்பொடித்திடாயே.

பொடித்தத்னை நொச்சியிலைச் சாற்றாலாட்டிப்-பொற்கரந்தைச்சாறதனிலோர்நாள்மட்டும், மடித்தாட்டிக்குன்றியிடை குளிகைகட்டிமைந்தனே யிஞ்சிச்சார் மின்னுங்கேளு, படித்தரமாய்க்கியாழமப்பா திப்பிலியின்மூலம் - பாங்கானசூரணத்தைபபகருவோம்நாம், நடித்துடைய சீந்திசற் கரையரத்தை - நயமான நிம்பமரப பட்டைபாரோ. ()

பாரப்பா ஆமணக்கம் பருப்புத்தானும்-பருஞ்சுக்கு நொச்சியிலை தேவதாரம், நேரப்பா தூளாக்கி யதற்குநேராய்- நிறுத்திடுவாய் சுத்திசெய்த குக்கில்சேர்த்து, ஆரப்பா நெய்யிலிட்டு யாட்டிக்கொண்டு-

அனுபானஞ்சாறுகளி லதிந்தவூட்டு, போரப்பா வாதத்தைப்பிடுங்கி த்தின்னும் - புகழான வயிரவன்றன் போக்குத்தானே. ......... (௧௬௪)

## இராஜமிருகாங்குசம்.

போக்குமிகுராசமிரு காங்குசத்தைச்சொல்வோம்-புகழானசொர்ணபற்பந் தாம்பிரபற்பம், போக்குமிகச் சூதமிவை சரியாச்சேரு-பொன்தாரமிவையிரண்டு கெந்திரொண்டு,போக்குமிகுமனோசிலையுங் கழஞ்சிரொண்டு - பொடியாக்கிக் குகைமருந்தைப புகலக்கேளு, போக்குமிக வங்காரம் பலகறையும்நேராய் - புகட்டியதில் வெள்ளாட்டின் பாலாலாட்டே. ......................................................... (௧௬௫)

ஆட்டியதைக் குகைபிடித்துப பொடியையிட்டு - யடைவாகக்குகைமருந்தை யடைத்துமூடி, நாட்டியிதைச் சட்டிக்குள் ளமைத்துநீயும் - நன்றாக மேல்சட்டிக் கவிழ்த்துக்கட்டி, நீட்டியே சீலைசெய்து கெசபுடத்திற்போட்டு - நெருப்பாறி யெடுத்ததனைத் தூளாயாட்டி, மூட்டுவாய் மிளகப்பா மூவர்தேறு- மூன்பொடியை நெய்யிலே குழப்பிடாயே .......................................................... (௧௬௬)

குழப்பியதில்தாலுகுன்றி பொடிதான்சேர்த்து-கொடுத்திடவே மூன்றுதினங் கூறக்கேளு,அழப்பிலேநோயறிந்துநட்பிலூட்டு-அப்பனே சிலேற்பனங்கள் தொண்ணூற்றாறும், கழப்பொலிபோல் பறந்தோடு மதிகசித்தி- காட்டுமூன்னே யெட்டுவகை மாந்தநீங்கும், தொழப்பெரிய சஞ்சீவியிதற்கொப்பில்லை - சொல்லுகிறேன் தாளகசுரசத்தைக்கேளே ................................................ (௧௬௭)

## தாளகசுரசம்.

கேளப்பா சூதமொன்று தாரமொன்று - கெடியான கெந்தியொன்றுமனோசிலைதான்ரொட்டி, நீளப்பா தாம்பிரபற்பம்ரொட்டி நிசமாகக் கல்வத்தில் நொச்சிச்சாற்றால், நாளப்பாரொண்டுதினம்ராப்பகலாட்டி-நற்குன்றி யிடையுருட்டிவைத்துக்கொண்டு, சூளப்பாதிரிப்பலையுமிளகும்நேராய்-சூரணித்துத் தேனிலொரு வுண்டையூட்டே...... (௧௬௮)

## மகாமேகரசம்.

ஊட்டவே யுளமாந்தை கழிச்சல்தீரு - மூயர்ந்துவரு மெலும்புழிக்கிச் சுரமாந்தை நீக்கு, மேட்டியுறு மகாமேக ரசத்தைச்சொல்வோம் - மேலான பலகறையின் பொடியுமுன்ன, மாட்டியே சுத்திசெய்த மண்டூரம் நேராய் - மைந்தனே யாவிநெய்யில் மயனம்போலே, ஆட்டுவாய் சாமமொன்று வுலர்த்திப்பின்பு - அப்பனே தூக்கி வெற்றிலைச்சாற்றாற்றே. .................................................. (௧௬௯)

ஊற்றியே பாவனைதா னேழுவாட்டி- யுறவுசெய்து தூளாக்கி கு
ன்றிதூக்கி, ஆற்றிடுவாய்கால்கழஞ்சிபசுவின் நெய்யி - லுட்கலந்துசெ
ய்திடவும் க்ஷயநோய்தீரும், ஆற்றியே வெண்ணைதேன் கியாழமாகும்-
வுத்தமனே வியாதிகளு மதிகமானு, லூற்றுவாய் சாமத்துக் கொருக்கா
ல்நீயு - மொன்பதுபத் தாறுமங்கே யொழிந்துபோமே ... ...(௧௭௰)

## ஸ்ரீவாட ரசம்.

ஒழிந்திடவேஸ்ரீவாடரசத்தைககேளு-வுயிர்பறிக்கும் வாதகுன்ம
மொடுங்கியோட,அழிந்தவிந்து மாட்சிகமுமப்பிரேகம் - அடர்சாரங்
கெந்தியுடன் தாம்பிரபற்பம், பொழிந்திடநீ சமனுகத் தூக்கிமைந்தா
புகழ்சித்திர மூலச்சார் கொண்டுவோர்நாள், தெழிந்துவிடா தாட்டி
மஞ்சாடிபோலத் - திரட்டிவைப்பா யனுபானஞ் செப்பக்கேளே. ()

செப்புறேன் வெற்றிலைச்சார்விட்டரைத்துத்-தின்றிடவே வாத
குன்மந்தீருந்தீரும்,செப்புறேனனுபானம் வாய்விளங்கத்-திறமாணயி
ந்துப்புக்காயமேலஞ், செப்புறேன் சவுட்டுப்புச் சரியாய்த்தூக்கிச்
சேருமாதளைச்சாற்றிற் சாமமாட்டி-செப்புறேன் கழஞ்சியிதிற் கூடக்
கூட்டித்-தின்றிடவே வாதகுன்மந் தெறித்துப்போமே..... (௧௭௨)

## சோமரசம்.

போமப்பா பித்தகுன்மந் தனக்குக்கேளு-போதரியசோமரசப்
போகுத்தானும்-ஆமப்பா சூதமொன்று நாவியொன்று - அரிதாரஞ்
சரிசேர்த்து ஆட்டிநீயும்-தேமப்பா தேக்கிலை பூக்காய்மூன்றுந்-தெ
ரித்திடித்து ரெண்டுநாள் திரமாயாட்டி - தாமப்பா கொடிப்பைச்சா
றதனி லோர்நாள் - தனித்தாட்டிக் குகையிலிட்டுச் சீலைசெய்யே.

சீலைசெய்து குகைக்குள்ளே மூசைவைத்து - திரமாகக் குழிமே
லே யெருவைவைத்து-சீலைசெய்து குகையதுவு மாறவாறச்-செய்திடு
வா யிப்படியே யஞ்சுவாட்டி - சீலையுறு புடம்போட்டுத் தூளாயாட்
டிச்-சேர்த்திடுவாய் நேர்வாளப் பருப்புநேர்தான்-சீலைவடி கட்டியதி
ல் குன்றிதூக்கி-செந்தாவி நெய்யதனில் தின்னச்சொல்லே.. (௧௭௪)

## சோமரசசேகரம்.

தின்னுவிடும் சோமரச கேசரத்தைச்- செப்புறேன் சிலேற்ப
ணமுங் குன்மம்போக-உண்ணுகிற லோகபற்பம் நாவிசூத- மூர்றகெ
ந்தி வெண்காரந் திரிகடுகுதானும்-தன்னுகிரி போலுயர்ந்த தாம்பிர
பற்பந்-தனியேல மிலவுங்கப் பத்திரிதானும்-பொன்னுமத்தம் விரை
சங்கு பற்பந்தானும்-புகழ்வில்வப்பழச்சதையுஞ் சரியாய்க்கூட்டே.

கூட்டடா கஸ்தூரி மஞ்சள்தானுங்-கூசாமல் மூன்றுநாள் கரிப்
பான்சாற்றி- லாட்டடா குன்றியிடை குளிகைகட்டி-யப்பனே தேனி

விட க்ஷயமஞ்சும்போ-மூட்டடா சுளையொடு கிராணிபோகு - மூடல் வற்று மெலும்புருக்கிக் குன்மம்போகும்-வாட்டடா சொரியாவை.ம்வி ம்மிபித்த-மகத்தான குடல்வாத மண்டவாய்வும்-காட்டடா வுதரத்தில் வியாதிக்கெல்லாம்-காட்டத்திற் றீப்போலே கருகிப்போமே. (௧௭௬)

## வித்தியாதர ரசம்.

கருக்கியிடும் வித்தியாதர ரசத்தைக்-காட்டுகிறேன் குன்மம்பீ லிகையும்போக-அருக்கிவருஞ்சூதமொன்று கெந்தியொன்று-அப்பனே நிமிளையொன்று தாரமொன்று-பெருக்கியதாம்பிரபற்ப மனோசிலையு ஞ்சமனாய் பேரான திப்பிலியின் கியாழந்தன்னில்-சுருக்கியே யோர்தி னந்தா னாட்டிவாங்கிச்-சுகமாகக் கியாழத்தில் பாவனைதான் செய்யே.

செய்ததொரு மருந்ததனைப் பணத்திற்பாதி-திரட்டிநீதேனிலே செலுத்திப்பின்பு-செய்திடவே யஞ்சுவகை பீலிகையுந்தீரும்-சீரான கெர்ப்பத்தின் சூலைக்கெல்லாஞ்-செய்திடுவாயெள்ளுவெல்வங் கியாழமிட்டுச்-சிறுதேக்குத்திரிகடுகு சமன்தானாட்டி-செய்திடுவாய் வராகனிடை கியாழத்தில் தூவி - செலுத்திடவும் பெரும்பாண்டு தீருங்காணே.

காணப்பா பெரும்பாண்டு துண்டாய்வீழில்-கியாழத்தின் மேற்பொடியைக்கழறக்கேளு-தோணப்பாவேர்க்கொம்பு தேவதாரஞ்-சுகமானதிப்பிலியும் புங்கம்பட்டை-பூணப்பா தூளாக்கி வராகன்தூக்கிப்-புகட்டடாகுளிகையுடன் புகழ்ந்துநீயு-மூணப்பா வலியெடுக்கும் யோனிச்சூலை - யுண்டானால் வேப்பம்விரை யாமணக்கின் பருப்பே.

## குன்மகுடோரி.

பருப்புடனே சரிகூடி நிம்பச்சாற்றில்-பதமாகக் குளிகையிட்டு யோனில்பூசப்-பெருப்பமுள்ளவலிதீரு முதரவலியானால்-பேறுபடவுள்ளுக்குக் கொடுத்துவா நீ-விருப்பமுள்ளகுன்மத்தின் குடோரிசொல்வோம்-வெண்காரம் கெந்திரசம் நாவிதாரம்-உருப்பொதிந்த திரிகடுகு திரிபலையுஞ்சமனா - யுறப்போடு மிவைக்குநேர் வாளந்தானே.

வாளமதைச் சரியாக்கி யிஞ்சிச்சாற்றில்-மாட்டுவாய் தினமொன்று மயனம்போலே-நீளவே யாட்டுநீ குன்றிபோலே- நினைவாகவுருட்டியே குன்றிச்சாற்றில்-மாளவே குன்மங்களெட்டுஞ்சொல்லில்-மைந்தனே கொடுத்திடவே வலிகள்தீரும்-சூளவே பாண்டுகுன்மம் பாண்டு நீங்கச்-சூட்டுறேன் குடோரிதன்னைச் சூட்டுறேனே. (௧௮௧)

சூட்டுறேன் வெங்காரம் நாவிகெந்தி - சுகமான தாம்பிரபற்பங் காந்தபற்பம்-நாட்டுபுகழ்திரிபலையுந் திரிகடுகுதானும்-நற்கடுகு ரோகணியுஞ் சித்திரமூலம்-மாட்டுநீ யெவாச்சாரஞ் சத்திசாரம்- மரியாத

பஞ்சவுப்பு வாய்விளங்கம்-கூட்டுநேர் சமபாகந் தூளாயாட்டிக்-கு
றையாமல் நேர்வாளம் பாதியாமே ... ... (கஅஉ)

பாதியாம் வாளத்துக் கெடடிவித்துப்-பாங்காகத்தூளாக்கி யெல்
லாமொன்ருய்-நீதியா மாதளம்பழச் சாறுவிட்டு-நீடடியே யஞ்சுதின
மாடடிப்பின்பு-சேதியா யேழுதினங் கரிப்பான்சாற்றில்-திறமாக வா
டடியதை யுலரவைத்து-நீதியா மிஞ்சிவெல்லம் வெந்நீர்நெய்யில்-நீட
டவே குன்மமுதல் தீரும்பாரே ... (கஅங)

## சுரமாலிகை.

பாரப்பா சுரம்போகு மாறல்போகும்-பாங்கான சன்னியொடு
தோஷம்போகும்-ஆரப்பா நோயறிந்து வனுபானஞ்சேர்த்து-அளவ
றிந்து ஆடடிடுவா ரப்பாகேளு - நேரப்பா சுரமாலிகையைச் சொல்
வோம்-நேரான தாம்பிரபற்பஞ் சூதங்கெந்தி-சேரப்பா மனேசிலையு
ந் தாளகம்வெண்காரம்-திரிபலையுந் திரிகடுகு சீரொன்ருமே. (கஅச)

ஒன்ருன விதற்குமொடடி நேர்வாளப்பருப்பு-வுறச்சேர்த்து கல்
வத்தில் கரிப்பானீரால-ஒன்ருக விருசாம மாடடிவாங்கி - யுத்தமனே
குன்றியிடை குளிகைசேர்த்து-ஒன்ருகு மனுபான மிஞ்சிச்சாற்றி-ஆ
டடவே யொழிகின்ற வியாதிகேளு-ஒன்ருகும் பீலிகையும் வெப்புப்
பாவை-யுதரத்தில் வலிதாக மொழியுந்தானே ... (கஅரு)

## சம்பிரதாயசூரணம்.

ஒழியுமப்பாநெடுநாளைவியாதியானு - ஊருச்செய்வாயவிழ்தங்
கன்மண்டலந்தான் - பொழியநின்றசம்பிரதாயச் சூரணத்தைக்கேளு-
பொங்கிவளாயப்பொடியுமிருபத்தஞ்சு - தெளியநின்றகெந்திபதி மூ
ன்றதாகும்- செயகாந்தமூல்பிரதமிரண்டுங்கூட்டி - பழியவதைக்கும
ரிச்சார்விட்டுச்சாம-மாட்டியேயொருவில்லையாகத்தட்டே...(கஅசு)

தட்டடாயெருப்போலே யகலமாகத்-தான்றிரும்பக் கல்வத்திட்
டோட்டால்மூடி - கட்டடாரவியிலிட்டுசாமமொன்று - கறுத்தங்கே
பற்பமாயிருககுமப்பா - மட்டடாவாய்விளங்கஞ்சீரகந்தான் - வாகா
னதிரிகடுகுதிரிபலையுநேராய்-கொட்டடாதூளாட்டிப்பற்பத்தோடே-
கூட்டிநீசூரணித்துயெடுத்துக்கொள்ளே.........................(கஅஎ)

## சகலகன்மக்குளிகை.

எடுத்ததொருசூரணத்தில்தீரும்நோய்க்கே - ளெண்குன்மங்கிரா
ணியுடனக்கினிமந்தம் - படுத்ததொரு நோயெல்லாம் பறந்தேயோ
டும் - பாடுகிறேன்சகலகுன்மக்குளிகைதன்னை - கடுத்ததொருஅரைப்
பொடிதானெண்பதாகும் - கனகரசகெந்திசில கழஞ்சிரெண்டாய்-

கொடுத்திடுவாய் குமரிநீர்தன்னாலப்பா - குறைவின்றியொருசாமங்
குழையவாட்டே......................................... .. (௱௮)

குழையவதையாட்டியே யடையாய்த்தட்டி - கொடுரவியில்கல்
வத்தோடேசாமமாட்டு - விழையவேவைத்திருந்து திரும்பவாங்கு-
மென்பொடிதானிந்துப்பொண்டுபங்கு - இழையாததிரிகடுகு ரெண்டு
பங்கு-என்மகனேகடுக்காய்த்தூள்ரெண்டுபங்கே- திழையாமலிதுவெ
ல்லாங் கருப்பான்சாற்றில் - தினமொன்றுஆட்டியே வாங்குவாங்கே.

வாங்கப்பா ஆட்டையிலே கைபடாமல் - வழித்ததனை வராகனி
டைகுளிகைசேர்த்து - பாங்கானவிஞ்சிச்சாறதனிலேனும்- பஞ்சமெ
ன்றயோக்கிய கியாழத்தாலும் - நீங்காமலூட்டவே குன்மமெட்டும்-
நேரானகிராணிபீலிகையாம்வாய்வு - தாங்காதகுட்டமுத லக்கினிமந்
தம் - தரியாமலோடிப்போம்சத்தியந்தானே .................... (௱௰)

சுகந்தரசம்.

சத்திகுன்மமுதலானநோய்கட்கெல்லாம் - சாற்றுகிறேனனுபா
னங்கியாழமப்பா - சித்தருட மூலமப்பாபுங்கம்பட்டை - சீரானமூக்
கறைவேராயில்பட்டை - பத்தியுடன்திரிகடுகு கடுக்காயிந்து - பரிவா
கக்கியாழமிடு அப்பால்கேளு - முத்தியுறுசுகந்தரச மப்பாகேளு - மு
றையோடேபுலத்தியனே முழுதுங்கேளே...................... (௱௰௧)

கேளப்பாகெந்திரெண்டு நாவியொன்று - கிருபைபுட னப்ரக
செந்தூரமொன்று - நாளப்பாவிவையெல்லாம்பலமாய்த்தூக்கு- நய
மானகுதமிதிற்கழஞ்சியொன்று - சூளப்பாசீரகமுங் கொடிவேலிவே
ரும் - சுகசீந்தில்சற்கரையும் வாய்விளங்கம் - நீளப்பாயெவாச்சாரம்
நொச்சிவேரும் - நினைவாகஅரைப்பலமாய்த் தூக்குதூக்கே ..(௱௰௨)

தூக்கியேநொச்சிச்சார்மாதளையின்சாறுந் - துறையோடேயொ
வ்வொருநாள் துஞ்சவாட்டி - ஆக்கமுடன் குன்றியிடைக் குளிகைகட்
டி - யப்பனேபஞ்சலோகக்கியாழந்தன்னில்- தாக்குடையவிஞ்சிச்சா
றதனிலாதல் - தயவாகத்தசமூலக் கியாழத்தாதல் - நீக்கிடவே பெரு
நோவு மகோதரமும்வல்லை - நீராமைகவுசியிவை யெல்லாம்போமே.

பஞ்சமூலக்கியாழம் - தசமூலக்கியாழம்.

போமென்றபஞ்சமூலக் கியாழங்கேளு - புகழானதிப்பிலியுமத
னின்மூலம் - ஆமென்றசெவ்வியமுஞ் சித்திரமூல - மடைவானவேர்க்
கொம்புமிவையஞ்சாகும் - நாமென்றதசமூலக்கியாழஞ்சொல்வோம்
நயமானபெருமுன்னை பெருவாகைவில்வம் - வேமென்றபத்திரியுங்
கண்டங்காரி - மேலானநெருஞ்சிவேர்சிறுவழுதலையின்வேரோ (௱௰௪)

## ஸ்ரீவிக்கிரமரசம்.

வேருணசிற்ருமல்லி பேராமல்லி - வேர்க்கொம்புதசமூலக்கியா ழமாச்சு- பேராணகிரிச்சினங்களாறும்போகப் - பேசுகிறேன் ஸ்ரீவிக்கிரமரசத்தை- நேராகச்சூதமொடுதாம்பிரங்கெந்தி- நீயாட்டுதினமொன்றுநொச்சிச்சாற்றில் - சீராகவாங்கியொருவில்லையாக்கி- சிறுசட்டிக்குள்ளிட்டுமண்தான்செய்யே ........................................ (௧௯௫)

மண்செய்துதாழிதனில் படிதானெட்டு - மணலிட்டுச்சட்டிதனையதன்மேல்வைத்து - பண்ணிட்டசட்டியின்மேல்மணலுமிட்டுப் - பாங்காகச்சாமமொன் றெரித்துவாங்கி - உண்ணுதற்கு மாதளம்வேர் தூளாலாட்டி - யுத்தமனேவராகநிடைதூக்கிநீயும் - வண்ணமுள்ளமாதளம்பூச்சாறுநாழி - மாட்டியேகுன்றியிடைபற்பம்போடே... (௧௯௬)

பற்பத்தில் தீருகிற வியாதிகேளு - படரான நீரடைப்புக் கல்லடைப்பு - வெப்பமூறுந்தசையடைப்புச்சோணாக்கட்டு - வெண்கடுப்புச்சீபடைப்பு விரணக்கட்டு - அற்பமூறும்நரம்படைப்பு மூத்திரக்கட்டு - மிவையெல்லாந்தெறித்துப்புண்ணூறுமைந்தா- சொற்பமல்ல பண்டிதந்தான் பன்னிரண்டுலெட்சம் - சுருக்கியதைச் சூத்திரமாய்ச் சொன்னேனென்பாரே........................................ (௧௯௭)

## விஷ்ணுப்ராக்கிரமரசம்.

சொல்லுகிறேன் சுரதோஷஞ் சன்னிவாதந் - தானுக்குடனேயுள்ளுக்குத்தனுவுக்கெல்லாம் - வெல்லுமேநிடலையிலேபாணம்போலே விஷ்ணுபராக்கிரம ரசந்தானப்பா - நல்லரசம்நாவிகெந்திவெண்காரமிந்து - நலமானயெவாச்சாரஞ்சத்திசாரம் - கொல்லுமேநோயனைத்திஞ்சத்திசாரங் - கூடவேசமமாகக்கல்வத்தாடடே.......... (௧௯௮)

ஆட்டுவது மத்தஞ்சார் சாமமொன்று-அப்பனே குகையிலிட்டு வாயைமூடி-கூட்டுவதுக் குக்குடமாய் புடத்தைப்போடு-குறைதீரப் பாவனைக்கு மித்தைச்சொல்வோம்,மாட்டுவது மீன்பித்துப் பன்றிப்பித்து- மைந்தனே பன்றியென்றால் காட்டுப்பன்றி, நீட்டியதை மாவிடையாய்க் குளிகைசெய்து- நீயூட்டு குளிர்ந்தசல மிஞ்சிச்சாறே.()

சாருகுந் தண்ணீரா மிவற்றுக்கெல்லாம்-தாக்கவே வாதசுரஞ் சன்னிவாதம்,விருகுமயவாதம் சீதாங்கதோஷ-மென்றுதின்னும்பிரலாபந் தனக்குத்தானும்,மாருத காண்டிபங்கெம் பீரபூத-மதியளிக்கும் பிரலாப சன்னிபோகும்,ஆருகுங் கிருணிமுதல் நீரிழிவுக்கெல்லாம்-ஆனந்த வயிரவத்தை யறையக்கேளே. ........................................ (௨௦௦)

## ஆனந்தவயிரவம்.

அறைகிறேன் வெண்காரம் நாவிகூதம்- அப்பனே சாதிலிங்கந் திப்பிலிநல்மிளகு,நிறையாகத் தூக்கிநீ யிஞ்சிச்சாறும்-நேர்சமன்சம் பழச்சாறு கலந்துக்கொண்டு,குறையாம லீரிரண்டு சாமமாட்டி - கு ன்றிபோ லுருட்டடா குளிகைதானுங்,கறையான கிராணிக்குமுத்தக் காசு - கனத்தவதி விடையம்பொன் மூசுட்டை வேரோ ...... (உ0க)

மூசுட்டைவேர் வேர்க்கொம்பு சரியாய்வாங்கி- முறுகவதைக்கி யாழமிட்டுக் குளிகையூட்டு,மூசுட்டையுறு மேதிமோர் புட்டிலூட்ட- மோதிவருநீர்மேக மோடுந்தூர,மூசுட்டைவேர் பழச்சாற்றில் சுவாச காசம்-முதிர்ந்துநின்ற வேர்க்கொம்பு கிராம்புயேலம்,முசுட்டைபெ ருந்திப்பிலியுஞ் சரியாயாட்டி-முதிர்தயிரில் வராகனிடை கொடுத்தி டாயே. ...................................................... (உ0உ)

கொடுத்திடவே யதிசாரந் தீருமப்பா - கூறுன வசீரணத்துக் கு றவுகேளு,அடுத்துநீ வழுதலையி னீரிலூட்டு- அக்கினியின் மந்தத்துக்க றையக்கேளு, கடுத்துடைய திரிகடுகு பொடியிலூட்டு - கனவாய்வு போகவென்றால் கியாழஞ்சொல்வோம், படுத்திடுமே யெவ்வகையும் திவிர்த்தியாகப் - பஞ்சமூலக் கியாழமடா பத்திக்கேளே. ... (உ0ௌ)

## மேகாதிகுளிகை.

பத்தியுறுமேகாதி குளிகைசொல்லப்-படரானநீரிழிவு மனைத்து மோடும்,புத்தியுறுஞ் சூதமப்பா கழஞ்சிபத்து - புகழான வப்பிரகஞ் சிவப்புரொட்டி,சித்தியுறுங் கெந்தியப்பா ஐம்பதாகும் - திருமால்தன் தாரமது ஐம்பதாகும்,வெற்றியுறுஞ் சலாசத்துக் கழஞ்சியஞ்சு-மேலா ன காரீயஞ் செந்தூரங்கேளே. ........................................ (உ0ச)

## காரீயச்செந்தூரம்.

செந்தூரங் கழஞ்சியுமோ முப்பதாகுஞ்-சேர்த்திடவே மேல்மருந் தைச் சேரக்கேளு, பந்தூரப் பருத்திவிதைதேற்றான்வித்து-பாங்கான வெண்குன்றி வித்துத்தானும்,கந்தூரம் புளியம்விதைத் தோடுநல்ல-க ற்கடக சிங்கியிவை சமனாய்நீயும்,அந்தூரக்கழஞ்சியஞ்சு நிறுத்துவாங் கி-யப்பனே மரமஞ்சள் மஞ்சள்தூக்கே........................ (உ0ரு)

மஞ்சளெணுங்கஸ்தூரி மஞ்சள்தானும் - மன்னர்பணிதிலப்பனே வேர் சித்திரமூலம்,மிஞ்சாம லொருபத்துக் கழஞ்சிதூக்கி - வேம்பு வெள்வேல் கருங்காலி கருவேலம்பிசினும், துஞ்சமீவ கழஞ்சிபத்துத் தென்னம்பாளை, தாளங்கே மூம்மூன்று களஞ்சிதூக்கு, தஞ்சமூறுந் திரிகடுகு ஐம்பதாகுந், தனித்திந்த யினங்களெல்லாம் நிறுத்துக் கொ ள்ளே. .......................................................... (உ0சு)

கொள்ளடா ஆவரையு மருதிலந்தை - கொத்தோடே யிலைச்சாற் றைப் பிழிந்துநீயும் - தள்ளடாமூன்றுதினம்வெவ்வேருகச் - சவளவே நீராடடிவாங்கிமைந்தா - எள்ளடாதேற்றன்விரைப்பிரமாணத்தி - லெ ன்மகனே திரடடியே யெடுத்துவைத்து - விள்ளடாகுளிகையொன்று தேனிலீய - மேகமென்றதிருபதையும்வெல்லுங்காணே ......... ௨௦௭

கியாழம்.

வெல்லுதற்குக்கியாழவகைசொல்லக்கேளு - மென்பொடிக்கியா ழமிருதுடரிசுண்டை - நல்சுண்டைநீர்ப்பூலாசூரைகடவிறஞ்சி- நல மானவிரும்புலியாவாரைபொன்முசுடடை - வல்லவேவேணுவிலைமுத் தங்காய்த்திரிபலையும் - வாதுபுரிதேற்றம்விரைவகைநேரோதான் - புல் லவேதூளாக்கிப்பாண்டத்திடடுப் - புதுச்சடடிக்குள்ளேயொரு படி தான்போடே ................................................ ௨௦௮

போடடங்கேசலம்விடடுரவியில்சீலை - புகழாகவேடுகடடிமூன் றுசாமம் - நீடடங்கேதிரும்பவலதக் குறுக்கிக்காச்சி - நேராகக்கால்ப டிக்குள் கழஞ்சித்தேன்தான் - ஊடடங்கேகாலத்தில் விரவிக்கேளு- உத்தமனே பொன்முசுடடை வேரிேனாடு - நாடடங்கேதிரிகடுகு முத் தக்காசு - நலமூங்கிலிலைதிரிபலைநேராமே ........................ ௨௦௯

நேராகக்கழஞ்சிரெண்டு தூக்கிக்கொண்டு - நீர்படிதான்ரெண்டு விடடுழக்காய்க்காச்சி - சீராகக்கொடடிடவேகிரிகைகேளு - சீமேகம் மதுமேகம்காலமேகம் - ஆராததசைமேகம் வர்ணமேகம் - அதிமேக மனல்மேகம்வாதமேகம் - பேராகவேயுருக்குமாங்கிசமேகம்- புகழா னரெண்டுபத்துமேகம்போமே ........................................ ௨௧௦

மேகத்தில்நீர்கண்டு வெந்துபுண்ணாய் - மெலிவுகண்டுதாகமொடு சோகங்கண்டா, லாகத்துக்கிணங்கியதோர் சகாயமப்பா - அறைகிறே ன்புலத்தியரே மச்சமுனிஐயா, பாகத்தைக்கொண்டாவாரைபஞ்சாங் கம் - பண்பானநிலப்பனைவேர்முத்தக்காசு, வேகத்தையடக்கியதோர் நீர்ப்பூலாவேரும்- வேணுவிலைவில்வவேர்தேற்றும்விரையுடனே,சோ கத்துக்கிசைந்ததொரு பொன்முசுடடைவேரும் - துடரிசுண்டை சு ண்டிகருஞ் சூரைகூடடே .................................................. ௨௧௧

கூடடடா யிலந்தைவேர் மாதளையின்வேருங் - கூறரியமுந்திரி கைப்பேரிச்சம்பழமும்- நாடடடாநெல்பொரியுஞ் சீனிகற்கண்டு-நா யகம்பொன்னுங்காணிவேர் சமனாகழஞ்சி-பூடடடா தூளாக்கியிரு நாழிநீரில்-பொடிபோடடு யெடடொன்றாய்க் குறுக்கிக்கூடடு - மூட டடா குணங்காணுஞ் சஞ்சீவியப்பா-மோசமில்லைப் புண்தாகம் நீர்ச் சுடுபோமே ... ... ... ... (௨௧௨)

## க்ஷயகாசத்திற்குக் கண்டங்காரிநெய்.

போகாத க்ஷயகாசம் போகமைந்தா - புகழ்கண்டங் காரிநெய்யைப் புகலக்கேளு-வாகான சமூலமெல்லா மிடித்துச்சாறு-வாங்கடா படியொன்று நெய்தானொன்று-பாகமுடன் கலந்ததின்மேல் பாகங்கேளு-பருநெல்லி சிறுதேக்குச் சிற்றரத்தை சேகரமாம் வெட்பாலைகீழ்க்காய்நெல்லி-சிறுகாஞ்செ ரரியுஞ்சா ரணையின்வேரோ... (௨௧௩)

வேரான நெரிஞ்சிவேர் தாளிசபத்திரி- மீளுமல் வகையொன்று கழஞ்சிநாலும்-சீராகக் கால்படியே நெய்யிலிடடுச்-சிவக்கநீ காய்ச்சியதை வாங்கிக்கொண்டு-நேராகத் துட்டிடைநீ நக்கச்சொல்லு - நிமிஷத்தில் காசவகை நிவிர்த்தியாகும்-தீராத சுவாசமாங் காசத்துக்குத்-திப்பிலியின் நெய்யைநீ செப்பக்கேளே ... (௨௧௪)

## திப்பிலிநெய்.

கேளப்பா நிலவேம்பு நன்னாரிவேரும்-கிருமைபயுறுங் குறுவேருமிலாமிச்சம்வேர்-நாளப்பா சந்தனமும் பேராமல்லி-நலமான நெல்லிக்காய் வெட்பாலையரிசி-தாளப்பாமுந்திரிகை கீழ்க்காய்நெல்லீ-தாணரத்தை சீரகமும் கடுகுரோணி - வாளப்பா திப்பிலியு மிவையெல்லாந்தான்-வகையொன்று கழஞ்சிநிறை தூக்கிவாங்கே... ... (௨௧௫)

வாங்கியதை யாடடிவைத்து ஆவின்பால்தான்-மைந்தனே நாலுபடி வடிதான்கடடிப்-பாங்காக நெய்படியு மிரண்டுவிடடு- பதமாகச் சிவந்தபின்பு வடித்துநீயும்-நீங்காத ஈளைவலி சுவாசகாசம் - நீர்க்காசம் சுரகாசம் பித்தகாசம்-தாங்காம லொருபக்கங் கொள்ளும்போது- தலைகெடட நூல்போலே சாடிப்போமே.......,...... ......... (௨௧௬)

## ஏலாதிகிருதம்.

சாடிவிழும் நோய்க்கெல்லா மேலாதிகிருதம்-சாற்றுகிறேன்சாதகமாய்க் கேளுகேளு-சாடிவிழும் நெய்யன்றி யெண்ணை தன்னில்-சம்பிரதாயமார்க்கமடா சார்ந்துசெய்வாய்-சாடிவளரத்தியா லரசுயித்தி-தனித்தனியே முதிர்மரத்தின் சிவந்தபட டை- சாடியே யிடித்ததனைப் பாண்டத்திடடுத்-தயவாகத் தண்ணீர்தான் தூணியூற்றே... (௨௧௭)

ஊற்றியே யெடடொன்றாய்க் குறுக்கிநீயும்- உறவுசே ரிரண்டுபடி தாழைநீர்தான்-ஊற்றுவாய் ரெண்டுபடி வெள்ளறுகு நீர்தான்-உத்தமனே ரெண்டுபடி நெய்யுமூற்று ஊற்றிடவே யாலரசின் மூகிழெடுத்து-உகந்துநின்ற வத்திமுகிழ் மதுரங்கோஷ்டம்-ஊற்றுவாய் சந்தனமு மிலுப்பைப்பூவு - முற்பனஞ்சேர் தாமரையின் வளையும்வாங்கே.

வளையமொடு செங்கழுநீர் மூலந்தானும்-மகத்தானவெள்ளறுகு மூலந்தானு,மிளையவே பேரீத்து நாகப்பூவு- மியல்பான செண்பகப் பூ லவுங்கபத்திரி, தளையவே கச்சோலம் நாணல்தாதுந் - தனித்துவளர் நன்னாரி நெய்தல்மூலம், விளையவே யமுக்கிரு யேலந்தானு-மீருமல் கழஞ்சொன்று பாலிலாடடே.......................... (௨௧௯)

ஆடடியதில் கலந்துகொண்டு நினைந்தானுலு - அளவாகக்காச்சநீயஞ்சாநாளில், ஊடடவே வடித்திறுத் துண்டபோது- உயர்த்ததோரீளையெனும் புருக்கிதீரும் - நாட்டியே பித்தம்வளர் காசம்போகும்-நலமளிக்குமுளமாந்தைநாடாதென்று,மூடடியேநெய்நிறுத்தியெண்ணைசேர்த்து - உறக்காச்சி முழுகிடவே யுறுதிகேளே. ... ... (௨௨௦)

உறுதியென்ற நீரிழிவு வுள்ளுலர்த்தி - உழலையுறுங் கிரந்திமுதல் பிளவைதீரு,மிறுதியுறுங்காலெரிவு மேலெரிவுந்தீரு-மித்தயிலம் நெய்கூடில் கிருதமாகும்,பெறுதியுறும் நல்லவருக் கிந்தநூல்தான்- பேசுகிறே னுளமாந்தை யெடடுந்திரச்,சுறுதிபுரி கண்டங்காரி நெய்யையப்பா - சொல்லுகிறேன் சமூலம்நீ வாங்குவாங்கே. ......... (௨௨௧)

## உளமாந்தையெட்டுக்குங்கண்டங்காரிநெய்.

வாங்கியே நாலெடடுப் பலர்தானப்பா-வாகான கூவிளமும் அமுக்கிருவும்;பாங்கிடவும் பேய்ப்புடலு மாடாதோடை-பாங்கானசங்குசிறு வழுதலையோடாறும்,தாங்கியே நிறுத்துநீ யிடித்துக்கொண்டு-தண்ணீர்தானெண்குறுணிதன்னிலிடடு,நீங்கிடாதெரியிடடுயெடடொன்றுக்கி - நெய்படிநா லதில்யிடடு நெறிபின்கேளே......... (௨௨௨)

நெறிவெள்ளைபூசினிக்காய் தண்ணீர்தானும்-நெய்க்குநேர் பால்நேராய்க் கலந்துகொண்டு,தறுதாளி பத்திரியு மிளகுசெவ்வியஞ்-சமனுக மும்மூன்று கழஞ்சிதூக்கு,திறியேலமிலவங்கப் படடை பத்திரி-திப்பிலியு மிலாமிஞ்சச் சிறுநாகப்பூ,மறிமாஞ்சி கற்கடக சிங்கியிவையெல்லாம் - வகையொன்றுக் கேயிரண்டு கழஞ்சி தூக்கே. ... (௨௨௩)

தூக்கியே யாவின்பால் விட்டுஆட்டி-சோர்வுறவே கலக்கிநீ யடுப்பில்வைத்து-போக்கியே கணேசனுக்குத் தூபதீபம்-புட்பத்தா லர்ச்சனை நைவேத்தியஞ்செய்து-தாக்கியே சொர்ன புஷ்பஞ் சாத்தியங்கே-தழல்மூட்டிப்பதமாக வடித்துக்கொண்டு,தேக்கியேதிப்பிலியும் பேரிச்சம்பழமும்-சோடா மும்மூன்று கழஞ்சிதானே......., (௨௨௪)

சேர்த்ததனைத் தினமூன்று கழஞ்சிநெய்தான்-தின்றிடவுமுளமாந்தை சுவாசகாசம்-பார்த்தவுடன் கொன்றுவிடுஞ் சுணங்குமாந்தை-பரிவான க்ஷயமிருமல் தகருமிக்க, மாற்றமுறுஞ் சலந்தானு மாறிப்போ

கு-மைந்தனே ராத்திரிக்குக் கியாழஞ்சொல்வோம் - போர்த்தபுகழ் பொற்கடுக்காய் கண்டங்காரி-புகழ்நெல்லி சிறுதேக்கு மிளகுநேரே.
நேராகக் கழஞ்சிரெண்டு சட்டிவிட்டு-நீர்படிதா னிரண்டுவிட்டு ழக்காய்க்காச்சி-வாரமுட னுண்டிடவே க்ஷயநோயிருமல்-வரட்சியொடு பீனிசமா ரணமுமாரும்-பேரானவின்னமொரு கியாழங்கேளு-பெருந்திராய்சுழலா வணாயின்மூலஞ் - சேராய்நீ சிறுதேக்குசுக்குநல்ல-திப்பிலியும் வகையொன்று கழஞ்சிமூன்றே........................௨௨௬

கியாழம்.

மூன்றுகுந்தூக்கியப்பா நொறுக்கிவாங்கி-மூகிரவேரெண்டுபடி சலத்திலிட்டு - ஊன்றிநீயெரித் துழக்காய்க்காச்சி - உண்டிடவேதேனவிட்டுறவுசெய்து - தான்றியேயின்னமொருகியாழஞ்சொல்வோம்-தனிச்சுக்குப்பொன்மூசுட்டை வேரினோடே - தூன்றியேசிறுதேக்கு தேவதாரம் - தாதுவளைபெருங்குரும்பைசிந்திகாணே ........(௨௨௭)

காணப்பாவழுதலைவேர் கண்டங்காரி-கழஞ்சிரெண்டுவொவ்வொன்று கியாழ முன்போல் - தோணப்பா திப்பிலியை மேல்பொடியதாகத் - தூவியேசுகமாகக் கொள்ளச்சொல்லு - நீணப்பாபத்தியந்தான்நெய்யும்பாலும் - நேர்துவளாயண்டமுமா மவளாப்பிஞ்சாம்-பூணப்பாபீர்க்கிலுமாம்புடலுமாகும் - புகழானமுருங்கைமுதல் முசலாம்பாரே...................................................(௨௨௮)

முயல்நெய்.

மூசலாகும்கவுதாரியுள்ளானுகும் - மூதுவரால்நெய்மீனும்சுறல்மீனும்- புயலானகொடிப்பையுப்புக்கண்டமாகும்- புகழ்ந்துநோய்தனக்கெல்லாம்பூட்டுநன்றும் - மயலாகும்வாகடங்கள் பார்க்கவேண்டாம்- மாந்தவகைக்கெல்லாம்நெய்வகையைக்கேளு - அயல்காணுமுயலொன்றுபிடித்துவந்து - அப்பனேகால்தலையுங்குடலும்போக்கே.

குடல்போக்கிநாலுபத்துப்பலந்தான்தூக்கி - குமுறவேயிடித்துவொருபாண்டத்திட்டு - அடலமுடன்மூக்குறுணிச்சலமும்விட்டு-அப்பனேநாலொன்றாய்க் குறுக்கிநீயும் - விடலமுயர்தோடைச்சார் குறுணிவிட்டு - வெள்ளாவின்பாலுமிருநாழிவிட்டு - நடலநறுநெய்யுமிருநாழியுரிவிட்டு - நாட்டிடவேமேல்மருந்தைச்சொல்லுறேனே(௨௩௦)

சொல்லுவேன்திப்பிலியுமதனின்மூலம் - சுக்குடனே கடகசிங்கி சித்திரமூலம் - சொல்லுமாஞ்சிறுதேக்குகுருசானியோமஞ்- செவியமிருசீரகமும் கிராம்புதானும் - வெல்லுமேசடாமாஞ்சில் கடுகுரோணி - மிளகுகோட்டமிந்துப்புவாலுழுவையரிசி- யல்லவேமுந்திரிகையேலமிலவுங்க-மதிவிடையமரத்தையத்திப்பிலியுந்தூக்கே.... (௨௩௧

தூக்கடாகழஞ்சிரெண்டு பாலிலாட்டு - சொல்லுவேன்பெருவா கைபெருங்குமுழுமுன்னை - யாக்கமுறும்பத்திரியுங்கண்டங்காரி - யப்பனேசிற்றாமல்லிபேராமல்லி - தேக்கடாகூவிளமும் நெரிஞ்சிதானும் - சிறுவழுதலையுமிவைசமூலங்கூடத் - தாக்கடாதூதுவளையமுக்கிருவேர் - சங்கம்வேர்திப்பிலியுமிளகும்பாரே.................... உ௱உ

பாரப்பாமஞ்சளோடு தேவதாரம் - பருவரத்தை வகைக்கங்கேபலந்தான்மூன்று - சேரப்பாதூளாக்கித்தூணிநீரில் - செப்பமுடனொன்றுய்க்குறுக்கிவாங்கி - ஆரப்பாயிவையெல்லாமொன்றுய்ச்சேர்த்து - அடுப்பேற்றிப்பூசைசெய்து அனலைமூட்டி - பேரப்பாமூன்றுநாளூறவைத்துப் - புகழாகநாலாநாள்வடித்திடாயே........ உ௱௩

வடித்துவைத்தநெய்யிலே கழஞ்சிதூக்கி - மைந்தனேயனைக்கழஞ்சிதேனும்விட்டு - படித்தரமாய்திப்பிலியின்பொடிமேல்தூவி - பாங்காகவுடம்பறிந்திருநேரமூட்டு - நொடிக்குமுன்னே நோய்களறும் வச்சிரதேகப் - நுணுக்கந்தொண்ணூற்றாறு க்ஷயமூந்தீரும் - கடித்துவாய்துடைத்தாப்போல் பிணிவிண்ணேகும் - கதலிகந்த கிருதங்கள் கழறுவேனே.................................................... உ௱௪

கதலிகந்தகிருதம்.

கதலிகந்தகிருதங்கள் பெரும்பாட்டுக்கும் - காசங்கள்க்ஷயரோகமெல்லாந்தீரும் - கதலிகந்தமூலம்பூ விரண்டுநோரய்க் - கலக்கவொருதுலாமிடித்திப்பதக்குநீரில் - கதலிகந்தநாலொன்றுய்க்குறுகக்காச்சி - கலந்ததற்குள்பசுவிநெய் படிதானென்று - கதலிகந்தமாவின்பால் படிதானென்று - கரும்புநீர்நெல்லிக்காய்காணுந்தானே........ உ௱௫

தானென்றநிலப்பனைவேர்தண்ணீர்மிட்டான் - தனிநீர்தான்வகைநாலுபடிதானும் - கானென்றுகலந்துவைத்து கடைமருந்தைக்கேளு- கலரோலமிலவுங்கம்வாளங்கெந்தம் - மானென்றசடாமாஞ்சில் திரிபலையால்விழுதி - மைந்தனேஅல்லியுடன்செங்கழுநீர்க்கிழங்கு-தேனென்றநெய்தலொடுகழஞ்சிமூன்று - திறமாகஆட்டிநீநெய்யிற்சேரோ. உ௱௬

நெய்யையடுப்பேற்றியே யனலைமூட்டி - நேராகநாலுதினம்சிறுகொதிப்பித்து - மெய்யாகவஞ்சாநாள்சிறுகக்காச்சி - மேன்மையுடன்மூன்றுநாளூறவைத்து - எய்யாமலிருநேரமிடைதான்கேளு - யென்மகனே யிருகழஞ்சி யியல்பாய்த்தூக்கி - ஐயாகேள்கொண்டிடவேயொழியும்நோயை - யறைகிறேனுள்ளபடி யறைகிறேனே.....உ௱௭

நிலப்பனைநெய்.

அறைகிறேன்எலும்புருக்கி மேகவெட்டை - யடர்ந்தொழுகும் பெரும்பாண்டு நீரிழிவுநிற்கும் - நிறைதிறக்கும் பெரும்பாட்டுக் கின்

ணஞ்சொல்வோ - நெய்யடாநிலப்பனைவே ரொதியம்பட்டை - மறையாதகருங்காலிப் பட்டைதானும்-வாய்க்கடங்காக் கருநாவல் பட்டைதானும், குறையாமல் வகைநாலு பலமும்நூறு - குறுகவிடித் திருநாணி நீரிலூட்டே. ........................................ (௨௬௮)

ஊட்டியே யெட்டொன்றாய்க் காச்சிவைத்து- வுறவாரு யிருநாழிப் பசுவிநெய்யில், நீட்டியே யிருநாழி பாலும்வாரு - நினைவாகப்புளியாரைச் சாறவ்வண்ணம், நாட்டியே நீர்வள்ளிக் கிழங்குசாறு-நயுமாக விருநாழி கூடவிட்டு, வீட்டுவாய் பொன்முசுட்டை சிறுகாஞ்சோரி - விளாம்பழமும் திரிபலையுங் கொத்தமல்லியாமே. ... (௨௬௯)

கொத்தமல்லி மாங்கொட்டை பேரீச்சம்பழமும் - கூறுனமுந்திரிகை பெருங்குமிழின் பழமும், வித்தமல்லி யரத்தைசுக்கு வேரிமலர்த்தாது- மென்னிலவம் பிசின்கொத்தான் காட்டாத்திப்பூ, மத்தமலிக்கீழ்காயு மொதியம்பட்டை-மாதளம்பழத்தோடு வில்வப்பிஞ்சு சுத்தமல்லி யதிமதூரம் விளாம்பிசினும்- துய்யவெள்ளி லோத்திரமுமுத்தக்காசே. ........................................ (௨௭௰)

முத்தக்கா சஞ்சனக்கல் சாத்திரபேதி - மூலமா மமுக்குரு நன்னாரிகல்நார்,மத்தக்கா ரிலாமிச்ச மத்திதிப்பிலியும் - மைந்தனே சிறுநாவல் புளியம்விதைத்தோடு, வுத்தக்கா யிலவுங்கப்பட்டை பத்திரி-யூதுபஞ்சக் குருசாணி குங்கிலியமேலம், சுத்தக்கா வகையொன்று கழஞ்சிரெண்டு - சூட்டிநீ யாட்டுவா யாவின்பாலே. ............ (௨௭௧)

'பாலினாலாட்டியப்பா நெய்க்குளிட்டுப்-பதமாக வடித்திறுத்துப் பரணிசேர்த்து, சாலவே கழஞ்சிரெண்டு காலத்திலூட்டு - சாயபொட்சை வேளையில் கியாழஞ்சொல்வேன், நீலவேபருத்திவிளா நிலப்பனையின்கிழங்கு - நீர்வள்ளி மொசுமொசுக்கை வேறுங்கூட்டி, நாளப்பாபேரிச்சம்பழமுமொக்க-ரெண்டுகா சிடைநாழிப்பாலிற்போடே(

போட்டப்பாவுழக்காக்கிவடித்துக்கொண்டு-புகட்டடாநெய்தனிலேகாலாழாக்கை, நீட்டப்பா சர்க்கரைதான் வாராகன்ரெண்டு- நீயிட்டுக் கொடுத்திடவும் தீரும்நோய்கள்,பூட்டப்பா பெரும்பாடு மெஞ்ம்புருக்கி-பொருமலுடன் தாபமுறும் சோபதாகம், பாட்டப்பாபிமியமுசுவாசகாசம்-பாண்டுமொத்த காசமெல்லாம்பாறுந்தானே. ... (

## அசுவகந்தாதிநெய்.

பாறுமே க்ஷயங்களப்பா கிருதத்துக்குப்- பாடுகிறே னசுவகெ தாதி நெய்யை,வீறுடைய வமுக்கிருதுலாந்தானென்று-மேன்மைசரணை யிரண்டை சிவதைசங்கு,வீறுடையமிளகுசாரணையும் வேரும்-ப

ஞ்சாமல் பலம்பத்து நிறுத்திக்கொண்டு, வாறுடைய பெருங்குமிழும் பெருவாகைமுன்னை-மகத்தான கூவிளமும்பாதிரியுங்கேளே. (உ௪௪)

பாதிரியுஞ் சிற்றுமல்லி போரமல்லி-பண்பான நெல்லியொடுக ண்டங்காரி, நீதுசிறு வழுதலைவேர் பலந்தான்மூன்று - நிறுத்தங்கேயி வையெல்லா மிடித்துமைந்தா, ஆதிபெறும் பாண்டத்தி லிட்டுப்பின்பு - அளந்துவிடு யிருதூணி சலந்தானப்பா, போதியே யெட்டொன்றாய்க் குறுக்கிவாங்கி - புகட்டடா ஆவிநெய்யில் படிதானென்றே. ()

நெய்விட்டுமதுரமொடு சூரியபத்திரி - நேரான தேக்கடையந் திரிகடுகு,மையற்ற திரிபலையுந் தேவதார - மாத்தைமஞ்சள் மரமஞ்சள் திப்பிலியின்மூலம், பையற்ற கொடுவேலி படமடக்கி - பருந்தகரம் வெட்பாலை கடுகுரோணி, நொய்யற்ற வரோணுகமு மட்டசந்த- நோக்கவே யின்னமுண்டு நுணுக்கந் தானே ................ (உ௪௬)

தானென்ற எவாச்சாரஞ் சத்திசாரம்-சகாயமருள் காச்ச லவணந் தானும்,தானென்ற வகையொன்று வராகனுவு - தனித்தனியே தூக்கி நீ யாட்டிமைந்தா. தானென்று கலக்கியே நாலுநாள்தான் - சயிக்கினையாய்த் தீயிலிட்டு அஞ்சாநாளில்,தானென்று வலித்தெடுத்து மேல் மருந்தைச் - சாற்றுகிறேன் காந்தபற்பந் தாம்பிரபற்பங்கானே....()

காணப்பா தாம்பிரபற்பம் பலந்தான் ரெண்டு - கனத்தமணி திப்பிலியும் பலந்தானெட்டுத், தோணப்பா தூளாக்கி நெய்யிலிட்டுத்- தஞ்சாத தேன்படிதான் ரெண்டுவிட்டு,பூணப்பா தானியபுடந் திங்களொன்று - புகட்டிவைத்துப் பிறகருந்தப் போம்நோய்கேளு,வீணப்பாசயரோகம் சுவாசகாசம்-வீறுனமிலிகையும் ரோசியம்போமே.

## அஷ்டசந்தநெய்.

அரோசியம்போஞ் சுரம்போகுங் குன்மம்போகும்-அப்பனே அறுகுலை ரத்தபித்தம், அரோசிதருமெலும்புருக்கிவெப்புப்பார்வை-யனேகமாம் ரோகங்கள் தீருந்தீரும், அரோசிதரும் அஷ்டசந்த விபரங்கேளு - அகில்கட்டை மலாக்கா லவங்கப்பட்டை, அரோசிபோங் கோஷ்டமுடன் கஸ்தூரிமஞ்ச-ளப்பனே குங்குமப்பூகற்பூரந்தானே.

கற்பூரஞ் சமுத்திராப் பச்சையோடு - காணப்பா அஷ்டசந்தங் கருதிப்பாரு, கற்பூர நீர்வள்ளி நெய்யைக்கேளு - கருதியதின் கிழங்குச்சாறு படிதாநாலு, கற்பூரம் ஆவின்பால் படியும்நாலு-காட்டதற்குள் ளிருநாழி நெய்யைநீயும், கற்பூரம் வெட்பாலை வேரினோடே-காண்துத்தி மூகாளிக் கிழங்குவாங்கே. ........................ (உ௫0)

கிழங்கப்பா நன்னாரி யிருவேலிவேரும்-கேளடா மோசுமோசுக்கை வேருங்கூடக், களங்கமில்லா விலுப்பைப்பூ பூமிசர்க்கரை-கனமதாஞ் சந்தனமும் பேரீச்சம்பழமும், முழங்கவே பற்படகம் நாவற்பட்டை - முந்திரிகை சீந்தியுட னத்திப்பட்டை, விளங்கவே யாலத்தி முகிழுங்கூட - வெள்ளீச்சங் கொழுந்துடனே விபரங்கேளே... ()

விபரங்கேள் வகையொன்று கழஞ்சியொன்று - மீறாமல் பாலிலே ஆட்டிவாங்கி, விபரமாய் நெய்யுடனே கலந்துவைத்து - மெதுவாகத் தீயெரிப்பாய் தினந்தான்மூன்று-விபரமாய் நாலாநாள் வடித்துக்கொண்டு-மேற்பொடிதான் தேனுக்குச் சமனாய்ச்சேர்த்து- விபரமாய்ச்சற்கரையும் பலந்தானொன்று-மீறாமல்திப்பிலியும் பலந்தானொன்றே ... ... ... ... ... (௨௫௨)

ஒன்றாகப்பொடித்துநீ நெய்யில் போட்டு - உண்டுவா கழஞ்சியொன்று காலத்தாலே, நின்றாடும் பெரும்பாடு கட்டிச் சோரை-நிலயாதவெலும்புருக்கி க்ஷயங்களீளை-பொன்றாகக் காலெரிவு மூற்சைதாகம்-பொன்றிவிடும்பஞ்சுதனில் பொறிப்பட்டாப்போல்-குன்றாதவிளநீர்நெய் கிரிச்சினங்களாறுங்-கூட்டோடே திறந்திடவுங் கூறினேனே.

## இளநீர்நெய்.

திறந்துவிடு மிளநீர்தான் படிதானாலு-செப்புகிறேன்பூசினிக்காய் தண்ணீர்நாலு-துறந்ததோர் வாழையுட கிழங்குச்சாறு-சொரித்தண்ணீர் மீட்டான்றன் கிழங்குச்சாறு-மறந்திடா தொவ்வொன்று படிதானாலு-மைந்தனே யாவின்பால் படியும்நாலு-கறந்துவிடு கரிப்பான்சார் பொன்னாங்காணி-களங்கமறு நீர்முள்ளிச் சாறுவாங்கே........(௨௫௪)

வாங்கடாயிச்சாறு படிதானொண்டு-வகையானசீந்தியுட கியாழங்கேளு-பாங்காகநாலுபடி நெருஞ்சிச் சாறு-பார்புகழுமோரிலைத்தாமரையின்சாறும்-நீங்காமலெண்ணான்கு படியுமொன்றாய்-நீயெரியப்பாண்டத்தி லிட்டுப்பின்பு-ஆங்கமுறு மாவினெய்யும் படியிரண்டு-அப்பனே சலசத்து கல்நார்காணே ... ... .. (௨௫௫)

கல்நாருங் கல்மதமும் சிறுபூளைவேரும் - கருவத்தித் திப்பிலியும் பொன்னாங்காணி-சென்னாவி யுருவிவேர் கூகைநீறு-சிறுநீர்முள்ளியின் விரையு மேலமெள்ளு-மன்னான தேற்றின்வித்து பொன்னூமத்தின்வித்து-மைந்தனே வகையொன்று வராகன்மூன்று-மின்னார்தன் பாலிலேயாட்டிவாங்கி-விரவியே யடுப்பேற்றி வடித்துக்கொள்ளே... (௨௫௬)

வடிக்குமுன்பே யாவின்பால் படிதானாலு மாட்டியேநிறுத்தைத் வாங்கிவைத்து-குடித்திடவே சீனியதில் படிதானொன்று - கொள்ளிடே தேன்படியு முக்கால்சேர்த்து-முடித்திருக்கும் நோய்க்கெல்லாம் கழ

ஞ்சிமூன்று-மொண்டுண்ணக் கிரிசனங்கள் சுக்கிலமேகம் - கடித்திருக்
தம்காலெரிவு தாகவுஷ்ணம்-காட்டத்தில்தீப்போலே கரிந்துபோமே.

## பூசினிக்காய்நெய்.

போகாத க்ஷயமுதலாய் மேகமெல்லாம்-போவதற்குப் பூசினிக்
காய் நெய்யைக்கேளு-வாகான பூசினிக்காய்ச் சார்படியெட்டு- மைந்
தனே நீர்வள்ளிக் கிழங்குச்சாறு - பாகாகப்படியெட்டு கருப்பஞ்சா
று-படியிரண்டு பாலிரண்டு பசுவினெய்கேள்-ஆகமுடன்படியிரண்டு
ச்சரவொன்று-யளந்துவிடு பாண்டத்தி லறையக்கேளே...... (உ௫அ)

அறைகிறேனிலவுங்க மேலமிந்துப் - பப்பனே விளாவரிசி சமம
தாகும்-நிறைகிறேன் சாதிக்காய் சீரகமுங்கேளு-நேரான சதகுப்பை
கூகைநீறு-மறையாத மூந்திரிகை பேரிச்சம்பழமு-மகத்தான கோட்
டமதி மதுரந்தானும்-கறையான சாதிக்கா யிவையெல்லாந்தான்-கழ
ஞ்சியஞ்சு குறையாமல் கருத்தாய்நீயும்-நிறையாகத் தூக்கியே பாலி
லாட்டி-நெய்யிலிட்டுப் பேய்வாழை பழந்தான் பத்தே...... (உ௫௯)

பழம்போட்டு வடித்துடனே கடைந்துகொண்டு-பாச்சுவா யதி
லுழக்குப் பஞ்சதாரை-ளங்கமறப் பராபரனை நினைந்துக்கொண்
டு-கழஞ்சிரெண்டு யிருநேர முண்டபோது-உளமாந்தை சுரமாந்தை
நெஞ்சில்குத்து-உத்தமனேமேகத்தில் கிரிசனங்கள்-மூழம்போட்டமூ
த்திரப்பாலே ரத்தகாசம்-முற்றிநின்ற பித்தகாச மெல்லாம் போமே.

## வெள்ளுள்ளிநெய்.

போவதற்குக் குடல்வாதஞ் சூலைவாதம்-பொன்றிவிடும் வெள்ளு
ள்ளி நெய்யைக்கேளு-போவதற்குத் துலாமொன்று வெள்ளுள்ளிப்ப
ருப்பு-புகழாக விடித்ததனைப் பாண்டத்திட்டு-போவதற்குப்பதினறு
மரக்கால்தண்ணீர்-புகட்டிநீ முக்குறுணி யாகவாங்கிப்-போவதற்கு வ
கைவிபரம் வடிதான்கட்டி - பூட்டுதற்கு அறைகிறேன் புகலக்கேளே.

கேளப்பா பெருங்குரும்பை வில்வபத்திரி-கிரிகையுறுபெருங்கு
மிழ மிவைநேராக-ஏளப்பா பலமனாதா னெவ்வொன்றுகூட்டி-இடி
த்துநீ நாற்குறுணி சலத்திலிட்டு-நாளப்பா குறுக்கியே குறுணியாக்
கி-நயமாகுமுள்ளிநீர் கூடச்சேர்த்து-நீளப்பா ரெண்டுபடி நெடுநாள்
காடி-நீர்விட்டுகோமாதுளம் பழச்சாறுதானும்-தாளப்பாரெண்டுபடி
திறமாய்ச்சேர்த்து-சரியப்பா திரிகடுகு திரிபலையுங்காணே... (உ௬௨)

காணவே யோமமிந்து யிருசீரகமும்-கடையில்வளர் செவ்விய
மூர் தேவதாரம்-பூணவே புளிநடலை சமூலம்வாங்கி- பொருந்துநீ வ
ழக்கங்கேகழஞ்சுநாலு - தோணவே வெள்ளாட்டுப் பாலாலாட்டி-

திகையாக ரெண்டுபடி நெய்யுஞ்சேர்த்து- ஊணவே வடித்திறுத்துக் கழஞ்சிரெண்டு-உண்டிடவுங் குடல்வாத மாறும்போச்சே... (௨௬௩)

## வல்லாரைநெய்.

போச்சப்பா காய்ரசு வரசுவாதம்-புனேந்தெழும்பும் வெட்டை முதல் தாபசோபம்-மாச்செல்ற சுரஞ்சூலை யத்திவெப்பு - மடர்கின்ற பாண்டுபிழி லிகையும்போக-வாச்சென்ற வல்லாரை நெய்யைச்சொல் வேன்-மைந்தனே மருந்தினுட வரிசைகேளு-நீச்சென்ற வல்லாரை பசுவின்பாலும்-நேரான சிதேவி செங்கழுநீர்ச்சாறே... ...... (௨௬௪)

சாறுபடி மூந்நான்கு மிளநீர்த்தண்ணீர் - தானிரண்டு படிநெய்யு மைங்கால்கூட்டி-மீறுமல்குன்றிவேர் செங்கழுநீர்மூலம் - மேலானமதுரங் கோரோசனைதான்கோட்டம் - கூறுன அவிரியிலைப் பச்சைப்பூரம் - குறையாமல் கழஞ்சியொன்று பாலிலாட்டி, ஆறுமல்கொதியிட்டுமூன்றுநாள்தா-னப்பனே நாலரநாள் வடித்துக்கொள்ளே. ()

கொள்ளவே காசிடைதான் விடங்கள்தீரும்-கூறுனநாவிறஞ்சு கழுதைவண்டு, விள்ளவே யலரியெட்டி நஞ்சுதீரும் - மேல்வத்திககால் வத்துகாந்தல்திரும், துள்ளவேயத்திசுர மெலும்புருக்கி-சூழ்க்ஷயமும் வயிற்றெரிவு வாயிலெச்சில், அள்ளவேகுறைந்தாப்போ லுடனேதீரு-மனேகசுக முண்டாகு மப்பாபாரோ. .............. ......... (௨௬௬)

## புளியாரைநெய்.

பாரப்பா புளியாரை நெய்யைச்சொல்வேன்-படரான கிராணிவகையாறும்போக, நேரப்பாபுளியாரைக் குறுணிச்சாறு-நெய்தானும் ரெண்டுபடி தயிர்தானுழி, பேரப்பா அதிவிடைய மிந்துபெருங்காயம்-பேநான யெவாச்சாரம் சாதிக்காயும், காரப்பா வெட்பாலை திப்பிலியின்மூலம் - கிராம்பு மாதளம்பூ மரமஞ்சள்காணே. ...... (௨௬௭)

## பலாசுநெய்.

காணவேயிலவுங்க மிவைகளெல்லாம்-கழஞ்சியங்கே வகைக்காறுதூக்கியாட்டி, யூணவே காச்சிநீ கொடுக்கும்போது - உத்தமனே யாறுவகை கிறுணிதீரும், ஆணவே பலாசுநெய்யைச் செப்பக்கேளு, அடிபட்டை பலாசப்பா நாலெட்டாகும், தோணவே பலந்தூக்கி யிடித்து மைந்தா, சொல்லுகிறேனிருகுறுணி நீரிலூட்டே.............. ௨௬௮

## தயிர்நெய்.

ஊட்டியேபடியொன்றாய்க்குறுக்கிவாங்கி - யுறவைப்பாயிலைத் தண்டுகழஞ்சியீரா - றூட்டவேபடிநெய்யை யதனில்சேர்த்து-அனலி

ட்டுப்பதமாகவடித்துநீயும் - மூட்டவேகிராணிகுன்மங் கழிச்சல்விக்கல் - முறைபெல்லாங் குறைதீரு மோசமில்லை - நாட்டவேதயிர்நெய்யை மைந்தாகேளு - நலமானநெய்குறுணி தயிர்நாழிதானே. (௨௬௯)

தானென்றபெருங்காய மோமத்தோடு - சாற்றுவாய்திப்பிலியுங்கடுக்காய்கூட - மானென்றவட்டத்திப்பிலிகருஞ்சீரகமும்-மைந்தனேபுங்கம்வேர்வகைக்கோர்பத்து - தேனென்றவேர்க்கொப்பு முப்பதாகும் - சேரவேகழஞ்சிநீ தூக்கியாட்டி - கானென்றவெண்குறுணி நீரிலிட்டுக் - காச்சியேநாலொன்றாய்நெய்யிற்சேரே............... ௨௭௰

நெய்யிற்சேர்திப்பிலியின் மூலந்தானும் - நேரானகாட்டுத்திப்பிலியுங்கூட - உப்பவிருசீரகமுந்திப்பிலியும் - உற்பனஞ்சேர்வில்வக்காய்வட்டத்திரிப்பி - ஐயமில்லாமரமஞ்சள்வெட்பாலையரிசி- யதிமதுரமரத்தையிவை வராகன்சேர்த்து - கையோடேவடித்திறுத்து நக்கும்போது-கிராணிகுன்மமதிசாரஞ்சூலையோமே .................. ௨௭௧

சுக்குநெய்.

சூலையோஞ்சுக்குநெய்யைச் சூடடக்கேளு - சுக்குநீயிரண்டுபத்துப்பலமுந்தூக்கி - சீலமுறுமாயிலுடபட்டைதன்னை - சேரடாசுக்குச்சமனையப்பா - சாலநீயிடித்தனைமூக்குறுணிநீரில் - தாக்கியேநாலொன்றாய்க்குறுக்கிவாங்கி - பாலுறையுந்தயிர்தண்ணீர் படிதான்றொண்டு, பண்பானநெய்யதற்குள்ளொண்டனைதானூற்றே.................. ௨௭௨

ஊற்றிடுவாய்பெருங்காயந் திரிகடுகு செவியமோமம் - மத்தித்திப்பிலியும்கொடிவேலிவேரும் - ஊற்றவேதிப்பிலிதிப்பிலியின்மூலமோங்கிவளரொவாச்சாரமொவ்வொன்றேகே - ஏற்றிடவேகழஞ்சிகொண்டுசேர்த்துக்காச்சி - யொருவேளைமுக்கழஞ்சியுண்டபோது-, ஊற்றிருந்தவதிசாரம்பாண்டுசோகை - யோடிப்போமண்டலந்தானுண்ணச்சொல்லே............................................................ ௨௭௩

பொன்முசுட்டைநெய்.

உண்ணையிலேமுறுக்குவலிவயிற்றுநோவு - உடல்நோவுகாந்தலிவைஉடனேநிற்கும் - உண்ணவேபொன்முசுட்டை நெய்யைக்கேளு-வுத்தமனேயுளமாந்தை கிராணிக்கெல்லா - முண்ணவேபொன்முசுட்டைசித்திரமூல - மோங்கிநின்றமாதளம்வேர்த்தோல்கள்தானும்-உண்ணவேமாதளந்தோ டதிவிடயங்கோட்ட - முற்பனஞ்சேர் திப்பிலியுமூலங்காணே.............................................................. ௨௭௪

மூலமுடன்சுக்குத்திப்பிலியுமஞ்சள் - முறுதேவதாரமரமஞ்சள்தானும் - ஆலமுறும்வாலுழுவையிலந்தைப்பட்டை - யப்பனேவெட்பாலைவசம்பரத்தை - யேலமொடுசிற்றேலங்கடுகுரோகணி- லவங்கப்

பட்டையொடுபத்திரியோமம்- சாலவேபேய்ப்புடலுமிளகுதானும்- சமனுகவராகனென்று பாலிலாட்டிப் - பாலிதற்குரெண்டுபடி நெய் யும்நாழிப் - பாச்சிநீவடித்திறுத்துப்பாணிசேரே........ (உஎரு)

பஞ்சசெவ்வியநெய்.

சேர்த்தங்கேபாலருக்குக்கிருணிமாந்தம் - செப்பரியகண்பிரளி காமாலைசோகை - பார்த்தங்கேமனமுறைத்துக்கொடுக்கத்தீரும்-பஞ் சசெவ்வியநெய்யதனைப்பகரக்கேளு - வார்த்தேயால் தயிர்நெய்கோ மயமும்நீரும் - மைந்தனேநீர்பிழிந்து மார்க்கங்கேளு - ஊற்றப்பா லஞ்சுவகைநீருங்கேளு - வொருபத்துப்படியாக வளந்துகொள்ளே.

அளந்ததற்குக் கற்கவகை செப்பக்கேளு - அதிமதுரஞ்சிறுதேக் குக்கோட்டமிந்து - விஷந்தணியும்வாய்விளங்கம்கொத்தமல்லி-விளா லரிசி வாலுழுவை வெட்பாலைவித்து - வளந்தரும்நல்வசம்புள்ளிதேவ தாரம் - மகத்தானசதகுப்பையரத்தைகெந்த - மூளங்குகருஞ்சீரகமு ம்பூலாம்பட்டை - யுத்தபூலாவிருட்சமனைப் பொடிநன்னுரி (உஎஎ)

நன்னுரி பொன்முசுட்டை நெல்லிவேரும் - நலமானசாரணைவே ர் கீழ்க்காய்நெல்லி, பொன்னுகும் நிலப்பனையுந் துத்திவேரும்-புகழ் கடுகு ரோகணியும் பெருங்குரும்பை, மின்னுகு மதிவிடையஞ் சாதி க்காய்காந்த-மிக்கபத்திரி திரிகடுகுவில்வவேர்ச்சாம்பல்,மூன்னுகுந்திரி பலையும் கழஞ்சாய்த்தூக்கி - யுறவாக அரைத்தந்த நெய்யிற்சேரே. ()

அரைத்திட்டமருந்தோடே மூன்றுநாள்தா-நடுப்பேற்றிக்கொதி ப்பிட்டு நாலாநாள்தான், விரைந்துநீ வடித்தேதான் தினந்தானெட்டு- விபரமுடன் நெல்குழியில் வைத்துப்பின்பு, வரைந்துதினங் காலமே கழஞ்சிகொள்ள-ரத்தபித்த பெரும்பாண்டு குன்மந்தீரும் - கரைந்திழி யும் பீனிசமும் பித்தபாண்டு - காமாலை பெருவயிறு தீருங்காணே.

பஞ்சகோலக் குக்கில் நெய்.

காணவே சொல்லிவந்த பிரயோகத்தைக்-கறந்தபடி யறைந்திட் டேன் களங்கமன்றி-தோணவே பிணியுள்ளோ ருண்டாராகில்-துயர்நீ ருஞ் சுகமாகுந் தேகங்காணுங்-கோணுத குக்கில்நெய்தான் பஞ்சகோ லம்-கூறுகிறேன் திப்பிலியு மிந்தமூலம்-பூணவேசெவ்வியமுஞ்சித்திர மூலம்-பொன்மு சுட்டை சிந்தியுடன் சுண்டைவேரே........ (உஅ௰)

வேரான வில்வவே ராடாதோடை - வேர்க்கொம்பு பேய்ப்புட லுங் கண்டங்காரி-யாரமுறும் நிம்பத்தோல் கருவேலம் பட்டை-ஆயி ல்தோல் புங்கத்தோல் கொன்றைத்தோலும்-சீரானமுத்தக்கா சாடுதி ன்னுப்பாலை-செங்கடுக்காய் கொத்தமல்லி தேவதாரம்-வாரமுறும்வச ம்புமுக்கா வலையின்வேரும்-வகையொன்றுகழஞ்சங்கேயறுபதாமே.

ஆமப்பா வகைவகையும் நிறுத்துவாங்கி-ஆட்டியே தூளாக்கித்தூ
ணிநீரில்-வேமப்பா வெட்டொன்றாய் குறுக்கிவாங்கி-விடுநெய்யு மொ
ருபடியர் மேல்மருந்தை-நாமப்பா சொல்லுகிறேன் சினக்காரம்-நா
கட்பூ திரிகடுகு தேவதாரம்-ஓமப்பா திரிபலையும் சவுக்காரமேல- மூசி
சத்திச் சாரம்நறுங் கோட்டந்தானே ................... (உ௪உ)

கோட்டமொடுவசம்பு மிலவுங்கபத்திரி கொடிவேலி வேர்ப்ப
டடை திப்பிலியின்மூலம் - வாட்டமறுங் கரிப்பானுங் கடுகுரோணி-
மைந்தனே சாரணையும் தேவதார-மூட்டவே யதிவிடயம் பொன்முசு
ட்டைவேரு-மூத்தமனே வெண்கடுகு கடுக்காய்மாஞ்சில்- ஆட்டமிடும்
பெருங்குப்பை யத்திதிப்பிலி-யழகான பெருங்காய மோமம்பாரே.

ஓமமொடு யிந்துப்பு வளையலுப்பு - உறக்காச்சு லவணமொடு
பொட்டிலுப்பு-ஆமமொடு கல்லுப்பு பெருமரத்தின் பட்டை-படை
வான வுவாய்வேரும் வராகனென்று-சோமமுறுஞ் சுத்திசெய்த குக்கி
லப்பா-தூக்கடாவஞ்சுபலந் தூளாயாட்டி - யேமமுறு மருந்தெல்லா
மொன்றாய்ச்சேர்த்து-என்மகனே யாவில்பா லாட்டிடாயே. (உ௪௪)

ஆட்டியிந்த னெய்தனிலே கலந்துகொண்டு-அஞ்சுநாள் கொதிப்
பிட்டு ஆறுநாளில்-மூட்டியேவடித்திறுத்துப் பக்கமொன்று - முன்
போலே நெற்குழியில் வைத்தெடுத்து, ஊட்டுவாய் வராகனிடைவா
ரமாறு-வுண்டிடவே பவுத்திரமும் பிளவைசூலை, நாட்டியதோ ரஷ்டகு
ன்மம் விப்புருதிவருத்தம்- நாவினில்புண்முலைக்குத்தும் நாசமாமே.

தனிக்குக்கில் நெய்.

நாசமப்பா பலபுண்ணும் யோனிச்சூலை-நலங்கெடுக்கும்பலவிர
ணங் கண்டமாலை, நேசமாய் தனிக்குக்கில் நெய்யைச் சொல்வேன்-
நீகேளு புலத்தியனே நினைவுகொண்டு, வாசமுறும் வேப்பந்தோல்க
ண்டங்காரி-மைந்தனே பேய்ப்புடலுமாடாதோடை, நேசமுறுஞ்சீ
ந்திசிறு வழுதலையின்வேரும்-நிறையாகப்பப்பத்துபலந்தானுட்டே ()

ஆட்டிநீ பெண்குறுணி நீரிற்சேர்த்து- அக்கினியில்மாட்டியதை
க்குறுணியாக்கி,ஊட்டுவாய் நெய்யங்கே யறுகாலப்பா - யுறச்சேரு
பொன்முசுட்டை வாய்விளங்கம்,திட்டியதோர்செவ்வியமும்தேவதார
ம்-திப்பிலியு மெவாச்சாரம்சத்திசாரம் சூட்டுவாயேலமஞ்சள்வீழிவே
ர்த்தோல் சுகமானவெட்பாலை மிளகுதானே ................ (உ௪எ)

மிளகோமங் கொடுவேலி கடுகுரோணி-மூலமா மஞ்சிட்டி யதி
விடையம்,இளகாத கடுக்காயும் வசம்புநல்ல-வியல்பான சீரகமுமிடை
தான்கேளு, வளமாகக் காசிடைதான் ரெண்டுதூக்கி - மைந்தனேகுக்

கிலப்பா பலமுமொன்று, களவாகத் தனித்தண்ணீர்விட்டு ஆட்டி-காச்சடா வாறுநாள் வடித்துக்கொள்ளே. ........................ (௨௮௮)

வடித்ததொரு நெய்யிலே வராகன் தூக்கி - வாறுக வுண்டிடவே மைந்தாகேளு- குடிக்குமுன்னே நசியம்விட்டு வுடம்பிற்பூசு- கொடுங்காசம் பவுத்திரங்கள் வீக்கம்போகும், கடித்திருந்த விப்புருதி கண்டமாலை-கிராணிமுதல் கழல்வாதம்பேய்முசுட்டை, துடித்துவிழும்பீனிசமும் சூலைபீளை-சுகமாகு மாறுப்புண் வாந்திபோமே.... (௨௮௯)

## பேய்ப்புடல்நெய்.

வாந்திபோம் புடல்நெய்யைமைந்தாகேளு - வாங்கடாசலமூலந்தான் பேய்ப்புடலை- காந்திதரும் வேப்பந்தோ லாயில்பட்டை-கருவேம்பு நாவல்பட்டை நன்னாரிவேரும், சாந்தியா மத்தியாலரசுயித்தி-தயவான முகிழிலந்தை திப்பிலியின் மூலம், ஆந்தியாங் கருப்பாலை வாழைமூல-மதிமதுரம் முத்தக்கா சன்பாய்க்கேளே. ...... (௨௯௰)

அன்பாகத் தாமரையின் தண்டுமூல-மருளான சிவதைவே ரனைத்தும்வாங்கி,யின்பாக வகையொன்று பலந்தான்பத்து - யிடித்துநீபதின்குறுணி நீரிலிட்டு, முன்போலே நாலொன்றுய்க் குறுக்கிவாங்கி-மூட்டுவாய் நெய்யதற்கு அறுகாலப்பா,வன்பாக வாவின்பால் குறுணியிட்டு-மைந்தனே மருந்துவகை மாட்டக்கேளே. ............... (௨௯௧)

மாட்டியே யதிமதுர மூமத்தூரான் - வாகான விந்துடனே வெள்ளிலோத்திரம்,காட்டவே திப்பிலியுந் தேவதாரம்- கிராம்புமஞ்சள்மரமஞ்சள் வேரித்தாது, மூட்டவே யதினுடைய வனையந்தானு - முகிழிலந்தை நன்னாரி நந்திவ்வரும், வாட்டவேதிரிபலையுஞ் செங்கழுநீர்க்கிழங்கு-மஞ்சிட்டு பெருங்குரும்பை வரிசைகேளே. ......... (௨௯௨)

வரிசைபெறும் வெந்தையம் வேப்பலகுங்கூட-வகைக்கங்கேழும்மூன்று வராகன்தூக்கி, வரிசைபெறுங் குக்கிலப்பா மூன்றுபத்து-வராகனடா பாலிலே மயனமாக்கி, வரிசைபெறக் கலக்கியே நாலுநாள்நீ-மந்தாக்கினியாகவே வடித்துவாங்கி,வரிசைபெறக் கழஞ்சியுண்ணக் கொடுத்துப்பூசு-மயங்காமல் நசியமுநீ வார்த்திடாயே. ... (௨௯௩)

வார்த்திடவும் புண்தீரும் வீக்கந்தீரும் - மகத்தான சிலேற்பனமும் பிளவைதீரும், சீற்றமுறும் பவுத்திரமும் பருவுந்தீரும் - சில்லையாம் வீக்கமொடுகிரந்திதீரும், ஊற்றமடா மண்டலந்தா னுண்டபேர்க்கு-ஒழியாத விரணங்க ளொழியுங்காணும்,காத்திருந்த காசமொடு சுவாசம்போகக்- கழறுகிறேன் தெசமூல நெய்யைத்தானே.(௨௯௪)

## தேசமூலநெய்.

தேசமூலம்பெருவாகைமுன்னைவில்வந்-திரமானபாதிரியுங்கண்டங்காரி-பிசகாத பெருங்குமிழும் வழுதலையும்நெஞ்சி-பேரான வேரப்பா பலந்தானாறு, வசமாகும் சிற்றாமல்லி பேராமல்லி-வகையொன்றா பலமாறு பத்துங்கூட்டி,தசமறவுந் தூளாக்கிப் பாண்டத்திட்டு-தண்ணீரு மறுகுறுணி தளரவாரோ. .............................. (௨௧௫)

தளரவிட்ட சலமங்கே யெட்டொன்றாக்கித்-தனிநெய்யு மிரண்டுபடி தானேசேர்த்து,தளரவிடு திரிகடுகுதிரிபலையிந்துப்பு-தனியேலங்கோட்டம்விளாலரிசிதானும், தளரவிடவாலுழுவை சவ்வலுப்பு-தானைமம் சமனாக வராகன்கூட்டி, தளரவரைமூன்றுநாள் சிறுகக்காச்சித்-தப்பாமல் நாலாநாள் வடித்துக்கொள்ளே.. ... ........... (௨௧௬)

நாலாநாள் வடித்ததிலே கழஞ்சிதூக்கி-நாளொன்றுக் கிருநேரம் நக்கச்சொல்லு,காலனில்லை காசம்போ நெஞ்சுநோவும் - கிராணிபோம் நெஞ்சினுள்ளே கட்டும்போகு-மாலமுறுமானந்த வயிரவனைச்சேர்த்து-அப்படியே மண்டலந்தா னருந்தினாக்கால்-வாலசீவகனாகும் வச்சிரதேகம்-வசிகரஞ்சேர் நாயுருவி நெய்யைக்கேளே... (௨௧௭)

## நாயுருவிநெய்.

நாயுருவி சிவந்ததாய் சமூலம் வாங்கி-நறுக்கடா துலாமொன்று நிறுத்துநீயும்-நேயமுடன் தூளாக்கி யெண்குறுணிநீரில் - நிலைக்கவேயவித்துப்பின் னெட்டொன்றாக்கி,ஆயமுட னாவிநெய்தா னறுகால்விட்டு-அதற்குவகை கொடிவேலி வேரின்பட்டை-மாயமுறு தூறுஞ்சூறை வேர்வெட்டிமுன்னை-மைந்தனே முசுட்டைவேர் சிவதைவேரே.

சிவதைதிரி கடுகிந்து திரிபலைநேர்வாளம்-செங்கொட்டை தான்றிமரப் பட்டைதானும்-சிவதையெனு மாயிலுடன் புங்கம்பட்டை-திறமான வெண்கொல்லைப் பல்லிகூட-சிவதையெனுங்கஸ்தூரி மஞ்சள்தானும்-சிறுபிரண்டைக்கிழங்குடனே காட்டுச்சேனை-சிவதையெனுமருட்கிழங்குவகைகளெல்லாம்- சேரடாவகையொன்றுகழஞ்சிமூன்றே.

மூன்றாகத் தூக்கியே பாலிலாட்டி - மூலசவிடுமாவின்பால் படியும்நாலு, மூன்றொன்று நாலுநாள் கொதிக்கவைத்து- முறையோடேவஞ்சாநாள் வடித்துவாங்கி,மூன்றாகும்கழஞ்சிநெய்யைக் கலத்திலுண்ண-மூலமுகிழ்மூலமொத்தமூலமாறு,மூன்றாகும் தாதுவிலேபிறந்தமூலம் - மூளைசொரி வாறுவகை மூலம்போமே.................... (௨௧௮)

## கியாழம்.

மூலமென்ற வுள்மூலம் ரத்தமூலம்-முழங்கியேசலம்விழுகும்மூ

ர்ச்சைக்கெல்லாம்,சாலவே குடிநீரைச்சாற்றக்கேளு-சன்ன யிலவங்க
மொடு விலாமிச்சம்வேர் சீலமுட னங்கழஞ்சி யிடித்துநீயும்-செலம
ங்கேபடியொன்று ஆழாக்காக்கி-காலமே கொண்டுவரதினந்தானஞ்சு
காணுது மூலேகளையுங் களிம்புகேளே. ........................ (௫௱௧)

### களிம்பு.

களிம்பேது மூகிழ்மஞ்சள் கள்ளிப்பாலால்-களாயவேமயனம்போ
லாட்டிவாங்கி,களிம்பதனைப் பூசிடவுங் கரைந்துபோகும்-கள்ளியிலே
யெருக்கிலே மாவிலிங்கவிலையும்,களிம்பறவு மித்தனையும் புகைபிடிக்க
க் -கரையுமடாவின்னமொருகியாழங்கேளு,களிம்பறவும்வேர்க்கொம்
புவெட்பாலைப்பட்டைக்-கடுக்காய்தான் மூன்றிட்டுக்கியாழம்வையே,()

### கியாழம்.

வைத்தவொரு கியாழமுண்ணில் மூலம்போகும்-மைந்தனேயின்
னமொழிவரிசைசொல்வோம், வைத்துவாய் கியாழமுநீமதுரங்கெந்
தம்- மகத்தான நிலவேம்பு சிறுகாஞ்சொரிமூலம், வைத்தங்கேயெட்
டொன்றாய்க்குறுக்கியுண்ண-வரள்மூலமுள்மூலம்வாதைதீரும், வைத்
திடவே வெட்பாலை யரிசிபட்டை-மைந்தனே கெருடபச்சை சமபா
கந்தூக்கே.................................................... (௫௱௨)

சமபாக மாகவே யெடுத்துக்கொண்டு - சாந்துபோல் பச்சரிசிக்
கழுநீர்தன்னில்,சமபாக மாடடியே தேனிற்சேர்த்து- தானுண்ணத்தி
ருமடா வின்னங்கேளு,சமபாகஞ்சந்தனஞ்செங் கழுநீர்க்கிழங்கு-தனி
யிலவம் பிசினுடனே சரியாய்ச்சேர்த்து,சமபாகயேஷ்த்தின் பாலிற்
போட்டு - தாக்கவே கிறுணிவகை சளங்கள்போமே.......... (௫௱௪)

### அருவாதிகிருதம்.

சளஞ்செய்யுஞ் வகுரிப்புண்ணூறப்புண்ணும்-சரீரத்திலுண்டான
சார்புக்கெல்லா-முளங்குளிரத் அருவாதி கிருதங்கேளு - வுரையேது
வெள்ளறுகின் சாறெண்ணாழி-பளந்திண்ணிப் பாலையுட பட்டைதானு
ம்-பாங்காகநாலெட்டுப் பலமுந்தூக்கி-விஷந்தணிக்கும் வெள்ளறுகு
நெய்யென்பார்கள் - விட்டிடுவாய் நெய்யதற்கு ளஞ்சுழக்குதானே.

நெய்விட்டுப்பட்டையைநீ யிடித்துத்தானும்-நீர்விடுவா யெண்
ணாழி நேர்ப்பாய்க்காச்சி, அய்யனே ரெண்டுபடி யாக்கிக்கொண்டு-
அப்பனேநெய்யுடனே பாதியங்கே-மெய்யிட்ட வாவின்பால்படியும்
ரெண்டு-மென்மதுரம் பாலைமூகி ழிலாமிச்சம்வேர்-மையிட்ட நன்னா
ரிக் கொம்பரக்கு - மருவுறையுங் குங்கிலிய மலாக்காய் காணே. ()

மலாக்காயுமுந்திரிகை கச்சோலமடலி-மைந்தனே வெள்ளறுகு
தக்கா சல்லிமூலம்-வரிசைபெறுமூன்

ளியுட வளையந்தானும் - மலாக்காயும் வகைக்கங்கே கழஞ்சிமூன்று-வ
ரைந்தாடடிப்புகட்டிநீ மூன்றுநாள்தான்-மலாக்காயுந்நாலாநாள்வடி
த்துவாங்கி - மனோன் மணியைச் சதாசிவனை வணங்கிச் செய்யே.

வணங்கடாகணபதியைச் சித்தர்முத்தர்-மகத்தான ரிஷிதேவர்ஞா
னத்தோரா-பிணங்காமலடிபணிந்து கெர்வம்விட்டு- போற்றிநீவயித்
தியஞ்செய் புனிதமெய்தும், இணங்காத பேருடனே யிணங்கவேண்
டா-மினமறிந்து வுண்மைசொல்லு யில்லாவிட்டால்-உணங்காதசமாதி
யிலே நின்றுகொண்டு-ஒப்பற்ற வயித்தியனென் றொடுங்கியாடே. ()

ஒடுங்காத நெய்யப்பா கழஞ்சிரெண்டு - உண்டுவா வசூரிப்புண்
ணூறப்புண்ணு-மொடுங்காதவிக்கங்கள் ரத்தபித்த-மூள்கிரந்திப்புரக்கி
ரந்தி யுடுக்கள்சூலை-ஒடுங்காத தீச்சுடும்புண் வீக்கந்தூக்க - மோடிப்
போம்நெய்கண்ட வுடனேயப்பா-ஒடுங்காத பேய்ச்சொரிக்குச் சீந்
தில்நெய்யை-உரைக்கிறேன் சீதபித்த மென்றும்பேரோ...... (௩௱௪௯)

சீந்தில் நெய்.

பேரானசீந்திலுடன் வேப்பம்பட்டை-பேய்ப்புடலும் வகைக்க
ங்கே பலந்தான்ரெண்டு-சீராகவிடித்ததனைக் குறுணிநீரில்-செலுத்திநீ
தீயிட்டு நாலொன்றாக்கி-வாராக நெய்தாழிக் குள்ளேமைந்தா - வார
டா நெய்படிதான் மருந்துசொல்வோம்-பேரானபேய்ப்புடலுமிலா
மிச்சம்வேர் - புகழ்மஞ்சள் மரமஞ்ச ளகில்கெந்தங்கேளே.... ௩௱௫௰

கெந்தமொடுகச்சோலந் தேவதாரம்-கிளர்கோட்டம் செஞ்சந்த
ங் கிளரோலத்தோடு-யந்தந்த வகைக்கப்பா கழஞ்சிரெண்டு-ஆட்டியங்
கேகொதிப்பித்துத் தினந்தான்மூன்று-பந்தமுட னூலாநாள் வடித்து
வாங்கி-பாங்காகவிருகழஞ்சி புண்ணச்சொல்லு- வந்ததொரு சிரங்குப்
புண் சட்டைவாங்கும் - வாகானகருங்குட்டம் வாங்கிப் போமே. ()

வாங்குமடாநசியத்தா லனேகந் துன்பம் - மைந்தனேசொல்லுகி
றேன் மயக்கம்நீக்கிப்-பாங்கானவேப்பந்தோல் கடுகுரோணி- பருங்
கொட்டைமுந்திரிகைபேரீச்சம்பழமு-மாங்காகமுருக்கம்பூ நெல்லிப்
பூவு-மத்தித்திப் பிலியுடனே யனைத்துமைந்தா-நீங்காமல்நசியம்விடத்
தீருங்கண்டாய்-ரெத்தவெள்ளுநடைப்புக்கு யியம்பக்கேளே. (௩௱௫௰௨)

ரெத்தவெள்ளுநடைப்புக்கு.

கேளப்பாசிற்றாமல்லி கீழாநெல்லி-கிளர்கண்டங்கத்திரிவேர்வே
ப்பம்படடை-நாளப்பாகோடடமுடன் கடுகுரோணி-நலமுந்திரி பே
ரீச்ச ழுத்திதிப்பிலி-நாளப்பாமுருங்கைப்பூ நெல்லிமுள்ளி- தயவான
சிறுதேக்கு மிலாமிச்சம்வேர்-ஆளப்பா அதிவிடைய மிவையோரொன்
று அப்பழனேமும்மூன்று வராகன் தூக்கே........................ (௩௱௫௰௩)

துக்கியதையாட்டிடுவாய் நாழிநெய்யில்-அவறவே கலக்கிநன்று ய் வடித்துக்கொண்டு-தாக்குவாய்காசிடைதா னுண்ணச் சொல்லு-சா தகத்தைக்கேள்மகனே சாற்றுறேம்நாம்-வீக்குமே வெள்ளுடைபபு மூக்குவாய்நீர்-விழுகிறதோர் ரெத்தமெல்லாம் வீழொட்டாது-பாக்கி யங்கள் செய்தவர்க்கே யித்தநூல்தான்-பண்பாக லபிக்குமடா பற்றிப பாரோ........................................................ ௱௰௪

## சடைச்சிநெய்.

பாரபபா பரங்கிபபுண் குட்டஞ்சாத்தியம்-பரிவான விஷபாட தாளைக்கெல்லாம்- சாரபபா சடைச்சிநெய்யைச் சாற்றுறேம்நாம்- சடைச்சியுடபபடையங்கே துலாமூமொன்று - சேரபபாவெண்குறு ணி சலத்துக்குள்ளே-தெறித்திட்டு மெட்டொன்றாய்க் குறுக்கிப பின் பு-வாரபபாவிருநாழி யாவினெய்யை-மைந்தனே படியொன்றுநிம்ப நெய்யே ........................................................ ௱௰௫

நிம்பநெய்யுங் கச்சந்திராயச் சாறுநாழி-நீவிட்டுஅதிமதுரம் பே ய்ப்புடலும்-இன்பமூறும்பொற்கொன்றை மூலந்தானு - மியல்பான பேய்பபிரட்டி வெட்பாலையரிசி - அன்புபெறு மதிவிடையம் பற்ப டாக-மத்திதிபபிலி விளாலரிசி வேபபம்பட்டை - யும்பர்துதி கொடி வேலி கடுகுரோணி - உத்தநில வேம்புபெருங் குரும்பை வேறே.()

வேருடனேவகையொன்று வராகன்மூன்று-மீறும லாட்டியந்த நெய்யிற்போட்டு-வாரமுடன்வடித்தாற்றி வைத்துக்கொண்டு - மாட ட்டாரசகெந்தி மனோசிலையுமூன்று-சீருடனேமும்மூன்று கழஞ்சிதூ க்கிச்-சிதறுமல்சாமமொன்று தூளாயாட்டி-நேருடனே நெய்யிட்டு ஆறவைத்து-நினைவறிந்து ஆளறிந்து நீசெய்வாயே.............. ௱௰௬

ஆள்ப்பிலமும்நெய்ப்பிலமு மறிந்துக்கொண்டு - வப்பனேமுக் கழஞ்சியிருகழஞ்சிதானும் - நாள்ப்பிலநீவுள்ளுக்குமேலும்பூசு - நல மாகமூன்றுநா ளளைப்புப்பூசி - கோள்ப்படமேவ குளிச்சுவரச்சொன் னயானல் - குற்றமரும் பறங்கியுட் சூதங்களற்று - வாளப்பாபடுபுண் போலரிகிரந்திசூலை - வாங்காதசிறுசொறிசெம்புண்கள்போமே.௱௧௮

## அமிர்தசஞ்சீவிநெய்.

புண்போகுமிவையெல்லாம் பறங்கிரோந்தை - புகழ்ந்துசெய் யும்வாகடந்தான்பொய்யோவில்லை - புண்போகும்சூலைபோம்முடங் கள்தீரும் - பேரமிர்தசஞ்சீவிநெய்யைச்சொல்வோம்- புண்போகும் நெடுநாளைவேப்பம்பட்டை - புளாதீரஅய்யஞ்சு யலந்தான்தூக்கிப்- புண்போலநறுக்கிநீபஞ்சுபோலப் - பொடித்திடித்துப் பாண்டத்திற் பொருந்தவையே........................................ ௱௧௯

பொருந்தவைத்துநீர்படிதா னிருபத்தெட்டு - புகட்டிதீ யஞ்சுதி ணம்ரவியில்வாட்டு - வருந்தியதைபிசைந்துவடிகட்டுமைந்தா - மாட்ட டாநாலொன்றாய்வைத்துக்காச்சி - விருந்தாகும்நெய்படிதானிரண்டு விட்டு - வேப்பெண்ணெய்படியொன்று வெற்றிலைச்சாறு - மருந்தா கும்வேலைச்சார்மணத்தக்காளி - மைந்தனேநொச்சிச்சா ருத்தாமணி யின்சாறே...................................................... ௫௨௰

மணிச்சாறுமுடக்கொத்தான் குப்பைமேனி - வலகையாறுசாறுப டிமூன்றேமுக்கால் - கணிப்பானசிறுகுருஞ்சிசிவனார்வேம்பு - காட்டு மல்லிபெங்குருந்துதுளசிநொச்சித் - தணிப்பில்லாத்தூதுவளை பழிஞ் சிவேளை - தயவானநாரத்தைசெங்கத்தாரி - பணிப்பானமுடக்கொத் தானுத்தம்தாளி-பண்பான மேனிச்சார்படிதானுமே........ (௫௨௧)

ஆமப்பாவிவைமூலங்கழஞ்சிமூன்று - ஆவின்பாலாட்டியேயின் னங்கேளு - ஓமப்பாவெண்காரம்சீனக்காரா - மூற்றவிருசீரகமு மோ மந்தானும் - வேமப்பாசதகுப்பைகுடசப்பாலை- வெள்ளுள்ளியுடன் மூலாவிருட்சந்தானும் - நாமப்பாகுங்கிலியங்காசுகட்டி - நலமானசெ ண்பகப்பூநாட்டக்கேளே.............................................. ௫௨௨

நாட்டவகைகழஞ்சொன்று வொவ்வொன்றப்பா - நல்லதோர்ப ழச்சாற்று லாடடிவாங்கி - பூட்டடாகளிப்பாக்குப் பத்துச்சேர்த்து- உறப்புகட்டுநெய்யிலேகலறச்சேர்த்து - மூடடடாவடித்திறக்கிவைத் துக்கொண்டு - முன்போலே சூதமிரண்டு கெந்திவொண்டு - நீடடடா குக்கிலஞ்சுகெவுரிகால்தான் - திறமான துருசுமறைக் கழஞ்சிகூட்டே.

கூடடியேபழச்சரற்று லாடடிவாங்கி - கொடுநெய்யில் புகட்டி மைந்தா வைத்துக்கொண்டு - ஊட்டுவாய்நாள்மூன்று சென்றபின்பு- உண்டுவரமுன்போலேயுண்மைகேளும் - வாடடியதோர்மூன்றுவகை ச்சூலைப்புண்கள்- மாறுதகழல்வாதம்சூலைபோகும் - நாடடில்வளர்ப திணெட்டுப்பறங்கிதீரும் - நயமாகபபத்தியமாய்ச் சொல்லக்கேளே.

களிம்பு.

சொல்லுகிறேன்புண்ணுக்குக்களிம்புசொல்வேன்- சூதமடாவரா கன்ரண்டுலிங்கம்நாலு- வெல்லுகிறேன்கெந்திநாலரையதாகும்- வீரா கவிம்மூன்றுசரக்குமாடடி - கொல்லுகிறயாவினுட வெண்ணெய்வாங் கி - குறையுமடடுந் தினந்தோறு மாடடிவாங்கி - செல்லுமடாதிசைக் கெல்லாமிக்களிம்பு - தீராதபுண்ணெல்லாந்தீரும்பாரே........ ௫௨௫

தீருமடாகுறைநோவுகுட்டம்புண்ணு - திறமாகவுடம்பெல்லாங் களிம்புபூசி- வாரமுடனந்தியிலேகுளிக்கச்சொல்லு- மைந்தனேபுண் ணுமுமடடுஞ்செய்வாய் - நோ... ல்விரணக்கில் பூசிநீயும் - நொகப்

ழிலேகசிவெடுக்கவாட்டச்சொல்லு - பாரமுடன்திரிபலாதி நெய்யைத் தானும் - பாடுகிறேன்திரிகடுகுதிரிபலையோடாறே ..............௫௨௪

## திரிபலாதி நெய்.

ஆறுடனேகொடிவேலிவேரின்பட்டை - ஆரியச்சிவதையாமணக்குவேரும் - வீறுடையமரமஞ்சள்பொற்கொன்றைக்காயும்- வெற்றிபுரியதிவிடயங்கடுகுரோணி - வாறுகேள்மஞ்சளப்பா வின்னஞ்சொல்வோம் - வட்டத்திரிபயிவை வகைக்குமைந்தா - மீறுமல்வராகன்மூன்றளாயாய்த்தூக்கி - விரைந்தாட்டிநாழிநெய்யில்கலக்கிக்காச்சே.

## தூதுவளை நெய்.

காச்சுமுன்னே கள்ளிப்பா லுழக்குவிட்டுக்- கருத்தாகவடித்துநீகுடிக்கச்சொல்லு - வீச்சானகுட்டமுதல்குன்மந்தீரும் - வெண்குட்டம்பாண்டுவிட்சகடியுந்தீரும் வாச்சிருந்தகுலைபோமுன்மத்தம்போகு- மைந்தனேதூதுவளை நெய்யைச்சொல்வோம் - வாச்சிருந்ததூதுவளை வேப்பம்பட்டை - மகத்தானசீந்தியிலைக கொடியுங்கூட்டே.

கூட்டடாபேய்ச்சுண்டைபழமும்நீதான் - கொடுங்கண்டங்கத்திரியும்வேருந்தோலும் - நாட்டடாவகைக்கங்கேகழஞ்சிநாலு- நயமாகவாட்டியேநாழிநெய்யில் - ஊட்டடாவடித்திறுத்து வைத்துக்கொண்டு-வொருபோதுவிருகழஞ்சிபுண்ணச்சொல்லு - காட்டடாகக்கலுடன்விக்கல்போகும் - கண்டபடிசொன்னேன்றுன்கருதிப்பாரே. ௫௨௫

## கலியாணகிருதம்.

ப்பாரப்பாமேகங்கள் ரெண்டுபத்து - படுவித்தைவிப்பிருதிபாண்டுபாகம்-தீருமப்பாகலியாண கிருதங்கொண்டு - செப்புடுறேன்மருந்துவகைத்திறமாக்கேளு - நேரப்பாநிலப்பனைவேர் தண்ணீர்மிட்டான்-நெரிஞ்சியொடுகொடிவேலிநன்னாரிவேரும் - சேரப்பாவழுதலைவேர்சிற்றாமல்லி- திமட்டியொடுசிற்றாமுட்டி சாரணைவேர்திராயே....௫௩௰

திராயோடு வமுக்கிறா பாதிரிவேர்வில்வஞ்- செப்பரிய முத்தங்காய் தாமரையின்தண்டு, திராயோடு மிவ்வகைகள் பலத்தைக்கேளு- சேரடா மூன்றளாதான் தறித்திடித்து, துராயநீ தூணிநீர்குறுணியாக்கிச்- சொல்லுகிறே னிலைச்சாற்றைத் துடர்ச்சியிட்டு,நிராய்கருப்புவெள்ளரி பொன்னாங்காணி - நெல்லிக்காய் பூசனிக்காய் மூள்ளிலவந்தோலே. ........................................................ (௫௩௧)

இலவந்தோ லிலுப்பையிலையிவைச்சாறெல்லா- மென்மகனேவகையொன்று படியுமொன்று,நலமான வாவின்பால் படியுநாலு-நறுநெய்யும் படியிரண்டுகேற்கங்கேளு-பிலமானதொடைவேர்சிற்றாமல்லி-

போரான நன்னாரி அமுக்கிருவேர்,மலமாற்றுச் சாரணைவேர்நெய்தல்
மூலம் - மலர்த்தாமரைவளையம் முந்திரிபழமுமாமே......... (௫௫௨)

முந்திரிகைபேரீத்து கடுகுரோணி-முத்துரையும் வெட்டிவேர்ம
துரங்கோஷ்ட,மந்தமுறுமிலுப்பைப்பூ மலாக்காய்கெந்த-மாதாளிக்கி
ழங்குடனே தேவதாரம்,மந்திரமாஞ் சடாமாஞ்சி வெட்பாலையரிசி-ம
ஞ்சிட்டி யதிவிடைய மஞ்சள்தானும், பந்தமுறுங்கார்கோல மிருசீர
கமும்-பண்பான செவ்வியமும் பரிந்துதூக்கே. ............... (௫௫௩)

பரிந்தெடுத்த வகைகளொன்று கழஞ்சியொன்று - பண்பாகவா
டடியே நெய்யிலிட்டு-எரித்துநீ வடித்திறக்கி வராகனென்று - யியல்
பாக வுண்டிட்டே யிடுக்கமில்லை,கரிந்ததொரு மேகங்கள் ரொண்டுபத்
துங்-காடடுமுன்னே கரியுண்ட கனிபோலாகும்,விரிந்தபிற மேகங்க
ளிரண்டுபத்து-விபரிருதி விஷபாகம் பாண்டுபோமே ........ (௫௫௪)

கலியாணமுயனம்.

பாண்டுபோங்கலியாண மயனஞ்சொல்லப- பார்மகனே யிம்ம
ருந்தால்நன்மையாகும்,வேண்டியதோர்நெல்லிக்காய்தன்னீராக-விர
விரன்று யிடித்திறுத்துபபடியும்நாலு, தாண்டுபுகழ் வெள்ளைவெல்ல
ம் பலத்தைக்கேளு-தயவாகக் கால்துலாம் நிறுத்திச்சேர்த்து, தூண்டு
கா ரெஃளெண்ணெய் யுழக்குச்சேர்த்து- சுருளவதைக் குழம்புபோல்
சுண்டக்காசே................................................(௫௫௫)

காச்சிவைத்த குழம்பதற்குள் மருந்துசூடடக்- காண்மகனேதிரி
பலையும்வெடபாலையரிசி, வாச்சபுகழ்திபபிலியும்கொடிவேலிவேரும்
மகத்தான வோமமொடு கடுகுரோணி,வீச்சுயர்ந்தகொத்தமல்லி கா
டடுதிபபிலி-விளாலரிசிமிளகுசீ ரகமஞ்சிட்டி, பாச்சடாவகையொன்
றுபலந்தானென்று-பண்பானதிரிகோலம் பலந்தானெடடே.-(௫௫௬)

எடடுடனேமுன்மருந்தைச் சேர்த்துககொண்டு-யிடித்துநீதூளா
ககிவடியுங்கட்டி,விடடுவாயுழக்கெண்ணெய்பாகிலபபா-விரவியதுபொ
ண்டுகொதி யிடடபின்பு,கடடுடனே சூரணத்தைத் தூவித்தூவி-காச்சு
டா மயனம்போல் கிளறிவாங்கி, மடடுடைய பழங்கலத்திலிடடுவைத்
து-மைந்தனே கழஞ்சியுண்ண வாறுகேளே. ........................ (௫௫௭)

வாறுகேள் பிறமேகம் காமாலைபாண்டு-வளர்குடடமறமூலங்கிரி
ச்சினமுங்குன்மம், வீருக விழுந்துமுறிந் தெலும்புமுறும்-விடடசந்
தி காலுறுப்பு மேவிப்போகும்,தேருதவரிகுரலு மிடறுங்கொள்ளல்-
தெளிந்தசுயம் பாடுவான் சித்திபுத்தி, கூருகவுண்டாகும்வெகுபிலமு
மெய்தும்-குறையன்றி திரைபோகும் நரையும்போமே. ... (௫௫௮)

போமப்பா நாள்பட்ட சுரமுமெல்லாம்- புகழான முந்திரிகை நெய்யைப்புண்ணி, லாமப்பா முந்திரிகை வெட்பாலையரிசி - யத்திதிப்பிலிகெந்தமதி விடயம்நெல்லி, வேமப்பா நிலவேம்புமிலாமிச்சம் வேர் - வில்வவேர்வகைக்கங்கேகழஞ்சிதூக்கி - தாமப்பாதண்ணீராலாட்டிவாங்கி - தாக்கடாஆவினெய்யில்படிதானென்றே ..........௫௩௯

படியிட்டநெய்க்குள்ளே தண்ணீர்நாழி - பாச்சுதீமந்தாக்கினிய தனில்வைத்து - அடிவிட்டநீர்வற்றில்பதத்தைநோக்கி - அப்பனேவடித்திறுத்துகழஞ்சிமூன்று - குடிகொண்டசுரம்போகும் காந்தல்போகும்- கூருனவயிற்றெரிவுயிருமல்போகும்-மூடியாதபொரிசொரியும் போகும்போகும்-முதுசொல்லாந்திரீகோலம்விபரங்கேளே....௫௪௦

## திரிகோலவிபரம் - திப்பிலிநெய்.

விபாங்கேள்சந்தனமுஞ்சிவதைதானுப் -வெள்ளைக்குங்கிலியமிவை திரிகோலமாச்சு- விபரமாய்த்தெரியாதமருந்தெல்லாந்தான் - என்மக்காள்சொலக்கேட்டு விளம்பிக்கொள்வாய் - விபரமறியாதவர்களாகாச கெருடன்-வீருனபழுபாகல்கொல்லன்கோவையென்பார்-விபரமாய் திப்பிலிநெய்தன்னைக்கேளு - விடாதசுரம்போவதற்குவிள்ளுறேனே.

விள்ளுறேன்திப்பிலியும் கடுகுரோணி - வெட்பாலையரிசியுடன் கீழ்காய்நெல்லி - கள்ளமறும்வில்வவேர்வேப்பம்பட்டை- கடுதான்றி கெந்தமடாதோடையோடே - தெள்ளுபுகழிலாமிச்சம்முந்திரிகைப் பழமும்-சிறியதொருசெண்பகமுமதிவிடயந்தானும்- துள்ளுநீவகைக் கங்கோசுதூக்கி - சுகமாகத்தண்ணீராலாட்டிவாங்கே........... ௫௪௨

வாங்கினதோர்மருந்துக்குத்தண்ணீர்நாழி - வாகாகநறுநெய்தானுழிவார்த்து - பாங்காகமந்தாக்கினிதன்னைமூட்டி-பதமாகவடித்திறுத்துக்கழஞ்சிரண்டு- தேங்காததேன்குத்திநெய்யுஞ்சேர்த்து-தின்றிடவே சுரம்போகும்விக்கல்போகும் - தாங்காதஅழலைபோமரோசிகம்போம் - தலைநோவுபிறமேகந்தணியுந்தானே........................(௫௪௩)

## சீதேவிசெங்கழுநீர்நெய்.

தணிந்திடவே சன்னிமுதல் சுரத்துக்கெல்லாம் - சாற்றுகிறேன் சீதேவி செங்கழுநீர்நெய்யை - துணிந்தெடுப்பாய் சீதேவி சாறுபடிநாலு, சொல்லுகிறேன்மஞ்சிட்டி தாமரையின்பத்திரி - கணிந்தேலமிலவுங்கம் கடுகுரோணி-கனத்தகோஷ்டம் தன்னாரி மதுரங்கெந்தம் - மணிந்தசரக்கோரொன்று வராகன்தூக்கி-மைந்தனேயாட்டியதைவடித்துகொள்ளே,..........................................௫௪௪

## செங்கழுநீர்நெய்.

வடித்ததொரு நெய்யதனைக் கழஞ்சியுண்டு-மைந்தனே நெய்யு மதை மேலில்பூசு-கடித்தசுரமெண்பத்தி னாலுந்தீரும் - கண்குளிரும் பண்டீரும் கலருஞ்சித்தி-படித்தினியா பின்னமொரு நெய்யைச்சொல்வோம்-பண்பாகச்செங்கழுநீர் சாறெண்ணாழி - விடித்தேலமிலவுங்க மதூரங்கோஷ்ட-மிக்கசிட்டி செண்பகப்பூ கடுகுரோணி... ... ௩௪௫

ரோகணியும்சந்தனமும் வெட்டிவேரும்-நுணுக்கமுறும் நன்னாரி நீர்வள்ளிக்கிழங்கு-நாகமுறுமிலாமிச்சம் செங்கழுநீர்க்கிழங்கு- நரிவெருட்டிமுத்தங்காய் வகையோர்காசு-ரோகமுடன் தூக்கியதை யாட்டிவாங்கி-ரோகிப்பாய்மூன்றுபடி நெய்யிற்குள்ளே-ராகமுறக் காச்சியினி வடித்துக்கொள்ளு - நயமாகச் சுரங்கள்முதல் சன்னி போமே.()

## ஆடாதோடைநெய்.

போமப்பாகளங்கமெல்லாம் போவதற்குப் - பூட்டுகிறே னாடாதோடை நெய்யைத்தானே-வேமப்பா கண்டவுடன் நோய்களேகும்-வெற்றிபெறுந் தோடைச்சார் படியிரண்டு - நாமப்பா பசுவின்பால் படியிரண்டு-நறுநெய்தான் படியிரண்டு அத்திதிப்பிலி-ஆமப்பா திப்பிலியுங் கொடிவேலிவேரு - மடைவான விந்துசுக்கு யெவாச்சாரந் தானே....................... ௩௪௭

எவாச்சாரஞ்சத்தியுட சாரந்தானு-மிவையெல்லாமோரொன்று கழஞ்சியொன்று-அவாச்சாரமன்றிநீ யுடனேயாட்டி - அப்பனேயதத்திலே வடித்துவாங்கி-யுவாச்சாரமுறமொண்டு தேசகால- மொவ்வொரு கழஞ்சியே யுண்ணச்சொல்லு-எவாச்சாரமந்திக்குக் கழஞ்சிபாதி-யென்மகனே யுண்மைதனை யியம்பினேனே....................... ௩௪௮

இயம்பவே நெஞ்சுவலி கிறுகிறுப்பு-மீளாவலி யோடிருமல் காயாசுவாசம்-இயம்பவே யரிகுராலும் பித்தபாண்டு-மெழுமூலமுள்மூல மகுலைவெப்பு-இவம்பவே பழஞ்சுரமும் வெப்புப்பார்வை - யியல்பான அசீரணமு மினியுமந்த - மியம்பவே பறிந்துவிடும் விபரங்கேளு-மிவைகளெல்லா மந்திக்கு மியலக்கூட்டே....................... ௩௪௯

## முலைப்பால்நெய்.

கூட்டடாவேர்க்கொம்பு கியாழம்வைத்து-கொடுத்திடவே நோய்க்கெல்லாம் சித்தியாகும்-நீட்டடாமுலைப்பால்நெய் சஞ்சீவியப்பா-நெறியாகமுலைப்பால்தான் படியும்ரெண்டு - நாட்டடா கொடிப்பைவேர் வெள்ளரியின்விரையும்-நல்லதொரு பூசினிக்காய் விரையுஞ்சேரு-பூட்டடாநெல்லிமுள்ளி மதூரமப்பா-புணாயாக விருகழஞ்சி பூலாவாட்டே....................... ௩௫௰

ஆட்டியதோர் மருந்துக்கு நெய்யும்நாழி-அடைவாகவிட்டுநீ வடித்துமைந்தா-ஆட்டுவாய்கழஞ்சிரண்டு மேலும்பூசு - உடல்வெட்டை சுரவெட்டை யுடம்புலர்த்தல்-வாட்டிவரு மெலும்புருக்கிக் கணங்கள் காசம் - வறட்சைமொடு பிறமேகமுள் வெட்டையோடு-காட்டியே படைத்தாப்போல் காணுதோடும்-கருத்தாகவின்னமொரு நெய்யைக் கேளே ... ... ... ... ... ... (௫௫௪)

## ஆடாதோடைக் கிருதம்.

கேட்டிடவே நாள்பட்ட சுரத்துக்கெல்லாம் - கிருதமடா தோடைவேர் கீழ்க்காய்நெல்லி-வேட்டிடவுங்காட்டுமல்லி வேளைமல்லி-மிகவேலிப் பருத்தியொடு குப்பைமேனி - நாட்டில்வளர் வழுதலைவேர் நத்தைச்சூரி-நலமான மருள்கிழங்கு வப்பைமூல-மூட்டுவசம்புள்ளி கஸ்தூரிமஞ்ச-ளூற்பனஞ்சேர் நற்பாம்பு கண்டந்தானே...... ௫௫௫

கண்டமொடு வாரகனங்கே மூன்றுதூக்கி-கலராட்டி நாழிநெய்யிற் கலந்துகொண்டு-கண்டமெனு நல்லெண்ணையோரண்டத்தெண்ணெ, கலந்திடுவாய்வகையிரண்டு படிதானொன்று - கண்டிதமா யிவையெல்லாங் காயும்போது-கருங்குங்கிலியமிரண்டு காசுதூக்கி - கண்டிதமாய் நிம்பச்சா றாற்றக்கேளு - கனித்தப்பழ மஞ்சளங்கே பிழிந்துஆட்டே.

## வேலநெய்.

ஊட்டியேவடித்தப்பா வைத்துக்கொண்டு உள்ளுக்குக்காசிடைதா னுண்ணச்சொல்லு நாட்டியேமேலுக்குத் துவாலை போட்டு-நாள்பட்டசுரந்தணியு மின்னமொன்று-வீட்டியே வேலநெய்யைச்சொல்லக்கேளு-வெள்வேலம்வேருடனே கழற்சிவேரும்-நீட்டியதோர் பூளைவேர் நாயுருவிவேரும் - நேரான விஷ்ணுவின் கிராந்திவேரோ. ()

வேருடனே வசம்புள்ளி சமனுங்கேளு-மீறுமல் கழஞ்சஞ்சு ஆட்டிவாங்கி-ஆறவே நாழிநெய்யில் கலந்துகொண்டு-அப்பனேவடித்திறுத்து கழஞ்சிகொண்டால்-வீரமுள்ள பழஞ்சுரங்க ளனைத்துந்தீரும்-வெற்றியுள்ள நெய்யாச்சு தயிலங்கேளு-தாருமைந்து நல்லோர்க்குச் சந்தனாதி-தனித்தயிலஞ் செப்புகிறேன் சார்ந்துகேளே..................௫௫௭

## சந்தனாதி தயிலம்.

சார்ந்துகேள் சந்தனமும் வெள்ளிலோத்திரம்-தனிமதுரம் மூந்திரிகைமுக்கழஞ்சி-சார்ந்துபோ மிவையெல்லாம் பாலிலாட்டித்-தண்ணீர்தான் படியொன்றிற் கலக்கிக்கொண்டு - சார்ந்துநீ நறுநெய்தாழிழியூற்றித்-தயவாக வடித்திறுத்துத் தயிலம்தேய்த்து-சார்ந்தமுழுயாப்பிட்டு முழுகச்சொல்லு-தாபசுரம் பூசுரம் தணியும்பாரே... ௫௫௮

## அரக்குச்சந்தனாதி.

பாரப்பாவின்னமொரு சந்தனாதி - பாடுகிறேன் அமுக்கிருவேர்ப்பொடியும்நாழி,சேசப்பாசிற்றாமுட்டி பேராமுட்டி - சிறப்பான கொம்பரக்குப் படியும்நாழி,நேரப்பா விம்மூன்றும் பதக்குநீரில் நீயிட்டு நாலொன்றாய்க் குறுக்கிவாங்கி, ஆரப்பா நல்லெண்ணெ நாழிவிட்டு-அப்பனே குழம்புமோர் நாழியூற்றே. ............... ... (௫௰௭)

மோரிட்டு நன்னாரி யரத்தைகோஷ்டம் - முகிழ்மதுரஞ் சதகுப்பை கடுகுரோணி- வாரிட்டகச்சோலந் தேவதாரம்-மஞ்சளொடு மரமஞ்சள் கஸ்தூரிமஞ்சள், மாரிட்டபெருங்குரும்பை யமுக்கிருவேர்-மஞ்சிட்டி கெந்தமொடு நாகப்பூவும்,நேரிட்ட வகையொன்று வராகனென்று-நிறுத்துநீ யாட்டியதைக் கலக்கிக்காச்சே. ......... (௫௰௮)

## மதுக்காளிதயிலம்.

காச்சப்பாமூன்றுநாள் கொதிக்கவைத்துக்-கலரவேறநாலாநாள்வடித்துமைந்தா, தேச்சப்பா வுடம்பெல்லாம் நசியம்பண்ணு-திராதசுரந்தணியு முடம்புதேறும், பாச்சப்பா தோடைவே றொண்ணைதன்னைப்-பாடுகிறேன் மதுக்காளி தயிலமென்பார், வீச்சப்பா அதிமதுரம் வேப்பம்பட்டை-விராவித்தோல்வேம்பினுட வித்துவாங்கே. (௫௰௯)

வாங்கடாதிராய்வேரும் மத்தன்வேரும்-மகத்தானகுன்றிவேர்மேனிவேரும், பாங்காகு மிந்துப்பு மிவைகளெல்லாம்-பரிவுடனேவராகனென்று தூக்கிக்கொண்டு, ஆங்கடாதோடையிலைச் சாறுவிட்டு-ஆட்டுநீ யச்சாறு நாழிவிட்டு,தேங்காதநல்லெண்ணைநாழிவிட்டு-தீயிட்டுப் பதமாக வடித்துக்கொள்ளே. ......................................... (௬௰)

## மோரொண்ணை.

வடித்திறத்த தயிலத்தை மேலுமிட்டு- மைந்தனே யுள்ளுக்குக்கொள்ளச்சொல்லு, பிடித்ததொரு சன்னிபோம்சுரமும்போகும்-பேர்பெரிய மோரொண்ணைசீதம்போகும், தடித்தமோர்நாலுபடி யெண்ணைநாழி - சார்வான சிற்றாமுட்டிவேர்த் தோலுங்கூட்டி, படித்தகோஷ்டம் வேர்க்கொம்பு போன்மெழுகுதானும் - பாங்கான மூசுட்டைவேர் மதுரமிந்தே. ............................................. (௬௰௧)

இந்துப்பு மஞ்சளொடு தேவதார-மியல்பான நன்னாரி மாகாளிமூலம்,சிந்துபுகழ் பெருங்குரும்பை தற்கோலம்புட்டில் - சீந்தில்வேரிலாமிச்சம் சிறுகீரைவேரும், சந்தமுறுந் தகரமொடு கச்சோலமேலம்-சாதிக்கா யிலவுங்கம் பத்திரிதானும், பந்தமுறும் சாரணைவேர் திப்பிலியின்மூலம்-பாங்காக வகைக்கங்கே காசுதூக்கே.......... (௬௰௨)

காசிலைடதா னிறுத்தங்கே மோரிலாட்டி-கலக்கிநீ காச்சியேவடித்துக்கொள்ளு, நேசமுடன் கழுத்துக்குக் கீழேதேய்க்க- நிமிஷத்தில் குளிக்காச்சல் பித்தரோட்சை, பாசமுறுந் தர்பசுரமந்தரோட்சை - பலசுரமும் விஷசுரமும் பறக்குங்கண்டாய், தேசமுறுஞ் சீதேவித் தயிலங்கேளு தீராத சுரமெல்லாந் தீருங்காணே ........................(௩௬௩)

சீதேவித்தயிலம்

காணப்பா சீதேவிசாறுநாழி-கலவாதசீந்திச்சா றதுவும்நாழி,ஊணப்பா யெண்ணெயுரி நெய்யவ்வண்ண-முடனூட்டி மதுரமொடுதேவதாரம், பூணப்பா நாகப்பூ கோட்டங் கெந்தம்- புகழு மஞ்சிட்டி சதகுப்பைதானு, மூணப்பாவெட்டிவேர் குறுகத்திப்பூ-முயல்மாஞ்சிலகில்கட்டை கொம்பரக்கே .................................. (௩௬௪)

அரக்குடனேயிலாமிச்சந் தாமரையின்வளைய-மதினருப்புசெஞ்சந்த மேலந்தானு,மிரக்கமுறுநன்னாரிகச்சோலக்கிழங்கு - மேலமோடிலவுங்கப் பட்டைபத்திரி, கரக்கமலநெய்தல்வேர் கடுகுரோணி-கான சிற்றாமுட்டிவேர் பெருங்குரும்பை, திரிக்கவேயரத்தையுடன் திப்பிலியுந்தானும் - சேரவே வகைக்கங்கே காசுதூக்கே. ............... (௩௬௫)

மேற்படி-தயிலம்.

தூக்கியே பாலைவிட்டு ஆட்டிவாங்கி - சூட்டுவாய்மந்தாக்கினியை மூட்டிநீயும், தாக்கியே வடித்திறுத் திடம்பில்போடு - சகலசுரமேலெரிப்புதாகம்போகும், தேக்கியேயின்னமொரு மார்க்கங்கேளு-சீதேவி செங்கழுநீர்ச் சாறுநாழி, நீக்கமில்லாநெய்யுடனே யெண்ணெய்நாழி - நீசேரு மேல்மருந்தை நிறைக்கிறேனே ............ (௩௬௬)

நிறைப்பான வெட்டிவேர் கடுகுரோணி- நேர்கெந்தமதிமதுரம்நிறைதானொன்றாய், அரையப்பா மும்மூன்றுகழஞ்சிதூக்கி-யப்பனேகலக்கியேவடித்துநீயும்,கரையவே யுள்ளுக்கு மேலுமிட்டால்-கடுஞ்சுரமும்விஷசுரமும் காணாதோடும், புரையுடைய நெடுஞ்சுரமும் வெட்டை போகும் - பூட்டுகிறே னின்னமொரு யெண்ணெய்கேள். ..... (௩௬௭)

மோரெண்ணெய்.

இன்னமொரு மோரெண்ணெய் படிதானாலு-மியல்பானபழங்காடி படிதானொன்று,பின்னமில்லா நல்லெண்ணெய் படிதானொன்று-பேர்பெரியசிற்றாமுட்டிவேர்பலந்தானாலு, சன்னமாயிடித்ததற்குள் நாலுபடி சலத்தை-தாக்கடா நாலொன்றாய் தனித்திறுத்து, சொன்னபடி யிவையொன்றாய்க் கலக்கிக்கற்கம்-சூட்டுகிறேன்வகையாகக்கூட்டுகிறேனே

கூட்டுகிறே நன்னாரி குறுந்தோட்டிவேரும்-குறுக்குடைய முசு
ட்டைவேர் முத்தக்காசு,நீட்டியதோர் சீந்திவேர் சாரணையிலாமிச்சம்-
சிறுகீரை வேருடனே யழுக்கிருவேர், ஊட்டியதோர் கோட்டமுட
னிந்துஅதிமதுர - மோங்குபுகழ் வேர்க்கொம்பு செவ்வள்ளிக்கொடி
யும்-நாட்டியதோர் பொன்மெழுகு கச்சோலமேலம் - லவுங்க மஞ்ச
ளில்வுங்க பத்திரியும்நாட்டே.............. ................... ௱௬௯

பத்திரியும் சாதிக்காய் சிற்றரத்தைகிரும்பு - பழந்தேவதாரமுட
ன் திப்பிலியின்மூலம், முத்திரியுங் கடல்நுரையும் வகைக்கோர்கழஞ்
சி-முறையோடே மோர்விட்டு ஆட்டிவாங்கி- யித்தனையுந் தாழியிலே
கலக்கியப்பா-யியல்பாக மூன்றுநாள் சிறுகொதியுமிட்டு - வத்தியது
பதம்பார்த்து வாங்கிக்கொண்டு-வளமாகக்கழுத்துக்கீழ்தேய்த் தாறப்
போடே ... ... ... ... (௱௭௰)

ஆறப்போட் டரைக்கடிகை யப்பால்நீயு மழகாகத் தலைக்குமந்த
யெண்ணெயிட்டு-தேறப்பா சீயக்கா யரப்புத்தேய்த்து- சிந்தையில்லா
வெந்நீரில் முழுகச்சொல்லு-மாறப்பா வொன்றுமில்லைவிஷசுரங்கள்-
மகாவாதம் சுரம்வெட்டை பித்தங்காந்தல்- நீறப்பா வத்திசுரம் குளிர்
தாபசோபம்-நெஞ்செரிப்பு மழிசுரங்கள் பலசுரங்கள் போமே. ௱௭௧

பலசுரங்கள் போவதற்கு மின்னமொருஎண்ணெ-பகருகிறே மா
க்குமோ ரெண்ணைமைந்தா-சொலவரியகுறுந்தொட்டிவேர் பலமோ
ரஞ்சு-தூளாக்கியஞ்சுபடி சலத்திலிட்டு-நிலவரமே நறுக்கிக்கொம்பாக்
குநீயும்-நிறுத்துவிடு ரெண்டரையாம் பலத்தை யொருகிழியாய்-கலவ
ரமில்லாதசல மூன்றுமரைப்படியாய்-காச்சடா வழுக்குருவே ரஞ்சு
பலமே ... ... ... ... ...(௱௭௨)

அஞ்சுபடி வேரிடித்துத் தூளதாக்கி- யதற்குமொரு மூன்றுபடி
சலமுமிட்டு-பஞ்சறவே யந்தந்தக் கியாழநீரும் - பாரடா வரைப்படி
தான் பழமோர்சேரு-வஞ்சமில்லா தாறுபடி யெண்ணைநாழி-மருந்து
வகை கற்கத்தில் வரிசைசொல்ல, தஞ்சமுள்ள வெட்டிவேர் விலாமிச்
சஞ்சீந்தில்-தனிமுசுட்டை குறுந்தொட்டி வேருங்கூட்டே......௱௭௩

கூட்டடா நன்னாரி புழுக்கைவேருங்- கூறரிய சாரணையுஞ் சிறுகீ
ரைவேரும்-நாட்டடா கோட்டமதி மதுரமிந்துசுக்கு-நலமஞ்சள் கச்
சோல மேலமிலவுங்கம்-பூட்டடா சிற்றரத்தை திப்பிலியின்மூலம்-புக
ழ்சாதிக்காய்தகரம் செவ்வள்ளிக்கொடியு-மாட்டடாதேவதார மிலவுங்
கபத்திரி-யப்பனே கழஞ்சொன்றாய் மோரிலாட்டே.......... ௱௭௪

ஆட்டியே கலக்கியோர் நாழிசேர்த்து-அடுப்பேற்றி மூன்றுநா

ள் கொதிக்கவைத்து-தீட்டியே நாலாநாள் வற்றக்காச்சி-சீராகும்பதங் கண்டு வடித்திறுத்து-போட்டியே யில்லாமல் நாலுநாளைக்கொருக்கா ல்-பூசியே முழுகிவரப் போகும்நோய்கேள்-தூட்டியாய்வந்தப்ல சுர ங்கள்வெட்டைச்-சூடுமோடுங் கடலில்நுரைத் தயிலங்கேளே... ௬௭௫

## கடல்நுரைத் தயிலம்.

கேளப்பா கடல்நுரையுங் கோட்டமஞ்சள்-கெந்தமொடுபொன் மெழுகு மிலாமிச்சம்வேர்-வாளப்பா சதகுப்பை மூத்தக்காசு-மஞ்சி ட்டி யிலுப்பைப்பூ கடுகுரோணி - வேளப்பா பிசின்கம்பி பெருங்கு ரும்பை-வெட்டிவே ரவிரியுடன் வேர்க்கொம்புதானு-மாளப்பாவொ வ்வொன்று காசுதூக்கி-மாட்டுநீ மோரினு லாட்டுஆட்டே...... ௬௭௬

ஆட்டியே யெண்ணைபடி யொன்றுவிட்டு-ஆறுபடி மோர்விட்டு அடுப்பிலேற்றி-தீட்டியே வடித்திறுத்து உடம்பில்த்தேய்க்க-திலயான சுரத்திருங் காந்தல்திரும் - வாட்டியதோ ருடல்நோவு பொறுத்துப் போகும்-வாயில்வரு நீரூறல் வரட்சிபோகும்-நாட்டியே வெருகெண் ணை சுரத்துக்கெல்லாம்-நல்லபிர யோகமடா நாட்டிப்பாரே... ௬௭௭

## வெருகெண்ணை.

நாட்டியதோர் வெருகம்வேர் சிற்முட்டி-நல்லசிறு காஞ்சொ ரியு மவிரிவேரும்-பீட்டுபுகழ் சீதேவி துளசிநொச்சி-பெருங்கரந்தை யிவைவகைக்குப் பலந்தான்பத்து-நீட்டியிவை தூளாக்கி பாண்டத்தி டடு-நீரதற்கு எறுகுறுணி நிரம்பவிட்டு-வாட்டியன ஞட்டியே யெட் டொன்ருக்கி-வாங்கிநீ கோலரக்குக் கியாழங்கேளே........... ௬௭௮

## கோலரக்குக் கியாழம்.

கோலரக்குப பலமொன்று நாழிநீரில்-குவித்திட்டுப்படியாகவடி த்துக்கொண்டு-காலரக்கு பெண்ணைபடி யிரண்டுவிட்டு - கனத்தமோ ரிருகுறுணி கலரவிட்டு-வேலரத்தை யதிமதுரம் மூத்தக்காசு-வெட்பா லை யரிசிகோஷ்டம் வாய்விளங்கம்-வாலமஞ்சள் திரிகடுகு கொடுவேலி வேரும்-மரமஞ்சள் கருவேம்பு கடுகுரோணிதானே.......... ௬௭௯

கடுகுரோ கணியகிலும் கெந்தமஞ்சிட்டி- கஸ்தூரி மஞ்சளொடு யிலவங்கப்பட்டை - யடுகுசதகுப்பை செவ்வியந்தற் கோலம்புட்டி- லப்பனே வெள்ளுள்ளி திப்பிலியின்மூலம்-தடுகுபுகையூறல்சிறு தேக் குத்தானும்-தனித்தனியே கால்பலமுந் தானேதூக்கி-மூடுகவே மோ ரினு லாட்டிவாங்கி - முறையோடே நாலுதினங் கொதிக்கச்செய்யே.

கொதிப்பிட்டு அஞ்சாநாள் வடித்துமைந்தா - கூசாம லுள்ளுக் குக் கொள்ளச்சொல்லு - கதிகெட்ட மாறல்போ முறைக்காச்சல்போ

கும்-கடுங்காச்ச லபிகாத சுரமும்போகும், விதிகெட்டதெய்வீக சுரமும்போகும்-மிக்கவசீ ரணம்பூத சுரமும்போகும் - பதிகெட்ட விஷசுரமு மாச்சல்சுரமும்- பலசுரமு மிவற்ருலே பறந்துபோமே.. ௫௮௧

பறந்துபோஞ் சீதசுர மதிலோர்பாகம்-பாடுகிறேன் வெருக்கிலையின் தண்டுமூலம்-சிறந்தவில்லைச் சாரணைவேர் பேராமுட்டி - சிற்ருமுட்டி யருக்கிருவேர் விஷ்ணுகிராந்தி - கறந்தபடி பலமுமொன்ருயிடித்துவாங்கி - காச்சடா விருகுறுணி சலந்தான்விட்டு - மறந்திடாதெண்ணைபடி யொன்றுவிட்டு - வற்காலி வெள்ளையுடபால்படிதான் ரெண்டே ... ... ... ... (௫௮௨)

பால்விட்டு ஆவின்மோர்படிதான்ரெண்டு- பாச்சடாமரமஞ்சள் மதுரஞ்சிட்டி, சாலிட்டவிலாமிச்சம் நன்னாரரத்தை-சந்தனமுங் கூவிளத்தின் சதையுமிக்க,சேலிட்ட கோஷ்டமுடன் திரிகடுகுபலையும்-தேவதாரமகிற்கடை சேர்த்துநீயும் கோலிட்டவராகனென்று வகைக்குத்தூக்கி - குழையாட்டி வடித்துமைந்தா கொள்ளச்சொல்லே. (௫௮௩)

கொள்வதல்லால் நசியமிடுமேலும்பூசு - குளிர்காச்சல் சீதசுரங் குதித்தேயோடும்,வில்வதொன்றுவெருக்கெண்ணை வெள்ளைக்காலி-விதித்தபடி சமூலந்தான் துலாமுந்தூக்கு, கள்வதன்றி சிற்ருமுட்டிபேராமுட்டி - கடுஞ்சீந்தில் வில்வவேரமுக்கிருவேர், தள்வதென்னமூலமப்பா விஷ்ணுமூலி - சாரணைவேர் சீந்தியுட தண்டுகாணே....(௫௮௪)

தண்டுடனே பலமஞ்சு வகைதானென்று-தறித்திடித்துத் தூணிநீர் தன்னில்போடு, மன்றிடவே குறுணியாய் குறுக்கிவாங்கி-மாட்டுநீகுறுணியெண்ணை யதற்குள்விட்டு, பண்டுவைத்தபழந்தயிர்நீர்படிதானுவு - பாச்சியத்தில் மேல்மருந்தைப் பாகாய்கேளு,தின்றிடவேவெட்டிவேர் மதுரங்கெர்தம் - தேவதாரத்துடனே மூத்தக்காசே. (௫௮௫)

காசுடனே குங்கிலியந் திராவேர்க்குக்கில் - கனத்த சிற்ருமுட்டிவேர் திரிகடுகுமிவைகள், வீசுபல மோரொன்று வகையுமொன்று- விரைந்தாட்டி மூன்றுநா ளாறவிட்டு,ஆசிடவேமேலுமிட வுள்ளுங்கொள்ள - வப்பனே நீகொடுப்பா யத்துருட்சை, தேசுடைய தாதுர்க்கத்திரியருடசை - சீதசுரம் பூதசுரம் சேரப்போமே ............. (௫௮௬)

## கும்மட்டிக்காய்க்குழம்பு.

சேரவே குன்மங்க ளனைத்தும்போகச்- செப்புகிறேன் கும்மட்டிக்காய்க் குழம்புதன்னை, யாறவே கும்மட்டிக்காய் சாறுநாழி- யப்பனே சம்பீரச் சாறுநாழி, வாரமுறும் வெள்ளுள்ளி நொச்சியிஞ்சி- வ

கைக்குநீ சாறுபடி நாழிவாங்கி, பார்புகழ வஞ்சுபடி யொன்றாய்க்காச்சி - பாச்சதற்குள் சூதமொடு லிங்கந்தானே. ................ (௫௮௭)

லிங்கமொடு பெருங்காய மிந்துவோமம் - நேரான வெங்காரங்கடுகுமஞ்சள், லிங்கமெனும் வெந்தயமு மிளகுகாந்தம்-நேர்வாளமோரொன்று கழஞ்சியொன்று, லிங்கமுறவாட்டிநீ பாகில்சேர்த்து-நெருங்கவே விடாமல்நீ கிண்டிக்கிண்டி,லிங்கமுறும் பழம்புளிபோலிறக்கி மைந்தா - நினைவறிந்து மூடலறிந்து வுண்ணச்சொல்லே.... (௫௮௮)

உண்ணுவது பனைவெல்லம் நல்லவெல்ல-மூட்டுவாய் தூதளங்காய்ப் பிரமாணத்தி,லுண்ணயிலே குன்மம்போம்பெருவயிறும்போகு-முதரத்தில் நீராமை மகோதரம்போகு,முண்ணயிலே மிலிகையும் வெப்புப்பார்வை யுயர்கூவைவல்லியமும் கவுசிதானு, முண்ணயிலே வாயுவென்ற சென்மம்போகு - முரைக்கிறேன் கும்மட்டிக்காய்ச் சூரணங்கேளே. ................................................ (௫௮௯)

## கும்மட்டிக்காய்ச்சூரணம்.

கேளப்பா கும்மட்டிக் காயில்பத்து-கெட்டியாய் விளைந்ததாயிடித்துமைந்தா,வாளப்பா வரைத்ததனை மயனமாக்கி-பதினுடனேகொடிவேலி வேரின்பட்டை,நாளப்பாகாச்சலுப்பு வளையலுப்பு-நலமான கல்லுப்புச் சவச்சலுப்பு,வேளப்பா சாரணைவேர் திரிகடுகுமூலம்- வெற்றிபுரி செவ்வியமும் மல்லிதானே. .............................. (௫௯௰)

தானென்றபெருங்காயம்வாய்விளங்கம்-சத்தியரு ளோமமடா சத்திசீரம்,தேனென்றயெவாச்சாரம்புளியந்தோல்சாம்பல்-சேரப்பா கழஞ்சொன்றாய் செப்பக்கேளு,கானென்றபுளிநடலை மூலந்தானும்-காட்டிலுள்ள கருணையுட கிழங்குகூட, மானென்றகழஞ்சுநீமூன்றுவாங்கு- மைந்தனே யிவையெல்லா முலர்த்திடாயே. ............ (௫௯௧)

உலர்த்தியெல்லாந் தூளாட்டி வஸ்திரகாய - மூட்டியே கரகத்திலிட்டுக்கொண்டு, செலத்தையுறு மாளுடைய பலத்தைக்கண்டு- செய்யதற்குத்தேங்காய்ப்பால் படியும்வாங்கு, பலத்தகச்சநாரத்தம்பழச்சார்தானும்- பாங்கானஆநீரும் பண்பாய்மைந்தா, நலத்தவிவைமூன்றுபடி நீருக்குள்ளே - நலமாகச் சூரணத்தைப் பிரட்டிவையே.(௫௯௨)

வைத்ததொருமருந்தெல்லாம்வற்றவற்ற - மயனம்போல்திரட்டிநீ யுண்டைசெய்து,உய்த்தபெருநீரெல்லாமுண்டபின்பு-வுறவுசெய்வாய் கருணையுட மூலமாட்டி, கைத்திறமாய்மூன்றுவிரல் கனத்தில்நீயும்-கவசமந்தவுண்டைக்குக் கட்டக்கேளு, மொய்த்திடவேகாட்டெருவில் புடத்தைப்போடு - மூதண்டகெசபுடந்தான்மூட்டுமூட்டே,. ௫௯௩

மூட்டிநீயெடுத்ததனைத்தூளாயாட்டி-மூன்றுவிரல்கொண்டள்ளி யுண்ணச்சொல்லு - தாட்டியெனுமனுபானம்பால்மோராகும் - தனி வெந்நீரிளவைகளிலேசாப்பிட்டாக்கால் - நாட்டியதோரெண்குன்மமா முசூலை-நலமானயஞ்சுவகைநோவுந்தீரும்-வாட்டியதோர்செலகுன்ம மகுலைவெப்பு-மகோதரநீராமைபெருவயிறுபோமே ........ ௫௯௪

## குன்மத்திற்குமூலிகை.

போமப்பாகுடல்வாதம்குன்மம்போக- புகலுவேன்மூலிகையி ன்பிரயோகங்கள்- ஆமப்பாவெண்டுபடிகோசலத்தி - லப்பனேகற்று ழைமடலும்பின்பு - நாமப்பாசத்திச்சாரணையின்மூலம் - நல்மிளகு சாரணையும்நருக்கிநீயும் - வேமப்பாகாச்சிடவேவுப்பாய்நிற்கும்-மேல் மருந்துபெருங்காயந்திரிகடுகுமிந்தே........................... ௫௯௫

இந்துப்புகல்லுப்புவெள்ளுள்ளிதானு - மியல்பானகாட்டுச்சீரக நூந்தானும் - மூந்தவைத்துவுப்பதற்குச்சமனுய்ச்சேர்த்து - மூட்டு வாய்நாரத்தங்காயினுள்ளே - பந்தமுறவாறுநாளூறநிற்கும்- பத்தியுட ன்தின்றிடவே குன்மந்தீரும் - விந்தையாய்க் குடல்பிரட்டும் வாதத் துக்கு-விழிவேர்பாக்களவுவெந்நீரிலூட்டே......... ........ ௫௯௬

## பூதவயிரவம்.

ஊட்டுவாய்பசும்பயறுமாவின்பாலி- லுண்டிடவேகுடல்பிரட்டு மொழிந்துபோகும்- நீட்டிடவேபூதவயிரவத்தைச்சொல்வோம்-நேரா மிர்தசூதமுடன்லோகந்தாரம் - நாட்டியதோர்கெந்திசிலைசிரோதாஞ் சனமும்- நயமாகச்சமபாகம்நிறுத்துக்கொண்டு - ஆட்டுவதுசிறுநீரில் சாமமொன்று-அப்பனேகுன்றியிடைகுளிகைகட்டே......... ௫௯௭

கட்டியதோர் குளிகைக்குச் சுத்தியான - கந்திரண்டு யிந்துப்புக் கல்வத்திட்டு-கட்டியதோர்கால்கடிகைவறுத்துவாங்கு-கருத்தாகவஞ்சு குன்றிவறுத்துக்கொண்டு-அட்டியில்லாக்குளிகையொன்றுசவச்சலுப் பு - அப்படியேதிரிகடுகுபெருங்காயநேரே - துட்டியன்றிச்சிறுநீரில் தினந்தானூட்டிச்-சுகமாகநெய்யதனிலுண்ணச்சொல்லே...... ௫௯௮

## உருத்திரவயிரவம்.

சொல்லவேயின்னமொருகுளிகைதானும் - துயர்தீருமுருத்திர வயிரவத்தைக்கேளு- வெல்லுமேசூதமொடுலோகம்பூரம்-வெண்ணவி யிவைசமனுய்விரைந்துதூக்கி - செல்லுமேதாமரைப்பூ கள்ளிப்பூவும்- சித்தருடமூலிகைச்சாறேரண்டப்நொச்சி - யல்லுறவேயொவ்வொரு நாளாட்டிமைந்தா - அளவாகவோருருண்டைதிரட்டிடாயே... ௬௱

திரட்டியேவாலுழுவை தயிலம்வாங்கு-சேர்த்தங்கே சாமமொன் று தீயைமூட்டி, பிரட்டியே மந்தாக்கினி தன்னில்வைத்து-பிரியமுட

ன் பக்குவஞ்செய் பிறகுகேளு-உருட்டுவாய் கடலையிடை யுண்டைசே ர்த்து-வுறுகுளிகை தனையெடுத்து யிஞ்சிச்சாற்றில்-மருட்டிநீ யீந்திட வே வலிப்புதீரும்-மறுபடிநீ தெசமூலக் கியாழம்போடே..... ௯௱

## தெசமூலநசியம்.

தெசமூலக்கியாழத்தில் தாவக்கேளு-திப்பிலியின் பொடியிட்டு தின்னச்சொல்லு-தெசமூல நசியங்கேள் கஞ்சாவித்து-செயவெள்ளை விஷ்ணுவுட கிராந்திவேரும்-தெசமூலம் சிறுநீரி லாட்டிமைந்தா-சிறக் கவே நசியம்விடு யின்னங்கேளு-தெசமூலங் கழுதைலத்தி மகிழம்வித் து-சீர்சமனு யாட்டிநீ நசியம்வாரே ... ... (௯௱௧)

வார்த்தபின்பு நசியமிட வின்னஞ்சொல்வோம்-மகத்தானவில்வ வேர் வெள்ளையுள்ளி-நாற்றமுறும் பெருங்காயம் நாயிலஃகட்டம்-நன் றாகச் சிறுநீரி லுண்டைசேர்த்து-வேற்றுமையொன் றில்லாத வில்வச் சாற்றில்-விழியிலிடு புகைமருந்தை விள்ளக்கேளு-சேர்த்திடுவா யெட் டிவித்து நாயின்கட்டம் - திறமான பெருங்காயம் வசம்பு காணே.

வசம்புள்ளி கடுகுடனே சருகுதானும்- மயிருடனே தலையோடு ஆவின்கொம்பு-விசந்தணியும் திம்பவித்து தேவதாரம்-நீறுமல் சமபா கம் புகையில்போடு - பசந்தவெறிப் பித்துடனே வாய்ப்புலர்த்தல்- பயித்தியமாய்க் கல்லெறிதல் மத்தமார - முசந்துகுதித்தோடுவது மு ன்மத்தந்தா-னொழிந்துபோங் கெண்டைக்குற் பனத்தைக்கேள.௯௱௩

## அனல்சூரணம்.

•கேளப்பா மேனேக்கும் வாய்வுக்கெல்லாம்-கிருபையனலாமெ ன்ற சூறணந்தான்-நாளப்பா ரெண்டைத்தூள் படிதானுலு- நலமான சதிரக்கள்ளி பட்டைநாழி - யாளப்பா புளித்தோலின் பட்டைநாழி- யப்பனே யமைப்படியா முப்புதானும், நீளப்பா விவைபெல்லாந் து ளாயாட்டி-நேராக வடிகட்டிக் கரகத்தூட்டே.................. ௯௱௪

கரகத்தின் பொடியங்கே வெருகடிதான் தூக்கி-கர்த்தாவைத்தியா னித்து வுண்ணச்சொல்லு-வரவற்றுந்தின்னாமல் பத்தியமாய் தின்னு- மைந்தனேயுப்பன்றி மற்றொன்றாகா- விரவத்தசன்னிமுத லுன்மத்தம் விகற்பம்-விடங்களொடு குமரகண்டன் காமாலையேகு-முரமற்றமுசல் வலியும் பித்தசோகை - யுண்ணயிலே பறந்துபோ முண்மைதானே.

## உருத்திர விஷக்கலிக்கம்.

உண்மையென்று விரைந்தோடி மூடிக்கொள்ளு - உருத்திரமாம் விஷத்துக்குக் கலிக்கங்கேளு - வெண்மையுறு மேனித்தோல் வராகன் மூன்று-வெந்ததலை யோடப்பா கழஞ்சியொன்று- திண்மைபுரி தாம்

ரத்துள் வராகனென்று - செயதுரிசு வராகனென்று துத்தமொன்று-
யுண்மைபெறப் புளியிலையின்சார் விட்டாட்டி- மைந்தாநீ பயறுபே
லுண்டைகட்டே ... ... ... ... (சாகூ)

கட்டியதோர் குளிகைக்கு வய்ணங்கேளு - கனகன்னி கக்கத்திப்
பழுப்புச்சாற்றில் - மட்டில்லாவிஷத்துக்குச் சாரணையில்தீட்டு-மயக்
விடும் பேய்க்கெல்லாங் கரிப்பான்சாற்றி-லொட்டில்லாவுமத்த முலை
ப்பாலாகு-முறைத்துவிழு முசல்வலிக்குப் பழச்சாறாகு- மட்டியுறுங்
ராமாலைக் கிளநீராகு - மப்பனே மருளுலத்தல் தும்பைச் சாறே.

சாறுகளில்சொன்னபடி கண்ணில்தீட்ட - தப்பாமலவ்வண்ணம்
சிவிர்த்தியாகும்-வேறுமொரு அஞ்சனத்தின் பெருமைகேளு - மென்
பாலமிதாகார னென்றநாம - மேறுபுகழ்க்குக்குல்துத்தந் துரிசியேல-
லவுங்க பட்டையுடன் சமன்தான் தூக்கி - பேறுடைய பேய்த்தும்
பைச் சாற்றிலாட்டி-பிலக்கவே நெடுங்குளிகை பிடித்திடாயே. சாஅ

பிடித்ததொரு குளிகையைநீ கண்ணில்தீட்ட-பேய்ப்பிளவைவலி
பெல்லாம் பேதமாகும்- குடித்திடவே யுள்ளுக்கு மருந்துசொல்
வாங் - குறைதீரும் செறிதீருங் கூனுந்தீரும் - மடித்துடைய வெண்
ருவெச்சந்தானு - மதுககாரம் பழமிவைதான் சமன்தான்சேர்த்து-
அடித்துடையவெள்ளாடு கறுத்தவண்ண-மாட்டினிட பாலதனிலரைத்
திடாயே ... ... ... ... (சாகூ)

அரைத்ததொரு மருந்தெல்லாந் திரட்டிநீயு மப்பனேகழஞ்சியி
டை குளிகைசேர்த்து,உறைத்திடுவாய் குளிகையொன்று வெந்நீர்வி
டு -உள்ளுக்குக் கொடுத்திடவு மொழியுமப்பா,கரைத்ததனை நசியமி
டு அறிவுகெட்டால்- கண்ணிலே திங்களொன்று கலிக்கம்போடு, வரை
த்துடைய முலைப்பாலிற் போடுபோடு- மைந்தனே மயக்கமறும்றிவு
ண்டாமே. .............................................. (சா௱ய)

அறிவுகெட்ட விஷத்தாலுஞ் சன்னியாலு-மாங்கார வெறியாலும
சதியாதிப், பிறிவுகெட்டுப் பிணம்போலே சுரணையற்றுய்-போடுவாய்
கண்ணிலுங்கா துமூக்கில்,செறிவுடனீமுலைப்பாலி லிட்டாயானல்-செ
த்தசவம் பிழைத்தெழுந்து திரும்பிபேசு,மறிவே துமில்லையப்பா சத்தி
யமேயாகு - மற்றமற்ற வாகடங்க ளிதுககொவ்வாதே. ..... (சாயக)

## கெந்தகதயிலம்.

ஒவ்வாத சூலைமூ வாறும்போக-வுறைக்கிறேன் கெந்தகத்தின் த
யிலந்தானும்,செவ்வான கெந்தகமோ கழஞ்சிபத்து-சிவந்தபசு நெய்
தனிலே சாமமொன்று, சவ்வாது போலாட்டித் திரியிலூட்டி - தலைகீ
ழாய் பிடித்திடவே த்யிலம்வீழும், கவ்வாத தயிலமதில்சூதமூன்று-கழ

ஞ்சியிட்டுச் சாமமொன்று ஆட்டுஆட்டே ... ...(௪௰௨)

ஆட்டியதோர் தயிலத்தைக் குப்பிக்கூட்டி - ஆயிபதம் பூசித்து அருள்தாவென்று - நீட்டியொரு காசிடைதான் தினமுங்கூட்டு - நினைவோடே தினம்பத்து கொண்டபேர்க்கு-நாட்டில்வளர் சூலையென்ற தனைத்தும்போகும்-நலமான பத்தியம்பால் தயிர்நெய்யாகும்-தீட்டியதோர் நல்லெண்ணை முழுகலாகா - செப்புகிறே னின்னமொரு சூதத்தாட்டே .... ... ... ... (௪௰௩)

சூதமப்பா கழஞ்சிரண்டு சுத்திசெய்து - தூக்கிநீ வெற்றிலையின் சாற்றிலிட்டு-ஏதமுற முறித்ததனை வெற்றிலையிற்பொதிந்து- வியல்பான பச்சரிசி குறுவையாகும்-வாதமுறும்வெற்றிலைச்சார் படிதானென்று-வார்த்ததிலே பச்சரிசி யுழக்களாதானிட்டு - பேதமுற மூன்றுபத்துக் கடிகையங்கே - பிரட்டியதை நனையவே வைத்திடாயே...௪௰௪

நனைந்ததோ ரரிசிதனைச் சுவறப்போட்டு- நயமாகவெடுத்தங்கே பருவங்கேளு - நினைந்தமின்னி மொசுமொசுக்கை வெற்றிலையிம்மூன்றும் - நேராக வகையொன்று படிதானென்று - துனைந்ததனித் தனியாகச் செருக்கவாட்டு - நுகரவைத்து வாங்கியே யரிசிகூட்டி-புனைந்திடித்து மாவானால் சூதம்விட்டுப்-புரளவே தூளாக்கி யிடித்திடாயே.

இடித்ததொரு பொடியதனை நிழலுலர்த்தி - யிதமாகப் புதுக்கரகத் திட்டுக்கொண்டு - புடித்தமாய்க் கழஞ்சிநீ தயிரிலூட்டி-புரக்கவே மூன்றுகப் பிடித்துவுண்ணி-லடித்தமாயேழுதினங் கொண்டாலப்பா-அலர்சூலை வடிசூலைப் புண்ணும்போகும் - படித்தரமாய் பத்தியத்தை விள்ளக்கேளு - பசுவினுட தயிராகு முன்னு மூன்னே. ()

உண்ணயிலே சூலைவெட்டை மீறித்தானு - ஒதாத்தி லழைச்சலுமாய்க் கடுப்புக்கானும் - திண்ணமுறத் தயிரிலே வெல்லம் போட்டு-தின்றிடவே பொருதியாம் செப்பக்கேளு - வண்ணமா யெழுமூன்று தினந்தானப்பா-மறுபத்திய மாவதொன்று வளார்ந்ததள்ளு, எண்ணைகேளாமணக்கந் தயிலம்விட்டு - யிதமாக வீரஞ்சு முழுகச்சொல்லே.

சொல்லுகிறே னின்னமொரு பொரிமாவாலே - சூத்திரமாயமூதுபடி புழுங்கலாக - சொல்லுவேன் கால்படியும் பொரிமாவாக்கி-சூட்டுவாய் பழச்சாறு நனையவார்த்து - சொல்லுவேன் சுவறியபின் கழஞ்சிசூதம் - தூக்கியிட்டு யிடித்தங்கே பழச்சாறிட்டு - சொல்லுவேன் பழச்சாறு விட்டுவிட்டு - சுகமான வெற்றிலைச்சார் சுவறவூற்றே. ()

ஊற்றூறுவாயுத்தமத்தா ளிச்சாறு- உறவுசெய்து தினமொன்று

பிடித்துமைந்தா, நேத்திபா பிடித்ததனை வாங்கிக்கொண்டு-நீழனுலர்
த்தி வெருகடியாய் நேர்ப்புகண்டு,சாற்றுவாய்மூன்றுநாள் நாலுநாள்
தான் - தயவாக விருநேரஞ் சாப்பிட்டாக்கால், பார்த்துநீ யனுபான
ஞ் சொல்லக்கேளு- பழந்தண்ணீர் பத்தியந்தான் வென்னீர்வாரோ. ()
வெந்நீரும்வெள்ளுள்ளிமற்றொன்றுகா-வீராகக்கெண்டிடவேவிபரங்
கேளு,தண்ணீரு மற்றொன் றுமுடங்கிறேரும்-தானேதாயெழுந்து ந
டந்துசொல்வார், வன்னீரா மேரண்டத் தயிலம்விட்டு - வாரமொருக்
கால்முழுக மைந்தா கேளு,வன்னீரின் வாசனைபோல்தேகமாகு-மயக்க
மது மகிழ்ந்தங்கேயுண்ணச்சொல்லே .......................... (௪௨௰)

வாய்சூலைக்கு.

உண்ணையிலே வாயெல்லாம் சூலைகண்டா-லுரசியங்கே கொப்ப
ளிக்கக் கியாழங்கேளு, கண்ணையிலேவெள்வேலு மெருக்கின்வேரும்-
கருவேலுந் துளசியுடன் கியாழமிட்டு, நண்ணையிலே நாலுநாளுமியி
லப்பா-நாச்சூலை வாய்ச்சூலை யிரண்டுந்தீரு, மண்ணையிலே வுள்ளுக்கு
ப் புகையைக்கேளு-அப்பனே கருவேலின் பிசினைவாங்கே. ... (௪௨௧)
பிசினுடனேமுருங்கைவேரொருக்கம்வேரும் - பேரானயழிஞ்சிவேர்
சிவனார்வேம்பு, பிசினுடனேயிவையஞ்சுஞ் சரியாய் தூக்கி - பிரளவே
தூளாக்கி யெடுத்துக்கொண்டு, பிசினுடனே தணலிட்டு வெருகடியை
த்தூவ-பெருநாளைப் புண்ணெல்லா முலர்ந்துபோகும், பிசினுடனே
யிவையெல்லா முண்மையாகப் - பேசுகிறேன் நேத்திரநோய்க் கெல்
லாங்காணே. ...................................... (௪௨௨)

நேத்திரவியாதிக்கு.

காணப்பா திரிகடுகு கடுக்காய்நெல்லி,கடுதான்றிப்பசுவின்பால்கழு
தைப்பாலு, பூணப்பா வதிமதுரம் பீதரோணி, பொன்மெழுகு வெள்
ளைக்காக் கணமும்நேராய், தோணப்பாமுலைப்பாலாற் சாமமொன்று-
துவளவதை யாட்டிநீ குளிகைகட்டி, பூணப்பா முலைப்பாலா லுரைத்
துநீட்ட-வொழியுகிற வியாதிகளை யுற்றுக்கேளே. ............ (௪௨௩)

அஞ்சனம்.

உற்றுவளர் திமிரமுதல் படலந்தானு - மொழுகிவிடும் நீர்ப்பில்
லங் கண்ணில்காச,மற்றுப்போம்வெள்ளைவாகடத்தின்போக்கு - அப்
பனேசுடர்கால அஞ்சனத்தைக்கேளு,பத்திநின்ற கண்ணோய்கள்தொ
ண்ணூற்றாறும்-பற்றறவேசிறுகீரை பொன்னாங்காணி- சுத்தவெள்ளைச்
சாரணைவேர் வெள்ளைக்காக்கணமுஞ் - சோவேவேரெல்லாம் வாங்கு
வாங்கே. ............................................ (௪௨௪)

வாங்கடாதேத்தன்விதைதலைமண்டையோடு-வளர்சுணங்கின்யல்கோழி மார்பிலத்தி, வாங்கடாபவளமுத்த லைவதான்சேர - வரிசையுடன்சமனாக நல்லெண்ணெவிட்டு, வாங்கடாகல்வத்தில் மயனம்போலாட்டி- வரிசையுடன்சிமிழ்தனிலே வைத்துக்கொண்டு,வாங்கடாகண்ணிலிடுநெடுநாள்சென்ற- வலுவான குந்தம்பூ மாறுந்தானே.......... (௪௨௫)

ஆறுவதற்கின்னமொன்று சொல்லக்கேளு- மணிக்கொட்டைப்பாச்சிலை துருசிதுத்தம், டீருமற்சமனிறுத்துச்சிறுநீர்விட்டு-வெண்ணெபோலாட்டியதைக் குளிகைசேர்த்து, வேறுமொரு வியாதிகட்குச் சிறுநீர்விட்டு-விரைந்துரைத்துக்கண்ணிலிட வெளிச்சமாகும்,வீறுடையபுஷ்ப்பூவும்குந்தந்தீரு-மிருள்மூடும்புகைச்சலுக்குவிபரங்கேளே. (௪௨௬)

வெள்ளெழுத்திற்கு.

விபரமென்னமுசல்புழுக்கை சுட்டசாம்பல் - வெங்கலத் தாலத்தில் நெய்யைவிட்டு, விபரமுறக் களிம்பாக்கிக் கண்ணில்தீட்ட-விழிமயக்க மிருள்மயக்கம்புகைச்சல்தீரும், விபரமுற வெள்ளெழுத்து மாறுதற்கு- விரைந்தொழுகும் புரசம்பால் தின்றானால்,விபரமுற மாறிப்போம்கண்ணேயென்றால்-விசித்திரமாய்க்காதிலிடவிளம்புவேனே ()

விளம்புவேன் வலக்கண்ணே யென்றால்மைந்தா- மேனியிலைகசக்கியிடக் காதிலூத்து, தளங்கியதோரிடைக்கண்ணே யென்றால்மைந்தா-சாத்துவாய் வலக்காதில் சாறுதன்னை,களங்கமற விரண்டுகண்ணும்நொந்திதானால்-காதிரண்டிலொருமிக்க வாருவாரு,துளம்பியதோர்சிவப்புமற்றுநீருமாறும்-கூட்டுகிறேன் பிறவடையைத் துணிந்துபாரே. ()

பிரவடை.

துணிந்துகேள் நாயுருவி சிவந்தவேரைத்-தோண்டியேபிடுங்கிமண்வெட்டிக்காச்சி, கனிந்துபழச் சாறூற்றி வேரையாட்டி- கண்ணிலேபிரவடையுங் கட்டச்சொல்லு,அணிந்திடவே பந்திலைச் சாறுவாங்கி-பம்மியிலே மத்திச்சுப் பூசத்தீரும்,மூனிந்துடையமாலைக்கண் காணதென்று-ஊற்றவெட்டி வேர்மூலைப்பா லூற்றியாட்டே. .......... (௪௨௯)

மாலைக்கண்ணுக்கு.

முலைப்பாலி லாட்டியங்கே கண்ணில்தீட்ட,மோசமன்றி மாலைக்கண் காணுமைந்தா-அலைப்பாலில் பழமிளகு நல்லெண்ணெக்குள்ளிட்டூறஞ்சு தினமூறி யெடுத்துக்கொண்டு, நிலைப்பாக யெண்ணெகுத்தியுரைத்துத்தீட்டு-நேர்ப்பாகமாலைக்கண் ணிவிர்த்தியாகும்,மலைக்காமலெட்டுநாள்தீட்டினுக்கால்- மயங்காமலிருட்டறுத்து வழிசெய்வாமே. ()

செவ்வாகமாலைக்கண் ணிவிர்த்தியாகும்- செப்புகிறேனஞ்சனத்தைச் சிறக்கக்கேளு,செவ்வாகுஞ் சூதமொன்று கெந்திமூன்று-நிரைக்

கவெள்ளைச் சாரணைவேர் நாலுதூக்கி, செவ்வாகும் நேர்வாளம் நாலுதூக்குச்- செம்பிரச் சாற்றினால் குழையவாட்டி,செவ்வாகு மான்கொம்புசிமிழில்வைத்து - தேவையென்றால் பழச்சாற்றில் தீட்டிடாயே.()

## வெறிமயக்கம் போக.

தீட்டினால் சன்னிவிஷம் பேயும்நீங்கும்- செப்புகிறே னுண்மைபேர்மயக்கமானால்,காட்டினாலொழிந்திடவேமருந்தில்லாமல்-கடுகவேபிடித்தவனை விலங்குபூட்டி,ஊட்டியதோ ருலையிலிட்டுக்கொழுவைக்காச்சி - யொழுகவேவிடுப்பவர்போ லொண்டவொண்ட, நீட்டினால் வாய்திறந்து பேசுவான்காண் -நிராகரித்துக் கிரிகையே செய்திடாயே.

செய்திடவேயொழிந்துபோமிவற்றுக்கெல்லாம்-செப்புகிறேன்பத்தியங்கள் திரமாயப்பா,நெய்யாகும் பாலாகு மற்றொன்றாகா-நேராகவடிக்கடிநீ முழுகச்சொல்வா,பெய்யாத வெலிகடிக்குமருந்தைச்சொல்வோ-மிறங்கழஞ்சி வேர்பட்டைமாவிலிங்கப்பட்டை,மெய்யாகவெள்ளாட்டினீரிலாட்டி- விரவியேகுடித்திடவேவிஷங்கள்போமே....()

விஷம்போகும் பூசிடவே மாதளையின்வேரை-வெண்பசுவின்பாலிலே உள்ளுக்குக்கூட்டு, சவம்போலே சுரணைகெடும் கடுவிடங்களாகில்- தண்ணீர்க்குள் நெய்க்கோட்டான் பழங்கசக்கி, நிசம்போமவ்வெண்ணைதனை வழித்துமைந்தா - நேர்ப்பாகத் தலையிலே குடோரியாட்டி,வசம்போலே தேய்த்திடவே தீர்ந்துபோகும்-மருந்துகே ளுள்ளுக்கு மைந்தாநீயே. ........................................ (௪௩௪)

மருந்துகேள் மொசுமொசுக்கை சமூலம்வாங்கி-வரைந்திடுவாயாவின்பால் வார்த்துநன்றாய், பொருந்தவே பிழிந்திடுவாய் குறுணிச்சாறு - புகழாக வடிகட்டி குறுகக்காச்சி, விருந்தாகஆவின் வெண்ணைமேதிவெண்ணை - வேணதப்போ கட்டிநதி லிரண்டிலொன்று,பெருந்தேனிற் படியளாதான் கழுதைப்பால்கேள்- பிசகாம லளப்படிதான் பிலக்கச்சேரோ. ........................................ (௪௩௫)

பிலத்ததோ ரிரண்டுகா ரிஞ்சிச்சாறு-பெற்றிடுவாய் பனைவெல்லம் பலமூன்று-சறத்திலுற வார்த்துநீ பாகுசெய்து - கடுக்காயில் சிறிதாக விடித்தித்தூளும்-நலத்துறவே கால்படித்தூ ளிட்டுக்கிண்டி-நயமாகநாற்கழஞ்சியுண்ணச்சொல்லு-புலத்தியனேபக்கமொன்றுஉண்ட பேர்க்குப்-பொறிகலக்கம் வெறிமயக்கம் போகும்பாரோ ......௪௩௬

## துவாலைமருந்து.

பாரப்பா துவாலையிட மருந்துங்கேளு - பாங்கான ஆதளையுமுத்தெருக்கின்செவியும் - நேரப்பா யிவையிரண்டு முரலிலிட்டு - நெடுநாளைக் காடிவிட்டு நெகிழவாட்டி-வாரப்பா சிரசுமுதற் பாதமட்டும்-

வற்றவற்றத் தடவியே வரிசையாகச்-சேரப்பா வொன்றரைநாள் செ ன்றமோரில்-திறமாகத் துவாலையிடு தெளிந்துபோமே .........௨௱௭

## வெறிதீர.

தெளியாத வெறிபித்து விஷமயக்கும்-திரிந்திடவுமுள்ளுக்குமரு ந்துகேளு-எளிதாகவிஞ்சிச்சார் கரண்டிரண்டு-இதற்குரொட்டி கழுதை ப்பா லிரண்டுசேர்த்து-அளியாத சர்க்கரையுங் கழஞ்சிரண்டு - அப்ப னே தினம்பத்து வுண்ணச்சொல்லு-வளியாக மாறிவிடுந் துவாலையே து-மைந்தனே முன்சொன்ன மருந்துதானே....................௨௱௮

## சோறுசமைக்க.

தானென்று அறிவுகெடடு மயங்கினோர்க்கு-சாப்பிடவேசோறொ ன்று சமைக்கக்கேளு-தானென்ற பசுவின்பால் தூணிவாங்கி- தணலிட டு வடுப்பேற்றிக் குறுணியாக்கி - தானென்ற குன்றிச்சார் நாழிவிட்டு- தனிமுசறு முடடையிலே]வுரியும்விடடுத்-தானென்ற பனைவெல்ல மூ ன்றுபத்து-தாக்கிடவே பின்பதனைச் சாற்றக்கேளே ............௨௱௯

சாற்றக்கேள் பேய்வாழைப் பழந்தானப்பா, தயவாகநாற்பதங் கே யுரித்துச்சேர்த்து, சாற்றககேள் சர்க்கரையும்பலமிரண்டு-சம்பா நெல்லரிசியிலே படியும்ரொண்டு, சாற்றககேளிவையெல்லாங்கிண்டிக் கிண்டி, தவறுமல் பாகமா யெடுத்துககொண்டு, சாற்றககேளுஎன்பதற் கு விவரங்கேளு, சமைத்தங்கே மூன்றுநாள் தாககச்சொல்லே. ()

தாககச்சொல்லி ராப்பகலு மிருநேரந்தான், சாப்பிடவே யறிவு மயல் தானேதீரும், தாககவேமற்றொன்று மாகாதப்பா, சளந்தீரும் விஷந்தீரும் சம்பிரதாயம், தாககவே பிறகடந்தான் தீரககேளு, தனிக கோவை மூத்ததண்டு முடககொத்தான்தண்டு, தாககவே சமனுகவிடி த்தவித்துத், தனிச்சாறு முழககங்கே பிழிந்திடாயே ..........௨௱௰௧

பிழிந்ததொரு கியாழத்திற் காடிநேராய், புகட்டியிதில்வெல்லமி டடுக குடிககச்சொல்லு, அழிந்துவிடும் பிறகடந்தா னலறியோடு,மப் பனேசாராய வெறிககுககேளு, கழிந்ததொரு சாராயம் விடடுமைந் தா, சமைத்ததிலே நெய்யைவிடடுச் சாப்பிடடாககால்,குழிந்துசடம் விழுமளவும் லகரியில்லை, கூறுத வேதனைதான் கொண்டபோதே. ()

## பெருவயிறுகரைய.

கொண்டதொரு பெருவயிறு கரைந்துபோகக, கூருகிறேன் ம ருந்தொன்று குடிலம்விடடு, அண்டர்மகி ழிமேனியிலை காஞ்சொறி யிலையு, மாடுதின்னுப் பாலையிலை யிவைதானெல்லாம், கண்டிதமாய் சாதிககா யளவரைத்து, கரைத்திடுவாய் மூன்றுபடி பழச்சார்தன்னில்,

விண்டுநீர்த் துரிசுகெந்தி லிங்கமொக்க, மீறும லைகக்கழஞ்சு வகைக்
குச்சேரே ... ... ... ... (௨௪௪)

வகைசேர்த்து அடுப்பேற்றி மயனமாக்கி, மைந்தனே ரெண்டுதி
ன மாறவைத்து, வகையாகக் குன்றியிடை யருந்தினக்கால்,மகத்தான
பெருவயிறு வற்றிப்போகும், வகைகேளு அந்திக்குக் கியாழங்கேளு,
மைந்தனே காட்டுமல்லி களைபழுத்தல் - வகையான கரிப்பானும் ச
மூலம்வாங்கி, வரிகடுக்காய் முப்பதுடன் பாதிரியின் சருகே ...௨௪௫

சருகுடனேமிளகுழக்குக்கட்டிப்போட்டு, தணிச்சலந்தானுலுபடி
தயவாய்விட்டு, செருகுடைய வடுப்பேற்றி யெட்டொன்றுக்கி, திற
மாக வம்மிளகு வேம்ழொன்றுக்கி, யருகிருந்த கியாழத்தில் கலக்கிநீயு,
மடைவாக்கக்கொடுத்திடுவாய்பட்சமொன்று, கருதுகின்றபெருவயிறு
கலைந்துபோகக், கடுக்காய்பத்துப் பொடியாக்கிக் கியாழத்தூட்டே.

கிஷாயத்தில்பொடியிட்டு அளைப்படிதானியும், கறுந்தவெள்ளா
ட்டினுட நீருவிட்டு, வசாயத்தில்மூன்றுநா ளூறவைத்து, மைந்தனே
பத்துமுறை யிப்படிதானூட்டு, புசாயுத்த பெருவயிறு கலைந்துபோ
கும், பூட்டுகிறே நீராமை கவுசிகமெல்லாம், விசாயத்தில் துரிசினுல் ந
டக்கைகேளு, விராகனே ரிரண்டுபத்துத் துரிசுதூக்கே ..... ௨௪௬

தூக்கினதோர் துரிசுதனைச் சுத்திசெய்து, சுருட்டுவா யேரண்ட
யிலையேழப்பா, தாக்கவே வெள்ளுள்ளி கவசங்கட்டி, தான்திரும்ப வி
லைசொண்டுபொதிந்துகட்டி, தேக்கமுடனுமிசுகாந்தற் குள்ளேவைத்
து, திரமாகமறுநாள்நீ யெடுத்துவைத்து, ஆக்கமுறுந்தேங்காயில் வெ
ருகடியுந்திருகி, யத்துடனே வெள்ளுள்ளி யரைத்துச்சேரே... ௨௪௭

வெள்ளுள்ளி துரிசிபந்பம் விராகனால்தான், வேதிச்சுயட்டு
நாள் விழுங்கத்தீரும், வள்ளலே பத்தியங்கள் சாமைக்கஞ்சி, வாய்கை
கால்கொப்பளிக்க வெந்நீரல்லா, லெள்ளளவுபத்தியங்கள் பிசகினக்கா,
லென்மேலே குறையில்லை யிடுக்கம்நீயும், வள்ளலே யின்னமொரு வ
ராகவித்தை, மணிக்குடலில் பெருங்காயம் பொறிகாரந்தானே. ( )

## வராகவித்தை.

காரமென்று காயமிரண் டிந்துநாளு, காயொன்றுநாரத்தைகள்
ளிப்பால்கேள், வீரமுறக் கழஞ்சிரண்டு மிளகிரண்டு,வெள்ளுள்ளி ப
ருப்பங்கே பலமுமொன்று - ம்காரமுறு மிளகுழக்குச் சேரவொன்று
ய்-குழையவே யாட்டியதில் வராகைவித்து-ஆரவே பொடித்திரண்டுழ
க்குச்சேர்த்து - அளவே தூதளங்காய்ப்போ லுண்ணச்சொல்லே. ( )

உண்ணுவது மண்டலந்தான் பத்தியங்கேளு-மூத்தமனே மிளகுநீ

ராகுமப்பா-நண்ணையிலே கியாழமொன்று நாடடக்கேளு - நலமான கல்நார்தான் கழஞ்சிரண்டு - கண்ணையிலே கல்நார்தான் காசுதூக்கி-கரிப்பான் சிறுகீரை வேருமாடடி- வண்ணமுறப் பாக்களவு அரசம்ப டடை-வரிசைவெள் ளரிவிரையும் வராகனென்றே ........... (சஉய)

ஒன்றாகக் கூடடியே வாங்கிவைத்து- வுத்தமனே யரசம்படடை கியாழம்வைத்து - நன்றாகக் காலத்தில் கியாழத்துள்ளே - நாடடவே பரைத்திருந்த மருந்துதானும்-தின்றிடவே நீகொடுக்கப் பெருவயிறு கவுசி-தீராத ரோகமெல்லாந் தீர்ந்துபோகும், தின்றிடவே காலையந்தி யிருவகையுமூட்டு- நிசமாகப் படுபருவுக் கியம்புறேனே. ... (சஉக)

## படுபருவுக்கு.

படுபருக்களொழிந்திடவேமருந்துகேளு-பண்பான அவிரிவேர்குட ப்பாலைவேருங்,கொடுவேலின் வேரின்தோல்மூன்றுமொன்றாய்-கூட டிநீ யாவின்பர்லாடடிவாங்கி,தொடுத்துண்ணமூன்றுநாள்தீர்ந்துபோ கும்-சொல்லுகிறேன் வகைமூன்று பாலிலாடடி,அடுப்பில்வைத்து அ ரிசியிட்டுச்சமைத்துவுண்ண-ஆச்சரியம்படுபருக்கள்தணிந்துபோமே.

## படர்தாமரைக்கு.

போவதற்குக் குன்றியிலை யிலுப்பைப்படடை- புகழானசெருப் படையுமூன்றுமாடடி,பாவகமாயிலுப்பை நெய்யிலாடடிமைந்தா-ப ண்பாகப் புண்ணிலிட பாறியோடும்,சாவதில்லை யிவைபடர் தாமரை க்குக்கேளு-சாதகமாய்கொடிவேலிவேரின்படடை,காவதிகமதுக்காரை வேரும்வித்தும்- கழஞ்சிரண்டு பழச்சாற்றிற்கரைய ஆடடே (சஉங)

ஆடடியே பாக்களவாய் மூன்றுகடடி-யப்பனே-யுள்ளுக்கு மே லும்பூசு-வாடடியே யுதிர்த்துவிடு மின்னமொன்று-வளரொருக்கின்வே ர்படடை கம்பின்படடை-நாடடியதோர்தகரைவித்து சேரக்கூடடி-நாழிப்பா லதனில்விடடுக் காச்சியாற்றி-நீடடிநீ புரைகுத்தித் தயிரை யுண்ண-நீகொடுப்பா யதிலிருந்த விரையும்வேரும்-தாடடியாயரைத் தருந்த மேலும்பூச - தனித்தனியே தீருமடா சாத்தக்கேளே...சஉச

## மலட்டுவலிக்கு.

சாத்துகிறேன் மலட்டுவலி மருந்துகேளு-சாதகமா யெண்ணெயி லே நுணவிலைச்சாறாத்தி- சேர்த்தங்கே கொடுக்கவே நிவிர்த்தியாகும்-செப்பக்கேள் திரிகடுகு தூளாயாடடி - மாற்றமில்லாக் கழற்சிவிரை யோமமிந்து-வகைநேராய் வறுத்திடித்து மூன்பொடியுங்கூட்டி-நூத் துவாய் நல்லெண்ணை விடடுருடடி-யுண்ணவேமலட்டுவலி யொழிந்து போமே... ... ... ... ... (சஉரு)

## பவுத்திரத் துக்கு

ஒழியாதபவுத்திரங்க ளொழியவென்று-னுரைக்கிறேன்மேனியப்பா சமூலம்வாங்கி-நெளியாமல் நிழலுலர்த்தா யுலர்த்தியாட்டி-நேத்தியாய்வடிகட்டிவெருகடிதான்வாங்கி-கழியாதவெண்ணெயிலே குழப்பித்தின்ன-கணங்களற்றுப் புண்ணுலருங் கடினமானு-லழியாமல் மண்டலந்தா னுண்ணச்சொல்லு-மப்பனே நீர்ப்பாச்ச லாறுந்தானே. (

ஆறுமப்பா விம்மருந்தால் நிசமாய்ச்சொன்னே-னுருக்குஞ்சொல்லாதே ஆத்தாள்சொன்னாள்-மீறாமல்கொஞ்சநாள் வியாதியென்றால்-விரைவுடனே யிருபதுநாள் கொள்ளச்சொல்லு - வேறுபடும் வியாதியென்றால் மண்டலந்தானூட்டு- விளம்பினதோர் மருந்தெல்லா மூன்றுமைந்தா-வேறுமொரு பதார்த்தங்க ளருந்தவேண்டாம்- வீறுடைய நெய்பாலாம் விரைந்துபாரே........................... ௨௫௭

விரைந்துவரும் பாரிசவாயுவுக்கப்பா - வெள்ளுள்ளி பருப்பங்கே சிரங்கைரண்டு - விரைந்துமுளை யெடுத்ததனை யாட்டிவிட்டு-விரவிநீ பொன்னிறம்போல் வெதுப்பிவாங்கி- விரைந்துடனே விளக்கெண்ணை கழஞ்சிரண்டு-விட்டப்பா பனைவெல்லங் கட்டியொன்று-விலைகை ந்தொக்கத் துடுப்பினால் பிரளக்கிண்டி-வேர்க்கவே மூன்றுநா ளுண்ணச்சொல்லே ... ... ... ... (௨௫௮)

## தாகம்போக்க.

சொல்லுகிறே னுடம்புழத்தித் தாகமானால் - சூடுவாய் கற்றாழை மணியும்நாழி-செல்லவே செண்பகப்பூ லவுங்கப்பட்டை-திராமணநல்லவெல்லம் சேர்த்துவுண்ணி-லல்லலறு மூளைத்தல்போந் தாகந்தீரு-மப்பனே வெகுதாக மடக்கக்கேளு - வெல்லுமே நெரிஞ்சிக்காய் பச்சையோலை-வில்வப்பழச்சதையும் நெற்பொரியும் வாங்கே. ௨௫௯

## கரப்பான்சிலந்தி.

நெற்பொரியுஞ் சீரகமு மேலந்தானும் - நேராக வகைக்கங்கே வராகன் தூக்கி-வற்பெரிய கிழிக்கட்டிப பாண்டத்திட்டு-மாந்துளிருங் கூடயிட்டுச் சலமும்விட்டு-சொற்பெறவே யருந்திவிடில்தாகந்தீரும்-சொல்லுகிறேன் கரப்பனொடு சிலந்திக்கெல்லாம்-நற்பெரிய நன்னாரி சிருகுறுஞ்சா-நலமூல நிலவேம்பு நாட்டக்கேளே.............. ௨௬௰

நாட்டவே யந்தரத்தா மரையின்வேரும்-நலமான நெல்லிமுள்ளி யீசுரமூலி-கூட்டுவாய் கொழுஞ்சிவேர் பருத்திவேரும்-கூறுனபேய்ப்பீர்க்கும் கூடநேராம்-வாட்டமணத்தக்காளி வேருங்கூட - வரைந்திடித்து வெள்ளா நீரைவார்த்து,நீட்டியே பிசைந்ததனை வடிதான்கட்டி-நிம்பநெய் நல்லெண்ணை தேங்காய்நெய்யே. ............ (௨௬௧)

நெய்யுடனேபுங்கெண்ணை நாலும்நேராய்-நீகலந்து சாறதனை நெ
கிழவார்த்து,மெய்யாகவடித்திறுத்து குடிக்கச்சொல்லு-மேனுக்குப்பூ
சிடவே விரணந்தீரும், கொய்யவே யந்திக்கு வெந்நீர்விட்டு-குளித்து
வரச் சொல்லவே குணமாம்பாரு,யெய்யாத சடைக்கிரந்தியொழிவத
ற்கு-மியம்புவேன் மருந்துவகை யியப்புவேனே. ............ (௪௬௨)

## சடைக்கிரந்திக்கு.

இயம்பினதோர் குக்கில்நெய்தா னப்பாகேளு - யீரிரண்டுகழஞ்
செடுப்பாய்குக்கில்தானும்,நயம்பெறவே வேப்பிலைச்சார் விட்டரை
த்து-நாட்டடா விருகழஞ்சு நெல்லிக்கெந்தி, வியம்பெறவே கழஞ்சி
ரண்டு குங்கிலியம்வெள்ளை- மீருமலிவைமூன்று முன்சார்க்கொண்டு-
நயம்பெறவே யாட்டிநீ வழித்துக்கொண்டு - வாரடா நெய்நாழி தா
ழிக்குள்ளே. .................................................. (௪௬௩)

## இருமல்புகைக்கு.

தாழிக்குள் மருந்திட்டுக் கலக்கிக்காச்சி-தயவாகவடித்திறுத்துக்க
டுகுகூட்டி, வாழியப்பா காசிடைதா னிரண்டுதூக்கி-மகிழ்ந்துண்ணத்
தினமைஞ்சுமைந்தர்கேளு,சாழித்தசடைக்கரப்பான்தீர்ந்துபோகும்-
தணியாதவிருமலுக்குப் புகையைச்சொல்வோம், பூழித்தபொன்தார
ம்சுத்திசெய்து- பொடியாக்கிக் கொம்பாக்கு மவ்வண்ணந்தானே. ()

அவ்வண்ண மடக்கியே பாவட்டங்க-மப்பனேசாரித்துவுண்டை
செய்து,அவ்வண்ணம் புளியந்தோல்சரகத்திட்டு- அனலிட்டுத்தணலா
க்கியவர்முன் வைத்து,அவ்வண்ணம் புகைவெளியில் போகாமல்தா-ன
டைசுற்றிக் குளிகையொன்று அனலிற்போட்டு, அவ்வண்ணமிருமல்
போம்,பக்கமொன்று-அப்படியே புகைபிடிக்கஅண்டிடாதே(௪௬௫)

அண்டாது யின்னமொன்று தாரத்தோடே-யழகானபொற்கொ
ன்றைப் பட்டைதானு, மூண்டாத வுவாயிலைநீர் விட்டிரட்டி - யுவா
வெள்ளைச்சிலையிலேதடவித்தீத்து, தண்டாதநோயுள்ளோன்மோருஞ்
சோறும்-சாப்பிட்டுப்புகைகொளித்திப் பிடிக்கச்சொல்லு,மிண்டாத
விருமல்போ மின்னமொன்று-வெள்ளியச்சிலையிலேபிரண்டைசாறே.

பிரண்டைசார் விட்டுநன்றாய்ப் பிரட்டிக்கொண்டு - மின்புகேள்
தேற்றங்காய் குழையவாட்டி, பிரண்டைச்சார் துவட்டியே துணியில்
தோய்த்து - பேதமன்றி யுலர்த்தியே மறுநாள்கேளு, பிரண்டையினி
ல் மேனிச்சார் பிளத்தோய்த்து-பொன்னரிதாரமதைப் பலக்கத்தேய்
த்து, பிரண்டிடா துலர்த்தியே திரியாய்க்கட்டு - பிடித்துநீமோருஞ்
சோ றுண்ணச்சொல்லே. .................................................. (௪௬௬)

உண்டபின்பு நல்லெண்ணெய்க்குள்ளேமைந்தா-வுறவெடுத்து திரித
ணைத்து வூதிப்போட்டு,உண்டிடவே திரிகொளுத்தி யவித்துநீயு- மூதி
வரும் புகையெல்லா முண்டாயானா,லுண்டுவிடு மிருமலெல்லாம்பய
ந்தோடிப்போ- மொருமூன்று புகையும்வெகு வுசிதமாகு,முண்டிட
வேநோயெல்லாம் பற்பமாகு- முரைக்கிறேன்மாத்திரைதா னுரைக்
கிறேனே............................................(சசஅ)

காலாந்தவயிரவம்.

உரைக்கிறேன் மாத்திரைபே ரப்பாகேளு-யுயிர்க்கருள் காலாந்
த வயிரவன்தானப்பா, உரைக்கிறேன் வெண்காரம் சூதம்நாவி- யுற்ற
லிங்கம் தேர்வாளம் திரிகடுகுதானு, முரைக்கிறே னிவையெல்லாம் ச
மனாய்த்தூக்கி-யுற்றபழச்சா றிஞ்சிச்சாறுகூட்டி, உரைக்கிறே னிச்சாறி
ரண்டுஞ்சேர்த்து - வொருசாம மாட்டியே யுண்டைசெய்யே.(சசகூ)

உண்டைகுன்றியிடைகட்டி நிழலுலர்த்தி- யூட்டுவாய்சீதசுரமொ
ழியவென்றால், சண்டை யறும் வேர்க்கொம்பு கியாழமாதல்-தாக்குவா
யிஞ்சியுட சாற்றிலாதல், பண்டையுறுந் தாபசுரமொழியவென்றால்-ப
ழச்சாறு மிஞ்சிச்சார் பதமாய்சேர்த்து,தொண்டையுறக் குளிகையிட
டு வருந்தநல்கு- அடிசீத சுரத்துக்கு முலைப்பால்கூட்டே. ... (சஎய)

கூட்டையிலே பத்தியங்கள் காலத்தாலே- குழையவே பால்கஞ்
சி யந்திநேரம், வாட்டமன்றிச் சேர்த்துடனே முருங்கைச்சாறு-மை
ந்தனே மாலைக்குக் கியாழங்கேளு, மூட்டையிலே செந்தொட்டிபே
ராமூட்டி - முள்ளிவேர் பற்படகம் சீந்தித்தண்டு, மூட்டவே முத்தங்
கா யிவைகள்நேராய் - மொழிந்தசம பாகமதாய் நிறுத்திடித்து,ஊட
டவேயெட்டொன்றாய்க் கியாழங்காச்சி - யுன்னச்சொல்சன்னிக்கிங்
குரைக்கிறேனே. ............................................ (சனக)

சன்னிக்குநசியம்

உரைக்கிறேன்சன்னிக்கு நசியஞ்சொல்வோ-மூற்பனமாய் தேற்
றின்காய்பிஞ்சும் நன்று, எரைக்கக்கேள்வெண்சிலைதன்னிலூட்டடி - ய
டைவாகச்சன்னிவந் தசதியானால்,விரையவந்தசிலையிலேகொஞ்சங்கிறி
மென்முலைப்பால் தனைவிட்டுக் கசக்கிமூக்கில்,புரையேறு தேபிழியில்
வாந்தியாகும் - பொருமலொடு நெஞ்சவலம் போகுங்காணே (சஎஉ)

எண்ணெ.

காணப்பாமூக்காலும் விஷநீர்வீழும்-காணாமல் விழுந்தோடுஞ்
சன்னியெல்லாம், பூணப்பாவெண்ணெயிது யியம்பக்கேளு- புகலவே
வேப்பந்தோல் சாறுழக்கு, தோணப்பா பிரமிச்சார் துளசிச்சாறு-சு

சமான திராய்ச்சாறும் ஊச்சிக்குழக்கு - ஆணப்பா யிவைவேரும் பல மூங்காலா - மதனேடு மூசுறுமுட்டை பலமூங்காலே ..,......... சஎக

காலப்பா வெளிச்சிமரப் பிசினுங்கால்தான்-கலந்துமிக விளாந் தாட்டி வழித்துநீயும்-காலப்பா வேப்பெண்ணை படியும்விட்டு- காச்சி யே காசிடைதா னுண்ணச்சொல்லு-காலப்பா கிழிந்துவிடும் நவத்து வாரம்-கதுப்பெல்லாம் தேய்ந்திடவே களங்கந்தீரும்-காலப்பா சூரம் வந்த வுடனேதீர்க்கக்-காட்டுகிறே னுற்பனத்தின் பேனாக்கேளே. ()

## பிரளயகாலாந்த வயிரவம்.

பேருளாக்க மைந்தனே கேளுகேளு - பிரளயகாலாந்தக வயிர வந்தான்-பார்புகழுமரிதாரக் கட்டியொன்று- பண்பாகப் பூசினிக்காய் தண்ணீர்க்குள்ளே-பேர்நோக்கித் தோளாந்திர மெரித்துவாங்கி - பிர ட்டுவாய் சுண்ணநீர்கொண்டுபின்பு - ஆரவே தோளாந்திர மெரித்துக் கொண்டு - அந்திடைக்குச் சுத்திசெய்த நாவிதூக்கே......... சஎ௫

தூக்கியேயிரண்டைச்சாறதனிலாட்டுச்- சுருளவதைக்குகையிலிட் டுச்செம்மண்செய்து - தாக்குவாயுலையிலிட்டுப்பழுக்கவூதி - தணலாறி யெடுத்துநீ வைத்துக்கொண்டு - தேய்க்கவேசுக்கதனைத் தூளாயாட்டி- சிறப்பாகத்திப்பிலியுந் தூளாயாட்டி - பார்க்கவேசுரம்வந்தாற்பொடி யிரண்டில்-பணவிடையும்நாலுநீபண்பாய்தூக்கே............... சஎசு

பண்பாகமுன்பொடியும்ரண்டுங்கூட்டி-பண்பாகமத்திச்சுப்பண ந்தான்கால்நீ- யுண்பதற்குவெற்றிலையிற்கொடுக்கும்போது- உடன்வி டும்விட்டாதாகிலுனாக்கக்கேளு - கண்பார்த்துஅரைப்பணந்தான் வெற் றிலையிலூட்டு - காட்டுமுன்னேசுரந்தீருங்காட்டவேண்டாம் - தண்பர கச்சுரங்களுக்குப்பண்டிதலாடசிங்கி - நாட்டமாயெண்பதைநீர் நாட் டக்கேளே...,................................................. சஎஎ

## பண்டிதலாடசிங்கி.

நாட்டமுறுங்கடுக்காய்தான் பத்துவாங்கி - நால்வராகன் சேரப் பா லிங்கமொன்று- காட்டவேசாத்திரபேதியொன்று - கருநாவிபொ ன்றுதான்சேரகூட்டி - யாடடியே தூளாக்கிவைத்துக்கொண்டு-அப் பனேபணவிடைதா னெடுத்துக்கொண்டு - நீட்டுவாயனுபானமிளநீர் தன்னில்-நினைவாகத்தயிர்வெல்லங்கியாழத்தூட்டே.............. (சஎஅ)

## சுரக்குளிகை.

கியாழமதுபேய்வாழைப்பழமுமாகும்-சனசுரங்கள்கலந்துபோ ம்பத்தியங்கள்கேளு - கியாழமேமோருஞ்சோறுண்ணச்சொல்லு- கா ட்டாதேயாருக்குமிந்த நூலைக்- கியாழமாஞ்சுரங்களுக்குக்குளிகைசொ

ல்வோம்-கனரூதம்வெண்காரமிளகுதானும்- கியாழமாந்திப்பிலிமூமத்
தம்விருதும் - களங்கமன்றிச்சரிதூக்கிக்கல்வத்தாட்டே........ ௪௭௯

ஊட்டியே மத்தஞ்சார் விட்டுநீயு-முறவாக வேழணாப்புச் சாம
மொக்கு- ஆட்டியேகுன்றியிடைகுளிகைகட்டி - யாறினமின்னெருக்
கம்வேரிலையாழத்தாட்டு - மூட்டியேசெவ்வியத்தாள் வாராகனென்று-
மொண்டிட்டுகுளிகையொன்றுமுழங்கநல்கில்-நீட்டவேவாதசுரஞ்சன்
னிமூர்ச்சை-நில்லாதகுளிர்ந்தசுரமனைத்தும்போமே ........ ௪௮௰

## அர்த்தநாரீச்சுரம்.

போமப்பாகுளிகையொன்றுதயிலத்தாட்டி- பொடியாகுஞ்சுரங்
களெல்லாம் பத்தியஞ்சொல்வேன் - ஆமப்பாதயிருஞ்சோ றுன்னச்
சொல்லு- அர்த்தநாரீசரத்தைபறையக்கேளு - வேமப்பாநாவிகெந்தி
வெண்காரஞ்சூதம்- மீறுமல்சரிஅக்கிநொச்சிச்சாற்றால்-சாயப்பாசா
மமொன்றுஆட்டிவாங்கி-தயவாகக்குகையிலிட்டுச்சீலைசெய்யே ௪௮௧

சீலையதில்மண்செய்து சட்டிலிட்டு - சிறப்பாகக்கீழேயு முப்புப்
போட்டு- சாலவேமேலுமந்தவுப்பையிட்டு- சுட்டிகொண்டுகவிழ்த்தி
யதைத்தாக்கழடி-மாலைபடுப்பேத்தியேகமலவன்னி-ஆட்டுவாய்மூன்
றுபத்துக்கடிகையப்பா - காலையிலேசெங்கழுநீர்க்கிழங்குச்சாற்றால்-
கடுகவளமறுநாளில்நொச்சிச்சாறே........................ ௪௮௨

நொச்சிச்சாரிவிட்டாட்டிமூன்றுநாளில்- நெகிழவளாபாகல்சார்
விட்டுமைத்தா-அச்சமறவுலர்த்தியேதூளாயாட்டி-யப்பனேகுழலிலே
யடைத்துக்கொண்டு - உச்சிதமாய்முன்சொன்னசாறுவாங்கி- யொவ்
வொருபணவிடைதானுண்ணச்சொல்லு- நச்சியிடுஞ்சுரந்தீரும்வயண
ங்கேளு- ரண்டுபுறமொருபுறத்தில்நாட்டக்கேளே............ ௪௮௩

நாட்டப்பா மருந்திட்ட சாற்றைவாங்கி - நாசியொன்றில்நசியம்
விட்சுரத்தைக்கேளு - மீட்டப்பாவொருபுறத்தி லடிக்குங்கண்டாய்-
மிளைவர்நாசியிலேநசியமூற்று- காட்டுமுன்னேயிருபுறமுந்தணிந்து
போகும் - கருச்சிவிப்பில்வேதியாகக்கண்மம்போகக் - கூட்டுமுன்னே
பெண்ணைச்சுப்பாகத்தானுங் கூறக்கேள்புலத்தியனேகொள்கைநீயே

## பெருவாயனெண்ணெ.

கொள்ளடாவிளக்கெண்ணெபடியும்நாழி-கூரமுறும்பெருவாயன்
பாலுழக்கு-கொள்கியதோரீருள்ளிச்சாறுதானும்- கூட்டடாஅரைப்ப
டியுங்குறையாதப்பா-கொள்ளுவாய்சாணக்கிப்பிலையுமிக்க-கொட்டான்
கற்றாழையில சின்னிபத்திரி - கொள்கியதோர் காற்றுட்டி நாயிபத்திரி-
கொத்தோடேகற்பூரவள்ளிகரணே.............................. ௪௮௪

வள்ளியொடு துளசிவிஷ்ணு கிராந்திதானும் - வளரந்த சங்கங்குப்பி பருத்திபத்திரி- கொள்ளியெனு மருந்திலையும் கொத்தான்சங்கு-கோழியா வரையிலையும் பிரமிமேனி- விள்ளியெனும் பெருவாத மடக்கித்தையா - வேலையிலைச் சாறுவகைக்குழக்குத்தானும், தெள்ளவேலிற்றுவரைக் கிழங்குதானும்-சிறுகுறட்டை யப்பையுடகிழங்குதானே()

கிழங்குடனே நன்னாரி தேற்றான்வேரும் - கிருபையுறஞ் சிறுகிளாப் பெருங்கிளாவேர், களங்கமல்ல பத்திரிவேர் முன்னைவேரும்-கழஞ்சியிவைவகைக்கங்கே யிரண்டுதூக்கி, விளங்கவே கார்கோலின்னரத்தைமஞ்சள் - விளாலரிசி யிலவுங்கம் பூசவிருடசம், புளங்காதனுயில்பெரு மரத்தின்பட்டை-பொலிவாகக் கழஞ்சியங்கே வகைக்குத்தூக்கே()

கழஞ்சாகக் கூட்டிநீ யாட்டில்வாங்கி - கலக்கடாமூன்மருந்தின் சாற்றிலாட்டு, விழஞ்சிடவேயடுப்பேற்றி மூன்றுநாள்தான் - வெதுப்பியேகொதிப்பித்து நலாநாவில், சளந்தீரவிநாயகற்குப்பூசைசெய்து-தாய்பதத்தை மறவாதே வடித்துமைந்தா - வுளங்குளிரக் காசிடைதானிரண்டுதூக்கி - யுண்டுவர மேனுக்குப் பூசச்சொல்லே.........௪௪௮

## வங்கபற்பம்.

பூசிடவே விஷபாகம் பாண்டுதீரும் - பொருமலறுஞ் சோகையறும் வீக்கந்தூக்கம் - மாசியறும் வங்கபற்ப மதனைக்கேளு - மைந்தனே பதினெட்டுக் குட்டந்தீரும்-வாசியறும் வங்கத்தை யுருக்கிச்சாய்த்து-மலரவே யிரகுபோல் தட்டிவெட்டி-பாசியுறும் நொச்சிலை துலாந்தான்வாங்கி-பண்பாக யுலர்த்தியே தூளாயாட்டே............௪௮௯

ஆட்டிநீபரப்பியே சீலைக்குள்ளே-யதின்மேலே வெள்வங்கத் தகட்டைவைத்து-நீட்டியே யிலைத்தூளை மேனுந்தூவி-நேர்ப்பாகப் பாய்போலே சுருட்டிக்கொண்டு - மூட்டியே யிருபுறமுந் தீயவைத்து-முடங்காமல் தினமொன்று யெரித்துநீயும் - நாட்டியதோர் தகடெல்லா மெடுத்துக்கேளு-நன்றாக வேகாத தகட்டைதள்ளே........௪௯௰

தள்ளிவிட்டுவெந்ததெல்லாந் தூளாயாட்டித்-தயவாகச் சிமிழ்தனிலே யடைத்துவைத்து-தெள்ளியதோ ரனுபானங் கார்கோலவித்து-திறமானஆடுதின்னாப் பாலைவித்துந்-துள்ளியேயிவைசமனாய்த்தூளாயாட்டி-சூரணஞ்செய் வெல்லத்தில் சூட்டிமைந்தா, அள்ளியிடுவெருகடிதான் வெண்ணைநெய்யி - லாகாத குட்டம்பதி னெட்டும்போமே.

போவதற்குவங்கபற்பம் பணந்தான் தூக்கி-புகட்டடா வெண்ணையிலே வெட்டைக்கெல்லாம்-ஏவதற்குக்ஷயரோகம் சுவாசகாச-மெய்ப்பிளைப்பு யிளைக்குத் தேனிலூட்டு-போவதற்கு யெலிப்புழுக்கைமுட்

டைத்தோடு-பொங்கோழிகாட்டமிலை சுட்டசாம்பல்-போவதற்குக்
காசிடைதா ஞலுதூக்குப்-போந்திடவேபணவிடைநல்பற்பந்தானே.

பற்பமொடுவெள்ளரிக்காய் கடுக்காய்வெந்ததண்ணீர்-பாங்கான
வெள்ளாட்டுப் பாலிலாதல், பற்பமிடுமிளநீரா லிவற்றிலாட்டப் - பட
ரான கல்லடைப்புச்சலதயடைப்பு, பற்பமிடவொழிந்துபோங் கிரிச்
சினங்களெல்லாம்-பாய்ந்தொழுகுஞ் சலக்கழிச்சல் யாகமாக-பற்பமி
டு காந்தசெந் தூரங்கூட்டி-பருந்தேனி லுண்டிடவே பரிகாரமாமே.

பரிகாரம் வெள்ளரிக்காய் வெந்ததண்ணீர்-பழக்காயின் விரையு
டனே மாட்டிநீயும்-பரிகாரம் பற்பமிடு கிரிச்சினங்களாறும்-பற்றற
ற்கும் சலத்தேறப் பகரக்கேளு-பரிகார முட்டைத்தோ டெலிப்புழு
க்கை-பகர்காரம் வெள்ளையெச்சம் பதமாய்ச்சேரு- பரிகாரம் வெண
காரம் பொரித்துக்கொண்டு-பாச்சடா காசிடைநீ யாட்டுப்பாலே. ()

பாலிலே பொடியிட்டுப் பற்பமிட்டு- பருகவே மேகமென்ற த
னத்தும்போகும்-காலிலேகையிலே சூலையானல்-காட்டுவேன்சூலக்
குக் குடோரிதன்னை-சூலிலே யுறைசூதத் தாரங்காரம்-சுகெந்தி திரி
கடுகு திரிபலையும்வாளம்-சாலிலே வளர்கரிப்பான் சாற்றில்நீயும்-சாம
பிரண் டாட்டியே தயவாய் வாங்கே... ... ......சகூ

வாங்கியே குன்றியிடை குளிகைகட்டி - மாட்டுவாய் மிளகுதனி
யிஞ்சிச்சாற்றில்-தாங்கியே வெவ்வேறே குளிகையூட்ட- சாற்றுவேன்
சூலையெட்டுஞ் சாடிப்போகும்-நீங்கியே குன்மம்போ மகுலைவுபோ
கும்-நேரான தாய்ச்சூலை நிவிர்த்தியாகும்-பாங்கியே யிக்குளிகை சூ
லைக்கெல்லாம்-பாடுகிறேன் ரகுராம பாணங்காணே........... சகூ

ரகுராமபாணம்.

காணப்பா குன்மமதி சாரமான-கிருணிமுதல் பலவகைக்குங்கள
ங்கம்போகத்-தோணப்பா துத்தச்செந் தூரந்தானுஞ்-சூட்டுவேன்துத்
தமொடு காந்தந்தாரம்- ஊணப்பாவெண்கார நிமிலைதானு - மொவ்
வொன்றுக்கொவ்வொன்று கழஞ்சிகூட்டி-பூணப்பாகெந்திரண்டு பல
மறையுமஞ்சு-பொருந்தவே பழச்சாற்று லாட்டிவாங்கே...... சகூஎ

வாங்கிநீ குகைசேர்த்து புடத்தைப்போடு-மைந்தனே செந்தூ
ர மாகிநிற்கும்-வாங்கியே காசளவு சீனிக்குள்ளே - மாட்டடா செந்தூ
ரம் பணத்தான்தூக்கி-வாங்கியே வயிற்றுவலி கிராணிபோகும் - வளர்
குட்டஞ் சலக்கழிச்சல் பாண்டுபோகும்-வாங்கியேசாதிக்காய் பொடி
யிலூட்டி - மந்தமாய் கழிகின்ற மயக்கம்போமே.............. சகூஅ

## இரசகற்பூரம்.

மயக்கமறுஞ் செந்தொட்டி வேரைவாங்கி - மைந்தனே தோலு
ரித்துத் தூளாயாட்டி-மயக்கமறுஞ் செந்தூரந் தன்னிலிய - வந்தமற்
றுக் கிராணியெல்லாம் வாங்கும்பாரு-மயக்கமறு மிரசகற்பூரஞ் சொ
ல்வோம் - வந்ததொரு வியாதிபோம் வரிசைகேளு,மயக்கமறவுப்புக்
குச் செங்கல்தூளும் - வரிசைபெற வுழக்கெடுத்து வைத்திடாயே. (

வைத்ததோ ரிருவளாயுந் தூளாயாட்டி - மைந்தனே சட்டிக்குள்
பாத்திநீயும்,வைத்திவோயதில்குகையைச் சூதமப்பா - வாரடாகழஞ்
சிபத்து மாற்றமன்றி, வைத்தங்கே குகைவாயில் பொடியுமிட்டு-மறுச
ட்டிக் கெண்டிட்டு வாயைமூடி, வைத்துநீ யெழுசீலை மண்ணுஞ்செ
ய்து -மாயிபதம் பூசித்து அடுப்பிலேற்றே. ...................... (௫௱

அடுப்பேற்றிக் கமலவன்னி தினந்தானொன்று- அதின்பிறகுகாடா
க்கினி யுந்தான்மூன்று, கடுப்பமூட ஞானுநாள்சென்றபின்பு - கன்றிலு
டசாணியிந்தக் காட்டுமண்ணு, நடுப்போலேகட்டிநீ தண்ணீரூற்றி-நா
ண்மூகச் சுவரியழின் சீலைகொண்டு,வடுப்பாகா தேவாங்கு பின்னுங்கே
ளு-மறுபடியு நீர்விட்டு யெரித்திடாயே..........................(௫௱௧)

எரித்தாறியெடுத்துப்பார்சட்டிமேலே- யேறிநிற்குங் கற்பூரமெ
டுத்துவைத்து, அரித்திடுமே நாய்சூலை மண்டைசூலை - யப்பனேநாசி
ப்புண்தொண்டைப்புண்ணும், பரித்திடுமே நாசிநீர் கண்ணில்நீரும்-
பாங்கானதேனிலே கொள்ளத்தீரு,மெரித்திடவேயிடையேது பணத்
திற்பாதி-யூட்டடாசூலைமுதல் புண்ணும்போமே............. (௫௱௨)

புண்போகுங் குன்மத்துக் கனுபானங்கேள் - பொடிசெய்துதி
ரிகடுகு பணந்தான்மூன்று, பண்பாகக் கற்பூர மரைப்பணந்தான்தே
னில்-பாச்சவே குன்மமெல்லாம் பறந்துபோகும், கண்பாத சூலைக்கு
வெள்ளைவாய்ப் பிசினுங்-கடுசுக்குக் கியாழம்வெள் ளுள்ளியாதல்,உண்
டதற்குக் கொடுத்திடவே நிவிர்த்தியாகு - மோடுகிற கிருணிக்கு வுண்
மைகேளே. ......................................................... -(௫௱௩)

## இரசபற்பம்.

உண்மைபெறச் சாதிக்காய்த் தூளிலிட்டு-வொடுங்காத கடினமா
ம் வாய்வுக்கெல்லாம்,வண்மையுடன் சீரகக் கியாழத்தூட்டு- வருத்தம
று மிரதபற்பம் வகைக்குக்கேளு,வண்மையுறுஞ் சூதமொன்றுகெந்தி
யொன்று - மாறாமல் தூளாக்கிவாங்கிக்கொண்டு,கண்மையுறயேரண்ட
ந் தயிலத்துள்ளி-காட்டியேமத்தித்துக்கலந்துவைவே. ......... (௫௱௪)

கலந்ததொரு சூதத்தைத் தேன்பிரட்டி-கட்டாகவுருட்டிநீ கருத்

தாய்மைந்தா.குலைந்துசெங்கல்துகைபிடித்துக் குடைந்துமங்கே-கூறு
ன வெருக்குப்பொன் னுவலையிலுப்பு, பிலக்கவே மிளகுவிலைநேரா.
பாட்டி ÷ ப்பணியேயென்மகனேயெடுத்துக்கொண்டு,பெலக்கவேசெ
ங்கல்லுக்குள்ளேபூசி-புகட்டடாகளங்கமென்றனுதங்கேளே.... (௩௱௫)

கேளடா களங்கம்லவைத்து மருந்தால்வாயைக்-கெட்டியாயடைத்
தும்று செங்கல்லாலே,சூளடா வடைத்துதன்றாய் சீலைசெய்து-சூட்ட
டாவெழுசீலை மண்ணுமேலே,ஆளடா குழியொன்று முழத்தில்தோண்
டி-அதுதிரம்ப விரகெருவும் போட்டெரித்து, நீளடாகுழிதிரம்ப மண
லைக்கொட்டி-நினைவாக வெருவடிக்கிப்புடத்தைப்போடே.....(௩௱௬)

## கிராணிக்கனுபானம்.

புடம்போடு பதின்மூன்று விலைசநீமைந்தா-புகழான சூதமங்கே
பற்பமாச்சு, கடம்போடு நோய்க்கெல்லாம்பணவிடைநால்சாற்று-கா
சிலைடசீ ரசமதில்நீ தேனுங்குத்து,உடம்போகவேருண்ண நெஞ்சுவலி
கிறுணி - யொழியாத கிராணிக்கிங் கனுபாகந்தான், திடம்போய சாதி
க்காய் கிராம்புபத்திரிதேனும் - சேர்த்திடுவாய் வாய்வுக்குச்சீரகத்தை
துக்கூட்டே. ........................................................ (௩௱௭)

## ஈட்டுவகைதீர.

கூட்டியிடுமீட்டுவகை தீரவென்றால்-கூறுகிறேனெருக்கம்பால்து
ளியிரண்டு, மூட்டடாவிரதபற்பம் பணந்தானப்பா-வுற்றபழச்சாறுகு
டுந்துளசிநீராம், நாட்டுமா தளிப்பழநீர் தண்ணீராகும் - நல்லகண்டங்
குகத்திரிச்சார் பழச்சார்நேராய், ஊட்டுவாய் க்ஷயமுதலாய்நெஞ்சிறுக
கட்டு-முய்த்தநீர்ப்பாச்சலிவை யணைத்தும்போமே. .......... (௩௱௮)

போமப்பா குறுவைநெல் மாக்கழஞ்சிரண்டு - பொதிந்தூட்டு
கெர்ப்பநீ ரடைப்புத்திரும், தேனப்பா வுழக்குவிடு பட்டைக்குள்
ளே-சேர்த்துவிடு துர்மாங்கி சடைப்புத்தீரும், நாமப்பா யிப்படியே
நிசமாய்ச்சொன்னேன் - நாலாயிரத்துநானூற்றி னும்பத்தெட்டே, ஆ
மப்பாவியாதிக்குமார்பிலாணி-யறிந்தவனே யோகிபண்டிதனுமாமே.

## பண்டிதர்நிறை.

பண்டிதனும் பரிகாரி வயித்தியனென்னும் - பகருகின்றமொழி
யெல்லாம் பரனுக்காகும்,கண்டிதமாய் முகம்பார்த்துநோயைப்பார்
த்து-கதித்தெழுந்தநாடியுடகலக்கம்பார்த்து,மூண்டிதமாய்மூன்றுக்கு
ள் நவதாதுபார்த்து- முனைகண்டு மருந்திலுட மூடக்கும்பார்த்து, அ
ண்டிலேயின் பொருளாலைசமிகுந்திடாம-லறிந்துசெய்வோனெழுபிற
ப்பு மயனும்பாரே. ........................................................ (௩௱௯)

அயனாகி யொருகற்பஞ் சிருட்டித்தப்பா - லாதிதிரு வைகுந்தந் தன்னில்வைகி, மயனாகியிரட்சிக்கத் திறமையுண்டாய் - மாய்கையென்ற திரோதையை மனத்தால்கண்டு, பயனாகி பெரியோர்கள் மன்னுமாகிப் - பஞ்சசிருட்டி முடிந்தாலுந் தனக்கொன்றன்றிச், சயனாகி யெப்பதமுங் கொடுப்பதாகி - சோதியொப்பாம்பண்டிதத்தைத் துறைகண்டாரே. ......................................................... (௫௱௰௧)

துறைகண்டோ ரதீதமுத்தர் பிறவிநீத்தோர் - தோற்றுவனுந் தோற்றாது மிரண்டுமற்றோர், நிறைகண்டோர் பண்டிதமொன் றவர்க்குநாமம் - நீறுகுமவருடைய மனதுநொந்தால் - பொறைகண்டோ ரவர்பெருமை யுரைக்கவேண்டாம் - பூவுலகிலறியார்கள் புகழ்வார்நல்லோர் - அறைகண்டோரஞ்சறையிலமூர்தங்கொண்டோ - ரம்மம்மா நமனைவிடவல்லோராமே ......................................................... (௫௱௰௨)

வல்லோர்களாகமத்தின்பொருளையெல்லாம் - வகைவகையேவகுத்தறிந்துமனமொன்றாகி - புல்லோர்கள்சங்காதங்கடிந்துதள்ளி - பொறையுடையதபோதனைப் போற்றிநிற்போர் - நல்லோரேயவர்கண்டாய்செகத்துக்கெல்லாம் - நமனில்லைநமனில்லை நாட்டிலென்றுஞ் - சொல்லார்களுண்மைதனை யார்க்கானாலுஞ் - சொல்லுவாரறிவில்லாத் துஷ்டர்காணே ......................................................... ௫௱௰௩

காணப்பாபண்டிதத்தின் தொகையேதென்றால் - கட்டுரைத்தேனென்பாடலிரண்டுலட்சம் - பூணப்பாதன்மந்திரிபகவான்தானும் - புகட்டினூராதியிலே போக்கோமெத்த - வீணப்பாவுலகத்தில் பண்டிதனென்பார் - விதியறியார்மதியறியார்வல்லோர்நோயை - பூணப்பாமூலமென்றதத்துவத்தைக்கண்டா - லுடன்சித்தியாகுமடாவுணிப்பாரே.

பாரப்பாநிமலசித்தாதீதர்முத்தர் - பழமறைகளனைத்துமொருபார்வைகண்டோர் - ஆரப்பாபஞ்சகர்த்தாளிவர்க்கொப்பல்ல - அறிக்கையென்றமுத்திரையையறிந்தாராகில் - வேரப்பாஅடிநடுவு முடிவுமொன்றாய் - வெல்லரிதுஅவருடையபொருளைநீயும் - தூரப்பர்வடியாகும் பூவொன்றாகும் - சொன்னதெல்லாமவர்க்கிமைச்சூட்டிக்காணே.

காணவேவயித்தியந்தானிறையைக்கேளு - கற்றறிந்துபலநூலுங் கருவுங்கண்டு - பூணவேதத்துவஞ்சொல்நூலுங்கண்டு - போக்கோடேதாதுலட்சணமுங்கண்டு - தோணவேசரக்கினுடஆதிகண்டு - சுத்திகண்டு அளைப்பினுடசூதங்கண்டு - ஊணவேபுடபாகமெரிப்பின்பாக - முத்தமனேசெந்தூரமுயரும்பாகம் - நாணவேயிடைபாகம்நோயின்பாகம் நலமானகுணபாகம்நாட்டந்தானே ......................................................... ௫௱௰௬

தானென்றசரீரமிலன்சஞ்சாரங்கள் - சாப்பிடும்அன்னத்தின்தாக்
கும்பார்த்து- நானென்றசொல்லற்றுக்கருவைப்பார்த்து- நலமானவா
த்துமசொரூபங்கண்டு- மானென்றமாயையிலேமனம்நாடாமல் - வாழ்
ந்திருப்பார்பெரியோர்கள்வயித்தியங்காண் - தானென்றஅகமபதைவி
ட்டுத்தள்ளி-தன்னிலையேநன்னிலையாய்சார்ந்துபாரே........ ௫௱௰௭

அரிதாரபற்பம்.

பாரப்பாவரிதாரபற்பந்தன்னைப்- பாடுகிறேன்பொன்தாரம்பல
ந்தானும் - நேரப்பாநற்காரந்தைபஞ்சாங்கபற்பம் - நீற்றியேயவாைப்
படியும்நினைவாய்வாங்கி- சேரப்பாசட்டிக்குள்சாம்பலிட்டு சிறக்கவே
வரிதாரம்பாதிமேலும்- வாரப்பாசாம்பலிட்டுச்சட்டி மூடி- வனிம்பெ
ல்லாஞ்சீலைசெய்துமண்ணுஞ்செய்யே........................ ௫௱௰௮

செய்துதா னடுப்பேற்றி யஞ்சுநாள்மட்டும்- தீயாருதே யெரி
த்து வாங்கிப்பற்பம்- சாலவேபணவிடை நற்றேனிலூட்டு - சலபுண்
ணுஞ் சூலையொடு வாதவாய்வும் - வாலைப்பெண்போலவருஞ் சயமும்
போக - மாட்டுதற்கு திரிகடுகு தேனுந்தானும் - காலனும்நோய்களெ
ல்லா மரிதாரபற்பங் - கைமுறையாய்ப்புலத்தியனே கண்டிடாயே.

கண்டிட்ட ரிஷியினொடு மூனிவர்தேவர்- கணநாதர் சித்தர்களும்
யோகிஞானி-உண்டிட்டார்பலநூலும்பலமுகமாய்ப்பாடி-பூரிலேயலை
தீராததெய்வீக மருந்தையீந்து- திருகட்டுமனப்பாவியென்றால் சென்மத்தோடு,தீராதும்பாவது பெரியோர்செய்கை-செனனமென்ற பெருங்கடல்தான்தெளிந்தபேர்க்கு, தீராதுசெபயோகியானாற்கேளு-தெப்பம்விட்டுக்கரைகடப்பா னுறுகடல்தன்னை, தீராதுழவினையுந் துடர்ச்சியாகித் - திரிகைபோற் சக்கரம்போல் திரிவார்காணே (௬௮௬)

திரிந்திட்டேனண்டாண்ட பதங்கள்தோறும்-செப்பினமேதார்சாஸ்திரங்கள் கோடாகோடி, திரிந்திட்டரிஷிகள்முதல்சித்தர்தேவர்-திருட்டித்தநூல்களெல்லாந்திடமாய்பார்த்து , திரிந்திட்டசாஸ்திரமும் சூத்திரமும்நிகண்டும்-துறந்திமுதல்பலதொகையுந்தெரிந்துபார்த்தேன், திரிந்திட்ட பண்டிதங்க ளிதற்கொவ்வாது-சீவனுக்குச்சஞ்சீவி யிந்நூல்பாரே ........................................................ (௬௮௭)

பிளவைக்கு.

பாரப்பா புடைத்தெழுந்தபிளவையோடு-பல்வீக்கஞ்சிலந்திக்குப் படுவனுக்கு, சீரப்பா சிறுகொட்டைப் பருப்புவாங்கி-சிறந்தமுலைப்பால் நூறுதிரமாயாட்டி, வாரப்பாவேரண்ட மவிச்சூற்றுந்தயிலம்-வளமாகமுலைப்பாலுங்கூடச்சேர்த்து,போரப்பாசாரித்துசினமுகம்விட்டு-போடடா சுற்றொருக்கப் போடுபோடே. ..................... ௬௮௮

போடப்பாவந்திசந்திகாலந்தோறும்-போற்றிடவேவற்றிப்போ

ம்நீர்கொண்டுதானால்,போடப்பாவனுதினமும்போடப்போட-புகை
களில்லை விக்கத்தை மேலேயேற்றும்,போடப்பா புழுத்துடையும்விர
ணமாறும்-புண்வாயில் சீலைதனையூட்டிட்போடு,போடப்பா காரங்கள்
வைத்துப்பின்பு - புரைபுண்க ளாறியே விழலாய்ப்போச்சே... ௬௱௮௯

அஞ்செண்ணைத்தயிலம்.

விழலாச்சு சன்னிக்கஞ் செண்ணைத் தயிலம்-விளம்புகிறேன்புங்க
யெண்ணைவேப்பயெண்ணை,அழலாகு மெள்ளெண்ணை யிலுப்பையெ
ண்ணை-யாமணக்கினெண்ணையிவையஞ்சுமப்பா,தழலாகவொன்றாக்கிம
ருந்தைச்சேர்க்க-சாத்தக்கேள்ரசங்கெந்திதாளகமும்சிலையு,முழலாகலி
ங்கமொருவகைக்குமிருகழஞ்சி-யொக்கவேபழங்காடியூட்டியாட்டே.

ஆட்டியே பழஞ்சீலைதன்னிலூட்டி-யதிற்கிசைந்தகுறுங்கோல்தி
ரிபந்தமாக்கி,நீட்டியேயெண்ணைகுத்தித் தீக்கொளுத்தி-நினைவோடே
யெண்ணைகளை வார்க்கும்போது,வீட்டிமையில்லாமையந்தமருந்துட
னேதயிலம்-விடவிடவே மூன்றுதிரம்விட்டிறங்கும்,ஈட்டிவைத்த தயில
மது கைகாலிற்காசி - னிடைதேய்க்கச் சன்னிகளுஞ் சீதம்போமே.

சீதமொடு சன்னிபதி மூன்றுவாதம் - திகையாதவுளைச்சலொடுதி
மிரவ்வாங்கும்,பேதமில்லைசன்னியொடுசயித்தியங்கள்தீரும்-பிணியுள்
ளோர்க்கிது நன்று பேணிவைக்கும்,நீதமுள்ளசஞ்சீவிநோய்க்குமார்
பாணி-நீங்காதபிணிதீங்கும்நித்தியசுகங்காணும், வேதமுறைகண்டுசொ
ன்னேன் சிறுசந்தனுதி - விசேஷமடா வைப்பதற்கு மேகவெட்டை
போமே. ......... ......... .............. .................. ௬௱௯௨

மேகவெட்டை நீரிழிவு காகக்கூறு-மிஞ்சுபித்தம் நெஞ்செரிப்பு
வாய்வுநீரேற்றம்,போகமதிற் றுநட்டம் வாதபித்தம்பிரதமை-பிரண்
டெழுந்த தொந்திப்புப் பேர்பெரியகுன்ம,மாகமெல்லாமுதறிவிடுமி
ருமலோடு-அதிசாரங் குடல்வாத மிகுதிவாத,மேகமாய்கருத்தெடுக்கு
முளைச்சலொடுவிக்க-மெடுத்தபலஞ்சூலைகுட்டமின்னம்வகையறியே.

அறிவதுதான் சோகைபித்தம் காமாலைபாண்டு-அரோசியொடுசி
ரோபாரம்அக்கினியின்மந்தங்,குறிகுணங்கள்விகற்பமுள்ளபிணிசங்கள்
சுரங்கள்-கூறரிய நேத்திரநோய் க்ஷயங்கள் பலவொழிய,நெறியுடனே
பாடுகிறேன் சிறுசந்தனுதி-நேர்த்தியாஞ் சூத்திரத்திலறிந்துசெய்ய,வி
றியாத ரோகங்க ளனைத்தும் விழுந்தோடும்-பிலத்திவிரு பத்தொன்று
மேகம்போய்விடுமே. ............ ..... .............. ......... ௬௱௯௪

சிறுசந்தனுதி.

போய்விடுமே கியாழகற்க மருந்துவகைசொல்லப்-புலத்தியனே

மச்சேந்திரா கேளுகேளு, நேயமுடன் சந்தனமோர்பலமுங்கூட்டு-நேரதற்கு வெட்டிவேரு நிறுத்திடிப்பாய், லீயமுடன்சலம்பதக்குவிடு நாலொன்றாய் - வேகவைத்தபின்பு வேரடாகியாழம்,மாயமுள்ள வில்வவேர் வள்ளிக்கிழங்கு-அப்பனே நன்னாரி சீந்திமுத்தக்காசே. ௯௰௫

முந்தக்கா சல்லிகொட்டி நெய்தல்தாமரையின்-மூலம்நிலப்பனைக்கிழங்கு மிலாமிச்சம்வேரும், வித்ததொரு குறுந்தொட்டி வேராலம்விழுது-மேற்பொன்னாங் கண்ணிவே ராவரையின்பட்டை, யித்தொக்கவகைக்குநா லரைப்பதமாக-விடித்ததற்குள் சலமுமறு தூணிவிட்டு, சுத்ததொக்கக் காச்சியது வெட்டொன்றாக்கி-சுகமாகமூல்வைத்தகியாழத்திற்கூட்டே............ ................. ................. ..........௯௰௬

கூட்டியபின் சாறுவகைசொல்லக்கேளு-கூறரிய மூடக்கொத்தான் லீழியொடுதான்றி,நாட்டிநீநொச்சியொடு முருக்கிலை கற்றாழை-நயமாம் பொன்னாங்காணி நீர்வள்ளிக்கிழங்கு,மாட்டிவகைக்காறுபடி யிளநீரவ்வண்ண-மப்பனே தாழியொன்றிலடுப்பேற்றிக்கரச்சு,வீட்டிமையில் லாமலது வெட்டொன்றாய்க்குறுக்கி-வேடுகேட்டி வடிகட்டி விநாயகனைப்பணியே............ ..............................................௯௰௭

பணிந்துவொரு தாழிக்கு மஞ்சள்காப்புகட்டி-பாங்கானகியாழங்கள் சாறுகளும்விட்டு,துணிந்ததிலே நல்லெண்ணை யாறுபடிவிட்டு-சொல்லரியவாவின்பாலவ்வண்ணஞ்சேர்த்து,அணிந்ததிலே கற்கவகையுரைக்கிறேன்பா - ரகிற்கெந்தஞ் செஞ்சந்தனமல்லாற்கேளு, கனிந்ததொரு சாதிக்காய்சாதிபத்திரிகிராம்பு-கச்சோலமேலமிலவுங்கங்காணே

காணப்பா லவுங்கபத்திரிசித்தரத்தை-கடுங்கார மஞ்சிட்டிவங்காளப்பச்சை, பூணப்பா பேரிச்சுமுந்திரிகைபழமும்-புழுக்கைவேர்சடாமாஞ்சிபூலாவின்கிழங்கும்,பேணப்பாசெவ்வள்ளிக்கொடிதேவதாரம்-பேரீத்த சிறுசெண்பகமுந் தாளிசபத்திரி, நாணப்பா கிளியூறல் குறுசாணியோமம்-நன்மதுரஞ் சிறுநாகப் பூவுஞ்சேரே. ........... ௯௰௮

சேரடா சாத்திரவேதி யிருகழஞ்சி-சேரவேதூளாக்கி யிளநீரிலாட்டி,வாரடா யிளநீரில் குழப்பியொன்றாய் - வளமாகத்தாழிக்குள் கலக்கியடுப்பேற்றி, பாரடா கமலவன்னிதீபவன்னியாலும் - பற்றாமல்சிறுகொதியும் நாலுதினம்வைத்து, நீரடா குறுகிவிடு மிளகுபதங்கண்டு-தீனவோடே வடிக்குப்போ தப்பாகேளு ....................௯௰௯

கேளப்பாசாம்பிராணிகோஷ்டம்வகைக்காறு - கெடியான அவின்கழஞ்சி நால்ரையுங்கூட்டி, நீளப்பா குங்குமப்பூ கோரோசினையோடு - நீள்வெள்ளி லோத்திரமும்வகைக்குமுக்கழஞ்சி, தூளப்பாவாட்டி

யதை யோலைப்பூப்பாராத்தி - தூவிவடி சூட்டேடனே கலசத்துள்ளே-நாளப்பாகஸ்தூரி பச்சைக்கற்பூரம் - நற்புழுகு சட்டமிவை வகைக்குழுக்கழஞ்சே. ........................................ ௭௱௧

வகைமூன்றுங் கட்டியது விட்டுநன்றாய் - வடித்திருக்குந் தயிலம்வார்த்தாறவைத்து, பகையாமல் தேவிக்கும் கணபதிக்கும்- பாங்காகப்பூசித்துத் தானியபுடம்வைத்து.திகையாமல் நாலுநாட் கொருக்கால்மூழ்கு-சியக்காயரப்பிட்டுவெந்நீரும்விடுவாய், நகையாதபடியன்றுமோர்தயிர்பால்புளிப்பு - தல்லிறைச்சிகைப்பகற்ற நலமாகும்பாரே.

பாரப்பா மற்றுநாள் கூட்டுவகைகூட்டு-பத்தியங்களசடில்லைபரக்குமடாநோய்க, ளாறப்பா விதின்பெருமை யறிந்தமட்டுஞ்சொன்னேம் - ஆருக்கும் சொல்லாதேஆச்சரியந்தன்னை, நேரப்பா வுள்ளவர்க்குச் சொன்னாலும் நன்று - நினைவுகெட்ட மாந்தரிடம் சொல்லவேண்டாம், காரப்பா பரையுடைய தியானங்கைக்கொண்டு - கர்த்தாவை யுள்ளவைத்தால் பலிக்குமிந்தநூலே. ........................................ ௭௱௩

## சுகபேதிசெந்தூரக்குழம்பு.

இந்துப்பு நேர்வாளம் வகைக்குமிருகழஞ்சி - யேரண்டஞ்சிறுமுத்துப் பருப்புமிதினிரட்டி, சிந்தையில்லாச் சாதிலிங்கம் காரமொவ்வோர்க்கழஞ்சி - திருக்கறவேசுத்திசெய்து கல்வத்திலாக்க, தந்திரமாயிருசாமமரைத்துக் குழம்பதனைத் - தனிச்சிமிழி விட்டடைத்துதாக்க நீகேளு, முந்தவொரு குன்றியிடை யிஞ்சிச்சாறதனில்-மூளகுடையகியாழத்தில் பனைவெல்லத்தி லருந்தே. ........................................ ௭௱௪

அருந்தியபி நாழிகைககுவெந்நீர்கொள்ள - வபானத்திலுள்ளமலமனைத்தும்போகும், வருந்தியே யாசனத்தைவெந்நீரால்சுத்தி - வயிறெடுப்ப தெர்தமட்டும் விட்டுநீபார்தது,திருந்தியதோ ராயாசமினிததாங்காதென்றால்- சிறந்தகுளுந் தண்ணீரால் சுத்தியதுசெய்து,பொருந்தியதோ ரன்னப்பால் குளிரப்பண்ணி - புளாதீரவுப்பிட்டுக் கஞ்சிகொள்ளே ........................................ ௭௱௫

கஞ்சிகொள்ளக் குளிர்ந்தசலததாலாபேதி - கட்டிவிடும் பேதியின்னம் காணவென்றால், தஞ்சமாவார்ததகஞ்சியுப்பிடாமல் - தன்சூடாய்க கொண்டிடவேபேதியாகு, மிஞ்சிகுடும்வெகுபேதிமூளகுபனைவெல்ல -மெந்தமட்டும்பேதியாமியல்புண்டாகும், பஞ்சையாய்பாடவில்லை யுண்மையாகும் - பதியினின்று செய்வதற்குப் பலிதமாமேௗ௱௬,

## பேதிக்குவாய்வுபத்திரன்.

ஆமப்பா பேதிக்கு வாய்வுபததிர - னலறகிறேன் யுலகதியனேம

ச்சகேந்திரா, நாமப்பா திரிகடுகுகடுகுரோணி - நலமானதேசாபுரம் வாய்விளங்கம்வகைக்கு, வோமப்பா விருகழஞ்ச நேர்வாளஞ்சுத்தி- யு ற்றமுளைகளைந்த பருப்புக கழஞ்சுபத்து, வேமப்பானிருகழஞ்சி யூறு ச்சாற்றில் - விரைத்துயிரு சாமமரை யுண்டைகட்டே. ........௭௱௭

கட்டியதோர் குளிகையினைநிழ லுலர்த்தி-கல்க்கொம்புச்சிமிழிலே கடுகவைத்து, முட்டியதோர் வாய்வுமலங் கட்டுவாங்க - முற்றியதோரி ஞ்சிதட்டிப் பிழிந்தசாற்றில், அட்டியில்லா தொருபோதுதுன்றிரெண் டிடைதா-னரைத்துநீ கொடுத்திடவேயாமமுதல்நீங்கும்-வெட்டியல்ல பனைவெல்லத் தனிலருந்த - வெந்நீருங் கொண்டிடவே விரோசனமா ம்பாரே. ........................................௭௱௮

## சுகபேதிகியாழம்.

பாரப்பாசுகபேதி கியாழந்தன்னை - பாடுகிறேன்பிரமியிலைகடுக் காய்நாலு, பாரப்பா களிப்பாககுமூன்று சுககிரண்டு- பழிப்பற்றவித் தொன்று கழஞ்சியிதுவெல்லம், பாரப்பாகியாழமொரு படிசலத்திற் போட்டு - பரிவாக வெட்டொன்றாய்க் குறுக்கிக்கொள்ளு, பாரப்பா பேதியுண்டா மின்னமதிலொன்று- பகருகிறேன் சற்கமொன்றுபகரு வேனே ... ... ... ... ... ௭௱௯

பகருகிறேன் பிரமியிலை நீங்கினாலும் - பண்பாக மூன்போலேகழ ஞ்சால்சேர்த்து, பகருகிறேனிஞ்சிதட்டிப் பிழிந்தசாற்றில் - பாங்கா கத்தெளிவிலே நால்வகையுமிறுத்து, பகருகிறேன்கலக்கிநீயரிந்திருக் கால் - பழமலமும்வாயுவெல்லாம் பறக்குங்கண்டாய்,பகருகிறேன்கன பேதிகண்டாலப்பா - பாகமாய்மோரசனம்பண்ணிப்பாரே. ...௭௱௰

## வச்சிரகபாடம்.

பாரப்பாதிறப்பதற்குவகையைச்சொன்னோம்-பாடுகிறேனடை ப்பதற்குப்பண்பாய்மைந்தா,நேரப்பாவச்சிரகபாடங்கேளு-தேடுநா ளைமூலரத்தங்கிருணியகிசாரம்- வோப்பாமுளைமூலம்வயிறுளைச்சல்க டுப்பு-விறடங்கச் சாதிக்காய் சாதிபத்திரிகிரும்பு,சேப்பா வால்மிளகு யேலமுடன்சுக்கு - திறமாக வகைக்குவிரு கழஞ்சிகூட்டே. (௭௱௰௧)

கூட்டடாவெட்பாலைசீரகத்தானிரண்டு- கோரோசனைகோதில்லா விடையதிமதுரம், நாட்டடாவெந்தையமும் வகைக்குநாற்கழஞ்சி-ந லமான வயின்மருந்து கழஞ்சியரையோடு, வாட்டடாசிறுவறுப்புவெ துப்பிவாங்கி- மைந்தனேவெந்தயமோர் பலங்கியாழ-மாட்டடாகியா ழம்விட்டு மருந்தைநன்று-யாட்டியதை யடையாகத்தட்டிவாரே. . ()

தட்டியதோரடைக்குமொருசட்டிவைத்து-தணல்மூட்டியடைய
தனை தானேபோட்டு, விட்டினிய கியாழத்தைச் சுறுக்கிப்போட்டு-
வெந்தந்தக் கியாழத்தா லரைத்துப்பின்பு,அட்டியில்லாதாறுதிரஞ் சுற
க்குக்காட்டி-யரைத்திடவே கபாடமருந்தாகுமப்பா,கிட்டித்த வயணம்
போற்சொன்னபடிகேட்கும்-திறமாகவின்னமொருகபாடஞ்செய்யே.

செய்திரான் சாதிக்காய் ஐங்கழஞ்சி-சிறந்தவொருபத்திரியுமுக்க
ழஞ்சி, பெய்வதுதான் கிரும்புமொரு நாற்கழஞ்சி-பெருமரத்துப் ப
ட்டைத்தூளாறுகழஞ்சி,மெய்துதான்குருசாணியையுமூகழஞ்சி-யியம்பி
யதோர் வெட்பாலை ஐங்கழஞ்சு, உய்வதற்குக்கசகசாவுமத்தில் வித்து-
மொவ்வொன்று மூக்கழஞ்சி யரைத்துப்போடே.......... (௭௱௰௪)

போடப்பாசடைக்கஞ்சாபுடமேழுதீர்ந்த-பொடியுமொருபதின்
கழஞ்சி பொலிவாய்க்கூட்டி, யாடப்பாவயின்மருந்துகழஞ்சிகூட்டி-
யப்பனே பூமத்தஞ் சாற்றாலாட்டி, சூடப்பா குளிகைகளைடைக்கா ய
ளவுகட்டி-சுகமாக நிழலுலர்த்தி கண்டவைத்து,நாடப்பாவயிற்றிரைச்ச
ல் கடுப்புபேதி - தனுக்குவயிற்றிரைச்சல்ரத்தமூலம்போமே(௭௱௰௫)

போய்விடுமே யாதுவகைகிறுணியதிசாரம்- போவதற்குவனுபான
ம்புகலக்கேளு,வாயுவறுமுதக்காசிருகழஞ்சிதட்டி - மைந்தனே கியா
ழமது வெட்டொய்ருக்கி,வியமுட னுருண்டை யரைத்துத்தட்டி-
விடிவேறுமப்படியே மூன்றுதினமருந்து,நேயமுடனிளவெந்நீர் தே
ன்மூலைப்பால் தன்னில்-நின்றுவிடு மின்னவகை திகழ்ந்துவோமே. ()

ஓமமதுவடித்திறந்துத் தேனிற்சேர்த்து-வொருபோது கோடுத்
திடவே யோட்டம்நிற்கும், சாமமிருநால்கினுக்கு யெடுத்தீபர்க்கு
ச்-சாந்தமா யனுபானஞ்சாத்தக்கேளு, வேமமெனுமரம்பைப்பூப் ப
வியில்சாற்றி-யிருபோது தேன்கலத்துவிட்டாயாகில்,போமிந்தக் கிறு
ணியதிசாரம் வயிற்றிரைச்சல்-பொல்லாதகழிச்சல்ரத்தக்கடுப்பும்போ
ம்வாறே ........................................ (௭௱௰௭)

## கபாடலேகியம்.

வாறின்னம் பேதிக்குக்கபாடலேகியத்தை-வழுத்துகிறேன் புலத்
தியனே மச்சமுனிஐயா,பேறுபட பெருமரத்துப் பட்டை_சாரணைவே
ர்-யிரண்டைவேரிலந்தைபட்டை கொடிவேலிவேரும்,வேறுபட வழு
க்கிரு மரக்கிழங்குநடலை-வேர்க்கிழங்கு வகைக்குமொருபலந்தூளாக்
கி,கூறுபொடி வடிகட்டி கடைமருந்துவகைகளைக்-கூறுகிறேன் நன்று
கக் கூறக்கேளே. ........................................ (௭௱௰௮)

கூறினதோர்பிளருசுக்கு அதிவிடையமோமம்-குருசாணி சாதிக்

காய் பத்திரிகிரும்பு,தேறினதோர் வெட்பாலையரிசி பலங்கால்தான்-சி
றந்த வயின்மருந்துமொருகழஞ்சியிலைவெதுப்பு,பாறினதோர் பொ
டித்துவடி கொண்டிரண்டுபடியு-மன்பாக விஞ்சிச்சாறனைப்படியுமிற
த்து,ஆறினதோர் தெளிவதனிற் பனைவெல்லம் பலமூன்-றுடைந்ததிவ்வே
பாகாகக் காச்சுமதுச்சிதமாமே. ........................................ (௭௱௰௯)

உச்சிதமாய்ச் சேரவிழும்பருவமதில்பொடிதா-னொழுகவேதுவி
யதிற் கிளறிப்பின்பு,வெச்சிடும்பருவத்தில்தேனும்நறுநெய்யும்-விடுவ
கைக்குமாகாணி விரைந்துகிண்டி,வச்சிடுவாய் புதுக்கரகந்தன்னில்மை
ந்தா-வகையறிந்து அந்திசந்திமூன் றுதினமருந்து,எச்சுகுடல்பொரும
ல்மலப்பற்றுமுமுண்டாக்கு-மேற்பதுவும்பொரிகஞ்சியியல்பாம்பாரே

## கபாடசூரணம்.

பாருமொருகபாடசூரணத்தைமைந்தா- பண்பாகச்சொல்லுகிறேம்,
பரிந்துகேளே,சீருகிறவியாதியதிசாரணிசாரம்-தெளியாத வயிற்றுளே
ச்சல் சலக்கழிச்சலிளைச்சல்,நேருகிறகுடல்பொருமல்தாபமொடுசோ
பம்- நிற்பதற்கு மருந்துவகை நீதானென்றாய், சீருகிறசடைக்கஞ்சா
புடமேழுதீர்ந்த-சிறந்ததொருசாதிக்காய் சாதியத்திரிகிரும்பே (௭௨௧)

பேறானபதிவிடையங்குருசாணியோமம்- பொடித்ததூள்பெரு
மாத்துப் பட்டைமுத்தக்காசு,வேராலசுக்குடன் மாதளம் பழந்திறே
டு-வெட்பாலை யரிசிசமன் கழஞ்சிகூட்டி, காறுனவயின்மருந்துகழஞ்
சொன்றேயாகக்-கடைமருந்து வெதுப்பியதைத்தூளதாக்கி,நேராகக்
கலந்தசூரணமிதப்பா- நினைவறிந்துசெய்பவதினின்றபோமே (௭௨௨)

நின்றுபோம் சூரணந்தான்வெருகடியைச்சேர்த்து-நினைவோடே
யிருபோது கொள்வாயாகில்,நின்றுவிடும்நோயையின்ன மனுபானங்
கேள்-தேனல்ல பனைவெல்லஞ்சேர்த்தருந்தத்தீரும், வென்றியுள்ளதின்
னமொரு சூரணந்தான்-விளம்புவேன்சாதிக்காய் பத்திரிகிரும்பு,இன்
தினிய குருசாணி வெட்பாலையிஞ்சி- யியல்பானபெருமாத்துப் பட்
டைத்தூள்கூட்டே. ........................................ (௭௨௩)

கூட்டடாமலைதாங்கிவேர்முத்தக்காசு-கொடியதொரு வால்மிளகு
அக்கிரகாரம், நீட்டடாசடாமாஞ்சி சுக்குமதிமதுரம்- நினைவாக வகை
யதனுக் கிருகழஞ்சி,பூட்டடா வயின்மருந்து அரைக்கழஞ்சிவெதுப்பி-
பொடிசெய்து வெருகடிதான் தேனிலேபொசிக்க,மூட்டடா வந்திசந்
தி கியாழமதில்செலுத்த-மோசமில்லை கியாழவகைமொழிகிறேனே. ( )

மொழிகிறேன் மலைதாங்கி வேர்முத்தக்காசு-முக்கியமாம்,பெரு
மாத்துப் பட்டைக்குமிளகு,தெளிவாகவகைக்குமொரு கழஞ்சிகூட்

டி-செலமிரண்டு படிவிட்டு கிரும்புபதினைந்து,வழியாக முடிச்சிட்டு
வெட்டொன்றாக-வற்றவைத்து வதில்பாதி கிரும்பனைத்துக்கலக்கி.நெ
ரியாமலந்திசந்தி மேற்பொடியும்போட்டு-நீமூன்று தினங்கொடுக்க
நெய்சொல்லக்கேளே. .............................................(௭௨௫)

கபாடநெய்.

சொல்வோநா மீருள்ளி யிருகழஞ்சி-தனுக்காக நொருக்கியொ
ரு சட்டிவிட்டு,வல்வாயன் மணிப்பிரண்டைச் சார்சுறுக்கிட்டு-வறுப்ப
துதான் பொன்னிறமாய்வரும்போதப்பா,பல்விதநெய்யாகாது பசுவி
ன் நெய்கால்விட்டு-பதமறிந்துயிறக்கிரண்டு காசிடைதானூட்ட,கொல்
லமென்று வந்தயெம தூதனையும்வெல்லும்-கொடியதொரு நெய்யை
யின்னம் கூறக்கேளே. .............................................(௭௨௬)

கூறவேனுயுருவி பூமதத்தங்கொழுந்து- கொட்டைப்பாக்களவனைத்
து வெவ்வேறேவைத்,திறில்லாவீருள்ளி நொருக்கியிருகழஞ்சி-யிரண்டு
வகை மூன்மருந்து மெருமைவெண்ணையுழக்கு,மாறில்லாவெந்திறக்கி
பதத்தில்வடித்திறக்கி-மருந்துநெய்யு மருந்திடவே வளமாமப்பா,தே
றில்நன்றாய்த்தேறுது தெளியவின்னம்-செப்புவேன்மைந்தாநீதெளிந்
துகொள்ளே. .............................................(௭௨௭)

தெளிந்துகொள்ள வின்னமொரு வகையைக்கேளு - திறமான
மிளகுமிரு கழஞ்சியப்பா, களிந்திடவே நூறுக்கியதூள் நல்ல வெல்
லஞ்சேர்த்து-கமகவே வெருகடிதான்காலைசந்தி,யொழிந்துமொழியா
நதற் கின்னமொன்று சொல்வோ-மூத்தமனே மிளகுநறுநெய்யுமா
ட்டி,நெளிந்திருக்கும் பேதிக்குங் கபாடஞ்சேர்த்து-நீயருந்துகியாழ
ங்கள் நிகழ்த்துவேனே. .............................................(௭௨௮)

அருளாதிகியாழம்.

நிகழ்த்துவேனருளாதிகியாழந்தன்னை- நெடுநாளைமாளதம்பஞ்சா
ங்கமோடு,செகத்திலுள்ள பனைவேருப் கருங்காலிவேரும்-சிறந்ததொ
ரு நீர்ப்பூலாலறுகம்வேரும்,உகத்தவால் மிளகுமகிழ்மரப்பட்டைபலா
வே ரோங்குபெரு மரப்பட்டை சிற்றேரண்டவேரும்,அகத்தியமுத்த
க்காசு மிலவுகருவேல-மகின்பிசினும்வெட்பாலையரிசியுமோரிடையே.

ஓரிடையாய்க்கோட்டமது வகைக்குருக்கழஞ்சி-யொன்றாகவிடி
த்தத்தூள் மூன்றுகூறிட்டு,நீருமிருநாழியினி லொருகூறிட்டு-நீட்டிய
சிற்கிழிகட்டிப் போடவகைசொல்வோம்,பேர்பெரிய சாதிக்காய்கிரு
ம்புசீரகமும்-மே ரானவதிவிடையம் குருசாணியோமம்,சாரமுடனே
கிழிகட்டிரண்டுகிழியுந்-தண்ணீருமெட்டொன்றாய்த்தாக்கவனைத்திடுமே

அரைத்தமருந் தப்போதிற் கியாழத்திற்கலக்கி- யருந்திடுவாய்மூ
ன்றுதின மடங்குமப்பா,இரைத்த வயிற்றிரைச்சல்ரத்தகடுப்புடன் சீழ்
வைகள்-தீருதற்குநேரிலத்தையாவரைவேர்ப்பட்டை, நரித்தலைபோ
லிருந்தவிஷ்ணு கிரந்திமிளகுடனே-நாட்டுவாயிருநாழி தண்ணீர்விட்டு
க்,கரைத்திடவே சாதிக்காய்கிரும்புசிரகமுங்- கருத்துடனே கிழியாமு
கட்டிரண்டுபோடே.............................................. (௭௱௧)

போட்டகிழி கியாழத்தை யெட்டொன்றுக்கிப் - புனிதமாயிரு
போதுகிழியரைத்துக்கொடுக்க,சாட்டையில்லாப் பம்பரம்போலாட்
டுவரும்போது-சாதகமாயின்னவகைசாற்றக்கேளு, வோட்டமெல்லாந்
தவிர்ப்பதற்குவிளாம்பழத்திேனாடு-மூற்பனஞ்சேர்மாதளையினோடுங்
கூட்டு, வாட்டமில்லாப் புழுக்கைவே ரருகம்வேரும்-மறுவில்லா வில்
வவேர் முத்தக்காசாமே ............................. .............. (௭௱௨)

ஆமடாவெட்பாலை யரிசிநாயுருவி - யதிவிடையமிளகுசமனுக்
கநருக்கிட்டு,நாமடாசலமுமிருநாழியெட்டொன்றுக்கி- நறுந்தேனுங்
காசிலடைதா னந்திசந்திசேர்த்து,வோம்டாசாதிக்காய் பத்திரிகிரும்பு-
வோங்குமதி விடையமுடன்குருசாணியோமம்,போமடா வெதுப்பி
யதாள் மேல்பொடியுந்தூவி-பொல்லாத வயிறுளைச்சல் கடுப்புப்போ
ய்விடுமே. ..............................................................(௭௱௩)

போய்விடவே வயிற்றூத்தங் கடுப்புளைச்சல்தனக்குப் - புகழா
ன வாவரையி லஞ்சவகைகூட்டு, மாயவல்லி மோட்டுப்பூ கிரும்புசா
திக்காய்-மகத்தான தூளுமது வகைகள்சமனுக,வியமுடன் மோர்சட்
டி வெடுகட்டியவித்து-விரைந்தரைத்து யெருமைமோர் தயிரிலூட்டு
நீயமாய் நின்றுபோ மின்னம்விசித்திரமாய்-நிகழ்த்துவதுவுற்பனமாய்
நீயறிந்துசெய்யே. ................ ...................... ........... ..... (௭௱௪)

செய்யடா வின்னமொரு கியாழங்கேளு- சிற்றரத்தை மலைதாங்கி
வேர்பூநாகம்,மெய்யடா பெருமரத்துப் பட்டைசமன்கூட்டி-மேல்ம
ருந்து கிரும்புபத்துக் கிழிகட்டிப்போடு, வையடா விருநாழிநீரெட்
டொன்றுக்கி-மைந்தனே கிழியரைத்துக் கலக்கியந்திசந்தி,கொய்யடா
மூன்றுதினங் கொடுத்துநீயும்-குடல்படுவன் பிளவைபுடைத்தெழுந்த
ம்நாய்க்குழம்பே. .................. .................... ................ (௭௱௫)

## புண்களுக்குக்குழம்பு.

குழம்புபல புண்களுக்குஙலந்திக்கெல்லாம்- கூறுவேன் சிறுகொ
ட்டை பருப்பாழாக்கு, இளம்பிள்ளை மூலைப்பாலிலரட்டிவாக்கி-யின

கடா முலைப்பாலு மோண்டத்தயிலம், வளம்பெறவேமத்திச்சுசிரட்டையொன்றில்-வைத்தெந்த வீக்கமொடுபிளவைக்கெல்லாம், தனைமுனையாய் முகம்விட்டுப் பக்கத்துக்கனத்திற் - றடவியே விதனம்விடுந்தோன்றுதல் வற்றிடுமே. ..................................(எ௱சு)

வற்றுமல்நீர்கொண்டு பாரந்துகனத்திருந்தால் - வளையமாய்க்குழம்பதனைப்பூசுபூசு, வற்றுமலெழும்பியே யுடையுமப்பா - மறுபடியுஞ்சலமாகக் கழன்றுபோகும்-வற்றாதகுழம்பதனைச்சீலையூட்டி-வாய்மேலே போட்டபின்பு வளையப்பூசு, வற்றுதசிலந்தி பருப்புவன்வீக்கம்-வன்பிளவை புடைத்தெல்லாம் வளமாய்ச்செய்யே. .......... (எ௱எ)

## சவ்வீரக்குழம்பு.

செய்யடாசவ்வீரக் குழம்புதன்னை- திறமாகவோர்கழஞ்சு சிந்திடாமல்,பையடா நுணுக்கியபின் னுவின்வெண்ணை - படிகாலதண்ணீர்வாங்கிப் பண்பாய்கூட்டி, நையடாவிருசாம மொன்றுயாட்டி - நலமானபரணியிலே யடைத்துவைத்து,வையடாபிளவைமுதல்மார்பிலாணி - மகத்தான புண்பொடிக ளாறுந்தானே. ................ (எ௱அ)

ஆறுந்தாணிக்குழம்பி லெல்லாம்போகு-மப்பனேபழங்காடிபுளியிலைவெந்து,கூறுகவந்திசந்தி காடியாற்கழுவி-கூட்டுவாய்சீலைகொண்டுஅந்நீர்மாற்றி,வேறுபடி யிளச்சீலைகளிம்பையூட்டி-விரைந்து நீபோடுபுண்களாறுமட்டுந், தாறுமாறுய்புரையும்புணுமாறித்- தழும்புகறுத் துலர்ந்துவிடும் தண்மைபாரே... ........ ............... (எ௱கூ)

தண்மையாய்ச் சொல்லிவிட்டோமடக்கம்விட்டு-சாத்திரத்தையொருவருக்குங் காட்டவேண்டாம் - உண்மையாய்ப் பட்சத்தோர்க்குரைக்கநன்று - வுத்தமியாள்தெசதீட்சைக் குள்ளேசொக்கி, வண்மையாய்க் கபடற்ற பேர்க்குமைந்தா-வகைபிரிந்துக் காட்டினல் மகிமையுண்டு, பண்மையா யிந்நூலைப் பார்க்கப்பார்க்கப் - பண்டிதசிரோமணியாம் பாருபாரே........................................(எ௱ய)

## கவுரிசிந்தாமணிசெந்தூரம்.

பாரப்பா கவுரிசிந்தாமணிசெந்தூரம் - பாடுவேன்ரசகெந்திவெண்காரமூன்று, சீரப்பா வகைக்குமொரு பலந்தானுக- செய்கின்றசுத்தியிலே தெளிந்தபின்பு, வாரப்பா கல்வத்தில் விட்டுஆட்டி- வயணமென்ன வெண்காரத் தாலேமாளும், நேரப்பா வரைப்பொடிபோல்கறுத்திருக்கும் நேத்தியாய்ப்பொடியதனைகிழிபோற்கட்டே. ...(எ௱யக)

கிழிபோலக் கட்டியதவ் வண்ணமப்பா-கெட்டியாமிரட்டிலேகொட்டைப்பாக்காய், வழிபோலக் கிழிகளெல்லாம் வெவ்வேறாக - வரிசை

பெறக் கட்டியொரு தாழிதன்னி, லொழிவான மணல்கொட்டிமுக்கால் மட்டு - மொவ்வொன்று கிழிமணலி லூன்றிப்பின்பு, தெளிவாக மண ல்நிரம்ப விட்டுமேப்பால்-சிறப்பாக வுலைமூடிக் கொண்டுமூட்டே....()

மூட்டடா வரிசைபெறச் சாணளவுகுழியு-முறுகவே யெருவடிக் கி மேல்தாழி கவிழ்த்துப்,போட்டடாவெருவடிக்கிக் கசபுடத்தைநன் ருய்-பொலிவாகக் கணேசனுக்குப் பூசைதனைநடத்தி,நாட்டடாவக்கி னியை மூட்டவொருநாளும்-நயமாக மறுநாளு மாறியபின்னபபா, ருட்டடா தேவிமுதல் வடுகனை நன்ருகத் - தொழுவதற்குப் பூசைவிதி தொடங்குவாயே. ...................................................... (௭௪௩)

தொடங்குவாய் பலவகையும்நன்ருச்செய்து-துதித்திந்தப் புடம்பி ரித்துச் சூட்டிநீபார்,அடங்கினதோர் செந்தூரம் புலாம்பழம்போல் கறுத்து-வப்பனே யிருக்குமதற் கையமில்லை,மடங்காதே மறுபடியும் புடம்போடாதே- மகத்தானநோயெல்லாம் வாங்கும்வாங்கும், புடங் காணப்போகாது வனுபானந்தன்னைப்- பூட்டுவேன்வகையாகப்பூட்டு வேனே. ...................................................... (௭௪௪)

பூட்டடாதிரிகடுகு வெதிப்பித்தூளில் - புகட்டடா வெருகடியில் தேனுங்கூட்டி பூட்டடாபணவிடை செந்தூரமந்தி-பிலத்ததற்குமண் டலந்தான் பேணிப்பாரு, பூட்டடாசூலைப்பதி னெட்டுமல்லால்-பொ ல்லாத வாயுவிருபத் தாறுமகலும், பூட்டடாபதினெழு குன்மமுளமாந் தை - பொல்லாத சுரங்களெலி கடியும்போமே. ................ (௭௪௫)

போமப்பாமந்தார காசமோடீளை-பொருமியதோ ரிருமல்க்ஷயங் காயாசுவாசம்,போமப்பா சுரமாந்தை மூலமனாயாப்பு-பொருமாறு காமாலையோனிச்சூலை,போமப்பாவாண்சூலை யண்டவாதம்-பொல்லா த திடைவாழை விப்புருதிபத்தும், போமப்பாநாச்சூலை பக்கச்சூலை- பொதிசுற்றிவருங் கண்டமாலையும் போய்விடுமே. ............ (௭௪௬)

போய்விடுமே கறப்பன்புண் கடிவிப்புருதி- புகைந்திருமு மீளை விப்புருதிகூட,போய்விடுமே கூடவிப்புருதிதானும்- பூடுகிறேனனு பானம் புகழ்ந்துகேளு,போய்விடுமேசெந்தூரம் பணவிடையிறேடு ம்-புணிக்கமுறுஞ் சாதிக்காய்பத்திரிகிரும்பு,போய்விடுமேயதிவிடை யம்வெதுப்பிய தூளப்பா-போக்குடனேவெருகடியிற்றேனுங்கூட்டே

கூட்டியே வதிசாரம்பன்னிரண்டுவகையும்-கூறரியகடுப்புமுதல் கூறுகூருய்,நீட்டியே செய்கின்ற கிருணிவகையாறும்-நின்றுபோ மி ன்னமொரு பணவிடைசெந்தூரம்,காட்டிலே வளர்கருணைக்கிழங்குல ர்த்திப்பொடியும்-கடுஞ்சுக்குத் திப்பிலியின் பொடியுங்கூட்டி,மூட்டி

பே வெருகடியிற் றேனுஞ்சேர்த்துண்ண-மூலவகையொன்பதுவும்ப வுத்திரமும்போமே. ............................................ (எசஅ)

போமப்பா பவுத்திரங்கள் நீருயெல்லாம்- பூட்டுவேன் செந்தூரம் பணவிடையிலின்னம்,ஆமப்பா ஆவரையின் தயிலத்திலூட்டு-மப்பனே சதைபடைப்பன் பதினெட்டுவகையும், வேமப்பாநீரிழிவுமிருபதோடு-மென்மேலுருள்ளுருக்கிப் பன்னிரண்டுங்கூட:நாமப்பா வின்னங்கேள் மூத்திரமடைப்பு-நடுக்கெடுக்குமூத்திரபிரமேகமுந்தானுறே

அறுசுவருமேக மிருபத்தொன்று- மத்திசுரமெட்டுவகையுஷ்ணமாதம்,நீருசுஞ் செந்தூரம் பணவிடையிலேயும் - நேத்திபெறயழிஞ்சி விரைத் தயிலத்திலூட்ட,பெருவயிற்றும் நாயருபதுடன்வாய்வு புரண்டுதிரண்டு குத்திடுமுப்பத்திரண்டும், சூறுனவிபபிருதியெல்லாந்தீரும் - சூறாவே வின்னமனு பானங்கேளே .................... (எருய)

கேளப்பாசெந்தூரம்பணவிடையிலின்னம்-கெடியானவெருக்கிலையின்பழுப்பிலையைவாட்டி,நாளப்பா வொருசேரை தண்ணியிலேயூட்ட- நலமானவயிறெடுக்கு மோருஞ்சோறுண்ணு,கேளப்பாவொன்றமில்லை யொன்றைவிட்டு வொருநாள் - கொண்டிடவேவிஷபாகஞ் சோகைகாமாலை, நீளப்பாசோபமொடு பயித்தியமும்பாண்டு - நீர்க்கோவை யருவையொடு சுரமும்போய்விடுமே................(எடுக)

சுரம்போகுமிந்தச்செந்தூரத்தாலே- சொல்லரிதுவனுபானஞ்சுட்டக்கேளு,அறம்போலே நோயறுக்கு மப்பாசொன்னே மாச்சாய மாச்சரியம் பத்தியத்தைக்கேளு, பராபரைக்குமாறானாத்தபடிநான் சொன்னேன்-பத்தியந்தான் வெள்ளாட்டுப்பாலுங்கொள்ளு- திறம்படுத்தி விட்டட்பா சிற்றுப்புக்கறிகள்-சிறுட்டுக்கண்டமுதல்தேடலாமே

## ஏலாதிதயிலம்.

தேடரியவேலாதி தயிலந்தன்னை-செப்புவேன் ரோகங்களனைத்தும்போக, மூடரிய வாலரசு வத்திநீர்வஞ்சி - முதுகொன்றை மருதிலழிஞ்சிகல்லத்திகோவை - போடரிபவமுக்கிருத்தலைசுருளிவேம்பு- பேய்ப்புடலிலாமிச்சுபேர்பெரியபூரசு - நீடரியவெட்டிமுத்தக்காசு வலைக்கிலைக - ளிறைபுத்துப்பலம்வேரும்பட்டைத்தண்டுந்தூக்கே.

தூக்கியொன்றாயிடித்ததற்குச்சலந்தான்பத்துமரக்கால் - சேர் வன்றிமிடாவிலேகியாழம்போடு-தாக்கியேதீயெரித்துநாலொன்றாய்க் குறுக்கி- சங்கைபெறநெல்விக்காய்ச்சாறுபடியொன்று- வாங்கிநல்லாவின்பால்படிதான்மூன்று - அப்பனேநல்லெண்ணெய் படியிரண்டு- யோக்கியமாய்கற்கத்துமருந்துகேளு - வுத்தமனேயேலமொடு லவுங்கஞ்சேரே ...................................................... (எஞிச)

சேர்தகரங்கச்சோல மடவிக்கச்சோலம் - சிறுநாவல்பூவுடன்செங்கழுநீர்கோட்டம் - பேர்பெரியதாளிசபத்திரி கல்மதரும் - பெருங்குரும்பைலிங்கரூஞ் சடாமாஞ்சில்குக்கில் - பார்புகழும் சதகுப்பை பொன்மெழுகுமஞ்சள் - பழந்தாரம்சாதிக்காய் புன்னைக்கொட்டை - சீரழிஞ்சில்வேர்செண்பகவேருடனன்னாரி - சிறந்ததொருகுங்குமப்பூவுடன்குதிரைசெவியே ........ ............................ (௭௰௫)

செவியமதிமதுரம்வால்மிளகுமிருசந்தம் - சிற்றரத்தையின்பூரல் சீரகந்தற்கோலம் - கவியகருஞ்சீரகமும்கல்னார்பச்சை - கடல்நுரைப்பு மிருமஞ்சள் கடுகுரோணி - நெவியழிந்து வாய்விளங்கம் வகையொன்றுக்கு - நேராகவிருகழஞ்சி யாவின்பாலுந் - தவியாமலெடுத்தலாத்து யெண்ணெய்தனிலிடுத் - தவவாகநாள்மூன்று சிறுகொதியுஞ்செய்யே...... ............................................ (௭௰௬)

செய்தபின்புநாலாநாள்பதத்திலேவடிக்கச் - செப்புவேன்முன் மருந்திற்குங்குமகற்பூரம் - செய்ததொருகோரோசனை புழுகுசட்டம் - திருக்கின்றித்தட்டிநீ போட்டுவடித்திடவே - செய்துநல்லகணபதிக்குந்தேவிவடுகனுக்குஞ் - சிறப்பாகப்பூசித்துச்சிந்தைகளிகூரச் - செய்துவண்டுகட்டி வைத்துயெட்டுநாட்கப்பால் - சிறப்புடனேமுழுகும்வகைசெப்புவேனே ................................ (௭௰௭)

செப்புவேன்சீயக்காயரைப்புமிட்டுச் - சீராகவெந்நீராந்திடமாயப்பா - வொப்புகிறேநாலுநாட் கொருக்கால்பின்பு - வோரொட்டு நாட்கொருக்கால்முழுகச்சொல்லு - தப்பில்லாமுழுக்கன்றுபால்யிர் மோருப்பு - தவிர்ப்பதுவுமற்றுநாள்தாழ்வில்லாதருந்து - வைப்பமில்லாதடக்கம்விட்டுச் சொல்லிவிட்டேன் - மைந்தனேவியாதிபோம் வகையைக்கேளே........................................... (௭௰௮)

வகைகேளுக்ஷயரோகம்காயாசுவாசம்-மண்டையிலேவருஞ்சூலை மேனிசங்கள்ளொழியும் - பகைபானவுளமார்ந்தைச் சுரமார்ந்தைகாந்தல் - பண்டுள்ளகால்கையெரிவுகளுந்தீரும் - சிகையிருமலீளையுடனத்திதாகம் - சிரரோகநயனமதில்வரும்பில்லநீரும் - திகையாதமேகவகை பயித்தியமிரண்டுந் - தீராதவினைதீரத்திறத்தைபபாரே......... (௭௰௯)

### அவ்ஷடசூரணம்.

பாரப்பாஅஷ்டசூரணத்தைச்சொல்வேன் - பருத்திவிரைகழற்சியுடபருப்புங்கூட்டி - சீரப்பாபெருங்காயம் பத்திரிகிரும்பு - தேடரியவனேயிலிந்துகல்லுப்பிட்டு - சேரப்பாகருவேம்பு வகைக்குமுக்க

ழஞ்சி - சிறந்ததிரிகடுகுடனேசீரகமும்ரெண்டு -நேரப்பாவோமமில
வுங்கபத்திரி - நிணாவகைக்குவொருபலந்தான் தூக்குதூக்கே...(எசுய)

தூக்கியேமருந்தெல்லாம் வெதுப்பித்தூளாக்கி-சூரணமாமதற்கு
யனுபானஞ்சொல்வேன் - தாக்குவதுவக்ஷீணத்தின்வாய்வதாகில்-தனித்
தஇளவெந்நீரில்வெருகடிதான்கொள்ளு - போக்குவெருகடிப்பொடி
யைச்சோற்றிற்றாவி-புரட்டியதில்நெய்விட்டுபிடிகவளமஞ்சு-நீக்கிலா
துண்டபின்புமருகளிகள்கூட்ட- நின்றவிடுமுக்ஷீணமாம்வாய்வுதானே.

வாயுவெனும் வலபுறத் தணுகியபக்க-வாயுவெனு மூலமாம்வாய்
வுகளுக்கப்பா, நேயமுத்தக்காசறுகழஞ்சிதடடி- நீருமிருநாழிதன்னை
யெட்டொன்றாய்க்குறுக்கி; வியமுடனந்திசந்திவெருகடி சூரணந்தா
ன்-விரும்பிநீ கொண்டுவர வினையொழியும்பாரு,ஆயமாய்பித்தவெட்
டை வாய்வுவெனிற்பச்சை- யமுதுபடி கழுநீரிலந்திசந்தியருந்தே.()

ஏலாதிசூரணம்.

அருந்திவது மண்டலந்தாங்குய்கள்பிலமாறு-லற்பசொற்பநோ
ய்களுக்கு அதிற்பாதிகொள்ளு, திருந்துமினி யேலாதிசூரணந்தானப்
பா-செப்புவேன் புலத்தியனே மச்சமுனிகேளு, மருந்தினுல்பிணிதீர
வயித்தியத்தைச்செய்யும்-வகையேல மிலவுங்கமஞ்ச ளதிமதுரம்,பொ
ருந்துதிரிகடுகுடனே திப்பிலியின்மூலம்- புகழ்ம்சவியஞ்சிற்றரத்தை
சந்தனத்தின்பொடியே. ........................................ (எசூரு)

சந்தனமுஞ்சாதிக்காய்பத்திரிகிரும்பு-தகரமுடன் வால்மிளகுமு
ந்திரிகைபேரீத்து, பந்தமுள்ளவேரிமலர்த்தாதுகொத்தமல்லி-பருநெ
ல்லி நெற்பொரிமாபருத்திவிதைப்பருப்பு,மந்தமுள்ளமாதளைவிளாவி
ல்வத்தோடு- அப்பனே நிலப்பனைவே ரமுக்கிராநன் னாரி-கந்தமுத்தக்
காசுடனே சீந்திதயிர்கூட்டி-கண்டகண்ட துகையிதுக்கு கழஞ்சொன்
றுயெடுமே. ........................................ (எசுச)

எடுத்தவகை மருந்துக்கு நேர்சமன்சீனி-யியல்பாகமருந்துலர்த்
தியிடித்துத்தூள்கலந்து,வடித்துநீபுதுக்கரகந்தன்னிலிட்டு-மைந்தனே
யுண்டுவர வனுபானங்கேளு,தடித்தமூலைப்பாலாகு மதுவுமாகும்- சம்
பழத்தின் சாறுகும்சாற்றகேளு,கடித்தவாய் துடைத்தாற்போல்வியா
திகளைத்தீர்க்கக்-கைமுறையாய்ச்சொல்லுகிறேனின்னங்கேளே(எசுடு)

இன்னங்கேள் மாதளையின் பழச்சாறுகு-மிதினுலே நோயொழியு
மெரிவுடனேயிரத்தஞ்,சன்னையாய்வருகின்ற தாபமோடுசோபம்-சாத்
தியபித்தந் தலைநோ யத்திசுரம்வாய்வு,பன்னுவிஷ சுரபாகமீளையொடி
ருமல்-பலசுரமுமுப்பிசமும் நெஞ்செரிப்பும்பறக்கும்-நன்னயஞ்சே
நகவடகெந்தி சூரணத்தை- நாட்டுமேவன் புலத்தியனே நயந்துகேளே. ()

## அசுவகெந்திசூரணம்.

கேளப்பா அமுக்கிருவேர்பலமுமூன்று-கெடியான சுக்கேலம்கூ
கைநீரும்,கேளப்பாவகையொன்றுக் கொன்றனையாம் பலந்தான்-இரு
ம்புசிறு நாகப்பூகிளாப்பலந்தானிரண்டு,கேளப்பா திப்பிலியோர்பல
ந்தானெட்டு-இருபைபெற மிளகுநாற் பலமுங்கூட்டு,கேளப்பாவிதை
யெல்லா மிடித்தத்தூளைக்-கெட்டியாய் வடிகட்டிசீனியிட்டுக்கிண்டே.

சீனியிட்டுநாற்பலமுங் கலந்துசூரணந்தான்-செப்புவேனனுபா
னந் தேனிஞ்சிச்சாற்றில்,சீனியிடடுக்கிண்டியது வெண்ணைமுத்தக்காசி
ல்-செலுத்துவதுவெருகடிதான்தினமும்ரெண்டுபோது, சீனியிடடுக்கி
ண்டிடம்வமச்சமுனிஐயா - தெளிவானபுலத்தியனேஞானசீலா, சீனியி
ட்டுக்கிண்டியதுமண்டலந்தானருந்த- தீருகிறநோய்கேளுமந்தமுதல்
வய்ாவே .............................................. (௭௬௮)

வாயுவுறும்வலிதீரும்ரோசிதீரும்-வாதபித்தசிலேத்துமத்தின்வகை
யுந்தீரும்,மாயுகின்றவுப்பிசமும்நெஞ்செரிப்புபித்த- மரிகுரலும்வாந்
திக்ஷயமீளையோடிருமல், நேயமுடனுண்டுவர நின்றுபோமப்பா-தில்
லாத நோய்கிருணி குன்மம்தின்றிடுமே, சீயிரத்தகிருணிகுன்மம் குக்
குடசூரணத்தைச்-செப்புவேன் கருங்கோழி திறமானதொல்றே. .. ()

## குக்குடசூரணம்,

திறமானகோழியொன்று கால்தலையுந்தள்ளி-சித்திரமாய் வயிற்றி
லுள்ள பாண்டதைப்போக்கி,உறவாக மேல்மருந்து கூட்டவகைகே
ளு-வுத்தமனேதிரிகடுகுவெள்ளுள்ளிபருப்பு,நிறையாகவகையொன்று
கழஞ்சியுமேபத்து-நேயமுள்ளவலையலிந்துகல்லுப்புநேராய், குறை
யாமலையஞ்சுகழஞ்சிதன்னைக்- கூட்டுகிறே னின்னவகை கூறுவேனே.

கூறுனபருத்திவிரை பருப்புக்காரெள்ளு - குமுறிவருகடுகுகரு
வேப்பிலையின்பொடியும்,நீறுகப்பொடித்தபொடிவகைக்காழாக்கு-நீ
ள்விடைய மதிமதுரமக்கிருகாரம்,பேறுனவோமமிரண்டுசீரகமும்ரெ
ண்டு-பெருங்காயம் வாய்விளங்கம்மஞ்சளோடேலம்,வேறுய்நீயிலவங்
கப் பட்டைபத்திரி-விளாலரிசி வெட்பாலை செவியத்தோல்விரவே. ()

விரவுசீனக்காரம் குக்கல்சவுக்காரம்- வெந்தயஞ்சிற்றரத்தையொ
டுதாளிசபத்திரியும்,கருங்காயின் பட்டையொடுவெணகாரமப்பா-கண
க்காக வகையொன்று கழஞ்சுமூன்று-புறவில்லாச் சாதிக்காய்பத்திரிஇ
ரும்பு- போடடா வபின்கூடஅவ்விரண்டுகழஞ்சி, திறமாக விவையெ
ல்லாம் வடித்துத்தூளாய்-செலுத்தடா குக்குடத்தில் வைத்துத்தையே:

லைத்துஒருதாழிக்குள் தண்ணீர்விட்டமிழ்த்தி-தயவாகக்கவிழ்சட்

டிதன்னுல்மூடி, வைத்திசற்கு நாலஞ்சுசீலைமண்ணுஞ்செய்து- வளமாகவடுப்பேற்றித் தீமூட்டியெரிக்கில், எய்துநீர்சுருக்கிவற்றி யடிப்பற்றுமை ; லெடுத்துதறி மருந்துதசை யேகமாய்ப்பிரட்டிப், பொய்த்திடாதத்திதனை யிறக்கியபினப்பா- புத்தோடுவைத்திட்டுப் போடவறுபொடியே. ........................................ (௭௰௩)

பொடிவறுத்தால் கருகாமல் புடமாகத்தானே-பொடித்துவடிகட்டின துருக்குட சூரணமாம், விடிவேறுஅந்திசந்தி வெருகடிதான்பொடியை-விரும்பிநீ மண்டலங்கொள் வியாதியெல்லாம், படியாகப் பறக்குமே யஷ்டகுன்மம்வாய்வு-பதினெட்டுக்கிருணிவகை யதிசாரமோடுமூடியாத வயிற்றெரிச்சல் கழிச்சல்நீரிரத்த-மூலமொடு வுப்பிசங்கள் விஷிபாண்டுபோமே. ........................................ (௭௰௪)

பறங்கிபட்டைசூரணம்.

போமப்பா கறப்பனொடுகரந்திசூலை-புண்பொடிகள்சிரங்குவெட்டை குட்டம்போக, நாமப்பாபட்டையிலே சூரணஞ்சொல்வோம்-நல்லவுருவாடினதாய்புதுசாய்வாங்கி, யாமப்பாபறங்கியென்றபட்டையஞ்சுபலந்தா-னப்பனே தூக்கியபின்னமுக்கிருசங்கு, வேமபபா சிறுபிறப்பங்கிழங்கு கொன்றைப்பட்டை-வெற்றிபுரிசாரணைவேர் கொடிவேலிவேரோ ........................................ (௭௰௫)

வேராகவகைக்கொரு பலமதாக-வெட்டியேகாயவைத்துத் தூளாகவாட்டி, சீராகத்தாழியொன்று பால்படிநால்விட்டு-திறமாக வேடுகட்டி பொடிவகைகள்கலந்து, போகப் பொடியைவைத்துக் கவிழ்சட்டிமூடி-பிட்டவித்தாற்போலவித்துப் பின்புவதைவாங்கி, நேர்கம்மல்மருந்து கொத்தமல்லிமதுரம்-நெறியான வோமமிரண்டதிவிடையம்நீட்டே. ........................................ (௭௰௬)

நீட்டடாவால்மிளகுவெந்தயஞ்சிற்றரத்தை-நேத்தியாமக்கிருகாரந்திப்பிலியுங், கூட்டடா சாதிக்காய் பத்திரிகிரும்பு-கூறுனசீரகங்கள்ரெண்டுதிரிகடுகும். பூட்டடா வகையொன்று கழஞ்சியதுமூன்றுபுரளவே காயவைத்துத் தூளாகவாட்டி, மூட்டடாபுன்பொடியுங்கூடச்சேர்த்து - முறையோடேயதிற்பாதி சீனிகலந்திடுமே. .......... (௭௰௭)

கலந்தபட்டைச்சூரணந்தான் வெருகடிப்பிரமாணம்-காலையந்திமண்டலமே கருதிக்கொள்ளு, மலர்ந்தவிரணங்கறப்பானொடுசூலை-மகாவாதம் வெட்டையொடு அக்கினியில்மந்தம், புலந்தவதிசாரமென்றுங்கிருணியுப்பிசங்கள்-பொல்லாத வயிற்றிரைச்சல் புண்பொடியுந்தீரும், மலர்ந்தமுகம் போலிருக்கும் வச்சிரதேகு- மாக்கிவைக்கும் பட்டையுட வர்ண்மைதானே. ........................................ (௭௰௮)

## பதங்கம்.

ஆண்மைசொல்வோம் பறங்கிப்பட்டையுடபதங்க- மப்பனேலே
ஒரு வாடினதைப்பார்த்து.ஆண்மைபெறும்அறுபலம் பட்டைதன்னை-
யழகாகப் பாக்குபோல் வெட்டிநீயும், ஆண்மையுடன் சங்கம் குப்பிச்
சாற்றி-லதைப்பிரட்டி மூன்றுதிரங் காயவைத்து,ஆண்மையொடு காக
த்திலிட்டுவைத்து-அடுக்காகப்பதங்கவகை யறையக்கேளே. .. (எஎகூ)

கேளப்பாசங்கம்வே ரழுக்கிருவேரும்- கெடியான சிறுபீரப்பங்
கிழங்குமைந்தா, கேளப்பா கொடும்வலிமூலமொடு- இளாகொன்றைப்
பட்டை யெருக்கிலைவேர்கூட்டு, கேளப்பாசாரணைவேர் கருஞ்சூறை
வேரும்-கேடில்லா நாய்கோட்டான் பட்டைசிவன்வேம்பு, கேளப்பா
வெள்ளறுகு வகைபலந்தானஞ்சு- கிருபையுடன் நொறுக்கியோர் பா
ண்டத்திலூட்டே. ............ ............................... (எஅ௰)

பாண்டத்திலூட்டியபின் சொல்லக்கேளு-பண்புபுளியம்பொருக்
கோர் பாண்டத்திலிட்டு,தாண்டவே தமர்களிட்டுப் பறணிமேலே-சங்
கைபெற மருந்தடைத்த பாண்டத்தையேற்றி,பூண்டிடவே சந்துக்கு
ச் சீலைமண்செய்து-புகழாக ரவிமுகத்தி லுலர்த்திக்கொண்டு, தோண
டவே மறுபடியும் சீலைமண்செய்து-துலங்கவே ரவியிலவைத்துச் சீலை
செய்யே. ............................................... (எஅக)

செய்தந்தக் கலசமேற் பட்டையிட்டகலசந்- திறமாகக்கவிழ்த்தி
யே சீலைமண்செய்து, வெய்தந்த வடுப்பின்கீழ் விலாவிலே திருத்து-வே
ற்கவேதமரிட்டுத்தீயைப்போட்டு,வைதந்த வூதெல்லாம்மந்திசந்திசா
மம்-வகைபாக வொன்பதுநாள் மடியாமலூது,நைந்தபொருக்குமரு
ந் தெல்லாம்வெந்து- நலமாகமேலேறிச் சாரும்பாரே . ..... (எஅஉ)

சாருமே படடையிலே யெல்லாம்வெந்து-சஞ்சீவியாகவேபதங்
கமேறும்,பாருமேபதங்கமப்பா தூளாகவாட்டி- பருவமாய்வழிகொ
ண்டு பாங்கானபின்பு,சேருமே படடைத்தூள் சீனிசமனாகச்-சேர்த்தி
யபின் வெங்காரஞ் சுத்திசெய்து,நேருமே யணவிட்டுபொரியிலொரு
கூறு-நீட்டடா வொன்றாகக் கலந்துமினிகொள்ளே ........... (எஅ௩)

கொள்ளையிலே அந்திசந்தி மண்டலந்தானப்பா - கூட்டோடே
கறப்பனொடு கிரந்திமுதல்போகும், கொள்ளையிலே வெட்டைமுதல்
குட்டம்போகும்-குாலதிகமிருமலோ டிளைபோகும், கொள்ளையிலே
மேகங்கள் சூலையெல்லாம்போகும் கூறரிய கிருணிமுதலதிசாரம்போ
கும்,கொள்ளையிலே க்ஷயகாசம் காந்தலெரிவடங்கும்-கூப்பிட்டுவோ
டுமென்று கூறினேனே. ................................ ............... (எஅச)

கூறினேன் மிதுக்கிலைசந்த வைப்புஅப்பா-கொஞ்சமல்ல சஞ்சீவிகூ றக்கேளு,தேறமேகற்பூரம் கெந்தகமாஞ்சீனி-செப்பரிதுசெப்பரிது தேகம்பொன்னே,நாறினதோர் நெல்லிக்காய் கெந்தகத்தூளப்பா-ந ல்சரக்கா லைம்பதடா பலந்தான்தூக்கு,வேறினதோர்வைபபதற்குப பாடுமெத்த-வென்மகனே லவணவகை யின்னங்கேளே. ......(௭௮௫)

கேளப்பாலவணவகை யிந்துடனேவளையல்- கெடியானபாறையு ப்புசவுடட்டுப்புநாலு, கேளப்பாவகையொன்று பலந்தான்பத்து- கிரு ளையுள்ள கறியுப்பு ரெண்டிடையாம்நாலு,கேளப்பா விலையொன்று ய் தாழியிட்டு நீர்விட்டு-கெட்டியாய்க் காச்சடா குட்டமாறும்,கேளப் பா நீரற்றால் வெள்ளையாமுப்புக்-கிண்டியதை யெடுத்துவைத்துக் கே ளின்னம்வகையே. ........... ... ... ........................(௭௮௬)

வகையாக வுப்பெல்லா மாறுகூறிட்டு-வகையொன்றிற்கெந்தகமு ங் கூட்டகூட்டி,பகையாமல்சாட்டம்பிநாலஞ்சுதன்னில்-பதியவேயா றமட்டும் பண்பாகவரைத்து, திகையாமல்மிடாநாலிற் சலமுமிருதூ ணி - தீமூட்டிக்கொதிகண்டு திட்டெனவேயிறக்கி, நகையாமலரைத்த பொடிநாவிலேசேர்த்து-நாட்டடடாகவிழ்சட்டி நாலுக்குமடைவே.()

அடைவாக நாளொன்று.திறவாமல்திறந்து- அப்பனே நல்லபச் சை கற்பூரமாகத்,திடமாகப் பானைக்கு ரவ்விரண்டுகழஞ்சி-சீக்கிரமாய்ப் போட்டபின்பு திரும்பவதைமூடிப்,பிடமாக வொருநாளுமப்படி யேவைத்துப் - பின்மூன்று நாள்தான் தெளிவெல்லாங்களைந்து, விட வேக மாய்பெரிய தாழிதனிற்சேர்த்து-வெய்யிலிலே காயவைக்கத்தெ ளிவுவற்றிடுமே. ......................... ..................(௭௮௮)

தெளிவற்றி மண்டிநின்றதவ்வளவும்வட்டாய்-சேர்ந்திருக்கும்வெ யிற்பட்டுக் கமர்பிளந்துசிதறும், களிம்பகற்றி யிப்படியே யாறுதரம் வைக்கக்-களிம்பற்றுச் சத்தெல்லாம் கனகம்போலா,மளிவற்றகற்பூரம் கெந்தகமாஞ்சீனி-படைபடா குழலிலே வனுபானஞ்சொல்லக்கேள், ஒளிவற்றமாந்தர்க்கிம் மருந்தாமப்பா - வேகோகோவாச்சரிய மூன் றுபணமூன்றே...................................(௭௮௯)

மூன்றுபணத்தூக்கமுடன்வங்காளச்சீனி-மும்மூன்றுபணவிடை தான்முடுக்காகக்கூட்டு,வேன்றதொருவெங்காரமணியாகவாங்கு-மென் மகனே பெருமைச் சாணந்தான்சுற்றி,தோன்றவே பின்கழுவியனலில் சுற்றிப்பொரித்துத்- தூளாக்கி ரெண்டுபணந் தூக்கஞ்சேர்த்து, என்ற தொரு மூன்றுவகை மருந்தோடப்பா-யியல்பாகப் பட்டையெனும் பதங்கம்தாலே.....................................(௭௯௰)

நாலுபணத் தூக்கமடா பறங்கியுடபதங்கம்-நலமாகக் கலந்தொ ன்றாய்ச் சாரித்துச்சேர்த்து,மேலுமந்திசந்தியுண்ணு மண்டலந்தானப பா-வியாதிவகை கண்டவுடன் வெகுண்டேயோடும்,மாலுமயன்தேட ரிய ஆத்தாள்தான்விந்து-மகத்துவத்தை யொருவரால் காண்பதுவுமரி து,நாலுகளி விந்தமுறை வைப்பார்களில்லை- நொறுக்குமடா நோய்க் குமார் பாணிதானே. ........................................ (௭௱௧)

ஆணியென்ற கறபபனொடு குட்டங்கள்போகும்-அஷ்டகுன்மம் வெடடையோர் பயிததிரண்டுதீரும்,ஊணிநின்ற கிரந்திமுதல்காச்சல் சூலை-யொடுங்காததாபமொடுசோபந்தீரும், பேணிநின்றதா துநடடம் பொருமலுஞ்சீரத்தம்-பெரும்பாடுவுள்ளுருக்கி யீளைகளுமிருமல்,நா ணியே பயந்தோடும் பத்தியத்தைக்கேளு-நல்லாவின் பால்கூடட நல மாம்பாரே. ........................................ (௭௱௨)

பால்கூடடு மந்திசந்தி மண்டலந்தானபபா-பரிமாற்றம் வெந்நீ ர்தான் மற்றொன்றுமாகா,சாலவேமண்டலத்துக் கபபாலுமுபபே-சா ந்தமாய்ச் சுத்திசெய்து கூடடுகூடடு,சிலமுடன் தூதுவளையிலைக்காய்பூ வாகும்-திறமானமுருங்கைபபூபிஞ்சுமாகும்,ஞாலமெல்லாம்புகழ்பொ ன்னாங்காணிமூளைதண்டு-நறுநெய்யாந்துவரையொடுசிறுபயறுமாமே.

சிறுபயறுசிறுகீரையவரைப்பிஞ்சாகும்-தெட்டுமீன்முயல்காடைக வுதாரியுள்ளான்,பேருடையஊர்க்குருவிவிரால்மீன்கண்டம்-வெள்ளா டடுகண்டமுமாம்வேறொன்றுமாகா,அறுதிரண்டுமண்டலத்துக்கபபா ல்பின்பு-அழகான தலைமுழுகு மெண்ணைசொல்வோ,, முறுதியுடன்முக் கூடடுயெண்ணைதலைமுழுகு-வுசிதமடாசீயக்காயரைப்புவெந்நீர்வாரே

வார்த்தெண்ணைமுழுக்கன்று கோழிச்சாறப்பா-வளமாகக் கறிவை த்துக் கூடடுகூடடு,வார்த்தெண்ணை நாலுநாட் டொருக்கால்வேணும், மைந்தனே முழுகுமுறை கோழிச்சாறும்,வார்த்தெண்ணை முழுகன்று பால்தயிர் மோர்புளியும் - மாற்றடா மற்றுளுள் வாமிபுறம்வேண்டா ம்,வார்த்தெண்ணை மற்றிரண்டு கடந்தாலேது- மயக்கமில்லையுடல்காந்தி பொன்னுமாற்றே. ........................................ (௭௱௫)

## ஏரண்டவெண்ணை.

மாற்றமிலாவேரண்டவெண்ணையொன்று-மைந்தனேகிரந்திபொ டு கறப்பன்போகச்,சாற்றுவே னவித்தூற்றுந் தயிலமோர்படிதான்-சு ங்கங்குப்பிச் சாறுடனே கழற்சியிலைச்சாறு,நேத்திபாஞ்செம்பூவினெ ருஞ்சிச்சாறு-நோசிறுகாஞ் சொறிச்சாறு முருக்கிலையின்சாறு,வெற்று

மையொன் றில்லாத முருங்கிலைச்சாறல்லால்- வேசரிபபாலத்திநீ ருள்ளிச்சாறே. .................................................. (௭௯௭)

சாறுகள்தான் வகையொன்று படிகாலாகும்-சங்கைசிறுசெருபபடிச்சாறழுக்கறாயுங்கூட்டு,வீறுடைய நெல்லிக்காய் கெந்தகம்தாளக-மேலானபறங்கிப்பட்டைதானும்,தேறியதோர்கடுக்காயும்நிலவாகைவேரும்-செந்தொட்டிவேர் சித்திரமூலமொடுவசப்பு,பெருப்பட்டைக் கருஞ்சீரகம்வகைபோர்கழஞ்சி-பிசகாமல்சாறுகளிலாட்டியதைகலக்கே( )

கலக்கியே யெண்ணெயொடு சாறுகளும்கற்கம்-கலந்துவொருதாழியிலே காப்பதனைப்புனைந்து,மலக்கமில்லா தடுப்பேற்றித் தீயெரித்துக்காச்சு வடிக்கிறது பதங்கண்டுகட்டுருட்டனேவாங்கி,துலக்கவேகடுகுடமே ஐங்கழஞ்சிசீனி-தோன்றவே போட்டதையுங்கிண்டிவண்டுகட்டி, சொலச்சேரு மூன்றுநாளறியபின்னப்பா -தோன்றவஞ்சுதினமுண்டால் சுகமாம்பாரே. .................................................. (௭௯௮)

சுகமாக நாட்கொன்று கழஞ்சுமூன்று-சுத்தமாய்க்கொண்டாக்கால் சொல்லக்கேளு,புகழேழுகாலத்துங் கறப்பானுமில்லை-யொன்றுமாகாது மறுபத்தியங்கள்கடந்தால்,செகமேழும்புகழவே சங்கம்வேர்பாற்றி-சீரொபெறவே வாரியுப்பை வெந்துவைத்துக்கூட்டு,இகமேழும் காண்பதுபோலேரண்டத்தெண்ணெ-யெப்போதுமொன்றைவிட்டுவொருநாளாய்முழுகே. .................................................. (௭௯௯)

ஒன்றைவிட்டுவொருநாளாய்ப்பத்துமுழுக்கப்பா-வொருமுழுக்குநாலுநாட் கொருக்கால்முழுகு,நின்றபெருங் கிரந்தியொடு கறப்பான்புண்ணே-நின்றபெரும் புண்பொடிகள்கால்கைமுறடொழியும்,வென்றியுள்ளவீக்கம்போம்நன்றுகுமப்பா- வீறுசேரு மறுமுழுக்கில்விலக்கு கறிபுளிப்பை,தின்றிடாதொழிப்பதுதான் கறப்பானுள்ளபண்டம்-தேடரிய வுளுந்துபயறு மனைபாகல்சிக்கே. .................................................. (௮௱)

சிக்கான பூசினிக்காயாறுதிங்களாக- சிறப்பாகப்பின்புயிவைதேடருமெள்ளுளுந்து,முக்காலுஞ்சொல்லிவிட்டோம்பத்தியங்கள்பருவம்-மோசமில்லை வியாதிசேரு நாசமப்பா, எக்காலமொழியுமென்றெண்ணவேண்டா-மெண்ணெயுண்டு முழுகையிலேயெல்லாநோய்போகும், கக்காதே யொருவருக்கும் நூல்காட்டாதே-கனிவுகண்டுபிரயோகங் கழறுவாயே. .................................................. (௮௱௧)

## பிரளிபலகலைகள்.

வாய்க்கடங்காப பிரளிபல கலைகளுக்கேயெண்ணெ - வகையாகச் சொல்லுகிறே னைந்தாகேளு,நோய்க்கடங்கா வேரண்டத்தயிலமடா

நாழி-நாலுக்குமுட னவிரிவேர்த் தோல்தானப்பா,வீக்கடங்காதிருகழஞ்சு மஞ்சளுடன்கடுகு-வெந்தையமும் வெள்ளுள்ளி சீரகமிரண்டோமம்,பேச்சடங்கா மிளகுகடுக்காய்ரோகணிவசம்பு-பெருங்காயம்வகையொன்று கழஞ்சிரண்டே.......................................(௮௱௨)

ரொவ்வொன்று கழஞ்சாக விடித்துத்தூளாய்-நயம்பெறவேயெண்ணையொடு போட்டுக்காச்சு,செவ்விபதாய் சிவந்துவரும்பதத்திறக்கி-திறத்துடனே கற்கத்தி னெண்ணைகடுகொன்றாய்,வவ்விய மில்லாமலேவழித்துவைத்து-வாரியபின் மூன்றுநாள் பிள்ளைகளுக்கப்பா,தவ்வியே கரண்டியொன்று தினந்தானேற்று-சாந்தம்பின்னாகியினி குளுமைகொளுந்தானே. .......................................(௮௱௩)

தானென்ற குளுமையென்னசித்திரப்பாலாடை - தனிமதுரம்சீரகமுந் தன்னிலாட்டி, மானென்றபிள்ளைகளுக்கவ்வண்ணமருந்து-மாந்தமொடு கிருணிகளை பிரளியெட்டுமொழியும்,தேனென்றபத்தியந்தானுப்புமுதலாக-சிற்றுப்புகுளுமைமுதல் செலுத்தவுடல்தெளியும்,வேனென்றயெண்ணைக்கு வெகுகுணங்கள்நன்று-விரும்பியதைவைத்துண்ண விகற்பமில்லைபாரே. .......................................(௮௱௪)

## கண்டாத்திரிலேகியம்.

பாரப்பாகண்டாத்திரிலேகியத்தைப-பாடுகிறேன்புலத்தியனேபண்பாய்க்கேளு,நாரப்பாவில்லாமல்விளைந்தவிஞ்சி - நலமாகத்தோல்போக்கிவிலை ச்பால்நறுக்கி,நேரப்பாபதினஞ்சுபலந்தானீயும்-நிறுத்தங்கேநறுநெய்யில்சிவக்கவேவறுத்து, சீரப்பா பொடிசெய்துசீலைவடிகொண்டு-சித்திரமேல்மருந்தப்பாசெப்புவேனே.. ........(௮௱௫)

அப்பா கேள் திரிகடுகுசிற்றரத்தைசெவ்விய-மதிமதுரம்சிறுந்தக்கு வாய்விளங்கமேல,மொப்பானதிரிபலையும்கொத்தமல்லி-யோங்கிவளர்சீரகந் தாளிசபத்திரி, தப்பாதஇலவுங்கபட்டைபத்திரி தனிநெல்லுப பொரியுமிவை வகைக்குமுக்கழஞ்சி,இப்பாரிற்சாதிக்காய்பத்திரிகிருப்பு- வியல்பானவதிவிடையம்வகைக்கிரண்டுகழஞ்சே .. (௮௱௬)

கழஞ்சாகமருந்தெல்லாம் நறுங்கியேநொருக்கிக்-காயவைத்துத்தூளாக்கட்பொடியைவடிகட்டி, தழஞ்சியாய்ச்சீனியொருபலந்தான்கூட்டி- தனியிஞ்சிப பொடிகலந்து சாற்றக்கேளு,வழஞ்சியாய் நல்லவெல்லமஞ்சுபலம்பாகாய் - வரும்பருவம்பொடி தூவி வாகாக்கிண்டி, உழஞ்சியயாய் நறுநெய்தேன் வகைக்காழாக்கு- ஊறவைத்துக் கிண்டிடம்வ லேகியமாமுண்ணே...........................................(௮௱௭)

உண்ணபாவந்திசந்திகொட்டைப்பாக்களவு-வொருமண்டலமருந்த

வோடும்நோய்கேள்,மண்ணபபாபுகைச்சலோடிருமல்பித்தம்-வர்த்த
னையும் நெஞ்செரிபபு வாந்திதீரு,முண்ணபபாமூவகையாம் தொந்தி
பபோங்கார-முழங்குவயி றிரைக்கிறது மூலமெனும்வலியும்,கண்ணப
பா குரல்கட்டு தலைநோவுகுன்மம்-கடுவரட்சிமலசலக்கட்டுடனேபோ
ய்விடுமே. ........................................................ (௮௱௮)

போய்விடவே வுட்சுரமும் தாபசுரம்போகும்-பொருமலொ
டுவயிற்றளைச்சல்சீதரத்தந்தீரும், போய்விடுமேவாயுவுடனக்கினியின்
மந்தம்-பொல்லாத வுதரவெபபுமபானவாய்வும்,போய்விடுமேகிருணி
யதி மதிசாரங்கழிச்சல்-போயிவிடுமின்னமொரு புதுமைகேளு,போ
ய்விடுமே பத்தியங்க ளுபபுமிளகபபா-புகழ்துவரைநெய்பாலாம்பூட
டக்கேளே.... ... ... ... ... (௮௱௯)

பூடடடா வழுதலையின்பிஞ்சிளோடு-பூகாய்பத்திரியாகுந்தூதுவ
ளையபபா,நாடடக்கேள் புளிகைபபுமோர்புளியுந்தள்ளு-நச்சுவிடுவா
ய்வானபதார்த்தந்தள்ளு,ஆட்டிறைச்சி மீன்வகைகளுலர்ந்ததாய்கொ
ள்ளு-மபபனேமற்றொன்றுமாகாது சொன்னேன்,தீட்டுமுன்னேபாய்
ந்துவிடும் நோய்களோடும்-தீராதவினைதீருமிதுபரம்பரையே(௮௱௰)

## கெந்ததாளிநெய்.

பரம்பரையாய் வருகின்றகெந்ததாளி-பறந்தோடநெய்யைநான்
பகரக்கேளு,அரம்போலேயறுத்துவிடும்புண்ணையாற்று-மாச்சரியநெ
ய்யினுட யாண்மையபபா,வுரம்பெறவேநறுநெய்யும்பலகாலல்லா-வு
த்தமனே நறுந்தாளிமணத்தக்காளி, திரம்பெறவேயிருள்ளிபுளியாரை
கூடச்-சிறுகீரைச் சாறுவகை காலாழாக்கே.... ... (௮௱௰௧)

காலாழாக்கெனுஞ்சாறுநெய்யுஞ்சேர்த்து-கடைமருந்துமேலம
ரி மதுரங்கூட்டு,ஏலமுடன்சாதிக்காய் கிரும்புதேனும்-சீரகமுமாசக்
காய் கூகைநீறும்,ஞாலமெல்லாம் புகழ்சீனிகற்கண்டோடு-நலஞ்சிறந்
த முந்திரிகைபபழமுங் கால்கழஞ்சித்,தூலமாய்த் தூளாக்கிநெய்யிலி
ட்டுக்காச்சி-சோர்வன்றிபதத்திலே வடித்திடாயே.... ...(௮௱௰௨)

வடித்திறுத்துஆறிநெய்யையந்திசந்தி- வாகாகக்காசிலெடைதானுண்
டாயானால்,வெடித்திருந்த புண்மூலாதாரந்தொட்டு-வெந்துநீருய் வா
பதனில்நாற்றம்போகும்,கடித்திருந்த நீர்தாரைமூலாதாரம்-கண்டவா
ப்த்தொண்டை நோய்க்குள்புண்ணாறு, மடித்துவிடுமுட்சூகாந்தலெ
ரிதாக- மனைத்தும்போம் கைபபு புளிபபதனை யகற்றிடுமே(௮௱௰௫)

## சூசிகாசூரணம்.

அகற்றிவிடும்சூசிகாசூரணத்தைக்கேளு-அபபனேமொகமொக

க்கைபொன்னாங்கண்ணி,செகத்திலுள்ளபொடுதலையும்சமூலம்நிழலுல ர்த்தி-திறமாகவ்வவறுத்துத் தூளாகவிடித்து,தகர்த்தபொடிவடிகட்டிச மன்வகைக்கப்படிகால்-தனிப்பருத்தி விதைப்பருப்புமவ்வண்ணங்கூட டி,விகற்பமில்லாச்சிறுபயற்றின் பொடிபதுவுமுழக்கு-வீறடக்குஞ்சீ ரகம்வெள் ளாட்டுநீர்நனையே ... ... ... (அ௱௰௪)

நனையட்டா சீரகத்தை வெள்ளாட்டுநீரில் - நாளொன்றுக் கிருபொ ழுதுமூன்றுதினமப்பா, வினையமுறக்காயவைத்து தூளாக்கிப் பொடி தான் -விருப்பமுடன்காற்படியாயவ்விதம்விரவி, யனையவிதுவொன்று கக்கலந்துசூரணமா-யனுபானம்பச்சரிசிக்கழுநீரிலருந்து- தினையளவு பத்தியங்கள் கடவாதப்பா-தினம்பத்து வந்திசந்தி திறமாய்வுண்ணே()

உண்ணடாவின்னமுண்டுவனுபானங்கே-ளூற்றமுற்றக்காசுகியாழ த்திலந்திசந்தி-உண்ணடா தினம்பத்துபின்புயிளவெந்நீ-ரூட்டடா அவ்வ ண்ணமந்திசந்தி,உண்ணடாபுளியாதபசுமோரிலுண்ணு-வுத்தமனேபத் துநாளூட்டிரவுபகலும்,உண்ணடாபத்தியந்தான்வெள்ளாட்டுப்பாலா- முப்புமுத லொழித்துவிடு மண்டலந்தானனையே.... .. (அ௱௰௬)

மண்டலந்தா னாகக்கப்பாசுத்திசெய்தவுப்பு-வளர்பொன்னாங்கா ணியிலைக் கறியுங்கூட்டு கண்டதெல்லாந்தின்றேதேபுளியுமோரும்-கறி யப்பாசிறுபயறுமிளகுசீரகமாம்,தின்டாடித்திரியாதேவனுபோகந்த ன்று-தெளிந்துவிடு மறுபத்தியந்தீருமட்டுமிதுவாம், அண்டாதுபிணி நோய்களொழிவதுதான்மெத்த - அறைகிறேன்புலத்தியனே அறைகி றேனே.... ... ... ... ... (அ௱௰௭)

அறைகிறேன்சுககுலசுரோணிதமாம்வாய்வு-வபானத்திருந்தேறிமே ல்நோக்கும்வாய்வு,குறையாதகிருணிகுன்மம்வயிற்றிரைச்சல்-கூறரிய சீயிரத்தந் திரண்டிருண்டவாய்வு,கறைகாணக் கருகக்கெடுக்கும்சூசிகா வாய்வும்-கடுகிவலிகொண்டிழுப்புகண்பக்கவாய்வும், நிலையாக நின்று விடும்கெற்பமுண்டாக்கும்- நிகழ்மத்துபபோல்திரண்டகுன்மமு நின் றுபோமே.... ... ... ... ... (அ௱௰௮)

## சுரராமபாணம்.

நின்றுபோ காதசுர மாறலெல்லாம்- நெடுநாளைவிடாச்சுரமும்வி யாதிதனையொழிய,வின்றுதான் சுரராம பாணவுண்டை-யென்மகனே புலத்தியனே அப்பாகேளு,வென்றுதிரஞ்சூதமொடுவெள்ளைப்பாஷா ண-மிவையொவ்வொண்டுவராகன்வொண்டுசமனாய்ச்சேர்த்து,பொன்றுதலில்லா தபடி சுத்திகளுஞ்செய்து-பொடியாகக்கல்வத்தில்புரளவரைத்திடவே.

அரைத்திடவே பாகையிலைச்சாறுகொண்டு-அந்திசந்தியிருசாமம்

ளாத்தபின்ப,திளாத்திடவே யிபபடிதான் மூன்றுதினமாட்டி-சிறபப
ற்றின் பிரமாணம் குளிகைதனைத்திரட்டி,விளாத்திடவே நிழலுலர்த்திய
தில்பின்னடபா-விறடங்கபபத்துநாள்தனியபுடம்வைத்து,உளாத்திட
வே சுரங்களுககிஞ்சிமுலைபபாலி-லோருருண்டையந்திசந்தியூட்டுதின
மூன்றே. ... ... ... ... ... (௮௨௦)

மூன்றுநாள்மாறலுககுமூன்றுதினமூட்டு-முறைநாலாமாறலுககுநா
லுதினமூட்டு, வேன்றமற்றச் சுரங்களுககுககண்டூட்டு - எல்மகனே
தினசாத்துக கொன்றொருநாளூட்டு,தோன்றுதே பறந்தோடும் பத்தி
யஞ்சிற்றுபபு சுடுகஞ்சி வெந்நீரு துளங்காயிஞ்சி, யீல்றிவாதமிககிரம
மிபபடியேசெய்தா- யிருவினையுமற்றுவிடுங்குககுலாதி கொள்ளே. ()

## குக்குலாதிவடகம்.

குக்குலாதி வடகமப்பா கூறக்கேளு- கூறரியகுக்குலோ கழஞ்சி
மூன்று,முக்கியமாய் நல்லதொருபறங்கிப்பட்டை-முக்கழஞ்சி ரசந்து
ருக கூகைநீரும்,சக்கில்லா தொருகழஞ்சி லவுங்கப்பட்டை தானுமொ
ருகழஞ்சி குங்கிலியங்கழஞ்சி, பிககில்லாப் பனைவெல்ல மோர்கழஞ்சி
க்கப்பாற் - பிலத்தநாவிமேகவுரி பாஷாணமூன்றே. (௮௨௨)

மூன்றுவகைக் கொவ்வொன்றுக் கோர்கழஞ்சிகூட்டு-முறையோ
டே மிதிபாக விலையதனையப்பா,வேன்றதொருபிடியாகச்சமூலமொடு
கியாழ-மிதில்மருந்து மூன்றுமொரு கிழிதோளாந்திரமா, யூன்றவதை
வேகவைத்தால் சுத்தியாச்சு-வொன்பது வகைமருந்து முரலிற்போட்
டு,போன்றபின்பு நொச்சியுட கொழுந்துடன்முக்கழஞ்சி போட்டதி
லே குளிர்ந்தசலம் விட்டுநன்றாயிடியே. ... ... ........ ..... (௮௨௩)

இடித்த மருந்தெல்லா மொன்றாகச்சேர்த்து-யிரதம்விட்டு மாறு
மட்டு மிடித்தபின்பு, மடிததிடாக் கறியுப்பு பழம்புளியுமெளிதாய்-வ
கைக்கொரு கழஞ்சியிட்டு வாட்டுவாட்டு,துடித்திடா துதிர்ந்தபத மி
றுகத்தானே-சூட்டடா குளிர்ந்தசலம் தெளிந்திடிக்கச்சேரும்,படித்த
ரம் விடாமலே தொண்ணூறுகடிகை-பதியவே யிடிப்பதினாற் பாங்கா
கும்பாரே, ............ ................................. ...... (௮௨௪)

பாங்கான பதங்கமப்பா மயில்கழுத்துப் போலாம்-பக்குவத்தில்
சுண்டைக்காய் பிரமாணத்திலுண்டை,தேங்காமல் குளிகைகட்டி நிழலு
லர்த்தி-சிறந்ததொரு புதுக்கலத்திட்டாறினாற்போல் நீங்காமல் தலைமு
ழுகி பேதிவாங்கு- நேயமுட னந்திசந்தி மூன்றுநாளப்பா, வாங்காம
லேழளாநாள் பொசிபொண்டுண்டை-வாசாகப் பனைவெல்லம் பொதிந்
து மருந்தருந்தே. ... ... ... ... (௮௨௫)

மருந்தருந்தி யேழனைநாட் கப்பாலோர்நாள்-மருந்துவிட்டுவொ
ன்பதாநாள் தலையைமுழுகு,பொருந்தலால் நல்லெண்ணையொன்றை
விட்டோர்நாள்-புகழ்பெறவே பதினைஞ்சு முழுக்குக்கப்பா,விருந்தா
க நோய்களெல்லாம் பறந்தோடிப்போம்-விபரமனை யாப்புடனே ப
வுத்திரமூர்த்திரு,மிருந்தெழுந்து பறந்தெழுந்தகறப்பனொடுகிரந்தி-யே
றுகின்ற சூலைவகை பதினெட்டும்போமே. ... (௮௨௬)

சூலைபதி னெட்டும்போம் பிளவைகளும்போகும்- சூசிநாவா
ய்வுமுதல் பலவாய்வும்போகும், வாலையாய்ப் புடைத்தெழுந்த வீக்க
மொடுபுண்கள் - வளர்கறடு முறடுகளும் வளர்சூலைக்கட்டும், காலமு
ட மாக்கியது மேகவகையோடும்- கைச்சூலை வாய்ச்சூலை காசவகைகு
ட்டம்,பாலையிலே படுதீப்போல் நோய்களையும்பறிக்கும்-பத்தியமும்
சகலமுமாம் பன்றிமனையகற்றே. ............................(௮௨௭)

அகற்றுவது செம்மனையு மாடுபன்றியினைச்சி- யப்பனே பச்சை
மீன் பூசினிக்காயுளுந்து,அகற்றிவிடும் பத்தியங்க ளாறுதிங்கள்கடந்தா
லாமடாவெல்லாந்தா னசடுமொன்றில்லை,அகற்றிவிடும்பத்தியங்க ளே
கமாய்த்தா-னப்போது வீக்கங்கள் பூண்டபோது,அகற்றிவிடு மிதிபாக
ல் கியாழம்போட்டருந்த-அசடெல்லாம்தீர்ந்துவிடுமழகுதருந்திறமே

அனையாப்புக்கு.

திறமான வனையாப்பு தீரவப்பா-செப்புவேன் வேர்க்கொம்புதி
ப்பிலியோர்பலமாம்,திறமாக மிளகோமம் வகைக்குமுக்கழஞ்சி-சிறந்
தவொரு பெருங்காய மிருகழஞ்சியப்பா,திறமாக வெள்ளுள்ளி பரு
ப்பஞ்சுகழஞ்சி-சீர்சிறந்த பனைவெல்லமிரண்டனையா மஞ்சள்,அறமா
னசீரக மறுகழஞ்சியப்பா-வதிலிடவே கரிப்பான்சா றதுவுமதுபாரே

பாரப்பாகரியசீ ரகந்தான்பேறு-படவேமுக் கழஞ்சியிவையொ
ன்றுகக்கலந்து,ஏரப்பா பித்தகாமாலை யனையாப்புக்-கேரண்டத்தயி
மது மண்டலங்கால்கொள்ளு, சீரப்பாசூரணத்தி லின்னமனுபானஞ்
சேர்ந்திடவேநோய்களின்னம்செப்புவேன்கேள்,காரப்பாவெலுமிச்
ம்பழச்சாற்றிற்பிரட்டி-காயவைத்துமூன்றுதினமிப்படியேசெய்யே

செய்வதுதா னனைப்பலந்தா னப்பாயெல்லாந்-திறமாக வுலர்
தியே தூளாக்கிவடித்து,உப்வதற்கு யெட்டொன்று சீனிகலந்திட்டு-
டுங்காதபித்தகாமாலைக்கூட்டு,வெய்வதுதான்பிரமாணம்வெருகடித
ன்கொள்ளு-விருபோதுமண்டலமுமனுபானங்கேள்,நைவதில்லை ப
ச்சாறு தேனிலேயருந்து-நலமான விஞ்சிதேன்தன்னையுமருந்தே...

அருந்தினல் தீருகிற நோய்தானப்பா-ஐயனேபுலத்தியனே மச்சகேந்திரா, வருந்தியறிந்திடவல்லநன்மாணக்கா-வகுக்கிறேன்பிலத்தகாமாலை வகையாறும்,பொருந்தவே சொல்லுகிறேம் வெள்ளைமஞ்சளிரத்தம்- பொல்லாதநீலமொடுவறட்சியிதுவல்லால், திருந்தாகவூதுகாமாலையோடு-தீர்ந்துபோம் பத்தியங்கள் சிறுநாளையுப்பே. ......(அ௱௨)

## தாளிசபத்திரிவடகம்.

உப்பில்லாப் பத்தியங்கள் சுறுக்காகவொழியும்-வொழியாதவியாதிகட்டுவுரைக்கிறேன்பார், ஒப்பில்லாதாளிசபத்திரியாம்வடக-மூத்தமனேவகைகேளுதாளிசபத்திரி,எய்ப்பிலாக்கழஞ்சியொடுமுப்பத்தியொன்று-யிதற்கிசைந்த திரிகடுகு திரிபலையுமேலம்,செப்பினல் சாதிக்காய்பத்திரிகிரும்பு-செவியமொடு யிலவுங்கப்பட்டை யிவைகூட்டே....()

கூட்டடா மதுரமொடு வாய்விளங்கமோமம்-குருசாணிசிறுநாகஞ் சீரகமிரண்டாத்தை,கூட்டடாவால்மிளகு மக்கிருகாரம்-கொத்தமல்லி தெசாபுரங் கூகைநீரும்,கூட்டடாசிறுதேக்குவமுக்கிருவேரும்-கூறரிய பேரீத்து முந்திரியாம்பழமும்,கூட்டடா வகையொன்று கழஞ்சியொன்று-குமுறவே காயவைத் திடித்துத்தூளாக்கே. ........ (அ௱௪)

தூளாக்குதாழிதனி லாவின்பாலாம்-தோன்றவேரொண்டுபடிவிட்டுவேடுகட்டி,தூளாக்கிவைத்தபொடிபுட்டவியில்வைத்து-சூட்டுடனேதேன்வார்த்து வாட்டியுண்டைகட்டு,தூளாக்கிப்பிரமாணங் கொட்டைப்பாக்களவு-சூட்சமாயுருட்டிய துபுதுகரகத்திட்டு, தூளாக்கிப்படியந்திசந்தியிலோருண்டை-சுகமாகநொறுக்கியேமென்றுதிண்ணப்போமே

திண்ணப்போக் காசமொடு க்ஷயங்களோடிருமல்-தீராதயீளையென்னுஞ்சுவாசகாசந்,திண்ணப்போமந்தாரகாசம்வருங்காசஞ்சிலேற்பனத்தில்வருந்தொண்ணூற்றுறுரோகங்கள்,திண்ணப்போங்குன்மங்கள்நீர்கட்டுவாந்தி-தேகத்திலழல்காந்தல் நெஞ்செரிப்புத்தாகம்,திண்ணப்போஞ் சுரவீறு மக்கினியின்மந்தந்-தெளியாத மூன்றுவகையிளப்புந்தீர்ந்திடுமே. ............... ............... ............(அ௱௯)

தீர்ந்திடுமேயிரத்தபித்தம்வாயினல்கக்கல்-செய்கிருணிமூலரத்தமலக்கழிச்சல்போகுந்,தீர்ந்திடுமேபத்தியங்கள் புளிபுகையுங்கைப்புத்தீண்டாதமாங்கிசங்கள்பச்சையொன்றுமாகா,தீர்ந்திடுமேதாதுநட்டம்மேகவகைகூடச்-சித்தியாம்வெள்ளாட்டுப்பால்தான்கூட்டத், தீர்ந்திடுமே தாளிசபத்திரியாஞ் சூரணம் - செப்புவேன் புலத்தியனேசெப்புவேனே. ............................... (அ௱எ)

## தாளிசபத்திரிசூரணம்.

செப்புவேன் தாளிசபத்திரி வகைதானப்பா-திறமாகநாற்பதுவே கழஞ்சிகூட்டு,செப்புவேன் சீனியந்த யிடைக்கிடைதான்கூட்டு-திரிகடுகு திரிபலையும் சிறந்தவிரண் டேலம்,செப்புவேன்சாதிக்காய் பத்திரியுங்கிரும்பு-சிறுதேக்கு மதிமதுரம்சிறுநாகப்பூவும்,செப்புவே னிலவுங்கப் பட்டையும்பத்திரியும்-செவியமொடுவாய்விளங்கம் சித்தரத்தை கூட்டே. ... ...............................................(௮௱௮)

கூட்டடா வால்மிளகு வோமம்ரெண்டு - கோஷ்டமுடன் கோரோசனை தெசாபுர மக்கிருகாரம், கூட்டடா கொத்தமல்லி மூ.ந்திரிகைபேரீத்து - செப்பரிய கூகையுடநீருங்கூட்டு, கூட்டடா நிலப்பனைவே ரமுக்கிருமுத்தக்கா - சிலாமிச்சம் வேருடனே வெட்டிவேரப்பா, நாட்டடாதூதிவண்டங் காரியுடவேரும்- நல்லநெய்தல்கிழங்குடனே நெற்பொரியும்நாட்டே.......................................... ௮௱௯

நாட்டுயிந்தமருந்துவகைநாற்பதுக்குமப்பா- நலமாகவகைக்குமொருகழஞ்சிகூட்டு- கூட்டுயிவைபழுதகற்றிவெயில்காயவைத்து- குழுறவேயிடித்தபொடிவடிகொண்டுசீனி- கூட்டுவொன்ருய்க்கலந்தபின் புதுக்கரகத்திட்டு- கைக்கடங்காவெருகடிதா னிருபோதுமுண்ணு- பூட்டுவதுதேனிஞ்சிச்சாருகுமப்பா - புகழவருமாதளம்பழச்சாற்றில்போமே............................................ ௮௱௰

போமப்பாகாசவகைதொண்ணூற்ருறும் - பொல்லாதகாமாலையாறும்போகும் - போமப்பாசலருட்சைதாகஞ்சோபம் - பொருமலொடு ஈளைவலியிருமல்போகும் - போமப்பாவாந்தி யரோசிப்புதானும் - பூண்டகுன்மம்நெஞ்செரிப்புதேங்கல்காந்தல்- போமப்பாபித்தம்வட்டைதாதுநட்டம் - புகைச்சலொடுகண்மயக்கம்புண்பொடிகள்போமே ............................................ ௮௱௧

புண்பொடிகள்சிரங்குடனேகறப்பன்போகும் - புண்ணுகிவெந்தகெந்ததாளிபோகும் - புண்வெடியாஞ்சூலைகளுங்குட்டம்போகும்- பேர்பெரியவாயுவெண்பத்தாறும்போகும் - புண்பொடியாய்நோய்போகப்பத்தியத்தைக்கேளு - புகழ்துவரைமுளைத்தண்டு தூதுவளைசமூலம் - புண்பொடியாம்வெள்ளாட்டுப்பாலிதற்கு - பொல்லாதமாங்கிஷங்கள் புளிகைப்புவகற்றே.............................. ௮௱௨

## சௌபாக்கியசுண்டி.

அகற்றிவைக்கும்நோய்களுக்குமார்பிலாணி - யறைகிறேன்சவுபாக்கியசுண்டிதன்னை - அகற்றிவிக்குங்கரிசாலைபொடிதனைசமூல-மழகாகத்துரித்திட்டுநிழலுலர்த்தி - அகற்றிவைக்கும்படியிடித்துத்,தூளை

டிகொண்டு - மப்பனைவகையொன்றுபொடிபலமுமெட்டு- அகற்றிவி
க்குந் திரிகடுகு திரிபலையினோடு - மதிமதுரமோமம்ரண்டு தாளிசபத்
திரியே ........................................................ ௮௪௩

பத்திரியுஞ்சித்தரத்தை தெசாபுரமேலம் - பழுதன்றிவகைக்கொ
ருபலந்தான்கூட்டி - பத்திரியுஞ் சாதிக்காய் கிராம்புவகைமூன்று - ப
ண்பாகவதிவிடையம்சிரகங்களிரண்டு- பத்திரியாம்வால்மிளகுகொத்த
மல்லி - பாங்குடையவெந்தையமும்வகைக்கரைப்பலந்தான் - பத்திரி
யாய்க்கரயவைத்திடித்துவடிகட்டி - பழையபொடியிரண்டுமிதிற் பரு
வமுடன்விரவே ........................................................ ௮௪௪

விரவியதோர்பொடிகளுக்குப் பசுவின்பால்படிநால் - வினைய
முறக்குழம்பாகவற்றக்காச்சி - விரவியிடுபொடியதனைப்பாலிலிட்டுக்
கிண்டி - வேடுகட்டிநாலுபடியாலுள்ளாய்விட்டு - விரவிவைத்தமருந்
தந்த வேட்டுமேல்வைத்து - விரவடாதேன்படிதான் விட்டுக்கிண்டி-
விரவியதோரடுப்பேற்றிப்புட்டவித்தாப்போலே - வெந்தபின்புவாங்
கியம்பிலாட்டிவிடுமே ........................................................ ௮௪௫

ஆட்டியதைச்சுண்டைக்காய் பிரமாணமுண்டை - யப்பனைகட்
டியபின்னிழலுலர்த்தி - வீட்டிமையில்லாமலே நோய்பிலமுங்கண்டு-
விடிவேறமந்திக்கும் விரைந்துவொருவுண்டை- நாட்டுநீநறுந்தேனில்
இஞ்சியிஞ்சிச்சாற்றில் - நலஞ்சிறந்தமாதளையின்பழச்சார்தன்னில்-கூட்
டுமேவெலுமிச்சு நாரத்தம்பழச்சாற்றில் - குமுறவிளவெந்நீரில் கொ
ண்டிடநன்றாமே ........................................................ ௮௪௬

நன்றாகும்வியாதிகளையென்றுதின்னும் - நலங்கெடுக்குஞ்சூசிகா
கிராணிகுன்மமோடும் - குன்றாகும்வாய்வுகளு மதிர்ச்சி யுப்பிசங்கள்-
கூட்டோடேயோடுமடா அருவைதீரும் - நின்றுடும்பொருமலொடு
தாகம்வெதுப்பரோசி - நிலையாதகிராணிமந்தமுதலாய்த்தீரும்- சென்
றுடும்பலசுரமும் வெகுபேதிகழிச்சல் - தீராதவினைதீர்க்குந் தேகசுக
மாமே ........................................................ ௮௪௭

ஆமடாநெய்பாலுந்துவரையோடண்ட - மாட்டிரைச்சியுலர்த்தி
ன தும்வழுதலைப்பிஞ்சாகு - மாமடாதூதுவளைசமூலமதுவாகு - மவ
ரைப்பிஞ்சல்லாது பூலைத்தண்டுமாகு - மாமடாசிறுகீரை பொன்னாங்
காணி - அயிரைமீன்கெளிறுவிராலுலர்த்தினதுங்கூட்டு - ஆமடாவுப்பு
மிளகீருள்ளிதுவரை - வாகாகவெந்நீருமருந்தலாமே........... ௮௪௮

## சண்டமாருதக்கருக்கு.

ஆமடாநீர்ப்பாடு பேய்ப்பாடுமல்லா - லசீரணத்தில் மந்தமொடு

பலபேதிமிகுந்தால் - ஆமடாசண்டமாருதக்கருக்கு - அப்பனேதும்
பையொடுகுட்பைமேனி - ஆமப்பா தைவேளை சமூலமாக - வஞ்சுவ
கையொன்றுபெரும்பிடியதாக - ஆமப்பாசட்டியிலேதீயிலேகருக்கி-
யஞாச்சாம்பலானபின்பு கொட்டிசட்டி துடையே.......... அசகூ

துடைத்தசட்டிதிரும்பவுந்தானடுப்பிலேற்றித் - துடியானவெந்
தையமோழுக்கழஞ்ச் - உடைத்தகுளமடைப்பதுபோல் சிவக்கவறுத்
தப்பா - வொருபடிதான்சலம்விட்டுயெட்டொன்ருக்கி - மடைத்தலே
ப்பாச்சுவதாக வடித்துநீயருந்து - வயிறடைக்கும்பேதியொடு வாந்தி
யுப்பிசமும் - படைத்தவயன்போலடைக்குந் தாகம்போக்கும்-பணே
ப்பில்லாப்பொரித்தகஞ்சிபரிந்துகூட்டே........................ அ௱ய

## மணல்குடிநீர்.

பரிந்துசெய்யும் தாகமொடு அந்திரதாகம் - பலதாகங்கண்டாக்
கால் பண்பாய்மைந்தா - தெரிந்துவரு மணல்குடிநீர் செப்பக்கேளு-
சீனிமணல் கடுகுபோ லொன்றேகால் படிதான் - நெரிந்து போகாத
தொரு தாழிபெரிசதிலே - நீட்டடா மணல்கொட்டிச் சாமம்வறு தீப்
போ - லரிந்ததிலே போட்டரசங் கொழுந்துமப்பா - வழகாகப்பெ
ரும்பிடிதா னருத்ததிலேபோடு,கரிந்துடனே தீப்பற்றும் பருவங்கண்
டு-கண்கொண்ட வெளிப்பருத்தி யோமமிருகழஞ்சே. ...... (அ௱க)

ஓமமிட்டுப் பொரித்தபின்புவொருகுடஞ்சலந்தா-ஞெருமிப்பா
ய் மூகமாறி யுரத்ததிலேவிட்டு,தாமதமில்லாம லடுப்பேற்றிநன்ருய்-த
ணல்மூட்டி யடுப்பேற்றி யெரிந்துவெந்தநீரை,நேயமுடனேநிறுத்தி
தீயைத்தானும்-நின்றுபோகாதபடி புகைத்துவண்டுகட்டி,யேமமாய்த்
தாக்கிலொரு சொம்புநீரை - யெடுத்துவடிகட்டியே கொள்வதற்குக்
கொடுமே. ................................................ (அ௱உ)

கொடுத்திடவேமூர்ச்சைபோந் தாகம்போகும்-கொண்டபின்பு
சிறுதாக மெடுத்தால்பின்னு,மடுத்திடவே தாகத்துக்கணாசொம்புகொ
டுக்க-யடக்கிவிடும் பரிமாற்ற மானதாமதுவே,படுத்திடா தெழும்பிவி
டுந் தாகமொடுசோகம்-பறக்குமந்தக் குடிநீரால்பரிவுமிகவுண்டாம்,த
டுத்திடாப் படிசொன்ஞேம் சஞ்சீவிமருந்து-சாற்றினவிவ்வுற்பனங்க
ள் சார்ந்தவர்க்குமுனாயே. .................. .................(அ௱௩)

## அஷ்டகுன்மலேகியம்.

உரைக்கிறே னஷ்டகுன்ம லேகியத்தை-யொடுங்காத வாய்வுவலி
வயிற்றுநோய்போக, வுரைக்கிறேன்தைவேளை பிரண்டைகுப்பைமே
னிக்-சொவ்வொன்றுக்கொருபடியாஞ்சாறதனைக்கூட்டு, வுரைக்கிறேனி

லுப்பையுடன் புண்ணுக்குத்தானு-மோரஞ்சுமீரஞ்சு பலங்குடத்திலூ ட்டு,வுரைக்கிறேன் சாறுவற்றிக்குழம்பானபின்பு- வுண்மையுடன் புட க்கருக்கு மிடித்துத்தூளாக்கே. ... ........................... (அாருச)

தூளாட்டி வைத்தபின் பதற்குமருந்தப்பா-சொல்லக்கேள் திரிக டுகுவோமமோர்பலமாய்,தூளாட்டிரேகணியுமன்னபேதி-சுறுக்கான குரூசாணிக்காயுமுக்கழஞ்சி,தூளாட்டிவறுத்திடித்துமருந்துசேர்த்து சொல்பெரியபனைவெல்ல மஞ்சுபலம்கூட்டி, தூளாட்டுமுன்சாறு வ ற்றினதையுரலில்-துளிசிதருதேவழித்தெடுத்துவிடுபொடியைத்தூவே.

பொடிதூவிப் பனைவெல்ல முக்கூறிட்டு- பூண்டிடவேயிடித்தபி ன்பு பிரளவேயின்னம்,பொடிதூவிவெல்லமிட்டுநன்றாகவிடித்துப்-பி ன்புமதின்மேல் பனைவெல்லமுந் தூளான,பொடிதூவி யிடித்திடுவா ய்சரமமொன்றுக்கப்பால்-புனிதமா மயில்கழுத்தாம்நாகம்போல்தூ ளாம்,பொடிதூவிமருந்தைச் சூட்டுடனேதான்றிக்காய்-போல்குளிகை கட்டியொரு புதுக் கரகத்திடுமே. ........................... (அருசு)

புதுக்கரகத் திடுமருந்து மூன்றுநாளாறிப்-பின்புமொருகுளிகை தன்னை யந்திசந்திபூட்டு,இதுக்கடங்காவாயுவில்லையஷ்டகுன்மங்கெண் டை-யியல்பில்லா வுப்பிசங்கள்செரியாமைதீரு,மதக்குடம்போல்பெ ருவயிறு திரட்சிமலக்கட்டு-வாயுவுட னீரிரத்தம் வாங்கிவிக்குமல்லால், ஓதுங்கிநின்ற பலவாய்வுந் திசைகெட்டோடு- முண்மைகைப்பு புளிப் புமோர் புதார்த்தங்களொழியே ........................... (அருஎ)

## நாரத்தங்காய்லேகியம்.

ஒழிவதற்கு நாரத்தங்காய் லேகியத்தை-யுரைக்கிறேன் நாரத்தம் பழச்சாறுமிஞ்சி, ஒழிவதற்கு வழுக்கிருச் சாரணைவேர்சாறு - மொவ் வொன்று படிநாலு வுயர்ந்தநல்லவெல்லம்,ஒழிவதற்குப்யித்தஞ்சு பல ங்கரைத்தச்சாறு-மொருநான்கு படிகூட்டி யொன்றாய்க்காச்சி, ஒழி வதற்குப் பாகாகக் குறுக்கியப்பா-வுண்மையுடன் கற்கவகை யுரைக்கி றேனே. .. ........................... (அருஅ)

உரைக்கிறேன் திரிகடுகு ஏலமதிமதுர-முயர்தெசாபுரங்கோஷ்டஞ் சிற்றரத்தையோடு, ஊரைக்கிறேன்கொத்தமல்லிதாளிசபத்திரியு- மோ கோகோ முந்திரிகைப் பழமோர்பலமா,முரைக்கிறேனதிவிடைய ம க்கிருகார-முண்மைபெறும் வால்மிளகுசிறுநாகப்பூவு,முரைக்கிறேன் சாதிக்காய் பத்திரிகிரும்பு-ஒங்குகிரி பலையொடு குருசாணியோமம்()

ஓமந்தான் கெந்தபொடி கரியசீரகந்தா-னெவ்வொன்றுக் கரைப் பலமாயொக்கவெயில்காச்சி,நேமமாயிடித்துவடிகட்டியசூரணத்தை-

நேத்தியாய் பாகிலே தூவியேகிளறி,சாமமனைப் பதமாகக்கிண்டியபி ஞ்சீனி-தன்னையுமே பதினஞ்சு பலந்தான் தூவி,யேமமாய் பின்புதே னி ரண்டுபடிவிட்டு-யிளக்கியபின் நறுநெய்யோர் படிவிட்டுகிண்டே. ()

இண்டியதோர்லேகியத்தைப்புதுகலசத்திவிட்டு-கிருலையுடன்வ ண்டுகெட்டி நாலுதினமாறி,மண்டலந்தா னந்திசந்தி யருந்தினலப்பா- வளர்பித்தம் நெஞ்செரிப்பு மரோசியொடுவாந்தி,உண்டுவரத் தாபசுர ம் வாந்திபித்தரூட்சை - யுட்சூடுகிறுகிறுப்பு வாய்தலைநோவும், கண்ட வுடன் பறந்தோடு மக்கினியின்மந்தம்-கழன்றுமலநீர்க்கட்டுக காந்தலு ம்போய்விடுமே. ........................................(௮௯௧)

அயனாதிவடகம்.

காந்தலும்போம் பத்தியந்தான்புளிகசப்புமோரும்-கடிந்துவிடு மயனாதி வடகத்தைச்சொல்வோம்,தீர்ந்தவனைப்பொடியஞ்சுபலமோ டுகொந்தம்-தெளியூசிபிடிப்பதிலே மூன்றுபலஞ்சேர்த்து,ம்பாந்தகரிப் பான் சாற்றிலரைத்திரெண்டுபுடந்தான்-போட்டபின்புளவுமிச்சம்ப ழச்சாற்றிலரைத்து,பாந்தமா யிரண்டுபுடம்போட்டப்பாநல்ல-பெரு நாவல் பட்டைச்சா றரைப்பிரண்டு புடமாங்,கோந்தமொருகியாழவ லைக மருந்துதன்னைக்-கூறுகிறேன் வகையாகக் கூறுவேனே. (௮௯௨)

கூறுகிறேன் கரிசாலை வெள்ளைதொச்சி - குப்பைமேனி கழற்சி யொடு பொடுதலை வெற்றிலையு - மாறில்லாமுருக்கிலையீ சங்குகண்டங் காரி- மணிப்பிரண்டை தொண்டையிலை மாவிலிங்குகூட்டு - பேறுப டக்கொடுவேலி யமுக்குரா முக்குறண்டி - பேய்த்தேத்தான் பட்டை யொடு தலைசுருளிக்கொடியும் - வேறுபடா மலைதாங்கி வேரும்வகைக் கொன்று-விளம்பினேம்பலமஞ்சுதறிபாண்டத்தூட்டே........௮௯௩

பாண்டத்துமருந்துக்குச் சலமுமிருதூணி - பாச்சியேகாச்சடா நாலொன்றாய்க் குறுக்கி - பாண்டத்தில்வடிகட்டி விடுகுறுணியப்பா- பாங்கானவெள்ளாட்டுக்கோமயமுங்குறுணி- பாண்டத்தில்விடுபசுவின் கோமயமவ்வண்ணம் - பழையவிரும்புக்கிட்டம்நூறுபலம்நொறுக்கி- பாண்டத்திலிட்டபின்புபழச்சாறுநாலு - படிவிட்டுஅடுப்பேற்றிகுறு கினதுபாகே...........................................௮௯௪

பாகாகவிரண்டுபடியானபின்பு - பாச்சப்பாகற்கவகைதன்னைக் கேளு - வாகானதிரிகடுகு திரிபலைசிற்றரத்தை - மரமஞ்சள்கரியசீரக ஞ்சிவதையோடு- வேகாததெசாபுரம்வகைக்குமொருபலந்தான்-வெறு வோமமிரண்டுபலம் வெட்பாலைகிறும்பு - தேகாதிசீரகமுந்தாளிசபத் திரியுஞ் - சிறுநாகங்கோஷ்டமிலவுங்கமிலைவசேரோ,.......... ௮௯௫

சேரப்பாவகைக்குமரைப்பலங்களிவையெல்லாம் - தெறிக்கவே காயவைத் திடித்துச்சூரணத்திற் - பாரப்பாமூன்வைத்த காந்தஞ்செந் தூரம்- பரவிபொன்றாய்க்கியாழநீர்தன்னுலாட்ட- நேரப்பாவதனோடு வெள்ளுள்ளிப் பருப்பு - நிறுத்திரண்டு பலங்கூட்டு நிசசாதிலிங்கம்- வாரப்பாயரைப்பலந்தான் கூடச்சேரு - மைந்தனேபொரிகார மணி யும்வகைகேளே....................................................அசூசா

பொரிகாரமொருபலஞ்சாணகத்தில்-பிசைந்துதான்கழுவியபின் சுத் திகேளு,வரிதான நவாச்சாரம் சீனக்கார-மப்பனே வெடியுப்பு கல்லு ப்போர்பலமும், விரிவானபெருங்காய மரைபலமுங்கூட்டு-விளைந்த நெற்றுத் தேங்காய்தான் மூன்றுடைத்துக்கீறி,பரிவாக விவையெல்லா ம் கியாழநீர்கொண்டு பண்பாகவவ்விரண்டுசாமமரைத்திடுமே(அசூஎ)

அரைத்தவொரு மருந்ததனை துட்டுக்காசளவு - அப்பனே வில்லை யெனக் குளிகைகட்டி, நிரைத்திட்டு வடகமதை நிழலுலர்த்தி - நிலையா த வியாதிகட்கு மண்டலந்தானருந்து, துரத்திவிடுந் தேனிஞ்சிச்சாறு மனுபானம் - சூட்டநொச்சிற் சாறல்லால் வெள்ளுள்ளித்தயிலம், வி ரைத்தவொரு சாரணைவேர் வேப்பந்தோல்தயிலம் -வெவ்வேறே யுண் டுவர வியாதியொழிந்திடுமே. ....................................(அசூஅ)

ஒழிந்துவிடும் வியாதிக்கு வகையைக்கேளு - உள்ளான கோவை யொடுபிறநீர்க்கோவை, ஒழிந்திடுமே பெருவயிறு நீராமைகவுசி- யோ டுமே காமாலை விஷபாண்டுகுன்மம், ஒழிந்துவிடுமகுலைவையொடுமகோ தரம்பிலிகை - யொழியாத வெப்புடனே பாண்டெட்டுவகையும், ஒழி ந்துவிடும் புளிகைப்பு மோர்புகையுமாற்று - முப்பாகு மாங்கிசங்கள் வாய்வான தொழியே. ..............................................(அசூகூ)

## குன்மத்துக்கு

வாய்வான வலிகுன்மம் கிருமிகளும்போக - மருந்துகளுஞ் செ ப்புகிறேன் மச்சுகேந்திரா, வாய்வானதாறுமடாதிரிகடுகுமிந்து - வள ர்காய மோமமொடு கடுகுரோணி, வாய்வான தவ்விரண்டு சீரகமுஞ்ச மனுய் - வகையொன்றுகழஞ்சிமூன்றுகச்சேர்த்து, வாய்வானதறவிடி த்துக் குளிர்ந்தசலத்தாட்டு-மயனம்போலிருசாமமானபின்புவழியே.

வழித்தவொரு மருந்தையொரு கழற்சிக்காயுண்டை - வாகாகக்க ட்டியே நிழலுலர்த்தி, நெழித்திடாவாதகுன்ம மொழிவதற்கு - நீட்ட டா குளிகையொன்று குடிநீரிலூட்ட, வழித்துவிடும்வாத மடக்கிநொ ச்சிவேரு - மப்பனே யவ்விரண்டுபலமுங்கூட்டு,பழித்திடாச் சாரணை வேர் பலமுங்காலாம் - பதியவே யிருநாழிநீரில்போடே. ... (அஎக)

போட்டதெட்ட தாக்கியதில்குளிகைசேர்த்து - பூட்டவே வாதகுன்மம் பிரண்டேயோடும், நாட்டமுடன் பித்தகுன்மம் போகவப்பா-நல்மிளகுசாரணைவேர்சிரகமுமூன்று, கூட்டவேயவ்விரண்டுகெழஞ்சிதட்டி - துலக்கமுட னிருநாழிநீரிலிட்டு, ஆட்டவே யெட்டொன்றாய்க் குறுக்கிநீரி - லதில்குளிகைசேர்த்துண்ண வடாதோடுந்தானே (௧எ௨)

இரத்தபித்தகுன்மத்துக்கு.

ஓடவேரத்தபித்த குன்மத்துக்கு - மூனாக்கிறேனனுபான முண்மையாக, நாடென்னும் பருத்தியுட பிஞ்சிடித்துபிழிந்து - நன்னீரிலொருகுளிகை நயந்தேயூட்ட, சாடிடுமேயின்னமொரு அனுபானங் கேள் - சஞ்சீவிமாதளம்பழத்தோடுதட்டி, போடுமொருபடிசலத்தை யெட்டொன்றாய்க் குறுக்கிப் - பூட்டியிட விட்டோடும் பின்புவகை கேளே............................................... ௧எ௩

பித்தசிலேத்துமத்துக்கு.

கேளப்பாபித்தசிலேத்துமத்தில்வருங்குன்மம்-கெதிகெட்டேவோடவே கேளுகேளு - நாளப்பா வெட்டுக்கும் வெந்தநீரில் - நயமாக வொருகுளிகை நயந்துரைத்துவுண்ண - தாளப்பாசுத்தசல மோர்படி யெட்டொன்றாய்த் - தாக்கியபின்குளிகையொன் றுரைத்துத்தேனும்-வேளப்பாகாசிடைதான்விட்டருந்தத்தீரும்-வெப்புக்கு யரைக்கழஞ்சு கடுக்காயிருகழஞ்சே............................................ ௧எ௪

இருகழஞ்சு கடுக்காயும் வேப்பிறகுநன்று - யிஞ்சிச்சாற்றிலரைத்துவிள வெந்நீராதல்-விருதுடைய வாதமடக்கியும் நொச்சிவேரும்-வெற்றிபுரிசாரணைவேர்கியாழத்திலூட்டில் - உருவாகவுலர்த்திவிடுங் கிருமிகளுமாறு-மோவியம்பால் பொன்னுகு மன்மதனுமாகும், கருவிதனை யொருவருக்கும் காட்டாதேயப்பா-கருத்திறந்துசொல்லிவிட்டேன் கருத்துணர்ந்துபாரே. ......................................(௧எ௫)

பீனிசங்களுக்கு.

திறந்துசொன்னேம் புலத்தியனே மச்சகேந்திரா-தீராதபீனிசங்கள்செம்பித்தமோடு,பறந்தோடும்படிதயிலம்பாகமாய்க்கேளு-புண்புடைய விலுபபைவே ரழுக்கிறுவேரு,ம ம்பெரிய வில்வவேர் முத்தக்காசு-மப்பனே யெலுமிச்சம்நிலப்பனையின்கிழங்கு,கறங்குவியவேங்கையுட சிராயும்நாரி-காட்டில்வளர் பசளியுட கிழங்குகூட்டே...()

கூட்டடா நீர்வள்ளிக் கிழங்குகுறுந்தொட்டி - கூறரிய பூமிசக்கரைக் கிழங்குமல்லால், பூட்டடா சிறுதேக்குச் செண்பகமோடப்பா-பு

கழாக வகையொன்றுக் கோர்பலமாய் நொறுக்கி, நீட்டடா ஐங்குழ ணி சலத்திலிட்டு - நெருப்பேற்றி யெட்டொன்றாய்க் குறுக்கிப்பின் பு, மூட்டடா நொச்சிகஞ்சா நெல்லிநாகவல்லி - முக்கிய நல்லெண் ணை யாவின்பால் படியஞ்சுசேரே.... ... ... (௱எஎ)

சேரான பால்தயிலந் தன்னிலேதான் - திரட்டுதற்குக் கற்கவகை செப்பக்கேளு, பேர்மதூரமிலவுங்க மேலமஞ்சள்-பெருகுமிருசீரகமு ம் நன்னாரிகோஷ்டம், சாரமுள்ளசாதிக்காய் பத்திரிகிரும்பு - சந்தன ஞ்செஞ் சந்தனமு மகிலுங்கூட, சிறுபெற மஞ்சிட்டி செவ்வள்ளிக் கொடியும் - செண்பகப்பூச் சிறுதேக்கு தேவதாரந்தானே....(௱எஅ)

தானென்றபொன்மெழுகுநெல்லிவெட்டிவேரும் - சதகுப்பை கல்மதங்கல்னார்பூலாங்கிழங்கும், வேனென்ற வகைதனக்குக்கழஞ்சியஞ் சு - வெய்யலில்லை காயவைத்திடித்துப்பின்பு, கோனென்ற வாவின்பா லாட்டிவாங்கி - குழம்பாகப்பாலிலேகலக்கிவிட்டு, தேனென்றமொழி யாளைப் பூசித்தேதான் - சிறப்பாகக்காய்ச்சிட்டு வொன்றாய்ச்சேரே. ()

சேரடா கியாழகற்கம் பாலெண்ணையெல்லாம் - தியானித்துத் தீ மூட்டி யடுப்பிலேற்றி, பாரடா மூன்றுநாள் சிறுகொதியுமிட்டு - பத றாமல் நாலாநாள் பதத்திலேவடித்து, சீரடா வபின்மருந்து நாற்கழ ஞ்சி - தெளிந்த பச்சைக்கற்பூரமிருகழஞ்சிபூட்டு, வாரடா வெண்ணை யினச்சூட்டுடனேகலசம்-வளம்பெறவேதயிலத்தைவிட்டாறிக்கட்டே

கட்டடா குளிர்ந்தபின்பு தானியபுடமாகக் - கண்டுநெல்லிற்பத் துநாள் கிடந்தபின்பு, மூட்டடா தலைமுழுக்குநாலுநாட்கொருக்கால் முழுகிவிடு செவிநாசிதனில் தயிலம்நிறுத்து, விட்டடாசியக்காயலைப் பு வெந்நீர்கொண்டு - மேன்மையாம் புலத்தியனேமச்சகேசரிரா,மெ ட்டான பதமாக வாறவைத்து - விளாவாமல் முழுகுநன்று விலக்குவ துகேளே.... ... ... ... ... (௱அக)

கேளப்பா முழுக்கன்று மோர்புளிபால்தயிரும் - கிறுகிறுத்தபு கைக்கசப்பு பயறுபலகாரம், கேளப்பா விறைச்சியொடு கனிவகைக ளாகா - கிரமமுள்ள பத்தியங்கள் சொல்லிவிட்டேன், கேளப்பாதிருகி ற நோய்தானென்றைக் - கேடில்லைத் தயிலத்தால் கிருபைமெத்த,கே ளப்பா வதின்பெருமை பிணிசங்கள் வகையைக் - கிளத்துவேன்மைந் தாநீ கேளுகேளே.,... ... ... ... (௱அஉ)

கேளடா நீர்பொசி விரத்தமொடு சிராயும் - கிறுகிறுப்பாய்பரு த்திவிளைபோல் தெறிக்குமெல்லாம், தேளடா வறட்சியொடு பிணிசங் களெல்லாம் - திசைகெட்டு வோடுமே செங்கண்ணோயும்,கேளடாசெ

ம்பித்த மேகவகைகரப்பன் - குடிலமாய் வரும்வாய்வுகபாலவாய்வும், பாளடாவுறுதலைநோய்சிரசுநோயுடனே- பஞ்சிலிட்டதீப்பொரியாஞ் செந்தூரமுண்ணே.... ... ... ... (அஅ௧)

பத்தியம்.

செந்தூரங் குளிகைவகை பலவகைமாத்திரைக்குஞ் - செப்புவேன் பத்தியத்தைத் திறமாய்க்கேளு, விந்தப்பா சுத்திசெய்தவுப்புமாகு மிசைந்ததொரு துவரையுட பருப்புமாகும், பந்துசெரி யாவின்பால் நெய்யுமாகும்- பலகறிதான்முருங்கைபிஞ்சுமாகும், கொத்துலவுந் தாதுவளை சமூலமாகும் - கொடிவழுதலைப்பிஞ்சுங் கூட்டலாமே.

ஆமப்பா சிறுகீரை முளைத்தண்டாகு - மப்பனே யண்டமொடு சுருமீனாகும், ஆமப்பா முசலிடும்புவெள்ளாட்டுக்கண்ட - மழகானவிரால்மீனு முலர்ந்ததாகும், ஆமப்பாவெள்ளாட்டுப் பாலுமாகு-மாச்சரிய மிளகுடனே கருவேப்பாகும், ஆமப்பா வெள்ளுள்ளி சீரகமுமாகு - மப்பனே மற்றொன்று மடுக்கொணாதே.... ... (அஅ௨)

ஒண்ணாது பரிமாற்றம் வெந்நீர்கண்டா-லோகோகோ பத்தியங்களுரைத்துவிட்டோம், பண்ணுகுபத்தியத்தின் படிநின்றோர்க்குப்-பாழான தீவினைக ளில்லையில்லை; நண்ணுகமண்டலந்தான் மருந்துருந்து-நாடாது பிணியனைத்து மகன்றேயோடு, மெண்ணாதே விசாரங்கள் பண்ணிடாதே - யென்மக்காள் முத்தியும்வந் தெய்துங்காணே.(அஅ௩)

தருணசுரகியாழம்.

காணப்பா தருணசுர கியாழங்கேளு - கைகண்டபேராமுட்டிவேர்க்கொம்புஞ்சமனாய், காணப்பாதட்டியிருநாழிநீரில் - கியாழமதுயெட்டொன்றாய்க்குறுக்கிபின்பு,காணபபாவத்திசந்தி மூன்றுநாள்கொள்ள - கள்ளமெல்லாந்தீருமந்த ரூட்சைபோகும்,காணப்பாமூக்கன்றுமந்தசுரம்வந்தால் - கியாழமிடு தாம்பிரசெந்தூரங்கேளே.()

தாம்பிரசெந்தூரம்.

கேளப்பா தாம்பிரத்தைச் செந்தூரமாக்க-செடியான மருந்துவகை பிறித்துச்சொல்வோம், நாளப்பா சூதமொடு மனோசிலையுங்கெந்தி- நலமான வரிதாரம் தாவிலிங்கம், வேளப்பா நேர்வாள மக்கிராகார - மேலான நிறுவிஷமும் வெங்காரந்தானும், நீளப்பா காரீயமுருக்கிச்செம்பு - நேராக வகைக்கிரண்டு பலந்தான் தூக்கே. ......(அஅ௪)

தூக்கியே தாம்பிரத்தை யுருக்கித்தன்னைத் - தூளாகருவியேமருந்தோடொக்கத், தாக்கியே கற்றாழஞ் சாறுகொண்டு - சாதகமா யிருசாமம் தளரவாட்டி, தேக்கியேயடைதட்டிக் காயவைத்து - செம்மாக

புதுச்சட்டிக் குள்ளேவைத்து, தோக்கியே மறுசட்டி கொண்டுமூடி-துடியாக விளிம்பெல்லாஞ் சீலைசெய்யே ........ ... ...... (௮௮௯)

சீலைசெய்து மண்பூசி வாலுகையிலேற்றி - தேவிக்குப் பூசித்துத் திடமாய்நின்று, வாலையேயம்பளாயேகருணைவாழ்வே - மகத்தானபெரியோர்கள் மனமேயென்று, காலையிலே யெரித்திடுவாய் முத்தீதானுங் - கருவாக வெரித்துவர மைந்தாநீயும், மாலையிலே கணபதிக்குப் பூசைசெய்து - மறுகாலைச் செந்தூர மகத்தாம்பாரே........ (௮௯௰)

மகத்தான செந்தூரந் தூளாயாட்டி - மைந்தனே குழலிலேவாங்கிவைத்து, அகத்தான வியாதிகட்குக் கொடுக்கமைந்தா - வனுபானஞ் சொல்லுகிறே னப்பாகேளு, சுகத்தான திரிகடுகு வறுத்துஆட்டித்-தூளிலே வெருகடிதான் தேனிலூட்ட, உகத்தாகச்செந்தூரம் பணந்தான் தூக்கி - யுண்டிடவே தீருகிற நோயைக்கேளே. .......... (௮௯௧)

நோயேது அஷ்டகுன்மம் செரியாமையோடு - நுகர்ந்துவருஞ் சூலைசுர மகோதரம்வெப்பு, நோய்போகுங் காமாலை கிரந்திகுஷ்டம்-நோக்கினதோர் வெடிசூலை வண்டுகடிதானும், நோய்போகும் பெரும்பாடு ரத்தகாசம் - நுணுக்கத்தில் நுணுக்கமாந் தாம்பிரமப்பா, நோய்போகுமுட்கருவை யறிந்தாயானால் - நொடிக்குள்ளே வியாதிகளையுண்ணும்பாரே. ................................................(௮௯௨)

## தங்கபற்பசெந்தூரம்.

பாரப்பா தங்கபற்ப செந்தூரத்தைப் - பாடுகிறேன் தங்கமது பலந்தானொன்று, நேரப்பா யுருக்கியதைத் தகடாய்த்தட்டி - நினைவாகக் காச்சப்பா திரந்தான்பத்து, வாரப்பாதிரும்பவதைமேல்சாய்தட்டி-மாட்டியே நொருக்கிநீ வைத்துக்கொண்டு, காரப்பா மூசையிலேமருந்தைச்சொல்வோங் - கம்பந்தூராயனைத்துக் குகைக்குப்பூசே.... .. ()

பூசியந்த யிலையனைத்துக் குகைக்குள்வைத்து - பொற்பொடியையதற்குள்ளே போடுநன்றாய்த், தேசியேயிலைமருந்து வதற்குள்மூடி, சீலைசெய்து மண்செய்து சிறக்கமைந்தா, பேசியே மூந்திமுந்தி புடந்தானப்பா - பெருங்கோழி புடம்போடு பிலக்கநீயும், ஆசியேயிப்படிதானைந்துபுடம்போடு - மரகரா தங்கபற்ப மாகும்பாரே. (௮௯௪)

ஆகியதோர் தங்கபற்பம்செந்தூரத்தை - யப்பனேசாப்பிடவே வனுபானதனை, தேகியதோர் வியாதிகண்டு சேர்த்தாயானால் - தீருகிற வியாதியினிச் செப்பக்கேளு, பாகியதோர் சிலேற்பனந்தான் தொண்ணூற்றாறும் - பாங்கிவகைப் பதினாறும் பயித்திரண்டுமேகம், போகிய

தோர் குஷ்டமெனும் புருக்கிச்சோகை - போகுமடா வுண்டவுடன் போகுந்தானே. ........................................(௮௯௫)

## சூதகற்பூரம்.

தானென்ற சூதகற்பூரந் தன்னை - சாதகமாய் சொல்லுகிறேன்சார்ந்துகேளு, தேனென்ற சூதமொரு பலந்தான்றெண்டு-திறமாகப்பச்சைமஞ்சள் சாற்றாலாட்டி, வானென்ற சாமம்றெண்டு ஆட்டிவாங்கி-மறுபடியு முலர்ந்தமஞ்சள் கியாழங்கொண்டு, மானென்ற விருசாம மாட்டிவாங்கி - மைந்தனே மஞ்சளிலைக்குள்ளேவையே.. .... . (௮௯௬)

வைத்ததொரு சூதகத்தை யிலையால்மூடி - வாகாக நூல்சுற்றிச்சுட்டிக்குள்ளே, வைத்ததொரு சாறுவிட்டு வேடுகட்டி-மருவியதோர்புட்டுப்போ லவித்துவாங்கி, வைத்ததொரு புட்டெடுத்து மஞ்சள்சாற்றால் - மாட்டடா வொருசாமம் பழச்சார்கொண்டு, வைத்ததொருசாமம்நீ யாட்டிப்பின்பு - மறுபடியு மழிஞ்சிவேர் சாற்றாலாட்டே(௮௯௭)

ஆட்டியே யொருசாம மெடுத்துக்கொண்டு - அப்பனேசீனமதிற் பலந்தான்றெண்டு, கூட்டியே மஞ்சள்சா றதனால்நீயுங் - குழறவே யரைத்ததனைக் குப்பிக்கேற்றி, நீட்டியே யெழுசீலை மண்ணும்பூசி - திணவாகக்குப்பிவாய் வளப்பக்கல்லால், மூட்டியே பொதித்ததனை யடைமண்கட்டி - யுலரவே தாழிக்குள் மணலைக்கொட்டே. ...(௮௯௮)

மணலையிடு நாலுவிரல் கனந்தானீம - மைந்தனே குப்பிவைத்து மறுபடியும்நீதான், மணலையிடுதாழியுடகழுத்துமட்டு - மாட்டடாகாடாக்கினி மதித்துநன்றாய், மணலையிடு பனிரண்டு சாமம்நீயு - மடியாம லெரித்தாறி வாங்கிவைத்து, மணலையிது குப்பிதனை யுடைத்துப்பாரு - மல்லிகைப்பூப் போலிருக்குங் கற்பூரந்தானே. ............(௮௯௯)

கற்பூர முண்பதற்கு வனுபானங்கேள் - கலரவே திரிகடுகு வெதுப்பியாட்டி, கற்பூரம் பணவிடைதா னென்றுதாக்கி - கருத்துடனே வெருகடிதான் பொடியுங்கூடக், கற்பூரந் தேனிலே குழைத்துக்கொள்ள - கட்டாக விருபதுநா ளுண்டுகாண, கற்பூர மஷ்டகுன்மம் பயித்தெட்டுவாதங் - கடிதான மகோதரங்கள் சூலம்பாமே........(௯௱)

சூலைபோம் பதினாறு கிரந்திகுஷ்டம் - சொறிசிரங்கு பதகரியுந்தாமரைகள்நாலும், சூலைபோம் வெடிகறப்பன் சன்னிதோஷம்-சூசிகா வாயுவொடு சிலேற்பனகாசம், சூலைபோம் புலத்தியனே யச்சகேந்திரா - சுகமிகுந்த மெய்ஞ்ஞான குணவிநோதா, சூலைபோம் நேத்திரத்தில்தோன்றுரோகம்- மெதான்ணூற்றுஅறுவகையுந்தூரப்போமே.()

## மண்டூகசெந்தூரம்.

போகுமப்பா வியாதியெல்லா மண்டூகத்தைப்- பொசித்திடவே செந்தூரப் போக்கைக்கேளு,பாகுமப்பா நத்தத்திற்புராதனக்கிட்டம் பார்த்தெடுத்துக் கொண்டுவந்து வுலையிலூதி, ஆகுமப்பா கோமயத்திற்றோய்த்துத் தோய்த்து - அஞ்சாறு திரமெடுத்து அசரலூதி,சாகுமப்பா கல்லுரலுக் குள்ளேபோட்டு-சாதகமாய்க் கட்டப்பாறைதன்னாலாட்டே ........................................ (௯௰௨)

ஆட்டியதோர் தூளெடுத்துக் கல்வத்திட்டு-அப்பனே கரிப்பான் சார்குமரிச்சாறு, ஆட்டியதோரிருசாமமரைத்துவாங்கி-யுத்தமனேவில்லைசெய்துவோட்டில்வைத்து,மாட்டியதோர்மேலோடுகொண்டுமூடி-மண்செய்து வுலரவைத்து மைந்தாநீயும், மூட்டியதோ ரொருவடுக்கு மூழந்தான்மட்டும்- மூதறவே யோடுதனைய தன்மேல்வையே(௯௰௩)

வைத்ததொரு வோட்டின்மேல் கச்சுமட்டும் - வாகாக வெருவடுக்கி யுடைவுக்கெல்லா, மெய்த்ததொரு பொடியெருவை நிரம்பக்கொட்டடி - யியல்பாகப் புடம்போடு மூப்பதப்பா, அய்த்ததொரு புடந்தோறுங் கரிப்பான்சாற்று - லரைத்துநீ போட்டிடுவா யடைவாய்மைந்தா, மெய்த்ததொரு புடமங்கே மூப்பதானால் முருக்கம்பூப் போலாகும் செந்தூரம்பாரே.......................................... (௯௰௪)

பாரப்பா செந்தூரம் பணந்தான்தூக்கிப் - பஞ்சதாரையிலொரு வெருகடியுங்கூட்டி,நேரப்பாகுஞ்சரத்தினறுகம்வேரும் - நீபொடித்து வெருகடியில் பாதிசேர்த்து, ஆரப்பா வாவிநெய்யில் குழப்பிக்கொண்டு - அடைவாகப் பத்துநா ளருந்தினாக்கால், வாரப்பாநாம பெல்லா மழுர்தழுறி-வர்த்திக்குந் தாதுவெகு வாகும்பாரே. (௯௰௫)

வெகுவாகுஞ் செந்தூரம்பணந்தான்தூக்கி - மென்பொடிதான் திரிகடுகு வெதுப்பியாட்டி, வெகுவாகுந் தேனிலேகுழப்பிக்கொண்டு-வெருகடிதான் பிரமாண மிருநேரமுண்ண, வெகுவாகுமண்டலந்தான் தின்றபேர்க்கு-வெல்லுகிற வியாதிகளை விபரங்கேளு, வெகுவாகு மெரிகுன்மமத்திகுன்மம்-மிஞ்சிவளர்பித்தகுன்ம மற்றுப்போமே.

போகுமே அஷ்டகுன்ம மகுலைவெப்பு - பொரியாமை யெரியாமை ஆனந்தவாய்வும், மேகுமே சுரபாண்டுபித்தபாண்டு - வீக்கமதில் வருஞ்சூலை விரணந்தீரு, மாகுமே சீரகத்தைவெதுப்பியாட்டி-யப்பனே பணவிடைதான் நாலுதூக்கி, தாகுமே சீனியதில் வெருகடியுங்கூட்டி - சாப்பிடவே மண்டலத்தில் விபரங்கேளே. ........ (௯௰௭)

கேளப்பா வாதம்போம் பித்தம்போகும்- கெடியாகச்செந்தூர
த் திப்பிலாதி, சூளபபா சூரணத்தில் வெருகடிக்குள்ளே- சுகமானதே
ன்விட்டு மண்டலந்தானுண்ண, நீளபபாவறட்சிபோஞ்சிலேற்பனரோ
கம்-நீண்டவகை தொண்ணூற் றாறும்போகும், வாளபபா காமாலைபா
ண்டுரோகம்-வண்டுகடியெலிகடியு மகோதரமும்போமே... (௯௱௮)

காரீயச்செந்தூரம்.

போமபபா மேகங்களிருபத்தொன்றும்- போவதற்குச்செந்தூர
ம் புகலக்கேளு, காமபபா காரீயம் பலந்தானஞ்சு- கலரமே யுருக்கிய
தைச் சட்டிக்குள்ளே, ஆமபபா ஆவரைத்தோ லரும்புபோட்டு-மவை
வகைக்குரெண்டுபலமரிந்துவிட்டு,வேமபபாவொருசாமம்வறுத்தாயா
னால் - வெள்ளையாய்த் திரும்பவதைக் கிண்டிகிண்டே........ (௯௱௯)

கிண்டலா மயில்கழுத்து நிறம்போலாகும் - கெடியாகத்திரும்ப
வது மஞ்சள்போலாம், கிண்டிவரச் செந்தூர மருணன்போலாம்- கே
ள்மகனே குழாயிலே யடைத்துக்கொண்டு, கிண்டியதோராவரையை
ச் சமூலம்வாங்கி - கேளதன்மேல் புல்லுருவி விளாம்பிசின்பொடித்து
க், கிண்டியே கதலித்தோல் பழந்தானுகல் - கிடைச்சதொன்றில் சர்க்
கரையுங் கூட்டுகூட்டே........................................ (௯௱௰)

கூட்டியதோர் மருந்திலே வராகனுவு - கூட்டவதில் செந்தூரம்வ
ராகனொன்று, நீட்டியதோர் தினமாறவு ணச்சொல்லு - நிரிழிவும்பி
றமேகம்நிவிர்த்தியாகு, மாட்டியதோராவரையைத்தயிலம்வாங்கி-மை
ந்தனே செந்தூர மூண்ணச்சொல்லு, ஆட்டியதோர் மேகங்களிருப
த்தொன்று - மதிர்குலை பிளவையவை யடங்கும்பாரே..... (௯௱௰௧)

அப்பிரகசெந்தூரம்

பாரபபா பிறமேகங் கழிச்சல்போகப - பாடுகிறே னபபிரகசெ
ந்தூரத்தை, யாரபபா விதின்பெருமைகாணவல்லா - ரபபிரக மேதெ
ன்றால் சத்திநாதம், போரபபார் ரோகங்க ளிதனைக்கண்டாற் - பொரி
விட்ட பஞ்சுபோல் பொசிங்கிப்போகும், மேரபபா காயசித்திக்காதி
யாதி - மேகமென்ற விருபதுந்தான் விழலாங்காணே ....... (௯௱௰௨)

காணநின்ற வபபிரகங் கிருஷ்ணவர்னங் - கனக்கவொரு பலம்ப
த்துத் தூளாயாட்டி, பூணநின்ற கல்லத்தி யாலரசு - புகழான அத்தியி
லைநாலுந்தோலுந் - தோணநன்று யிடித்ததனைத் தண்ணீர்வார்த்து-
திவைத்தவதை யிரண்டுதின மூறவைத்து, ஆணநின்றவூறல்கொண்டு அ
பபிரேக - முத்தமனே யிருசாமங் கல்வத்தாட்டே......... (௯௱௰௩)

ஆட்டியே யெருக்கிலையில் வாங்கிவைத்து - அபபனே பாத்திய

தை பெருக்கந்தோலால், மூடடியே பொதிந்துநீயெருவடிக்கி - மூத
றவே வற்காலி புடந்தான்போடு, நீடடியே ஆறுகின்ற தண்ணீர்விட
டு-நினைவாக விப்படியே புடந்தோறுந்தான் - நாட்டியே புடமேது
விருபத்தொன்று-நயமாகப்போட்டுவரச்செந்தூரமாமே ... ௯௱௰௪

ஆமப்பாசெந்தூரங்காவிபோல - வாகுமடாவெடுத்ததனையடை
த்துக்கொண்டு - ஓமப்பாசெந்தூரஞ் சலத்திற்போட்டா - லுள்ளட
ங்குமிதக்காதவுறுதிமெத்த - போமப்பாவெகுதூரம் தொட்டதெல்
லாம் - பொன்னாகுமிதிற்சூதம்புகுந்துதானால் - நாமப்பாவிதில்சித்தி
யனேகம்பெற்றோம் - நாதாக்கள்பலமுகமாய்ப்பார்ப்பார்தானே... ()

தானென்றசெந்தூரம்வராகன்தூக்கித்-தனித்தேதானிருபதுநாள்
சாப்பிட்டாக்கால் - ஊனென்றமேகங்களிருபத்தொன்று - மோடிப்
போந்துலவுடலிருக்கிக்கட்டு-மானெல்றக்ஷயரோகந்தொண்ணூற்று
றாம் - வாடைபட்டால்நிமிஷத்தில்மாண்டுபோகும்- தேனென்றமொ
ழியுடையாளெந்தநாளுந் - தேகத்லைதநீக்காள்காண் சிறந்துவுண்ணே.

இரசசெந்தூரம்.

உண்ணுகிறசலக்கழிச்சலனைத்துநன்று - யொழியுகிறசெந்தூரமு
றைக்கக்கேளு - உண்ணுகிறசூதமொரு பலந்தான்பத்து - உத்தமனே
சுத்திசெய்துவுடடக்கேளு - உண்ணுகிறசுத்திசொல்வேன் மஞ்சள்செ
ங்கல் - வொடடடையின்தூளுடனேயுகந்துசெய்து - உண்ணுகிறவெ
ங்காரம்பலந்தான்முற்ற - வுற்றநெல்லிக்கெந்திபொரு பலந்தால்மூ
ல்றே ........................................................ ௯௱௰௬

மூன்றுகவிதுரொண்டும்பொடிதான்செய்து- மூதிரவேகலசமொ
ன்றுசிறிதாய்வாங்கி - மூன்றுனகலசத்தில் பொடிபாதியிடடு - முறை
யாகவதின்பிறகு சூதம்விடடு - மூன்றுனகால்படிதான் குமரிப்பூவும்-
மூன்னிடடுப்பின்புநீ பொடியுமிடடு - மூன்றுகுமுருவிதனைச் சமூல
மாடடி - முன்மருந்துமடைமருந்துமூடுமூடே........... ௯௱௰௮

மூடியேவோடுவைத்துச் சீலைசெய்து - முறையோடே யிப்படி
யேமூச்றுசீலை - நாடியேசெய்தபின்புபானைக்குள்ளே - நயமாகக்கு
றுணமணல்நடுவேகொடடி - நீடியேகலசத்தை பானைக்குள்வைத்து-
நினைவாகச்சீலைசெய்துமண்ணுஞ்செய்து - ஆடியேதொண்ணூறு கடி
கைதீதா - றுறமூட்டுசெந்தூரமுருக்கம்பூவே............ ௯௱௰௯

முருக்கம்பூபபோலிருக்கும்செந்தூரத்தில்- மூன்றுபணந்தூக்
கமதில்நிறுத்துக்கொண்டு - பெருக்கவேதேனிலே மண்டலந்தானுண்
ணு - பிரானசலக்கழிச்ச லனைத்தும்போகும் - முருக்கவேயெலும்பு

ருக்கி கிரிச்சினங்களாற - மூடடினமோபிறமேகஞ்சுவாசகாசஞ்: சரு
க்கவேகிருணிபோம் பெரும்பாடுபோகும் - துயர்தீருஞ் சுகமாகக்
கொள்ளச்சொல்லே ...................................................... ௯௨௰

## இரசபற்பசெந்தூரம்.

சொல்லக்கேள் ரசபற்பசெந்தூரத்தைச் - சூடடுகிறேன்புலத்திய
னேசுருக்கமாகச், சொல்லக்கேள் சூதமொருபலந்தான் தூக்குச்-சுகமா
ன கெந்தகந்தான்பலந்தான் தூக்கு, சொல்லக்கே ளுருவியுபபுபலங்கா
ல்சேர்த்து - அவளவே யிதைமூன்றுந் தா ளாயாட டிச், சொல்லக்கேள்
தாம்பிரத்தாற் சிமிளுண்டாக்கிச் - சூடடுகிற மருந்துவகைதொகுத்து
க்கேளே... .......................................................(௯௨௰௧)

கேளபபா யித்துபபுக் கழஞ்சிதூக்கிக் - கெந்தகந்தான் பொடியு
டனே சேர்த்துநீயும்,வாளபபாசிமிளுக்குள்பொடியைத்தூவி-மைந்த
னே சூதத்தைநடுவேவைத்து, நீளபபாமூன்பொடியை மேலுமூடடு-
தினவாக மூடியதைக் கம்பிகொண்டுகட்டி, கேளபபாசீலைசெய்து ம
ண்ணுஞ்செய்து - குக்குடத்தின் புடம்போடு செந்தூரமாமே(௯௨௨)

ஆமபபா செந்தூரம் பணந்தான் தூக்கி - பாவலாயின் விதைப
பொடியில் விளாம்பிசினுங்கூட்டி, நாமபபா தேனிலே குழைத்துக்
கொண்டு - தலமாக வெடடுநாள் தின்றுயானாற், போமபபா சலக்கழி
ச்சலெலும்புருக்கிச்சூலை-புண்போகு மின்னமொரு செந்தூரம்பாரு,
வேமபபா வியாதிகள்தான் பருத்திவேர்த்தோல் - விபரமுடனுரித்து
நீ நனையபபோடே. .......................................... (௯௨௩)

போடடேதா னூறியபின் மறுநாள்வாங்கிப - புகழாகபபிசைத்
துமந்தத் தண்ணீர்வார்த்து, நாடடேதான்கெந்திபத்துச் சூதம்பத்து-
நலமான வரிதாரங் கழஞ்சியஞ்சு, நீட டேதான் நாற்கழஞ்சிகெவுரிதூ
க்கு - நேராக வொருசாம மாடடிநீயும், மூடடேதான் குமரிச்சாறு
கொண்டுசாம - முலர்பதத்திற் றூளாக்கிக் குபபிக்கேற்றே. .. (௯௨௪)

எற்றியே சீலைமண்தா னேழுசெய்து - யியல்பாக வுலர்ந்தபின்பு
தாழிக்குள்ளே, மாற்றியே மண்ணுவு விரல்களமிடடு - மைந்தனே கு
பபிவைத்துவாய்மூடாமல், சாற்றியே குபபிவாய்திறந்துவைத்துச்-சா
தகமாய் கழுத்துமடடு மணலுங்கொடடிப, போற்றியேநாற்சாமமெ
ரித்துநன்றுய்ப - பொங்கினால்சலாகைகொண்டுகிண்டியாற்றே(௯௨௫)

ஆற்றியே நாழிகைதான் முபபதானு - லபபனே குழிக்குள்ளேத
ண்ணீர்விடடு, ஆற்றியே குபபிதனைக் குழிக்குள்வைத்து - வாறியபின்

துளாக்கி பதனேடொக்க, வாற்றியேமுன்போலெகெந்திவீர - மரிதா
ர மந்தநிலையாகத்தானே, ஆற்றியே குப்பிக்குள்முக்கால்வாசி - யமை
த்துநீ மூன்றுதிரஞ் செந்தூரமாக்கே......................(கூஉசு)

ஆக்கியதோர் செந்தூரம் பணந்தான்தூக்கி - யனுபான மறிந்
தேதான் வியாதிக்கெல்லாந், தாக்கியதோ ரஞ்சுநா ளுன்னவேதான்-
சகலசங்க நோயெல்லாம் சாடிப்போகும், பாக்கியமேசெய்தவர்க் கி
ந்தநூல்தான் - பாவியென்று லாகாது பத்திவேணும், தேக்கியதோர்
செந்தூர மின்னஞ்சொல்வோம் - செயராசப்பிரளையமென்ற செந்தூ
ரந்தானே.......... ............... .................. ..........(கூஉஎ)

செயரசப்பிரளயம்.

தாமென்ற சூதமது பலந்தான்மூன்று - சாதகமாங் கெந்தியெ
ரு பலமிரண்டேகால், தேமென்ற செம்முள்ளிச் சாறுவார்த்துத்-திர
மாகநாளொன்று திரளவாட்டி, மாமென்றதக்காளி மணத்தக்காளி- மை
ந்தனே சாறவிட்டுத் தினந்தானொன்று, கோமென்ற செருப்படிச்சா
ர் தினந்தானொன்று- குறையாமல் மாதளஞ்சார் தினந்தானொன்றே.()

ஒன்றாக மூன்றுதின மாதளஞ்சா - ருத்தமனே மூன்றுதினஞ்செ
ம்பருத்தம்பூச்சாறு, ஒன்றாகவுலர்த்தியதைத் தூளாயாட்டி-யுறவாகக்கு
ப்பிக்குள் ளேபூசிலைசெய்து, ஒன்றாக வாற்றியபின் மருந்துதன்னை-யுற்
பனமாய்க் குப்பிமுக்கால் வாசியிட்டு, ஒன்றாகக் குப்பிவாய்வலப்பக்
கல்லா - லுறமூடிக் கவிசிக்க மருந்துமேளே..................(கூஉகூ)

கேளப்பா கடுக்காயுங் குளவிமண்ணுங் - கெடியான விந்தாப்புக்
கோலரக்கு, நாளப்பா பழங்கிட்டங் கருவேலம்பிசினும் - நலமான
பொன்மெழுகு வெள்ளைகல்லு, மாளப்பா விவையெல்லாம் செங்கரு
வாலரட்டி - யப்பனே சுண்ணமுடன் வெல்லங்கூட்டி, நீளப்பா முன்
கருவ லாட்டிப்பின்பு - நேராகப் பழச்சாறு விட்டேயாட்டே... ()

ஆட்டியேதோர் மருந்ததுவும் பிசின்போலாகு-மப்பனேகுப்பி
வா யடைத்துக்கட்டி, நீட்டியேயோட்டுப்புக் குள்ளேதாழி - நீவைத்
துநாற்குறுணி மணலுங்கொட்டி, நாட்டியேதாழிமுக்கால்மணலுமிட்
டு - நலமாகக் குப்பிதனை நடுவேவைத்து, மூட்டியே மூடாமல் நால்வி
ரல்தான் தெரிய - முசியாம லடுப்பேற்றித் தியானஞ்செய்யே.....()

தியானமென்ன பரபூசை கணேசல்பூசை - தெட்சண மூர்த்திய
ரும் கேத்திரபாலன், தியானமென்ன சித்தருக்கும் பெரியோர்க்கெல்
லாஞ்- சிறப்பாகப பூசைசெய்து தீயைமூட்டி, தியானமென்ன முத்தி
யும் மூவேழுசாமம் - தீயிட்டெயாறியபின் செப்பக்கேளு, தியானமெ

ன்ன செந்தூரம் பொங்கிச்சாறல் - சிலாகைகொண்டு குப்பிவாய் கி ண்டுகிண்டே....................................................(௬௱௨)

கிண்டியே கற்றூழஞ் சோறுகொண்டு-கிறிகட்டிவாய்தன்னிலெ த்தியொத்தி, மண்டியே யதிகட்டுச் சோறுபோடு - மைந்தனேகுப்பி தனையடைத்துப்பாரு, பிண்டியேயொன்றுமில்லை முருக்கம்பூப்போ ல் - பேரான செந்தூர மிருக்கும்பாரு, கண்டியே யிதில்பேர்கேள் நோய்களெல்லாம் - காலனுந்திரியுர தாண்டவனுங் காணே - .(௬௱௩)

காணப்பா செந்தூரங் கொள்ளவேதான் - காட்டுகிறே னனுபா னங் களங்கம்விட்டு, ஊணப்பா திரிகடுகு வெதுப்பித்தூளா - யொரு வெருகடிதூக்கித் தேனுங்கூட்டிப், பூணப்பாசெந்தூரம் பணந்தான் சேர்த்துப் - புகழாக விருபதுநா ளிரண்டுநேரந்,தோணப்ப வுண்டுவ ர யெடுத்துக்கொள்ளுஞ் - சுகமாகுந் தேனில்கொள் சுருதிதானே. ()

சுருதியொத்த செந்தூரமுண்டபேர்க்குச் - சொல்லுகிறேஞ்சு கமாகும் நோய்களெல்லா, மிருதியொத்த வாதமொடுபக்கச்சூலை-ம்மே லான காமாலை பதினெண்வாய்வும்,பருதியொத்தபவுத்திரமு மீளைபா ண்டு-பாரமெனுங் கிரிச்சினமுங் கிரந்திதானும், திருதியொத்துவோடி ப்போ மின்னங்கேளு-நேராக வெள்ளுள்ளித் தயிலம்வாங்கே. (௬௱௫)

வாங்கியே பணவிடைசெந்தூரமிட்டு -மைந்தனேயெட்டுநாளு ண்டபோது, வாங்கியேபதின்மூன்று சன்னிபோகும்-வாகாகப்பூநாக முசுறுமுட்டை, வாங்கியே முலைப்பாலில்குழைத்தூட்ட - மரணசன் னி விரணசன்னி தோஷிம்போகும், வாங்கியே திரிகடுகுமிஞ்சிச்சாறு- மைந்தனே தேன்கூட்டி நாளெட்டேட்டே....................(௬௱௬)

ஊட்டவே க்ஷயம்போகுமக்கினியின்மந்த - மூளமாந்தை சுரமா ந்தையோடிப்போகும், நீட்டவே கூவிளச்சா றதனுக்குள்ளே-நேரா கப் பணவிடைதான் செந்தூரம்போடு, பூட்டவே பிள்ளைபெற்ற சிக் கட்டும்போம் - புகழான தசையடைப்பு மேகம்போகும்,மூட்டவே நெய்யிலிடு முருங்கைத்தோல்சாற்றி - லூட்டிவரச் சொறிபோகு மு ள்ளதாமே. .......................................................(௬௱௭)

போகுமே சர்வாங்க வாதந்தானும் - போகப் பணவிடை செந் தூரம்வாங்கி, போகுமப்பா பிண்டஞ்சா றதனில்கொள்ளப் - பொடி யாகுந் தோஷிமென்ற தனைத்தும்போகும், போகுமப்பா பணவிடை தான் வாகைச்சாற்றில் - பூட்டவே மணிக்கட்டு வாதந்தீரும்,போகும ப்பா பணவிடைதா னப்பிரேகம் - புகழான காந்தமொருபணந்தான் தூக்கே .......................................................(௬௱௮)

தூக்கியே யாவரையினரிசிவாங்கிச்-சுழலவரைவிளாங்காய்போற் சுடகசிங்கி, தாக்கியேவிட்டரைத்துத் தேத்தான்வித்துச்- சமபாகக்கூட்டியே தயிர்தான்மேதி, தேக்கியேநீர்வடித்துயிருநேரந்தால்- திரமாக விரண்டுபண விடைதான்கொள்ளு, தோக்கியேசலக்கழிச்சல்மது.தான்கண்டன் - தூரோடே பறந்துபோம் சுகமாங்காணே. ..... (௱௯)

காணப்பா பணவிடைதான் செந்தூரந் தூக்கிக்-கணக்கவே நீர்முள்ளிச் சாற்றிறுலூட்டுப், பூணப்பாசுரந்தோஷமெல்லாம்போகும்-புகழாக வின்னமொருசெந்தூரங்கேள்,வாணப்பாநோய்க்கெல்லாங்காலனாகு-மாச்சரிய மதின்பேர்கே ளப்பாநீயும், சாணப்பா காட்டில்முழக் கம்புவெட்டு-சண்டமாருதமென்ற செந்தூரந்தானே. ... (௱௪௰)

சண்டமாருதச்செந்தூரம்.

தானென்ற சூதமொருபலந்தான்மூன்று -சாதகமாங்கெந்தியொரு பலந்தான்மூன்று, தானென்ற சூதத்தைச் செங்கல்த்தூளில் - தவறாமல் சுத்திசெய்து மஞ்சள்தூளில், தானென்ற கொடுவேலிவேருங்கூட்டிச் - சாரணையின் றண்ணீரில் பிறகுமத்தி, தானென்ற பசுவின்பால்வாழைத்தண்டு - தண்ணீருங் கூடவிட்டுக் கரகமொன்றே. ..... (௱௪௰௧)

கரகத்தைச் சுத்திசெய்து தீபதூபங் - காட்டியே கரகவாய்க் கம்பிளியால்கட்டிக், கரகத்தைக் குழிக்குள்ளே வாய்தெரியப்புதைத்துக்-கலராமல் வண்டுமேல் கெந்தகத்தை வைத்துக்,கரகத்தையுலைமூடிகொண்டுமூடிக் - கலரவே மண்ணிட்டுத் தீயைமூட்டிக், கரகத்தில்கெந்தகந்தா னுருகிவீழும்-காண்மக்காள்கெந்தகந்தான்சுத்தியாச்சே(௱௪௰௨)

ஆச்சப்பாகெந்தகமுமிரதஞ்சேர்த்து - வாட்டுநீகுமரிச்சார்கொண்டுதேன்றாப், நீச்சப்பா சூதப்பைச்சார்பிறகுவாட்டு - நிலையாகமூன்றுதின மரசம்பட்டை, யேச்சப்பா கடுக்காயும் நருக்கித்தட்டி-யிதமாக வூறவைத்துத் திரும்பவாட்டு, போச்சப்பா நாலுதினஞ் செம்முள்ளிச்சார் - போதவிட்டு மயனம்போ லாட்டிவாங்கே .......(௱௪௰௩)

வாங்கியதோர் மருந்துக்குவிபரங்கேளு - மைந்தனேயிரண்டுகுப்பி செங்கைக்குப்பித், தாங்கியதோரதைப்பொதியக்கவசங்கேளு-சாதகமாய்க் கருமணலும் வெள்ளைக்கல்லும், தேங்கியதோ ருமிக்கரியும் புத்தேர்டப்பா - திறமான கடுக்காயு மிவைதானொக்கக், காங்கியதோர் கல்வத்தில் கலரவாட்டிக்- கசியாமற் சீலையிலே தடவிடாயே (௱௪௰௪)

மூடியே வாய்தனக்கு வடைமண்தானு - மூலரவே கடுக்காயுங் களிப்பாக்குப்பு, நீடியே குளவிமண்ணுங் கருங்கற்கிட்டம் - நிலையான கருவேலம் பிசினுங்கூட, நாடியே பொன்மெழுகு வெள்ளைக்கல்லு ந

யமாகச் செங்கருவா லனைத்துக்கட்டு, பாடியேபழச்சாறும்விட்டரை
த்துப் - பக்குவமாய்க் குப்பிவாய் வழித்துக்காட்டே........ (கூரு)

காட்டியே சுட்டடுப்புக் குள்ளேயின்னும்- கனத்ததொருதாழிதனை
ப் புதைத்துவைத்து, நாட்டியே நால்விரல்கள்மண்ணும்விட்டு-நயமா
கக் குப்பியதின் மேலேவைத்துக், கேட்டியே கழுத்துமட்டுமண்ணு
கொட்டிக் - கெடியான வாய்தெரிய வளைத்துமக்கா, வாட்டியேதெ
ன்றுமில்லைத் தீயைமூட்டி - யப்பனே தீபாக்கினியாய் சாமமாட்டே

ஆட்டப்பா கமலவன்னி யிரண்டுசாம- மதின்பிறகுகாடாக்கினிய
ருபத்தொன்று, நீட்டப்பாசாமமங்கேயெரித்துவாங்கி-தினைவாகப்ப
ர்த்துவரப் பொங்கித்தானால், மூட்டப்பா கற்றாழஞ் சோறுகொண்டு
மூறைமூறையாய்ப்பொட்டணங்கொண்டொற்றியொற்றி, பூட்டப்ப
குப்பிக்கு மோசம்வந்தால் - புகழாகமறுகுப்பி பூட்டுபூட்டே (கூச

பூட்டப்பாகெந்தகந்தானுறுமப்போ - பொரிபட்டாப்போலே
ற்று மருந்தைப்பாச்சு, நாட்டப்பா நாலாநாள் வயிரவற்குப்பூசை
யமாகச் செய்தேதா னுடைத்துப்பாரு, வாட்டப்பா செந்தூர மு
க்கப்பூப்போ-லருணநிற மென்றேதா னறையலாகும், மூட்டப்பாசெ
ந்தூரஞ்சர்வநோய்க்கு-முத்தமனே யாடுகண்டவேங்கையாமே-கூச

## செந்தூரத்திற்கனுபானம்.

ஆமப்பா விபரங்கேள் நோய்கட்டுகல்லா - மனுபானஞ் சொ
ல்லுகிறே மன்பாய்க்கேளு, ஓமப்பாவெந்நூற்குள் பண்டிதத்தைச்செ
ல்வே - னுத்தமனே யிரண்டிலட்ச மதுக்குட்சூத்திரம், நாமப்பாவு
ளபடி பாடிப்போட்டோம் - நாலுவித வாகடமும் விபரம்பார்த்து
சோமப்பால் கொண்டதினால் நன்றாய் கண்டோம் - துரோகிகட்கு
சூத்திரத்தைச் சொல்லொணாதே ................................ (கூசகூ

ஒண்ணாதே தென்றுக்கால் பலித்திடாது - வுத்தமர்க்கு வுறப்ப
க்கு மக்காளுண்மை, யொண்ணாதே வனுபானந் திரிகடுகுபொடியி
லொருபணந்தான்செந்தூரந் தேனுங்கூட, ஒண்ணாதேமண்டலந்தா
ன் தின்னத்தின்ன- வொழியாதமகாவாதம்க்ஷயமுந்தீரும்-ஒண்ணாதேவ
யுவறும் சூலைபோகு - முத்தமனே யஷ்டகுன்ம மொழியும்பாரே..

பாரப்பாசெந்தூரம் பணந்தான் துக்கிப் - பட்டையுடபொடி
மொரு கழஞ்சிமூன்று, நேரப்பா முக்கழஞ்சிதிப்பிலியின்பொடியுப்
நிறையாகத் தேனிலேமண்டலந்தான் தின்னப், போரப்பாகிறாணியெ
ற தாறுந்தீரும்-பிளவைபறுந் தீராப்புண்பித்தம்போகு-மாரப்பாவி
ல் பெருமைசொல்லவல்லா - ராதிவிந்துநாதமென்றசெந்தூரங்காமே

காணப்பா யின்டஞ்சார் சேலைவாங்கி - கிருயஞ்செய்து செ
ந்தூரம் பணந்தான் தூக்கிப், பூணப்பா விருபதுநாள் |கொள்ளக்கொ
ள்ள - புகைச்சலோ டுளமாந்தை சுரமாந்தைதீரு, மூணப்பா சுளேமு
தல் சுவாசகாச-முத்தமனே யரிகுராலு நெரிகுராலுந்தீரும், வேணப்பா
தருவைமா வெருகடியுந்தேனும்- விரவியே செந்தூரம்பணவிடைதா
ன்போடே.......................................................(௩௫௨)

செந்தூர மஞ்சுநாள்கொண்டாயானல்- சிதறினதோ ரொலும்பெ
ல்லா முறுமூறும், வந்தூரும் பதகரியு முடம்புநோவும் - வாதபித்த
சிலேற்பனமு மார்க்கங்கேளு, வெந்தூரும் வெந்நீரில்செந்தூரமிட்டு-
வேகவைத்து மூன்றுநாள் குளிக்கத்தீரும், மூந்தூரு முகவாதசன்னி
கேதான் - முட்டைநீ செந்தூரங் குழைத்துப்பூசே..........(௩௫௩)

பூசியதோர்செந்தூரம் பணந்தான்வாங்கிப் - புகழாகவெள்ளுள்
ளித்தயிலத்திட்டு - மூசியதோர்மூன்றுதினமுண்ணவுண்ண - மூப்பத்
து மூன்றுசன்னிதோஷந்தீரும் - பேசியதோர்செந்தூரந் தினந்தான
ஞ்சு - பேய்க்குமட்டிச் சாற்றிலேயிலக்கலூட்டு - கேசியதோரறுகுலை
பாயுக்குத்து - கெற்பவிப்பிருதிபோங்கெட்டிதானே.......... ௩௫௪

கெட்டிகெற்பவிப்பிருதிகுடல்விப்பிருதி- கேள்மடுவாய்விப்பிரு
தியுந் தீருந்தீரும், அட்டியெனுஞ் செந்தூரந்தேட்கொடுக்குச்சாறு-
டப்பனே யெருக்கம்பால் கலந்துபூசக்,கொட்டியதோர் சிலவிஷமும்
நல்லபாம்பும் - கொத்தினல் காஞ்சுரைத்தோல்தூளதனைக்கேள், துட்
டியதோர் காசிரண்டு செந்தூரம்பணந்தான் - க்துகியேவெந்நீரில்தி
ன்னச்சொல்லே.......................................................(௩௫௫)

சொல்லப்பா நல்விஷ மெல்லாம்போகும் - சுகமாகஆவரையின்
யிலம்வாங்கி, நில்லப்பா செந்தூரம் பணவிடையின்வீதம்- நிசமாகத்
தின்றுவரச் சலக்கழிச்சல்போம், நல்லப்பா சீரகமும் வராகனிடைவெ
ண்ணெ - நாட்டியிடு செந்தூரம் பணந்தானென்று, வெல்லப்பா வாயு
வுறுஞ் சூலைபோகு - மெண்பதாம்வாதம்போ மின்னங்கேளே ௩௫௬

கேளப்பா செந்தூரம் பணந்தானென்று- கெடியானவேளைச்சா
றதனுக்குள்ளே, நாளப்பா விருபதுநாளுண்ணப்போகும் - நலமான
உடம்புலர்த்தி சீதநீரிற், கேளப்பாவிட்டேடகும்பணந்தான்வீதங்-கொ
ண்டுவா ஆவினீர் வெள்ளாட்டுநீரிற்-பாளப்பா வறியாமல்மதிமயக்கம்-
பயித்தியமும் பிரமைமுதல் பாழ்த்துப்போமே..............(௩௫௭)

போகுமப்பா வெருகடி முத்தக்காசு துளில்-பூட்டப்பா செந்து
ரம் பணந்தானென்று, தாகுமப்பா நோயெல்லாம் நிவிர்த்தியாகும்-

தாதுமைந்தா வெகுவாகுஞ் சரீரங்கெட்டி, யாகுமப்பா மூகமிலங்கு மழகுண்டாகு-மப்பனே யிருபதுநாள் கொள்ளு கொள்ளு-பாகுமப் பா பழச்சாற்றில் பணவிடைதான்கொள்ளு- பறக்குமப்பா பயித்தெ ட்டுச் சுரமும்பாரே..................................................(௩௫௮)

பாரப்பா பணவிடைதான் செந்தூரந் தூக்கிப்-பாச்சடா புளியி லைச்சார் சேணாவாங்கி, நேரப்பா வுண்டிடவுங் காமாலைசோகை-நிவிர் த்தியாம் நிகண்டாகுமிந்தநூல்தான், ஆரப்பா வயித்தியத்தைக்கண்கண் டார்க-ளாச்சரியந் தன்மந்திரி யவரோகண்டார், பேரப்பாபிரட்டமெ ன்ற சொல்லாகாது - பிரகிருதி தாதுநிலை யறியார்தானே....(௩௫௯)

## சர்வகுணரசம்.

தானென்ற சர்வகுண ரசத்தைச்சொல்வேன் - சயபஞ்சாட்சரவ முதமாஞ் செந்தூரப்பேர், தானென்ற விரண்டுபேர் வந்ததேது, சார் பிக்குஞ் சர்வகுண மென்றதாலே, தானென்ற விபரங்கேள் மக்காள்தி ங்கள் - சாதகமாய் ரசமூன்று பலந்தான்தூக்கு,தானென்ற கெந்தியதி ற் பாதிதூக்கு - சாறதற்கு மேனியுட சாறுவாங்கே..........(௩௬௰)

வாங்கியே வொருசாம மாரவைத்து - மைந்தனேகொடுப்பைச் சாறந்தவண்ணம், வாங்கியே குதம்பைச்சார் செம்முள்ளிச்சார்-வாகா க விதுகளிலே யெட்டுசாமம், வாங்கியே நன்றாக வாட்டிநீயும்-வாகா ன குப்பியிலே பொடித்துச்சேர்த்து, வாங்கியேயரைக்குப்பியானபி ன்பு - வலபபக்கல் கொண்டடைத்து காடாக்கினிமூட்டே.. (௩௬௰௧)

காடாக்கினி யிரண்டுபத்துசாமமூட்டு- கழிந்தபின்புதினமொன் று வாறப்போட்டு, சேடாக்கினியைக்கொண்டேதான்பூசைபண்ணித்- தேவியென்னுமவளைநன்றாய்த் தெளிந்துகொண்டு,வாடாக்கினிச்செந் தூரமுடைத்துபபாரு - அருணநிறம்போலிருக்குமபபாகேளு, தீடா க்கினிச் செந்தூரம் பணந்தான்தூக்கித் - தேனோடு திரிகடுகுதூளுங் கூட்டே........................................................ (௩௬௰௨

கூட்டியே யெட்டுநாளுட்டுமைந்தா-குன்மம்போஞ்சூலைபோ ம் குளிர்ந்ததேகம், தீட்டியேதிபபிலித்தூள்தேனுங்கூட்டித்- தின்றவி டி லகுவாகுந் தாதுதானும், நீட்டியே செந்தூரம் பணவிடைதானப பா - நீயுண்ணு ஆனைபெற்ற பலமுமுண்டு, வாட்டியே யிருபதுநாளி ரண்டுநேர - மருளுண்டா நாற்றம்போ மாண்மைபாரே. ... (௩௬௰௩)

நாற்றம்போ மேனியெல்லாம்செங்கழுநீர்நாறும்- நவநாதசித்தர்வ ந்து புத்திகேட்பார்,மாற்றம்போமாயையென்றதனைத்தும்நீறாய்-வாச னையோகற்பூரநித்தம்வீசும், மாற்றம்போம்பலகருவிலடையத்துள்ள

வாண்மைபோஞ்செந்தூரம்வேதையாகும்,பாற்றபே ரிதுவல்லாங்கை
கண்டவித்தை - பணவிடைதான் செந்தூரம் வாங்கிக்கேளே. (கூசுச)

வாங்கியதோர்செந்தூரம்கோழிவெந்த-மகாவலியிற்சாற்றுடனே
திங்கவொன்றுகொள்ளத், தாங்கியதோர் கிறுணியென்றதறுவகையுந்தீ
ரும்-சாதகமாய் மூர்ச்சையென்ற தெல்லாம்போகும்,நீங்கியதோர் ப
ணவிடைதானஞ்சுவுபயில்-நிசமதாய்வெருகடிதான் பொடித்துவாங்கி
க்,தேக்கியதோர் தேனிலே குழைத்துக்கொள்ளச்- சேதிகேளட்டகுன்
மந் தீர்ந்துபோமே......................................... (கூசுரு)

போகுமேவதிசாரம் வாயுதானும்- பொருமியதோ ரரிச்சல் ரத்
தக்கழிச்சல்தானும், போகுமே அக்கினிதம்பித்தவாய்வு - புகழானநெ
ஞ்செரிப்பு புளிச்சேப்பமந்தம், போகுமே செந்தூரம் பணவிடை
தான்தூக்கிப - புதுப்பழச்சார் கொதிதண்ணீர் புகட்டியொன்றாய்,
போகுமே தானந்தநீர்க்கடுப்பும் - பொசிந்தொழுகுமூட்டினமாமே
கம்போமே......................................... (கூசுசு

மேகம்போம் பணவிடைதான் கஞ்சாச்சாற்றில் - வேதிச்சுவாறு
நாள்கொள்ளுகொள்ளு - தாகம்போமூலமுளைசீதம்ரத்தம் - தன்னோ
டேகடுப்பென்றதெல்லாந்தீரும் - போகம்போம்செந்தூரம் பணவி
டைதான்வாங்கி - பெருங்காயமூன்றுபணவிடையுந்தேனில்- சோகம்
போமிருபதுநாள் தின்னத்தின்னச் - சுழன்றுவரும் பொரியாமை
செரியாமைபோமே......................................... கூசுஎ

ஆமைபோமெரிகுன்மம்வலிகுன்மஞ்சத்தி - யஷ்டகுன்மம்வாய்
நீருமசந்துதள்ளும் - பாமையொருசெந்தூரமழிஞ்சிச்சாற்றில்- பரி
ந்திடவேநாற்பதுநாள்பதினெண்குஷ்டம் - தேமைபோம்வெடிசூலை
பறுகுறையாதோவுந் - தீராதபுண்சொறியுங் கடிவிஷமும்போகும்-
தீமைபோஞ்செந்தூரம் பணவிடைதான்வீதம் - செப்புவேனனுபா
னம்செப்பும்வனே......................................... கூசுஅ

செப்புவேன்பூநாக மனாத்துநன்றாய்ச் - சிறுமிச்சங்காயளவு தி
னந்தான்பத்து - செப்புறேன் தின்றுவிடில் பித்தகாசம் - சேர்ந்துவி
ழும்பதினெட்டுஞ்சுழன்றுமுன்னே - கொப்புறேன்செந்தூரம் பண
விடைதாநீயுங் - கூட்டியேசிதேவி செங்கழுநீர்ச்சாற்றி - லுப்புறேனி
ருபதுநாள்கொள்ளக்கொள்ள - வுத்தமனேவாதபித்தசிலேற்பனமும்
போமே......................................... கூசுகூ

சிவநாராயணசெந்தூரம்.

சிலேற்பனம்போம் சூலை பவுத்திரமும் பிரவை - தீராதவாத்தி

யொடுவிஷமும்போகும் - சிலேர்பனம்போ மின்னமொருசெந்தூ
ரப்பேர் - செப்பக்கேள்கிட்டினஅப்பிரகமாஞ்சத்தை - சிலேற்பனம்
போமகாமேகருமபாணஞ் - சீவநாராயணசெந்தூரமென்பார்- சிலே
ற்பனம்போம் சிவனிட்டபேரொன்றுகுஞ் - சித்தரிட்டப் பேரப்பா
செந்தூரந்தானே ................................................... ௲௭௰

செந்தூரம்ரசம்பலங்கேளறுபதப்பா - சிறப்பானகெந்தகமோ
செபபக்கேளு - பந்தூறும்பதினஞ்சு பலந்தானபபா - பாச்சுஅரிதா
ரமிதில்பலந்தானெட்டு - வந்தூறுஞ்சுத்திசெய்த மனோசிலையக்கூட்டு-
மருவியதோர்லிங்கமந்தப படியேகூட்டு - தந்தூரமிதுகொண்டுந்தா
விடைசேரு - சாதகமாயெருக்கம்பால்கொண்டுஆட்டே ...... ௲௭௧

ஆட்டுவதுந்தும்பைச்சார்செருபபடிச்சா - ரயபனேமாதளையுஞ்
செம்முள்ளிச்சார் - மாட்டுவதுசாமமொன்று வாட்டிதீயு - மயபனே
மாதளம்பூமுருக்கம்பூச்சார் - மாட்டுவதயிருசாம மாட்டிவாங்கி - ய
டைவாகத்துளாட்டிக்குப்புக்கேற்றி - யாட்டுவதுமுன்போலே யெரி
த்துவாநீ - யபபனேமுருக்கம்பூபோலேயாமே.................௲௭௨

முருக்கம்பூப போலிருக்கும் செந்தூரத்தை- மூன்சொன்னமு
றையோடே வைத்துவாநீ - பெருக்கம்பூப போலிருக்கும் வாசனைய
ப்பாலே - பேசவே யிதுவட்டத்திசையும்வீசுஞ், சுருக்கம்போலேயி
ருக்குஞ் செந்தூரத்தைச் - சூட்டுகிற முறைசொல்வோம் சுருதியாகச்
செசக்கம்பூப் போலிருக்கும்வியாதியுள்ளே - சென்றுக்கால் தின்றுவி
டுந் திண்ணந்தானே.......................................................(௲௭௩)

தானென்ற செந்தூரம்பணவிடைதான்வீதம் - சாப்பிடவேவனு
பானஞ் சாற்றக்கேளு, தானென்ற தூதுவளை யாடாதோடை - தனிக்
கண்டங் கத்திரியும் புட்டவித்து, தானென்றதிரிகடுகும் வறுத்ததூளு
ந்-தனித்தேனும் சேகித்துத் தினந்தான்பத்துத், தானென்ற யிருநேர
ம் கொள்ளக்கேளு - சாதகமாய் ரோகங்கள் சாற்றுறேனே. (௲௭௪)

சாற்றுறேனினிமுதல்மந்தாரகாசஞ் - சர்மாந்தைசுரமாந்தையுளமா
ந்தைசுவாச - மேற்றுறே னெலிகடியும் சிலேற்பனஞ்சன்னி - யிவைதீ
ருமனுபானமின்னங்கேளு, மாற்றுறேன் திப்பிலியைவறுத்தித்தூளா
ய் -வாங்கியேகாசிடைதான் தேனுங்கூட்டி, மாற்றுறேன் செந்தூரம்
பணவிடைதான்வீத - மண்டலந்தானிருநேர மருந்தக்கேளே(௲௭௫)

கேளபபா சூலைபுண்கள்குஷ்டரோகம்-கிளர்பதினெண்குறைநோ
வு வண்டுகடி விஷமும், நாளப்பா கபால வெட்டை கபாலசூலை - நய

மாகச் சிலவிஷீங்கள் சொறி கறப்பன், நீளப்பா கால்கறடு நெஞ்சுதத்
து- நோகபீனிசமுமண்டைச்சூலை, தூளப்பாகன்ஞெசிசெவியோசி
வரய்வு-சுகமாகுந் தேகந்தான் சொல்லக்கேளே.............(௯௭௬)
கேட்கவேசரீரமெல்லாம்பரிமளங்கள்வீசும்-சிவப்பென்றால்சொ
ரிணநிறந் தெளிந்துகாணும், கேட்கவே தாதுதன்னி லமுதமூறுங், கிரு
பையுடன் நரம்பெல்லா முறுக்கதேறுங்- கேட்கவேகண்சிவக்குமொனி
தான்வீசுங், கிளம்பிநின்ற தந்தமெல்லா மிறுக்கிக்கொள்ளுங் - கேட்க
வே நரைபோகுந் திரையும்போகும்- கெடியான குன்மமெல்லாம் கி
ளர்ந்துபோமே..........................................(௯௭௭)
போமப்பா வெள்ளுள்ளித்தயிலம்சேர்த்துப்-புகட்டடாசெந்தூ
ரம்பணந்தான் தூக்கி, யோமப்பாமூன்றுநாளாறுநேர - மூண்டாக்கா
ல் சன்னிபதி மூன்றும்போகுந்,தாமப்பா திரிதோஷம்முடங்கள்சூலை-
தளர்வாதங்குடல்வாத முதிர்வாதம்போம், வேமப்பா கலர்வாத மற்பு
தமாம்வாதம் - வெந்துபோங் கன்ஞெசி கறப்பன்காணே. . (௯௭௮)
காணப்பா யின்னமொருவனுபானத்தைக் - காணுள்ளிசுக்கோம
மிளகுநோா, பூணப்பாயிதைவெதுப்பித்தூளாயாட்டி - முருங்கைத்
தோல்நீருடனே லோகஞ்சேர்த்து, ஊணப்பா விருநேரமண்டலந்தா
னுண்ண - ஒழியுகிறவியாதிகளை யுற்றுக்கேளு - வேணப்பாமுகவாதஞ்
சன்னிவாத- மெண்வாதம் பக்கவாத மோடுவாதம்பாரே..... (௯௭௯)
வாதமென்ற வெண்பதுக்குமடைப்புப்போகு - மகத்தானசெந்
தூரம் பணந்தான்வீதஞ், சீதமென்றநிலைவாகச்சாற்றினுள்ளே-தினம்
பத்துத் தான்கொடுக்கச்செயலைக்கேளு, கேதமென்றகெற்பவிப் பிரு
திபோகும் - கெடியான கல்லுவிப்பிருதிகூடக், காதமென்றவாத முள
மாந்தை சுரமாந்தை-கடியபக்க வாய்வுமண்டவாய்வும்போமே(௯௮௰)
வாயுவறும் குடல்வாதம்பதினெண்சூலை-மகத்தானசெந்தூரத்தா
லேபோகும், வாயுவறு மங்கமென்ற செந்தூரப்போக்கை-வகைவகை
யாய்ச் சொல்லுகிறேன் மைந்தாகேளு, வாயுவறும்வங்கமுண்டால் த
ங்கமாகும்-வாக்கடங்கா மனதடங்கா வங்கவித்தை,வாயுவறும் வங்கமல்
லோ வாதிகளைபேச்சு - மகத்துவமாஞ் சஞ்சீவியாகும்வாறே. (௯௮௧)
வாறுன வங்கமப்பா பலந்தான்பத்து - மைந்தனே சுத்திசெய்து
மாட்டக்கேளு, வீறுனவெடியுப்பு பலந்தானென்று - விபரமுடன்ச
ட்டிக்குள் வங்கம்வைத்துத், தாறுனவெடியுப்புக் கூடவிட்டு-சாதகமா
ய் வறுத்திடவுந் தவிடுபோலாம், பேறுன ஆவரைவேர் வட்டத்துத்தி-
பெருவேருந் தமித்திடவே சிவக்குமட்டே...................(௯௮௨)

சிவப்பேது முருக்கம்பூப் போலேயாகும் - தேவிக்கும்வயிரவ ற்கும் சிறப்புச்செய்து,உவப்போதுசெந்தூரமெடுத்துக்கொண்டு-ஊ ட்டுகிற வனுபான முறைமைகேளு, தவப்பேறுசீரகமுஞ்சினிகூட்டிச்-சமபாகஞ் செந்தூரம் பணந்தான்வீதம்,நவப்போதுவெண்ணெயிலே குழைத்துக்கொண்டு - நயமாக விருபதுநா ளுண்ணச்சொல்லே. . ()

உண்டவுடன் கிரிச்சினம்போந்தசையடைப்புபோகு - மூட்டி னம்போங்கல்லடைப்புவுழலைதீருங்,கண்டவுடன் மூர்ச்சைபோமெலு ம்புருக்கிக் - காணுத வுள்ளுருக்கிப் பன்னிரண்டுவகையும், கொண்டவு டன் முகவெரிவு கையெரிவுமிக்க - குடலெரிவு காலெரிவு தாகமூர்ச் சை, கொண்டவுடன் சுக்கிலசுரோணிதமும்போகும் - கோபமில்லை யின்னமிதில் குடடக்கேளே.......................................(௬௮௪)

கேள்மகனேபுலத்தியனே மச்சகேந்திரா - கெட்டியாய்ச்சொல்லு கிறேன் வங்கப்போக்கை, யாள்மகனே யிஞ்சிச்சார் தெளிவுவாங்கி-ய ைப்பணந்தான்வீதமங்கேதினமூன்றுகொள்ள,ஆள்மகனேசுரதோஷ மென்பதுந்தான்மீளு - மடுத்துக்கேளஷ்ட சூரணமுஞ்சேர்த்து,தோ ள்மகனே செந்தூரம் காந்தம்வங்கம் - தூக்கிரண்டுமொருபணந்தான் தேனுங்கூட்டே.......................................(௬௮௫)

கூட்டியே பத்துநாள் தின்னதின்ன - கூறுகிறேனுறுவகைக் கிரு ணியதிசாரம், நீட்டியேயதிசார மாறுநீங்கும் - கிரமானபிள்ளைபெற்ற சிக்கட்டுங்கூட, நாட்டியே சிக்கிரணிமூலமுளையப்பா - நலமானகிழ கெல்ற கரணங்கள்போகு, மூட்டியே காந்தமொடு லோகவங்க-மூத் தமனே விடைபாக முறைக்கிறேனே.......................................(௬௮௬)

ஊறைசெய்த காந்தமொடு லோகம்ரெண்டு - உத்தமனே யிரண்டு பண வீதந்தூக்கு, வரையேது வங்கமரைப்பணந்தான்றூக்கு,மைந்தா கேள் திரிகடுகு தேனுங்கூட்டி - நிரையேது முப்பதுநாள்தின்னக்கே ளு - நீரப்பாபாண்டுகாமாலைசோகை-திரையேதுநீர்பித்தம்வீக்கமோ டு - நோாக விஷபாக மனைத்தும்போமே.......................................(௬௮௭)

போமப்பாபயித்தியமும் பாண்டுசோகை - பொருமலொடுமே வி‌ளைப்பு வுப்பிசமீளை,வேமப்பாவிஷபாகமெலிகடியுங்காச-மென்மா ந்தைகாசமொடுகாயசுவாசம்,நீமப்பாவுளமாந்தைசுரமாந்தைகக்கல்-நீர்க்காசம்பிணிசமு நீருப்ப்போகும், நாமப்பா விதுவெல்லாம் நன் றாய்க்கண்டோம் - நாட்டிஉள்ள பெரியோர்கள் நடத்தையாமே ()

## வங்கசெந்தூரம்.

நடத்தையா மின்னமொருவங்கம்சொல்வேன் - நயமாகக்காரிய

ம் பலந்தானஞ்சு, நிடத்தையாய்க்கோமயத்தில்பத்திரண்டுவாட்டி,நீயு ருக்கிச் சாய்த்திடுவாய் களங்கம்போகும், திடத்தையாய்ச் சட்டிக்குள் வங்கம்வைத்துத்- துப்புரவாய்சிறுகீரைசுற்றூழைவேருந்,திடத்தையா மிருவேரும் நொறுக்கிவாங்கிச்- செப்புகிறேன் வெடியுப்புப்பலந்தா னஞ்சே. ...... ........................................ (௬௮௬)

அஞ்சுடனே வேர்வகையுங்கூட்டிவிட்டு-அப்பனேமூன்றுதினங்கி ண்டுகிண்டி, திஞ்சுடனேவங்கமதுசெந்தூரமாகும்-சோதுநிறம்போலி ருக்கும் சூட்டக்கேளு,வுஞ்சிடவே சலம்விட்டுக்கழுவிநன்று-யுலறவே கழுவியதை யெடுத்துக்கொண்டு, பஞ்சுடனே பரம்வைத்தாப்போ லேமக்காள்-பாச்சிடவே யரைப்பணந்தான்செந்தூரங்கேளே(௬௬௰)

கேளப்பாதேனிலிருபதுநாளுண்ணக்-கெடியாகவஷிடகுன்மமெ ட்டும்போகும், நீளப்பா பதினெட்டுக்குஷ்டந்தீரும் - நிலையாதகுறை நோவுசெவ்வண்டுகடியும், நாளப்பாகருவண்டுசெய்யானும்விஷமும்- நயமாகச் சொறிகுஷ்டம் கபாலகுஷ்டம், வாளப்பா பிள்ளைபெற்றசீ க்கட்டுங்கிரூணி - வயிற்றுவலி வெப்புமுத லெல்லாம்போமே.(௬௬௧)

## வாதரசவங்கம்.

போகுமப்பாநோய்களெல்லாந்தூள்தூளாகப் - பூட்டுகிறேன்வாத ரச வங்கந்தன்னை,யாகுமப்பா காரீயம்பலந்தானஞ்சு-வப்பனேகோம யத்தி லுருக்கிச்சாய்த்துப், பாகுமப்பா பத்துவிசை யுருக்கிச்சாய்த் து பண்பான புதுச்சட்டிக் குள்ளேயிட்டு - வேகுமப்பாவெடியுப்பு பலந்தான்றொண்டு-விரவிநீவறுத்திட்டுபின்புகேளே.......... ௬௬௨

கேள்மகனேபுலத்தியனேமச்சசேந்திரா - கெடியானவரசந்தோ ல்சிவந்தப்படடை - கேள்மகனேசிறுகவதைநறுக்கியிட்டு - கெட்டியா ய்வறுத்திடுவாய் சிவக்குமட்டுங் - கேள்மகனேசெந்தூரம் சிலையிலே கட்டி - கெடியாகவொத்தியொத்தியுபபும்போக்கி - கேள்நீதானிதின் பெருமையேதென்றக்கால் - கெடிவாதரசவங்கசெந்தூரமாமே.. ()

ஆமபபாசெந்தூரமூண்ணுதற்கு - அனுபானஞ்செந்தூரமரை பபணந்தான்கூட்டி - ஓமபபாவாவரையைச் சமூலம்வாங்கி - யுலர்த் திநன்றாய்சூரணத்தை யிதினோடொக்க - வேமபபாசிந்தியுட சக்கரை யும்சேர்த்து - மேலானசீனியொடு தேனுங்கூட்டிய - போமபபாவி ருநேரம் நாற்பதுநாளுண்ணப - போகுமபபா மேகமென்றநீரிழிவு தானே....................... ........................................ ௬௬௪

நீரிழிவுமதுமேகங்காளைமேகம் - நிலையானஅத்தியொடு சுரோணி தமாமேகம் - நீரிழிவுகல்லடைபபுகிரிச்சினமாம்பாளை - நிலையாதபிற

மேகமித்திரகண்டி - நீரிழிவுதசையடைபபுசோமரோகம் - நேரில்லா
க்கடுப்புமூத ஞர்ஷ்ணரோகம், நீரிழிவுமுள்ளுருக்கி யெனும்புருக்கி
யெரிவு - நீர்ப்பாலைமூத்திரகண்டியுள்ளுருக்கித்தானே ...... ௬௬௪

தானென்றயுழலையொடு தாகஞ்சோபம் - சாதகமாயுட்சுரமூ மூ
டம்பெரிவுநோவும் - வானென்றபுழுவெரிபபுபழுபாகச்சுரமு- மணி
யுதரக்கொதிப்புமிவையெல்லாங்கேளு - கானென்றதீயிலிட்டதிரணம்
போலே - காட்டுமுன்னேபற்பமாங்காணுமக்காள் - ஊனென்றவயிற்
றுடனேரசசெந்தூர - மூத்தமனேகாந்தசெந்தூரங்காணே ... ௬௬௫

காணப்பாலோகமிடைபாகங்கேளு - கணக்காகமூன்றுபணந்தூ
க்கித்தூக்கிப - பூணப்பாரசகெந்தி சூரணமுஞ்சேர்த்துப - புகழாகத்
தேனிலேநாற்பதுநாளுண்ண- ஊணப்பாசனேபோமெலிகடியும்போ
கு - மூத்தமனேவுளமாந்தை சுரமாந்ததைதானும் - வீணப்பாசிலேற்
பணந்தான்தொண்ணூற்றாறும் - விழலாகும்வங்கமென்ற செந்தூரம்
பாரே ......................................... ௬௬௭

## காரீயச்செந்தூரம்.

பாரப்பாநாகசித்திக்காரீயசெந்தூரம் - பாடுகிறேன்காரீயம்பல
ந்தான்பத்து - நேரபாதூக்கியதை யெடுத்துக்கொண்டு - நிலபாகக்
கோசலமும் கோமயமுமோருஞ் - சேரப்பாவொன்றாக்கி வறுக்குள்
வங்கம் - சிறக்கவேசாய்த்திடுநீபத்தொண்டுவாட்டி - போரப்பாபுது
சட்டிக் குள்ளேபோட்டுப - பிரட்டியேயிரண்டுநாள் வெடியுப்பை
யிட்டே ......................................... ௬௬௮

உபபேது அதுவுமளாபபடிதானபபா - பூட்டுவாய்சிவந்தநாயுரு
விகொண்டு - கொபபேதுதுண்டுதுண்டாய் நறுக்கியிட்டு - குமுறும
ல்சிறுகவிட்டுச்சிவக்கமட்டுந் - தபபேதழுருக்கம்பூபபோலேயாகும்
சாதகமாய்தேவியுடவாமபூசை - யெபபோதுஞ்செய்துவர முறைவி
டாமல - லென்மகனேவனுபானமியம்புறேனே ............... ௬௬௯

இயம்பக்கேள் கூகைநீர் சீரகம்வெங்கார - மேலமொடுகஸ்தூரி
மஞ்சள்சுக்கு - இயம்புறேன்வாய்விளங்கமலைவேபபம்பிசினு - மென்
மகனேவிளாம்பிசினுங் கருவேலம்பிசினு - மியம்புறேன்மாம்பிசினு
மிவைக்குச்சமன்தா - னென்மக்காளொருபலந்தானிறுத்துக்கொண்டு-
இயம்புறேனுவளாயின்விரைதானபபா - எண்ணைஞ்சுநாற்பதுதான்பல
மூந்தூக்கே ......................................... ௬௭௰

தூக்கப்பா முருங்கைவிரை சமுத்திராபபழமுஞ் - சூடுறேன்
சீந்தியுடகிழங்குகூட - தூக்கப்பாநிலப்பனையின் கிழங்குதானும் - தீ

கையேதுலவ்வொன்று பலந்தான்பத்து - தூக்கப்பாவமினி!யொருப
லந்தானஞ்சு - சுகமானகூவிளவித்தந்தவண்ணந் - தூக்கப்பாதாமரை
வித்தந்தவண்ணம் - சொல்லுகிறேன்பிராயம்வித்தவ்வண்ணங்காணே()

காணவே யிதுவெல்லாந் தேங்காய்ப்பாலால் - கலரவே யாட்டி
யதைத்தூளாய்வாங்கி - பூணவேவெருகடிதானிந்தத்தூளில் - புகழாக
வெருகடிதான்பின்னுங்கேளு - தோணவேபலம்பத்துச் சீந்தியுடவுப
புத் - தூக்கியிடுமுன்சேர்த்தசூரணத்தில்கூட- ஊணவேவெருகடியில்
சீனிசேர்த்து- உண்ணயிலேகுளுமைகண்டால்தேனுங்கூடவே... ௧௨

தேன்கூட்டுகூடானால் வெண்ணெய்கூட்டு - திரமாகவிருநேர மண்
டலந்தானுண்ணத் - தேன்கூட்டுநீரிழிவுபதினாறுவகையுந் - தீராதசுக்கு
லமாமூத்திரப்பாலை - தேன்கூட்டுமொத்தகண்டிசோகைகிருணி- சிக்கி
வெழுதொந்திப்புசிதறிப்போகும் - தேன்கூட்டுமேகமென்றதனைத்து
ம்போகுஞ் - செந்தூரமறிந்தக்கால்சிறுமைபோமே ............ ௧௩

## நாகச்செந்தூரம்.

சிறுமையென்னவங்கம்விட்டு நாகந்தன்னைச் - செந்தூரஞ்செய்
திறதிறத்தைக்கேளு - சிறுமையோடுசீறாமல் புகைந்திடாமல் - சீருட
னேயிலுப்பைநெய்யி லுருக்கிச்சாய்த்து - சிறுமையென்ன திரும்பவ
தையெண்ணெதேய்த்துச் - சிறப்பாகவிலுப்பைநெய்யி விட்டுருக்கச்-
சிறுமையென்னவெள்ளாட்டுப்பாலிலப்பா - திறமாகப்பத்திரண்டுதிர
ந்தான்சாயே........................................................ ௧௪

சாய்த்தபின்புதிரும்பவதை சுட்டிலிட்டுச் - சாதகமாய் வெட்டியு
ப்பு சமனதாகச் - செய்த்தொண்டு மிரண்டுபடி பொடித்துக்கொண்
டு - சிறுகவதைத் தூவியே வறுப்பாயப்பா - செய்த்தபின்புசிவந்தநா
யுருவிகொண்டு - சுறுக்காகநொருக்கியிட்டுவறுக்கநன்றாய், பார்த்தபி
ன்புசெந்தூரமாகும்பாரு-பாளைப்பூப்போலிருக்கும்பக்குவங்காணே

பாளைபோல் சிவந்திருக்குஞ் செந்தூரத்தைப்- பார்சுதற்குவனு
பானம் பரிந்துகேளு, கோவைப்பூத் திரிகடுகு வறுத்ததூளில் - கூட்டி
நீ தேனோடே குழப்பிக்கொண்டு, எள்ளைப்பூச் செந்தூரம் பணந்தான்
வாங்கி-யென்மக்கா ளிருநேர நாற்பதுநாளுண்ணை, ஈளைட்பூச் சிலேற்
பனமு மந்தகாச-மீளைமுத லெலிகடியுஞ் சுவாசம்போமே. (௧௫)

போமப்பா சுரகாசஞ் சுவாசகாசம் - புகழான வரிகுரலும் நெ
ஞ்சிநோவும், வேமப்பா பிறமேக மத்திமேகம் - வெடிசூலை கடிவிஷ
மும் வெப்புப்பாவை, ஓமப்பா விலைவதிருமிர்திரகண்டி - புத்தமனே

கல்லடைப்பன்நீர்ச்சுருப்பு, வாமப்பாநாகத்தா லெல்லாந்திரு-மைத்தனே யாவரையைத் தயிலம்வாங்கே......................(௩௭)

தயிலத்திலோர்பணந்தான் செந்தூரமிட்டு - சாப்பிடவேநாற்பது நாள் சலக்கழிச்சலினை, பயிலுற்றவெலும்புருக்கிக்கிரிச்சினங்களாறும்-படர்மேக முள்ளுருக்கிக் கபாலசூலை, மயிலுற்ற முறைமைபோல்வெளியைக்கண்டால்-மாண்டுபோமின்னமொரு வரிசைகேளு, கயிலுற்ற சித்திரமூலத்தூளில்- காட்டுநீவெருகடியில் தேனிற்சேர்த்தே .. (௩௮)

சேர்த்ததொரு செந்தூரம் பணவிடைதான்தினமுந் - திரமாக விருநேர நாற்பதுநாளுண்ணச், சேர்த்ததொருசெந்தூரமஷ்டகுன்மஞ்-செய்யாமல்வாதமோரடுளைவாய்வுச், சேர்த்ததொருயிலவகேளு யின்னஞ்சொல்வோந் - திரமானபேய்ப்பீர்க்கின்தயிலத்தூட்டு, சேர்த்ததொருசெந்தூர மனாப்பணத்தானிட்டுத் - திரமாகத்தண்டிவே பணந்தான்பண்ணே. ..................................... ........... (௩௯)

லேபிச்சுப புணர்ந்திடவே கெற்பசூலை-நோராசக்கெற்பமுண்ணும்புழுவுஞ்சாகும், லேபிச்சுப்புணர்ந்திடவே கெற்பரோகம்-நிவிர்த்தியா மிப்படியேமூன்றுநாள்தான்,லேபிச்சுமூலமுளைகழன்றுபோகும் நிலையாதபவுத்திரமும் கிழங்குவிழும், லேபிச்சுஆசனத்தில்தடவவேமக்காள்-நிலைகெடுமே மூலமுளை பவுத்திரமுந்தாமே..........(௩௰)

## பூரண சந்திரோதயம்.

தானென்ற நாகமதில் வேதையாகும் - சாதகமாய்ப்பூரணசந்திரனைக்கேளு, வானெல்றசூதமொடு கெந்திசீன-மகத்தான வெங்காரம் நாவிசங்கு, வேனென்ற மனோசிலையும் பவளப்புத்து - மீறுமல்சமபாகம்கல்வத்திட்டு, பானென்ற பசளைச்சாற்று லொருநாளாட்டிப் - பக்குவமான குமரிச்சார் மறுநாளாடடே........... ............ (௩௰௧)

ஆட்டியே வில்லைகட்டி கரகத்திட்டு - அப்பனே மேல்கரகங்கொண்டுமூடி, நாட்டியே சீலைசெய்து மண்ணுஞ்செய்து - நயமாக வடுப்பேற்றி முத்திக்கொண்டு, நீட்டியே நாளொன்று வெரித்துவாங்கி-தினைவாகத் திரும்பியதைக் கல்வத்திட்டு, மூட்டியே தங்கமொன்று லிங்கமொன்று-முறைபோடே பொன்னுமொரு கழஞ்சிகூட்டே (௩௰௨)

கூட்டியே வெள்ளியொரு கழஞ்சிதானும்-குறையாமல் பவளமுமப்படியேவாங்கி, நீட்டுவாய் ருத்திராட்ச முத்துந்தானும் - திரமான வழுக்கிருகாரத்தோடு, மூட்டுவா யிவையெல்லாம் கழஞ்சியொன்று-முத்தமனே முலைப்பாலால் தினந்தானொன்று, ஆட்டுவாய்மாதளம்பூச்சாறுவிட்டு - அப்படியே துளசிச்சார் தினந்தான்மூன்றே. ..(௩௰௩)

மூன்றுநா ளரைத்துலர்த்திப் பின்புகேளு- மூன்றான சந்திரனைக்கூடவிட்டு, மூன்றுநா ளாட்டியதைச் சிறுவில்லைகட்டி- யுத்தமனே நெல்குழியி னுள்ளேவைத்து, தோன்றுநாளிருபதங்கே சென்றதானால் - சொக்கசந்திரோதயந்தான் சுருக்குமெத்த, போன்றுநாள்சன்னிகட்குந்தோஷித்துக்கும்-பொல்லாதநோய்க்கெல்லாம்பூட்டுபூட்டே()

பூட்டப்பா சன்னிபோந் தோஷம்போகும்- புகழானநீரிழிவு மீளைபோகும், தீட்டப்பா வரோசியம்போம்சூலைபோகும் - சீக்கட்டு மகோதரமுங் கவுசிபாண்டு, ஊட்டப்பா மூகவாதம் சுழற்றுவாத - மூட்டினமு மெலும்புருக்கி யுழலைதாக, மூட்டப்பா பறந்துபோந் திக்குகெட்டு-முறையோடேகொடியநோய் தீரும்பாரே.........(௩௰௫)

குட்டவகைதீர - அக்கினிகுமாரி.

பாரப்பாவங்காரச் சஞ்சீவியென்னும் - பண்புடைய வக்கினிகுமாரியென்னும், நேரப்பா விதன்பெருமை காணவென்றால் - நெட்டோட்டங் குட்டோட்டம் நோயையுண்ணும், தூரப்பா கோடிக்குபொன்றுபார்த்து-சூத்திரத்தில் சேர்த்துவைத்தேன் சுருக்கமெல்லாம், போரப்பா யிந்தநூல் நன்றாய்ப்பாரு-போகாத பழவினைகளெல்லாந்தூளே...........................................................(௩௰௬)

தூளாகும் வியாதியெல்லாங்குமாரியாலே- சொல்லுகிறேனதைப்பொடியு மூருக்குச்செம்பும், வீளாகும்வெண்கலமுமனோசிலைவெண்கார - மின்னலுறு மரிதாரம் திப்பிலியும்நேராய், கூளாகும்குமரியுடசாற்றைவிட்டுக் - குமுறவே மூன்றுநா ளாட்டிவாங்கி,சூளாகுஞ் சட்டிக்குள் ளிதனைவைத்து- சுகமாக மேல்சட்டி கொண்டுமூடே(௩௰௭)

மூடியே சீலைசெய்து மண்ணுஞ்செய்து - முறையோடே வடுப்பேற்றி மூன்றுநாள்தான், நீடியே தீயெரிக்கச் செந்தூரமாகும்-நேராகவெடுத்ததனை வைத்துக்கொண்டு, ஊடியே நாவியொரு பலந்தான் வெட்டி-யுத்தமனே கோமயத்தில் நனையப்போட்டு, நாடியே நாவிதனை யெடுத்துமைந்தா-நாட்டுகிற மருந்துவகை நயந்துகேளே(௩௰௮)

கேளப்பா திப்பிலியு மதனின்மூலம் - கெடியாகவிரண்டுபலமதனைத்தூக்கு, நீளப்பா வெள்ளுள்ளித் தயிலங்கொண்டு - நீயாட்டு செந்தூரங் கூடவிட்டு, நாளப்பா பணவிடையாம்குளிகைகட்டி - நலமாக நிழலிலே யுலர்த்திக்கொண்டு, கேளப்பா குளிகையொன்றுவெள்ளுள்ளிச்சாற்றில் - கொண்டவுடன் சன்னிபதி மூன்றும்போமே... (௩௰௯)

போகுமப்பா மாவிலிங்கம்சாற்றில்வாங்கி-புகழாகவரைப்பணந்தான் செந்தூரஞ்சேர்த்து, வாகுமப்பா யெட்டுநாள்கொள்ளவேதா,

ன் - வாதமென்ற வெண்பதும்போம் பதினெண்குலே, வேகுமப்பாகு
ஷ்டமொடு வாயுதானும் - வெந்துபோம் வண்டுகடிசெவ்வண்டுகடியு
ம், பாகுமப்பா கடிவிஷங்கள் கபாலகுஷ்டம்- பரவிநின்றசிரங்குபட
ர் தாமரைதான்கேளே....................................(௧௨௰)

கேளப்பா வெண்குஷ்டஞ் செங்குஷ்டங்கருங்குஷ்டம்- கெடியா
னமேல்புள்ளித்தாமரைகள்கூட, கேளப்பாயிவையெல்லாங் கொடுந்தீ
பத்துங் - கொம்மட்டிக்காய்சாற்றில் குமரிசேர்த்து, நாளப்பாவொன்
றுவிட்டு வொருநாள்வீதம் - நாற்பத்து நாலுநாள்நயமாய்க்கொள்ளி
ல், வேளப்பா வுதிரத்தி அழந்தரோகம்- வேமப்பாவாயுவெல்லாம் வி
ழலாம்பாரே.......................................(௧௨௧)

விழலாகும் விப்பிருதி யகுவைவீக்க-மேலான மகோதரமுங்கெ
ற்பருங்கு விழலாகும் பீலிகையும்பதினெண்குஷ்டம்-விம்மிவரும்பெ
ருவயிறு மேல்வயிறுவீக்கம், விழலாகும்நீராமைபதினுலுபாண்டு-வீ
றுகொண்டு கெண்டைமுத லடிவயிறுவீக்கம், விழலாகு மக்கினி கு
மாரியென்றால்-வேடிக்கை மெத்தவுண்டு விரிக்கிலேனே......(௧௨௨)

## விஜயநாராயணபாணம்.

விரிகிலே னக்கினி குமாரிக்கின்னம்-விஜயநாராயணபாணமென்
றும், பரிக்கிலே னக்கினி குமாரியென்றும்- பாடினுர்வல்லோர்கள்ப
ரப்பில்மெத்த, தரிக்கிலேன் பலநூலே யென்னுல்நன்றாய்த்-தரித்தாக்கா
ல் சகலசித்துந் தானேயெய்துஞ், செரிகிலேன் தபோதனர்க்கு லபிக்
குந்தெய்வம்-திருந்தியதோரதுக்கெல்லாஞ் செப்புறேனே ... (௧௨௩)

செப்புறேன் சூதமொன்று காந்தமொன்று - செகமறியாக்கெ
ந்தியொன்று சிலேதானென்று, செப்புறேன் செம்பொன்றுலிங்கமொ
ன்று-சேர்சமனுய் வகையொன்றுபலந்தான்பத்து, செப்புறேன்பெரு
ங்காயம் பலந்தானஞ்சு - சிறந்தவெள்ளேயுள்ளி யொருபலந்தான்தூக்
கு, செப்புறேன் குமரிச்சார்விட்டுவோர்நாள் - திரளவேமயனம்போ
லாட்டுஆட்டே.......................................(௧௨௪)

ஆட்டப்பாநாளொன்று சாமமொன்று-அப்பனேமூன்றுநா ளா
ட்டிவாங்கி, நீட்டப்பா குப்பியிலேயடைத்துமைந்தா- நிலேயாகவளப்
பக்கல் கொண்டுகட்டி, மூடடப்பா வோட்டடுப்பில்குப்பிதனைவைத்
து - மூத்தீயு மூன்றுநா ளெரித்துநன்று- யூட்டப்பாவடுகனுக்கு நிரு
வாணிக்கு-மூடியேயாறவைத் தெடுத்துக்கொள்ளே..............(௧௨௫)

எடுத்ததொரு செந்தூரத் துடனேகேளு - பெண்மக்காள் திப்பி

வியும் சாதிபத்திரி, கடுத்ததொரு திப்பிலியின் மூலந்தானும் - கடுரு ரோகணி யிவைதான் பலங்கால்வீதம்,மடுத்ததொருவெண்கருவால்சா மமாட்டி - மைந்தனே மிளகுபோல்குளிகைகட்டி,தொடுத்ததோரனு பான முள்ளிச்சாற்றிற்- சூட்டியுண்ணில்சன்னிபதி மூன்றுபோமே.()

போகுமப்பா திரிகடுகு வறுத்ததூள்தான்- புகழாகவெருகடியில் தேனுஞ் சேர்த்து, வேகுமப்பா குளிகையொன்று நாளும்பத்து-விர வியுண்ணில் பத்தெட்டு வாதமொக்க, சாகுமப்பா க்ஷயரோகமூஷிண ரோகம்-சலக்கட்டு குறைநோவு குஷ்டநோவு, மேகுமப்பாவிஷிகடியு ம் சூலை மூர்ச்சை-யிவையெல்லாம்தீர்ந்துபோமின்னங்கேளே (கஉள)

சடாட்சரகுமாரி.

இன்னமொருஅக்கினிகுமாரிசொல்வே - யிதின்பேர்கேள்சடா ட்சர குமாரியாகும், சொன்னதொரு மால்விஜய வேல்கைகொண்ட- சுப்பிரமணியமென்றுஞ்சொல்லுவார்கள்,வென்னதொருஅரைப்பொ டியுங் கெந்திகாந்தம் - வெண்காரமிலிங்கமொடு பலந்தான்பத்து,வன் னதொருவகைவீதம்சேர்த்துக்கொண்டு-மாட்டடாகற்றாழஞ் சாறுவா ர்த்தே ............................................................ (தஉஅ)

சாறுகொண்டு நாற்சாம மயனம்போலே- சாதகமா யாட்டியே பொடித்துக்கொண்டு, ஆறுகொண்ட கலசத்தில் நடுப்பொடியையவை த்து-அரைத்திடுவாய் தாம்பிரக்கிண்ணியாலே,வீறுகொண்ட ரவியில் வைக்கப் புகைந்துவேகு-மீட்டுமிதைமுன்சாற்றால் நாலுசாமம்,பேறு கொண்டு ஆட்டிநன்றாய் பொடித்துமுன்போல்-பிசகாமல் நாலத்தின டுவேவையே............................................................(தஉகூ

வைத்திடுவா யிப்படிநீ மூன்றுவாட்டி - வைக்கவெந்து செந்தூ ரமாகும்பாரு, மெய்த்ததொரு செந்தூரம்பணந்தான்வீதம்-வேதித் துதிரிகடுகுதேனுமொக்க, எய்த்ததொருமண்டலந்தா னுண்ணும்போ து-என்பதென்ற வாதமொடு வாயுச்சூலை, மொய்த்ததோ ரஷ்டகுன் மம் சன்னிவாதம்-மூலர்வாதங் கனல்வாத மூர்ச்சைபோமே . (தூ௰)

மூர்ச்சைபோம் பித்தமறுஞ் சிலேற்பனமும்போகும் - முசல்வ லியுங் குதிரைவலி குமாகண்டவலியு, மூர்ச்சைபோ மேகமறுங்கவுசி தீரும்- முன்னடைப்புநெஞ்சடைப்புமொழியிற்சூலை, மூர்ச்சையோ டிவையெல்லாந் தீருந்தீரும் - மோசமில்லை குமாரிக்குமுடுக்குமெத் த, மூர்ச்சையறுங் குமாரிவிட்டு பூபதியைச்சொல்வோம்-முறையோ டே பாடிவிட்டேன் முறையைக்கேளே...............................(தூக)

கேளப்பா அரைப்பொடியும் வங்கபற்பம் - கெடியான திராப்

பொடியும் வெண்கலத்தின்பொடியும், வாளப்பா வெங்காரம் பச்சை
நாபி-மகத்தான சவுக்காரஞ் சத்திச்சார, மாளப்பா யெவாச்சாரங்காந்
தபற்ப - மப்பனே பித்தளையு முருக்குலோகஞ், சூளப்பா வகையொ
ன்றுபலந்தானென்று-தூக்கடா கெர்தகமும் பலந்தானுறே ..(௩௱௨)

ஆறுகு மிவையெல்லாங் குமரிச்சாற்று- லப்பனே நாள்மூன்று
ஆட்டிநீயும், வேறுகப் பொடியாக்கிக் குப்பிக்கேற்றி - விபரமுடனே
மூசீலை மண்ணுஞ்செய்து, கூறுகவளப்பக்கல் லடைமண்செய்து- கு
மூறவே முத்தியு மூன்றுநாள்தான், தேறுகவெரித்துவரநாலாநாளில்-
செந்தூரம் வாங்கையிலே பூசைசெய்யே ........................ ௩௱௩)

## விஷ்ணுராஜபூபதி.

பூசைசெய்யு மிதின்பேர்கேள் விஷ்ணுராச - பூபதியென்றே வேத
ம்புகலுமுண்மை, ஆசைசெய்யும் நோயதற்கு மசகமாகு- மாட்டுதற்
கு மருந்துவகை நாவியோடு, மாசைசெய்யுந் திப்பிலியு மதனின்மூ
லம்-வகையிரண்டு பலம்நாலு தூக்கிக்கொண்டு, கோசைசெய்யுங்கோ
மயத்தைக் கொழும்வைத்துக்-கூட்டியேநன்றுக ஆட்டுஆட்டே (௩௱௪)

ஆட்டியதோர் செந்தூரமுளுந்துபோலே - அப்பனே யுண்டை
செய்து நிழலுலர்த்தி,நாட்டியதோர் வெள்ளுள்ளித் தயிலத்துள்ளே-
நயத்திடுவாய்சன்னிபதினெட்டும்போகும்,நீட்டியதோர்குளிகையொ
ன்று இஞ்சிச்சாற்றில் - நீயூட்டித்தனுவாதம்பிரளிகுத்து,மூட்டியதோ
ர் குதிரைவலி கலிப்புப்பாண்டு - முத்தோஷம் மூர்ச்சையொடு முழு
துங்கேளே ................................................................ (௩௱௫)

## ஈசுரபூபதி.

கேளப்பா நவகண்டி மூர்ச்சைதானுங் - கெடியானதோஷமொ
டுசன்னிதானும், நீளப்பாபறந்தோடு மின்னமொன்று- நீகேளு புலத்
தியனே மச்சகேந்திரா, ஏளப்பா வென்றுடனே நோயைச்சாடு-மீசுர
பூபதியென் றிதற்குநாமங், கேளப்பா நோய்க்கெல்லாங் கடுங்கோளா
கும்-கூட்டிதனை வரிசைசொல்வேன் கூர்ந்துகாணே ........ (௩௱௬)

காணப்பா சூதமொன்று கெந்தியொன்று - காந்தமொடுநாகபற்
ப முருக்குச்செம்பு, பூணப்பாஅரைப்பொடியும்பித்தளையின்பொடி
யும் - புகழாக வெண்கலத்தின்பொடியுங்கூட்டி, ஊணப்பாவரிதாரஞ்
சிலையுந் துத்த-முத்தமனே சுண்ணாம்புமன்பதாக, வேணப்பா செங்கொ
ட்டைக் கற்பொடியுய்நேராய்-மேலான குமரிச்சார் தன்னாலாட்டே()

ஆட்டப்பா சாமமொன்று கள்ளிப்பாலா-லப்பனே வொருசாம
மரைத்துநன்றாய், பூட்டப்பா பொடியாக்கிக்குப்பிக்கேற்றிப்-புகழா

கமுன்போலேமூன்றுதீயும், மூட்டப்பா மூன்றுநாள்தீயெரித்து-மு
றையோடே பூபதியைவாங்கிக்கொண்டு, ஊட்டப்பா நாவியொன்று
திப்பிலியின்மூல - மோரிடையாய்கோலசத்திலூறப்போடே (௯௬௮)

போட்டதனை யெடுத்தேதான் கல்வத்திட்டு-பூபதியுங்கூடவிட்டுவெ
ள்ளிச்சாற்றால், ஆட்டதனை யொருசாமம் வாங்கிக்கொண்டு-அப்பனே
குன்றியிடை குளிகைகட்டி, ஊட்டதனை யனுபானம்முன்போலப்பா-
ஒருகுளிகை சன்னிமுதற் பிரகிருதிபிரமை, மூட்டதனை வாதம்போம்
க்ஷயரோகம்போம்- மூலமொடு மகோதரங்கள் கவுசிபோமே (௯௬௯)

## வடபாண பூபதி.

போருமப்பா வடபாண பூபதிதானென்று - புகலுகிறேன் வட
பாண பூபதிதான்பேரு, ஆருமப்பா சூதமொன்று கெந்தியொன்று-
அப்பனே காந்தமொன்றுலிங்கமொன்று, வேருமப்பா சிலையொன்று
தாளகமுமொன்று- வெண்காரம் நாகபற்பம்வங்கபற்பந்-தாகுமப்பா
வரைப்பொடியும் தாம்பிரலோகம்-சாதகமாம் பித்தளையும் வெண்கல
முஞ்சங்கே ................................................... (௯௭௰)

சங்கோடுநேர்வாளந் திப்பிலியுநேராய்-சாதகமாய் வகையொன்
று பலந்தானென்று, சங்கோடு கெவுரியிதில்பலகால்கூட்டி- சமாசமா
ய் கற்றாழஞ்சோற்றாலாட்டி- சங்கோடு சாமமொன்று வெள்ளாட்டுப்
பாலால், சாமமொன்றுஎருக்கம்பால்சாமமொன்று, சங்கோடுகள்ளிப்
பால் சாமமொன்று-தளராட்டிப் பொடியாக்கிக் குப்பிக்கேற்றே....()

ஏற்றியதை மூன்றுதினந் தீயைமூட்டி- யெடுத்தாறி நாலாநாள்
யெடுத்துக்கொண்டு, மாற்றியதில் நாவியொடு திப்பிலியின்மூலம்- வ
கையொன்று பலமொன்று மூன்றுந்தூக்கி, ஏற்றியே யெருக்கிலையின்
பழுப்புச்சாற்று-லியல்பாகச் சாமமொன்று ஆட்டிவாங்கி, பாற்றியே
குன்றியிடை குளிகைசெய்து பாச்சடாவனுபானம் துளசிச்சாறே ()

சாறுகொண்டு குளிகையிட சன்னிபோகுந்- தளர்வாதஞ் சிலேத்
பனமாஞ்சன்னிமூர்ச்சை, வீறுகொண்டமுசல்வலியுங்குமாகண்டன்-
வெளிக்குத்துமுட்குத்துந் தனுவலியும்வீசும், மாறுகொண்ட சுழல்வா
தம் முகவாதஞ்சன்னி- மகோதரமும் பிலிகையு மகுவைவெப்பும், வே
றுகொண்டு மறைந்தோடும் பூபதியைக்கண்டால்-மேலான பூபதியின்
விபரந்தானே ................................................... (௯௭௩)

## இரசகற்பூரம்.

தானென்றகற்பூரமொன்றுசொல்வேன்-சாதகமாய் சூதம்ஒன்
று பலந்தான்தூக்கி, வானென்ற சட்டிக்குள் மூன்றுபடியுப்பை - வள

மாகப் பொடித்திட்டு நடுவேகேளு, தேனென்ற செங்கல்தூள் கால் படிதானிட்டு-திரமாகக் குளித்ததிலே சூதம்விட்டு, ஏனென்ற மறுசட்டி கவிழ்த்திமூடி-இயல்பாக வெழுசீலை மண்ணுஞ்செய்யே... (௪௪௪)

மண்செய்து தொண்ணூறு கடிகையப்பா - வாகாகமுத்தீயு மெரித்துமைந்தா, மண்செய்த மேல்சட்டிக்குள்ளேகேளு - வாகாகயுறைந்திருக்கும்வெள்ளைமெத்த - மண்செய்தகற்பூரங் குழாயில்வைத்து-வாவாகப்பணவிடைதான் தூக்கிக்கொண்டு- மண்செய்துபனவெல்லம் நல்லவெல்லம்-வாகாகவாட்டிவரவளப்பங்கேளே............ ௪௪௫

கேளப்பாதிருகிறவியாதிகேளு - கிரந்திபதினாறுமுதலட்டகுன்மம்-வாளப்பாதமரோகமாறுசூலை- மகத்தானகுஷ்டமொடுகுறைநோய்தானும் - பாளப்பாபறக்கும்மகற்பூரமுண்டால் - பத்தியந்தான்புளிகைப்புபதார்த்தந்தள்ளு - நீளப்பாநேத்திரத்தின் வியாதிக்கெல்லாம்-நீகேளுவகைமருந்துநின்னைவாய்தானே........................ ௪௪௬

நேத்திரவியாதி - ௯௬ - க்கு, மாத்திரை.

தானெனல்றஇந்துப்புபீதரோணி- சாதகமாந்திப்பிலியுஞ்சமனுய்சேர்த்து - கோனென்றநந்தியாவட்டப்பூச்சார் - குழுறவிட்டுயிருசாமமாட்டிவாங்கி - கானென்றகயிறுபோல்குறுகநீட்டிக் - காற்றூடநிழலிலேயுலர்த்திக்கொண்டு - ஊனென்றகண்ணோய்கள்தொண்ணூற்றாறுமொழிவதற்குழலைப்பாலிலுரைத்துப்போடே.......................௪௪௭

போடுதற்குநேத்திரத்தில்நோய்கட்கெல்லாம் - பூட்டுகிறகனகாத்திரூதிதன்னை - ஆடுதற்குயிதுவென்றால்கண்ணோயெல்லா- மாச்சரியமொழிந்துபோம்விபரங்கேளு - நீடுதற்குநீலமொடுகெம்புவச்சிரம் - நேரானமரகதமும்புஷ்பராகம் - கோடுதற்குகோமேதகம் பவளமுத்துக் - கொடியவயிடூரியத்தோடொன்பதாச்சே.................௪௪௮

ஆச்சப்பாஇரத்தினங்களொன்பதாகு - மப்பனேலோகங்களொன்பதையுங்கேளு - வாச்சப்பா தங்கமொடு வெள்ளி செம்பு - மைந்தனேபித்தளையுந்துத்தநாகம்- ஓச்சப்பாவெள்ளீயங்காரீயங்கஞ்ச- முத்தமனேபொன்பதையுமொக்கக்கூட்டு - நீச்சப்பாதுரிசியொடு துத்தஞ்சங்கு - நீலாஞ்சனம்பீதாஞ்சனமும்பாரோ......................௪௪௯

பாரபபாகடல்நுரையும்பீதரோகணியும்- பரிவானமஞ்சளொடுகடுகுரோணி - நேரப்பாதிப்பிலியுங்கோஷ்டந்தானும்-நேரானநிரைபுங்கம்விரையிருேடு - காரப்பாவண்டமொடுமாண்மையோடு - கபாலேலாடுமிந்துப்புகற்பூரந்தானும் - தாரப்பாசந்தனமுஞ் செம்பஞ்சுங்கடுக்காய்த்-தாமரைக்கிழங்குடனேநெல்லிக்காய்காணே......௪௫௰

காணப்பாமருந்துவகைநாற்பத்தஞ்சுங்- காணென்றுகுறையாமல் திருத்துவாங்கு - ஊணப்பாகல்வத்திலிட்டுநீயு - முத்தமனேபழச்சாற்றுலொருநாளாட்டி - பூணப்பாகொடுப்பைச்சார்மறுநாளாட்டி- புகழாகமூன்றுநாள்சிறுகீரைச்சார் - தோணப்பாநாலாநாள் கரிப்பான் சாறுஞ் - சுகமாகவஞ்சாநாள்பொடுதலையின்சாறே............... ௲௫௧

சாறுகேளாறுநாள்பிச்சிப்பூச்சாறுஞ் - சாதகமாயேழாநாள்மல்லிகைப்பூச்சாறும் - வாறுகேளெட்டாநாள்செண்பகப்பூச்சாறு- மைந்தனேயொன்பதாநாள்நந்திப்பூச்சாறு - வீறுகேள்பத்தாநாளல்லிப்பூச்சாறு- மேலானபதினொருநாள்முலைப்பாலப்பா - வேறுகேளாத்தனைக்கயிறுபோலே- விபாமுட னுருட்டியேநிழலில்வையே... ௲௫௨

வைத்ததொருகயிறெடுத்து நேத்திரமேறுக - மைந்தனே தொண்ணூற்றோடாறுந்தீர - நைத்ததொருவனுபானம்பார்த்துநன்றாய்-நயமாகத்தீட்டிடவே யருந்ததியைக்காணும் - மொய்த்ததொருசூத்திரத்திற்சொன்னமருந்தெல்லாம் - மொழிக்குற்றம்வாய்க்குற்றம்மோசமில்லை - எய்த்ததோரேழுவகைச்சாறுகொண்டு - இடுகனகமொத்தினத்தையெல்லாம்போமே.................................................. ௲௫௩

போகுமப்பாபத்தியங்கேள்கிரத்திப்பண்டம் - புளியாகாதைப் பாகாதுவர்ப்புமாகா - ஆகுமப்பாஉப்புடனே பால்நெய்யாகு - மப்போது அருந்ததியினளவுகாணும் - ஏகுமப்பாகுற்றங்கள்கரைவதற்கு- இயம்புகிறேன்சூதமொன்று காரீயம்ரெண்டு - வேகுமப்பாகாரீயம்ரெட்டிதுத்த - மிதற்கிரட்டிதாம்பிரமுமின்னங்கேளே........ ௲௫௪

கேளப்பாதாம்பிரமிரட்டிசங்கு - கெடியாகவிதுவெல்லாம்பழச்சார்கொண்டு - நாளப்பாமூன்றுதின மாட்டிவாங்கி - நலமாகக்குளிகைகட்டிநிழலுலர்த்தி - வேளப்பாபழச்சாற்று லுரைத்துத்தீட்ட- விரணம்போங்குந்தம்போம் வெளியுமாகும் - நீளப்பாசுறுக்குமெத்த ஒளியைக்காணும் - நேத்திரத்தின்நோய்க்கெல்லாம்நிலைத்துப்பாரே()

நிலைத்துப்பார்மேதிவெண்ணைபலந்தானொன்று - நேர்சீனங்கால்பலந்தான்சீதரோணி - நிலைத்துப்பாரணைப்பலந்தான் தூக்கிக்கொண்டு - நீவெண்ணையன்றியிந்தமருந்துமூன்றும் - நிலைத்துப்பார்தூளாக்கிக்கல்வத்திட்டு - நீட்டுவாய்வெண்ணைதனைக் கூட்டியிட்டு - நிலைத்துப்பார்சாமமொன்றாட்டிவாங்கி - நிசமானவெண்கலசத்தூரில்வைய()

வைத்ததொருமருந்துதனை செம்புகொண்டு- மயனம்போலிருசாமமாட்டிவாங்கி - மெய்த்ததொருதாம்பிரத்தின்சிமிழுக்குள்ளே - முறையாகவமைத்தேதான் மூடிப்போட்டு - எய்த்ததொரு நேத்திரத்தி

நோய்கட்கெல்லா - மென்மகனேவிருகடுகுபிரமாணந்தான் - மைத்த
தொருகண்ணிலிடுதீரும்நோயை-மைந்தனேவகையாகக்கேளுகேளே

கேளப்பாநேத்திரத்தில்வாய்வுதானும்- கெடியானவிழிசலக்கண்
மாலைக்கண்ணுஞ் - சூளப்பாகண்ணோவும்வலிகண்தானுஞ்-சுத்துக்கண்
குலைந்தகண்பிதிர்ந்தகண்ணும் - வாளப்பாமூழிகுருடுநீர்ப்புல்லம்பூவும்
வளமானகுந்தமுதலனைத்துந்தீரும் - வேளப்பாநேத்திரநோய்தொண்
ணூற்ருறும் - வெல்வதற்குவெண்ணையொன்றுவிள்ளுறேனே. ௧௫௮

விள்ளுறேன் பசுவின்வெண்ணை பலந்தானென்று - விபரமுடன்
புதுப்பாண்டத் துள்ளேபோட்டு, விள்ளுகிறேன்குளுந்தசலம்நிரம்ப
விட்டு - மென்மேலுமிப்படியே நித்தம்நித்தம், விள்ளுறே னொருதி
ங்கள் மறந்திடாமல்-விட்டுவரவெண்ணையதுகல்போலாகும்,விள்ளுறே
ன் திரும்பவதைக் கல்வத்திட்டு-மேல்பிதரோகணியு மிடைகால்சேரே.

சேர்த்தேதான் செம்பதனுல்பழச்சார்குத்தி - திரமாக விருசாம
ங் களிம்புசேர்த்து, பார்த்தேதான் கடுகிடைதான் கண்ணில்தீட்ட - ப
றக்குமடா தொண்ணூற்றூர் பாரும்பாரு, பேர்த்தேதானுறுதிங்கள்ம
ண்டலந்தானென்று - போட்டிருந்தவெண்ணையுமாம் போக்குக்கெல்
லாம், கார்த்தேதான் குருப்பிறகேகவடுநீக்கி - காத்திருக்கில் கருணையி
னுல் கடாட்சிப்பாரோ................ ................................ (௧௬௰)

காசக்குடோரி.

கடாட்சமுள்ள காசக் குடோரியொன்று - காட்டுகிறேன்புலத்தி
யனே கண்டுபாரு, கடாட்சமுள்ள தங்கமொன்று வெள்ளியொன்று-க
டும்புலியினகமொன்றுபிதரோணி, கடாட்சமுடனிவைசமனுய் நிறுத்
துக்கொண்டு - கனக்கவே நாலுவகை பாலும்விட்டு, கடாட்சமுறுங்க
யறுபோல்திரட்டிநீயுங்-காரிலைகயாள்மூலைப்பாலிலுரைத்துப்போடே

போட்டவுடன் நேத்திரநோ யனைத்தும் போகும் - பூட்டுகிறே
னின்னமொரு குளிகைதன்னை, நாட்டவே அரிதாரஞ் சங்குசுக்கு-நல
ம்பெரிய நல்மிளகு பிதரோணி, நீட்டவே திப்பிலியு மதூரந்தானும்
நேரான புங்கம்விரை சிலைதான்துத்தம், மூட்டவே யிவைசமனுய் நி
றுத்துக்கொண்டு-முக்கியமுள்ள நந்திப்பூச் சாற்ருலாட்டே ..(௧௬௨)

ஆட்டியதைக் கயறுகட்டி வைத்துக்கொண்டு - அப்பனேமுலைப்
பாலிலுரைத்துக்கொண்டு,மாட்டியதைநேத்திரநோய்க்கெல்லாம்போ
ட-வாகாகத்தொண்ணூற்ருேடாறும்போகும், மூட்டியதில்திட்டாந்த
மூலிகையிரண்டு-முத்திருக்குஞ் செவியதனைக்காரிநாளில்,நாட்டியதி
ல்காப்பிட்டுபோராபரைக்கும்பூசை-நயமாகச்செய்துவேராறுமல்வாங்

## மூலிகைப்பிரயோகம்.

வாங்கப்பா அருக்கனுள்பிடுங்கிவந்து - மைந்தனேயந்தயிலைச்சா
ற்பிலாட்டி, வாங்கப்பா கண்ணிலிடு குருடர்க்கெல்லாம் - வானிலுறும
ருந்ததியை மருவிக்காண்பார், வாங்கப்பா பிறவிடைக்குமருந்துசொ
ல்வேவா - மகத்தான நேத்திரநோய்க்கெல்லாமாகும், வாங்கப்பா கடுக்
காயுங் காசுக்கட்டி - மயில்துத்தம் பொன்மெழுகுசீனந்தானே (தசுச)

தானென்ற மதுரமொடு பிளிசுபாக்குச் - சாதகமாய்ச் சரியாகத்
தூக்கிவாங்கி, கோனென்ற தூளாட்டி யிதனோடொக்க-கூட்டுகிறமருந்
துதனைக் கூர்ந்துகேளு, கானென்ற தேற்றின்விரை பனிநீயோடு-கடி
யதொரு கொடுக்காயின் புளியுநேராய், தேனென்ற பழச்சாற்றாலாட்
டிவாங்கி-திரும்பவதைத் தூளுடனே சேருசேரோ...... ... ...(தசுரு)

சேர்த்திரண்டு மொன்றாக்கிப் பழச்சார்விட்டு - திரளவேயரைத்
துகொண்டுகாகத்தில்நெய்யை, வார்த்துநன்றாய்ப்பிரட்டியேமருந்தை
த்தானும்-மைந்தனேயொவ்வுவிரல்கனத்தில்நீயும், பார்த்ததொருவிரல்
நீளங்கயறுகட்டி-பாங்காக நிழலுலர்த்திப்பழச்சாறுதல், கார்த்துநின்ற
காடியா லூனுஞ்சாற்றால்-கருவேலங் கியாழத்திலரைத்திடாயே (தசுசு

அரைத்ததொரு மருந்துதன்னைக் கொதிக்கவைத்து - வப்பனேபி
றவடைத்தான் போடுபோடு, நிரைத்ததொருநேத்திரநோய்க் கெல்லா
மாகும் - நோாக வின்னமொரு வழியைக்கேளு, விரைத்ததிரி கடுகுட
னே வேலைவேரும் - வெரும்வெந்நீர் விட்டரைத்துக்கயறுகட்டி, சரை
த்ததொரு வெந்நீரில் கலக்கிக்கொண்டு - கட்டாகப்பஞ்சிலே துவைத்
திடாயே.............................................................. (தசுஎ)

துவைத்ததொரு மருந்ததனை நாசிரண்டில்-சுறுக்காக நசியமிடுது
ன்பம்போகும், வைத்ததொருமூலிகையிலுசிதமொன்று-வாய்திறந்து
சொல்லுகிறேன் மைந்தாகேளு, வைத்ததொரு வெள்ளையாவரையின்
வேரை-வாகாகச் சனிக்கிழமை காப்புக்கட்டி, வைத்ததொருபராபரை
யைத் தியானஞ்செய்து- வாகாக அருக்கநாள் மூலம்வாங்கே (தசுஅ)

வாங்கியதோர் வேருடைய யிலைச்சார்கொண்டு-வளமாக புரைத்
தேதான்கண்ணில்திட்ட, ஏங்கியதோர்பூலைபோம்நேத்திரரோகம்- மெ
லிவாகி யிளைத்தோடு மீசல்வித்தை, தாங்கியதோர் சித்தர்களும்ரிஷிகள்
தேவர்-சத்திமுதல்வயித்தியத்தைச்சாற்றினார்கள், பாங்கியதோர்சூத்திர
த்தைப்பார்க்கப்பார்க்கப்-பண்டிதத்தில் சிரோமணியாம்பாருபாரோ.

## கெற்பக்கோள்.

பூாரப்பா பெண்களுக்குக்கெற்பக்கோளின்- பக்குவத்தைச்சொ

ல்லுகிறேன் பண்பாய்க்கேளு, ஆரப்பாவாண்மலடே யாகுமாகு-மப்பனே பெண்மலடு யாருமில்லை, நேரப்பா தவசிருந்தும்பிள்ளையில்லா-நேர்மையென்ன வாறுவகைச் சூலையுண்டு, வேரப்பாதேவதையா லேமூரங்கர்மம் - விபரமுடன் சொல்லுகிறேன் வித்தையெல்லாம், பேரப்பா வாசான்தான் வகையாய்ச்சொல்லப் - புலத்தியனேயுங்களுக்குப் புகலுவேனே ............................................ (௱௭௰)

புகலுகிறேன் முதல்தர்ந்தான் மலடியென்றால் - பெண்ணுக்குக் கருக்குழிதான்வழக்கமற்று - அகலுகிறேனகலாத பாசுப்பற்றி - யடைத்திருந்தால்விந்துவங்கேஅணுகாதப்பா - நெகிழுகிறேன்மறுபடிதான் கருக்குழிவாய்வு - நிறைந்திருந்தால்விந்துவங்கேநேர்படாது- தகலுகிறேன்பின்னுமந்தக்கருக்குழியில்மைந்தா - திசைவளர்ந்தால் விந்துவங்கேதான்செல்லாதே ............................................ ௱௭௧

செல்லாது நாலுவகை சொல்லக்கேளு - ஸ்திரீகளுக்குக் கருக்குழியில்கிருமிமொய்த்தால் - செல்லாதுஅஞ்சாவதப்பாநீகேள் - செறிந்தங்கேசோணிநிறைந் திருந்தாலுந்தான் - செல்லாது ஆறுவதப்பா சொல்வோம் - திரண்டுதசை மதத்திருக்கில் விந்துதானுஞ் - செல்லாதுவிவையாறும்வியாதியாகும்-செப்பக்கேள்விரோதமேழாகுங்காணே

காணப்பாவிதின்விபரம் விரித்துச்சொல்வோம் - கன்னியர்க்குப் புணர்வேளைதலைதாநொந்தால் - கோணப்பாகருக்குழியில் பாசுப்பற்றிக் - குறையாதுநிறைந்திருக்குஞ்சாந்திகேளு - பேணப்பாகோழியுடபித்துவாங்கிப் - புகழாகப்பருத்திவிரைப்பருப்புமாட்டி - தோணப்பாவவள்குளித்தஅன்றுதொட்டு - சொல்லுகிறேன்மூன்றுநாள்நீதான்கேளே ............................................ ௱௭௨

கேளப்பா விம்மருந்தை யோனிக்குள்தேய்த்துக் - கெடியாகப் புருஷனையும்புணரச்சொல்லு - நாளப்பாமூன்றுதினமிப்படியேசெய்யில் - நலமாகப்பாசமறும் பிள்ளையுண்டா - மாளப்பாபுணர்வேளையுடம்புநொந்தா - லப்பனேவாய்வுநிறைந்திருக்குதென்று- வாளப்பா பெருங்காயம்நல்லெண்ணையொண்டும் - வார்த்தரைத்துயோனிக்குள் பூசச்சொல்லே ............................................ ௱௭௩

பூசியேமூன்றுதினம்புணர்ந்தானாகில் - பிள்ளையுண்டாமூன்றுவதப்பாகேளு - கூசியேபுணர்வேளைமாதுக்கங்கே - குத்துடனேநெஞ்சுவலிகூடிற்றானால் - தாசியேயோனியெல்லாமூடிக்கொண்டு - தசைவளர்ந்திருக்குதென்றுதிப்பிலிகற்பூரம்- வாசியேகோழியுடபித்துஞ்சேர்த்து- மாட்டியதையோனிக்குள்தடவச்சொல்லே ............................................ ௱௭௪

தடவியே மூன்றுதினம் புணர்ந்தானாகில் - தப்பாதுபுத்திரனும் நாலாங்கட்சி - அடவியேபுணர்வேளைமூதுகுறொந்தா- லப்பனேபுழு நிறைந்திருக்குதென்று - விடவியேயித்துப்புமரிதாரங்காயம் - வெந் நீரில்மூன்றுபணந்தூக்கிமாட்டி - படவியேமூன்றுநாள்யோனிக்குள் பூசி - படுத்திடவேபுத்திரருண்டுபாயந்தானே ... ... ௱௭௬

தானென்றஅஞ்சாவதப்பாகேளு - தழுவையிலேகெண்டைக்கால்நொந்தாலப்பா- வானெல்றசோரையங்கேகருக்குழிவைமூடி-மறைந்திருக்குதென்றறிந்து மைந்தாகேளு - பாவென்றகடுக்காயும் பஞ்சநாணா - பச்சையாம்புழுகுடனேயாட்டிவாங்கி- மானென்றுழுமுகினை மூன்றுநாளு - மங்கைக்குமுள்ளுக்குக்கொடுத்திடாயே... .. ௱௭௭

கொடுத்திடவேபுத்திரருண்டாங் குறையோவில்லை - கூறக்கேளின்னமொருமருந்துகூட்டு - நடத்திடவே குங்குமப்பூ வதிமதுரந்தானும் - நற்சீரகத்துடனேமூன்றுங்கூட்டி- படுத்திடவேயோனிக்குள்தடவிநன்றாய் - பாயலின்மேல்புணரயிலேபிள்ளையுண்டாம் - எடுத்திடவேவாருவதப்பாகேளு-எப்பமிட்டால்புணர்வேளைமத்ததுதென்னே.

மத்ததுமெத்தக் கொழுத்திருக்கு தென்றேயெண்ணி - வாகானசவுக்காரங்கடுக்காய்சாரந் - தத்ததுமிவைசமபாகமரைத்துக்கொண்டு தடவியேபுணரப்பா மூன்றுநாளும் - பிதற்றமத்துப் பிள்ளையுண்டாமேழாங்கட்சிப் - பேயாலும்பிதிராலும்பெருத்தகேளாஞ் - சுதத்துமினிச்சாந்தியொன்று சூட்சமாகச் - சொல்லுகிறேன் நன்றாகக் கேளு. கேளே... ... ... ... ... ௱௭௯

கேளப்பாசூனையிலைமாதளையினிலையுங்-கெடியானகஸ்தூரிமஞ்சளிவைநாலும் - நாளப்பாவரைத்துநன்றாய்ப்பாதமுதல்கழுத்தும்-நயமாகமேல்நோக்கித்தடவச்சொல்லி - வேளப்பாபுருஷனைத்தான் திரும்பநோக்கி - விபரமுடன்கீழ்நோக்கிப்பார்க்கச்சொல்லு- வாளப்பா மருந்தெல்லாமெடுத்துக்கொண்டு - மாவிலையிற்பொதிந்ததனைவாங்கிக் கொள்ளே... ... ... ... ... ௱௮௰

வாங்கியதோர்மருந்துதனையவள்முன்காட்டி - வாசலிலேபுதைப்பித்துமற்றுமந்த - பாங்கிதனைக்குளிப்பித்துப் பிடவைநல்கி - பண்பானஅகிலுடனே சாம்பிராணிபோட்டு- தேங்கியதோர்தேகமெல்லாம்புகைத்துநன்றாய் - தினமொன்றில் மூன்றுதிரம் புகைத்தபோதில்- எங்கியேதேவதையும்பூதப்பிரேத - மேவலொடுபிசாசுஇவையெல்லாம் போமோ... ... ... ... ... ௱௮௧

மோகுமப்பாமருந்துவகையோனிக்குள்ளே - பூசுகிறவிபரமதை

ப்பூட்டக்கேளு- ஆகுமப்பாவகைபொன்றுபணவிடைதானஞ்சு- ஆண்
பிள்ளைக்காணுக்கால் பணவிடை தானென்று - ஏகுமப்பாவியாதிமுதல்
விரோதமெல்லா - மென்மக்காள்சஞ்சலங்க ளில்லையில்லை - பாகுமப்
பாமடியில்லை பிள்ளையுண்டாம் - பாடினேன் கெற்பத்தின் கோளைத்
தானே... ... ... ... ... ௩௮௨

தானென்றபத்தியத்தைச் சூத்திரத்தில்சொல்வோஞ் - சாதகமா
ய் கட்டியதோ ருப்புமாகும் - வானென்ற புளியாரைச் சீக்காய்கொ
ழுந்து - மைந்தனே புளியாரை நெல்லிக்காயுந் - தேனென்ற வெள்
ளாடா முசலாமையாகும் - திரமான ஊர்க்குருவி காடை மானும்-
பானென்றமனையாகும் சுறுமீனாகும் - பண்பானசெளுத்தியொடுமி
ளகுமாமே.................................................. ............... (௩௮௩)

ஆகுமப்பா சர்க்கரைதேன் சிறுகீரையாகு - மாவின்பால் நெய்
யாகும்சிறுபயறுமாகும், ஆகுமப்பா துவரையொடு பொன்னாங்காணி-
யவரையொடு தூதுவளைச் சமூலமாகும், ஆகுமப்பாதித்திதமெல்லா
மாகு - மாகாகா புளியுப்பு கைப்புமாகா, ஆகுமப்பா பழவகைகளெல்
லாமாகும் - ஆத்தாளைப் பூசித்த மதுவுமாமே...... ........ (௩௮௪)

மதுவாகுங் குளுந்தசலங்கிட்டாகாது- மைந்தனே கொதிதண்ணீ
ர் வெந்நீருகும், சதுவாகும்வேதத்தைக்கண்டுசொல்லேனல் - சத்தியமா
யிந்நூலைச் சார்ந்துபாரு, அதுவாகு மிதுவாகு மென்றேயெண்ணி- ய
லைந்தலைந்து திரியாம லருளைநோக்கிப், பொதுவாகும் நினைவுகொண்
டிருப்பாராகில் - புத்திசித்தி முத்திமுதல் புனிதமாமே...... (௩௮௫)

சுரம்வரும் நாள்.

ஆமப்பா சுரதோஷத்தாண்மையெல்லா - மறைந்திட்டேன் முன்
பேதா னடக்கமாக, ஓமப்பா நட்சத்திரமவத்தைநேரு - மூர்நநாள்நீ
சேனுமச்சசேர்திரா, வேமப்பா அசுபதிநாள்வந்தசுரந்தானும்-விட்டு
ப்போமெட்டாநாள்பரணியானால், போமப்பாவந்தசுரங்கொல்லாதா
இல்-பொறுக்குமடா யொன்பதிலேகார்த்திகைநாள்கேளே.. (௩௮௬)

கேளப்பா கார்த்திகைக்கு வந்தசுரந்தானுங் - கெடியான வெட்
டாநாள் விடாதேபோனால், நாளப்பாமூவேழு தினத்தில்கொல்லும்-
நயமான ரோகணிநாள் சுரத்தைச்சொலவோம், நீளப்பாயெட்டானு
ளிருபத்தெட்டில் - நின்றுபோ மிருகசீரிஷ சுரத்தைச்சொல்வோம், ஆ
ளப்பா பத்தாநாள் விட்டுவாங்கு - மாச்சரிய மாதிரைநாள் சுரத்தைச்
சொல்லே................................................................................ (௩௮௭)

சொல்லடா வஞ்சாநாள் கொல்லுங்கொல்லுந் - திஞ்சாரேல்திங்

களொரு எழுஎழு, செல்லடாபுனர்வசுநாள்வந்தரூட்சை-தீர்ந்துபோம்பதினொரா நாளில்தானும், புல்லடா பூசநாள் வந்தரூட்சை-போகுமே நாளிரண்டில் போகாதாகில், வெல்லடா வெட்டாநாள் விட்டுப்போகும்- விழுன ஆயிலிய சூரந்தான்பாரே.................... (௬௮)

பாரப்பா வேழாநா ளுயிரையுண்ணும்- பாடுகிறேன் மகத்துநான் சூரத்தைமைந்தா, நேரப்பாபத்தாநாள் நிவிர்த்தியாகும்- நீங்காதே பறின்மூன்றில் நின்றுபோகும், சிரப்பாபூரநாள்வந்தரூட்சை-தீர்ந்துபோம் பத்தாநாள் பதினோர்நாளில், வேரப்பாஉத்திரநாள் வந்தரூட்சை - வென்றுகொல்லும் பதினோரா நாளில்தானே......... (௬௯)

தானென்ற பதினொன்றில்கொல்லாதாகில் - சாதகமாய் மூன்றுதிங்கள் செல்லுஞ்செல்லும், தானென்ற அத்தநாள் தோன்றரூட்சை- சாந்தமாமெட்டாநாள் பத்தாநாளில், தானென்றசித்திரைநாள் வந்தரூட்சை - சாந்தமா மூன்றுநாள் தானேகொல்லும், தானென்றசோதிநாள் தொடுத்தரூ - சை-சன்னுமடாவல்லவென்றுல்விட்டுப்போமே.

போகுமப்பாவிசாகநாள் வந்தரூட்சை-பொன்றுவிக்குமெட்டாநாள் பொன்றாகில், வேகுமப்பா திங்களொன்றில் மடிந்துபோவார்-மேலான வனுஷநாள் சூரத்தைக்கேளு, தாகுமப்பா அஞ்சாநாள்சாவார்சாவார்-சாத்துகிறேன் கேட்டைநாள் சூரத்தைமைந்தா, ஓமப்பாவொன்பதிலே யுயிரையுண்ணு-முத்தமனே மூலநாள்சூரத்தைக்காணே

காணப்பாநவதினத்தில் விடாதேபோனால்-கண்டுகொள்ளும்பதினோரா நாளில்தீரும்.பூணப்பா பூராடநாளில்ரூட்சை - பொருந்துப்போம் நாளெட்டில் மாசமொன்றில், பேணப்பா உத்திராடநாளில்ரூட்சை-பேதகமாம் பன்னிரண்டு தினந்தான்சொல்லில், வீணப்பாவிடாதாகில் மாசமேழில்- விட்டுப்போ மவிட்டநாள் சூரத்தைக்கேளே.. ()

கேளப்பா நாளெட்டில் விட்டுவாங்கும்-கெட்டியாய்விட்டில்லையிறக்குமானால்,தாளப்பா சதையநாள்சூரந்தான்தோன்றிற்-சரிபிடிக்கும் பத்தாநாள் தவிர்ந்தாற்சாதந், தேளப்பா பூரட்டாதி சூரத்தைக்கேளு-செப்புகிறே னாறில் கொல்லுங்கொல்லும்,தாளப்பா உத்திரட்டாதி தோன்றும்ரூட்சை-நாளெட்டி லுயிர்பறித்து நண்ணுந்தானே.

## வாரபலன்.

தானென்ற எட்டாநாள் கொல்லாதாகில்-சாதகமாய்ப் பத்தாநாள் சாந்தமாகும், மானென்ற ரேபதிநாள் வந்தரூட்சை-மாள்விக்குமெட்டாநாள்மாளாதாகில்,தேனென்றபத்தாநாள் தெளிந்துபோகுஞ்-செ

ப்புகிறேன் சுரரூட்சைசேதியின்னம், ஊனென்ற ஆதிரைநாள் சோம
வார - மூத்தமனே சுரந்தோன்றி லுயிர்போம்பாரோ......... (தகூச)

பாரப்பா திருவோண மருக்கன்வாரம் - பகைநாளில் சுரம்வருகி
ல் மரணமாகுந், தீரப்பா சனிவாரங் கார்த்திகை நாள் ரூட்சை - சிறந்
தக்கால் கொன்றுவிடுந் திண்ணமாக, வேரப்பாவிசாகநாள்வெள்ளிவா
ரம்-விடாதுசுர முயிர்பறிக்குந்திண்ணந்திண்ணம், நேரப்பாரேவதிநா
ள்புதன்வாரத்தில்-நேர்ந்தசுரங்கொன்றுவிடும்நிசமாய்க்காணே (தகூடு)

காணப்பா செவ்வாயுஞ் சித்திரைநாள்சேரில்- கடினமப்பா மற
வியூர் காண்பா லாயா - பூணப்பா திரியவத்தைக் குணத்தைச் சொல்
வேன்-புகழாக வாதசுரங் கறுத்துக்காணும் - ஊணப்பா சரசுரத்து மி
டறுபுண்ணு- மூத்தமனேநாவறண்டுஉடம்புதுள்ளி- வீணப்பாவுள்ளங்
கால்செவிமார்புச்சி-வெதும்பாமல்குளுந்திருந்தாலவத்தையஞ்சே. ( )

அஞ்சாநாள்மரணமாம் பித்தசுரவவத்தை - பறைகிறேன்புலத்தி
யனேமசசகேந்திரா-பிஞ்சாமல்வாயுவந்தால் மலசலங்கள்கட்டிப் - பி
ணிமிகுக்குமுகம்பார்த்தால் பிசாசுபோலாம் - பஞ்சானவுடல்வெளு
த்துத்தலையுழத்திப் - பார்ப்பகமாய்த் தான்பார்த்து மேமேலநோக்கி-
துஞ்சாதவேருவைதான் முகத்திற்காணில் - துஞ்சுவாராறுநாள் சுறுக்
காய்த்தானே... ... ... ... ... தகூஎ

சுறுக்காகச்சிலேற்பனத்தினவத்தைதன்னைச்-சொல்லுகிறேனரோ
கித்துச்செரித்திடாமல் - குறுக்காகுமுணர்வற்று உறக்கமற்று - கூறுகி
றேனுதரத்தில்மலசலங்கட்டி- பறுக்காகுந்தாகமொடுசோகந்தானும்-
பற்றியேபஞ்சடைந்து பார்வைகுன்றி - இறுக்காகவேழலைநாள்தன்
னில்வாழ்வா - ரியம்புவேன்திறிநாடிதொந்தந்தானே... ...தகூஅ

திறிநாடிதொந்தம்.

தொந்தமென்ற வாதந்தான் பித்தத்தேறி - சுற்றியேமேற்நோக்கி
யோடுமாகில் - தொந்தமென்றபித்தமது பித்தத்தேறி - சுறுக்காகமே
ல்நோக்கிவாங்குமாகில் - தொந்தமென்ற உயிர்மீளும்வாதபித்தம்- சுழ
ன்றுதான்சிலேற்பனத்திற் றடருமாகில் - தொந்தமென்றமருந்தே
தடுப்பாரின்று- துஞ்சுவார்பட்சத்தில்துஞ்சுவாரோ... ... தகூக

வேறு.

வாரப்பாயிவைகளெல்லாம்வகைவகைவிபாஞ்சொன்னேன்... *
ஊரப்பாநோய்களெல்லாமுரைத்திட்டேனுறுதியாகப் ... *
பாரப்பாவிந்தநூலைப்பண்டிதம்வேண்டித்தானால் ... ...*
சேரப்பாவிரித்துநன்றாய்ச்சேர்த்திடில்சித்தமாமே... ... தா

வேறு.

ஆகுமடாநோய்வருங்காரணந்தானப்பா-னறிவுள்ளோர்தனைப்பழித்துஅகந்தைகூறி- பாகுமடாசாத்திரங்கள்தன்னைப்பாரார்- பரிவாகத்தர்மத்தைச்சிந்தியார்கள்- போகுமடாகோத்திரங்கள்தல்லைக்காரார்- புத்தியாற்குருவினுக்குஇன்பஞ்செய்யார்- வாகுமடாபாத்திரங்களறிந்துநன்றாய்-மைந்தனேமீயாதமட்டைதானே... ... ... நாக

தானென்றபாவிகள்தான் மெத்தவுண்டு - சத்தியமுஞ்சாத்தியமுமெத்தவுண்டு - பானென்ற ஆயிபதம் பூசைசெய்வார் - பழிப்பார்கள் நிந்தைசெய்வார் பெரியோர்தன்னை - ஊனென்ற சையோகங் கொலைகள்செய்வா - ருற்றதொருசித்திலாத்தான்பொய்யேயென்பார்- கோனென்றவாதவித்தைபொய்யேயென்பார் - குருவறியார்மிலேச்சர்கள் தான்கொஞ்சங்காணே .. ... ... ... .. நாஉ

கொஞ்சமொன்ன குருநிந்தை யுறவுநிந்தை - குருக்கொடுக்குமுன்னேதான்குறுக்கேவாங்கல் - வஞ்சமுற்றபொய்பேசி மிரட்டிப்பேசி-வயிறுதனைப்பிழைப்பதற்குப் பெண்டீர்பிள்ளை - பஞ்சமறவுண்டுடுத்திச்சாட்சிசொல்லி - பலிகொடுப்போர்தனைத்தடுத்துப்பட்சபாதம் - தஞ்சமென்றுஅடைந்தாரைத் தற்காக்காமல் - தள்ளுவார் கெதிகெட்ட சண்டிமாடே... ... ... ... ... நாந

மாடுதா னென்றுசொன்னால் சகிக்கமாட்டான் - வார்த்தையிலே பசப்பியவர்மயக்கங்கொள்வர்- காடுகள்தான்தேடியேநடந்துமாய்வர் கழுதைகள்தான்சிலருண்டுகாணும்பின்பு - ஆடுவார்பாடுவார்விரதமென்பா - ரங்கங்கேவகைமாறியசதிசெய்வார் - ஓடிதான்காதத்தேந்திதேகியென்பா - ருண்மைதனையறிந்தவர்போலுபிாசொல்வானே .. நாச

சொல்லுவான்கற்பனைகளனேகமாக - சூத்திரந்தானிவர்க்கெல்லாம்நோயேயாகும் - வெல்லுவான்கூற்றனுடதூரிதல்லை - வெல்லாமல் போனூர்கள்பாசத்தோர்கள் - கொல்லுவானுயிர்களைத்தான்கூறுகொண்டு - கோடானகோடிசென்மநரகில்வீழ - அல்லுவான்நாய்போலேநடிப்பான்மட்டை-யம்பரத்தைக்காணுதஅழிவிறேோ .. .. நாரு

அழிவின்றிநோயன்றிப்பாவமன்றி - யாசானைநிழல்போலேயடுத்துக்காத்து - கழிவன்றிநற்கலையுங் காத்தடக்கி - கால்கள்ரெண்டும்நடுநிறுத்திக்கலையொன்றாக - வெளிவன்றிதத்துவத்தைவெளியாய்க்கண்டு-வென்றுகொண்டுநிறைபவத்தின்விறுங்கண்டு - பளிவன்றிப்பராபரத்தைப்பார்க்கப்பார்க்க-பலித்திடுங்காண்ஞானவித்தைபலிக்குங்காணே

காணப்பாமூர்த்திமூர்த்திவாலைபூசை-கனிவித்துத்தசதீட்சைகருவுங்கண்டு - பூணப்பா சிதம்பாரூப் பூசைசெய்து - பொலிவானநிருவா

ணிபோற்றிநின்று - ஊணப்பாபஞ்சசத்திபுட்டசத்தி - புத்தமியாள்திட்சைவிதிக்குள்ளேசொக்கி- வீணப்பாவாணவத்தைவிகற்பஞ்செய்து- வென்றவனேயத்துவிதவிவேகிதானே .. ... ... ...௲

## ஞானோபதேசம்.

தானென்ற வத்துவித பிரபங்கேளு - சாதகமாய்ச்சொல்லுகிறேன் சாரமாகப் - பானென்ற பாசம்விட்டு நின்றுயானால் - பலிக்குந்தான் ஞானநெறிப் பண்பாய்பின்னும் - தேனென்றபதியில்நிற்க யோகமாகும் - சிந்தையற்று நிற்கிறதே நிருவிகற்பம் - ஊனென்ற வறிவறிதல் நிராகாரமாகு - முத்தமனே நாசமற்றால் நிற்குணந்தான் பாரே.

பாரப்பாவிவ்வண்ணமறிந்தாயானால் - பலிக்குமப்பா ஞானநெறி பண்பாய்பின்னும் - பாரப்பாயெந்நூலைப் பார்த்தால்நோய்கள்-பாழாகும் நல்வினை தீவினைகள்ரெண்டும் - ஆரப்பாகாசமற்றகண்ணைப் போலே - யறியலாமாத்துமாவென்றதாரு - நேரப்பாயிவையறிந்தால்ராசாளுகும் - நெறியில்லான்குருவல்லநிர்மூடனாகும் - போப்பாஉலகத்திலாசானென்று-பேரிட்டுப்பிழைப்பதற்குப்பொய்சொல்வானே.

சொன்னக்கால்வருமோடாசித்திமுத்தி - துன்மார்க்கரொருகோடிசுடுவார்வாதிஞ் - சொன்னக்கால்வரும்மோடாகுருக்கைகாட்ட-சுறுக்காகப் பலித்திடுங்காண் வித்தையெல்லாஞ் - சொன்னக்கால் வரும்மோடாசண்டாளர்க்குத் - துறையேதுநிறையேது சுகந்தானேது - சொன்னக்கால்வருமோடாகுட்சமெல்லாந் - திடர்ந்துன்னைவிட்டகுறை தாக்குங்காணே... ... ... ... ... ௲௰

தூக்குவதுஆளாயென்றாலறிவுள்ளோரை-சோர்வன்றிச்சத்தியமாய்சொக்கினோரை - தூக்குவதுஆளாயென்றால்தேவிபூசை- துணிந்து செய்புமுத்தமரைத்தூக்குந்தூக்குந் - தூக்குவதுஆளாயென்றால்பராபரத்திற்பற்றி - கூட்டிநின்றநல்லோரைத்தூக்குந்தூக்குந் - தூக்குவதுஆளாயென்றால் பொய்சொல்லாத - சுருதிகளைச்சடத்தோடே தூக்குங்காணே... ... ... ... ... ௲௰௧

காணப்பாகுருவான பெரியோர்தன்னைக் - கைகுவித்துதெண்டனிட்டுக்கருத்தொன்றாகி - பூணப்பாகோபமென்ற மூனையைத்தள்ளி-புகழான பெரியோர்கட்குதவிசெய்து- வீணப்பாபெண்டாசைபொன்னையாசை- விளைந்தாலுந்தவறாமல்மேலேநோக்கி- தோணப்பாதோணுமட்டுமிருந்தாராகிற் - சொல்லேதுபொருளேதுபூரியாமே... ௲௰௨

## வேறு - பூரிகாதயிலம்.

பூரிகாதயிலந்தன்னைப் புலத்தியா புகலக்கேளு, வீரியஆயில்பட்

டை விளம்பினேம் பலந்தானூறு, காரியங் கண்டங்கத்திரி கழிமுள்ளி நொச்சியோடு, சீரியவழுக்கிருவுஞ் சித்திர மூலங்கூட்டே... (தாய௪)

கூட்டுபாதிரி நன்னாரி கூவியஞ்சிந் துநாதி,நாட்டுசாரணை யிலாமிச்சு நல்லசிற்றாமணக்குப், பூட்டுமூப்புரமெரித்தான் புகல்வேம்புமெருக்கினோடு, நீட்டுசிற்றாமுட்டிவேர் நிலக்குமிழ் மூடக்கொத்தானே-

தானென்ற சிறுகாஞ்சொறி சத்திசாரணைகாற்றோட்டி, மானென்றுமல்லிரண்டு மலைதாங்கி யிலுப்பைப்பூவும், கானென்ற பேராமுட்டிக் காகிலமலாக்காய்கெந்தம், வேனென்ற வாதந்தன்னைமடக்கிவேர்தறுக்குமூலம் ................ (தாய௫)

மூலம்வேர்க்கொம்புசெவ்வியமூலஞ்செங்கழுநீர்கூட்டு,சாலவே வகைகள்வேருந் தனிவகைப் பலந்தான்பத்து, தூலமாய்நொறுக்கிப் பாண்டத் தூட்டறுதூணிநீரில்-காலமேயனலுமூட்டிக் கியாழமுமெட்டொன்றாக்கே ................ (தாய௬)

ஆக்கியகியாழந்தன்னை யடைவுடன் வடிதான்கட்ட, நீக்கிலாச்சிற்றரத்தை நாற்பது பலம்நிறுத்துத், தாக்கடாநொறுக்கித்தூணி நீர்தனில் கியாழத்தாட்டி, போக்குடனெட்டொன்றாக வடித்துப்பின் புகட்டக்கேளே ................ (தாய௭)

கேளப்பா வுவாய்நெல்லோடு கேடிலாதுளுந்துகாணங், கேளப்பா வகைக்குவெட்டுப் படிதூணிநீரிலிட்டு, கேளப்பா வெந்ததண்ணீர் கிருபையாய்க் குறுணிசேர்த்து, கேளப்பா விலைகளெல்லாம்கெட்டியாய்க் குறுக்கிடாயே ................ (தாய௮)

குறுக்கிய கியாழமூன்றுங் கூறுடன்தாழிசேர்த்து,அறிக்கையால் காப்புக்கட்டி யாடகத்தயிலம்விட்டு,மறுக்கிலாவெள்ளாட்டுப்பால்வாருடன்தூணிசேர்த்து, பெருக்கவே யனலைமூட்டிப் பின்புகற்கங்கள் சேரோ ................ (தாய௯)

வேறு.

சேரடா செவ்வியமுடன் திப்பிலிச்சிற்றரத்தை - செஞ்சந்தமகில்கெந்தி திப்பிலியின்மூலம், சேரடா குறுந்தொட்டி வேர்த்தோல்நன்னாரி-தேசாபுரம்தேவதார மோடுருக்கில், சேரடாமலைதாங்கிவேர்ப்புழுக்கைவேருஞ்-சிறந்த சுக்கிலாமிச்சுச் சடாமாஞ்சிமதுரம், சேரடா நல்லகெந்தி லவுங்கப்பட்டை-சீரானமஞ்சிட்டி நிலவாகைவேரோ....()

வேரடா தோடைவேர்வங்காளப்பச்சை- மிளகுடன் கஸ்தூரிமஞ்சளடவிகச்சோலம்,பாரடா வகைக்குமொருபலந் தூளாக்கி-பண்புறவே வெள்ளாட்டுப் பாலிலாட்டிச்,சீரடா கறுத்தாட்டுப்பாலிலேகலக்கிச்,சி

றப்புடனேதாழிக்குக் காப்பதனைப்புனைந்து, வாரடாவெண்ணெயொடு கியாழகத்கமெல்லாம்-வளமாக விட்டதற்பின் விநாயகனைப்பணியே.

பணிந்தடுப்பில்திட்டித் தாழிதனையேற்றிப்-பதருமல் சிறுசோதியு மூன்றுதினம்வைத்து, துணிந்தந்த நாலாநாள் பதத்திலேவடிக்கச்-சொல்லக்கேள் குங்குமங் கஸ்தூரிகற்பூர, மணிந்தவலகைமூன்றுக்கும்வகைநாலுகழஞ்சு-மப்பனே பொடித்திட்டுத் தயிலமதைவடிப்பாய்த், தணிந்தந்தத் தயிலமோர்கலசத்திட்டு - தானியபுடம் பத்துநாள் தங்கினபின்பாரோ ................................................ (௲௧௨௨)

பார்புகழுந் தயிலத்தை நாலுநாட்கொருக்கால்- பண்புடனே தலைக்கிட்டு மேனுமதைப்பூசி, ஆரவே செவிநாசி தயிலத்தைநிறுத்தி-யப்பனே சீயக்காயரைப்பிடுவெந்நீராஞ், சீர்பெறவே வெந்நீர்க்குவேப்பிலைகொம்பரக்கு - செங்கத்தாரிப் பட்டைச் சொம்புக்காசுழக்கு, வாரமுடன் கிழிகட்டி வெந்நீரிற்போட்டு - மறுகியபின்னெடுத்தாற்றிமுழுகிவரவளமே ................................................ (௲௧௨௩)

வளமானநோய்போவ தேதென்றுச் சொல்வேன் - வாதமென்றவெண்பதுவு மருண்டே. யோடும், சளமான தோஷங்கள் சன்னிவாதம் - தசைவாத முகவாதஞ்சன்னிவிஷவாத, முளவுநரித்தலைவாதமண்டைவாத-முள்ளடங்கிநின்றதொரு அத்திவாதம், பழகுபக்கவாதமொடு அற்புதமாம் வாதம் - பலகோட்டிக் குமரகண்டன் முகவலிப்பும்பறக்கும். ................................................ (௲௧௨௪)

பறக்குமடா தோஷகுணஞ் சன்னிபதின்மூன்றும்-பனைத்ததெல்லாமொழிவதற்குப் பாகங்கேளு, திறக்கவொரு காசிடைதான் தயிலந்தனை - துடமிரிட்டுமுறுக்குகைகால்தேய்ப்பாயாகில், இறக்கிவிடுஞ் சன்னிமுதலெல்லாமப்பா - விதன்பெருமை யிவ்வளவென் றெண்ணவேண்டா, மறக்கொடுமை யகற்றிவிடும் பத்தியங்கள்வேணு - மசுவகெந்தபலாச்சுதமாந் தயிலங்கேளே ................................................ (௲௧௨௫)

## அசுவகெந்திதயிலம்.

கேளடா வமுக்கிருவேர்ப்பலமும்பத்துக்- கிளாவில்வம் சிற்றாமுட்டி பேராமுட்டிவேரும், வாளடாநிலைப்பனைவேர்நீர்வள்ளிக்கிழங்குமைந்தனே நன்னாரிபொன்னாங்காணி, கேளடா விலாமிச்சுமுத்தக்காசு-கூறிரேழும் வகையொன்று பலந்தான்மூன்று, சூளடாநொறுக்கியதைத் தூளாயாட்டி-தூணிரொண்டு பாண்டத்திற் கியாழம்போட்டே....()

போட்டபின் பெட்டொன்றாய் குறுக்கியப்பால்- புகழுரைரேம்.

வகைகேளு புலத்தியாநீ, நாட்டமுடனகில்கெந்தம் புழுக்கைவேரும்-நல்லகெந்தக் கொம்பரக்குவகைக்கிரண்டுபலந்தான், ஆட்டடாதூளாக்கிச் சலம் பதக்கு விட்டு - அக்கினியை மூட்டியதை யெட்டொன்றாய்குறுக்கி, நீட்டடா யின்னம்வகை கியாழத்துக்கு- நிகழ்த்துகிறே மிலுப்பைப்பூ குளம்பாலைவேரே............................ (௧௧௨௭)

வேர்நாணல் மால்கிழங்குதாமரையின்வளையம் - வெருகங் கிழங்குடனே பெருங்கோரைக்கிழங்கு, வேர்பூமி சர்க்கரையின் கிழங்குகல்லாலப்பா - வெட்டிவேர் சீந்தியுடன் செங்கழுநீர்க்கிழங்கு,வேர்வகைக்குப் பலமிரண்டு நொறுக்கியேகியாழம் - விடுதுணி நீர்தாழியெட்டொன்றாய்க்குறுக்கே................................ (௧௧௨௮)

குறுக்கியினிமூன்றுவகைக் கியாழம்வடிகட்டிக் - கூட்டடா தாழியொன்றில்காப்பணிந்துசேர்த்து,முறுக்கடாசாறுவகைமொசுமொசுக்கை கொடிப்பை, முடக்கொத்தான் கரத்தொட்டி கரிப்பான்சாறு, இறுக்கியிட கற்றாழை கீழ்காய்நெல்லி - இயல்பானநீர்வள்ளிநெல்லிக்காய்ச்சாறுந், தறுக்கடாகூற்றனுட குதப்பைச்சாறுந்-தனிச்சாறும் வகைக்குமொரு படிதான்சேரே.................................. (௧௧௨௯)

சேரடா தயிர்தண்ணீர் படியுமொன்று-திரமானவாவின்பால் படியவ்வண்ணம், சேரடாநல்லெண்ணைபடிதான்ரெண்டு - செப்புகிறேன்கற்கவகை திரிகடுகுமதுரம், சேரடாதிரிபலையுங் கிரும்புசிறுநாகஞ்-சித்தரத்தைச் சிரகமுமுத்தக்காசு, சேரடாகடல்நுரையுங்கச்சோலந்தானும் - செவ்வள்ளிக்கொடி தேவதாரம் வெட்டிவேரே.......... (௧௧௩௦)

வெட்டிவே ரிலாமிச்சுஅமுக்கிறுநன்னாரி - வெட்பாலையரிசியொடு கோஷ்டமிலவுங்கம், பட்டையொடு பத்திரியுமடவிகச்சோலம், - பச்சையொடு மரமஞ்சள்கடுகுரோகணியுந், தட்டில்லாக் குறுந்தொட்டிவேர்த்தோல்மஞ்சிட்டித் - தகரமொடு சடமாஞ்சி செண்பகம்நற்கெந்த, மூட்டில்லா தருளேல மிந்தவகைகூட - முதலகில்செஞ்சந்தமொடு செங்கழுநீர்வேரே........................................ (௧௧௩௧)

வேர்முதலாய் வகையொன்று கழஞ்சிரண்டு- வெய்யலிலே காயவைத்துத் தூளாயாட்டிச், சீர்பெறவே யாவின்பாலிலரைத்துச்சேர்த்து - சிறப்புடனேதாழிக்குள் கலந்தபின்னும், சாரமுடனடுப்பேற்றித் தீயைமூட்டிச் - சாமமொன்று யெரித்திடுவாய்மூன்றுநாளும்,வாரமுடநாலாநாள் வற்றக்காச்சி-வடிக்கும்போ தப்பனேவகைகளைக்கேளே.

வகைகேளுங் குங்குமங் கஸ்தூரிகற்பூரம்-வாகான புழுகுசட்டங்கோரோசனையினோடு, திகையாமல் வகையொன்றுகழஞ்சியொன்று-

திறக்கவே பொடித்திட்டுத் தயிலத்தைவடித்துப், பகையாமல்கணேச ஊயும்பூசைசெய்து- பத்துநாள்தானியபுடம்புதைத்துவைத்து,நகை யாதபடிநாலு நாட்கொருக்கால் முழுக - நலஞ்சிறந்தசியக்காயரைப் பு.வெந்நீர்நலமே ........................................(தகஙூங)

நலம்பிறக்கு மிப்படியே முழுகினுக்கால் - நடாதுபிணி யனைத் து நடுங்கியோடும், பலஸ்பிறக்கப் பத்தியத்தைச்சொல்லக்கேளு-பால் தயிர்மோர் புளிகைப்புப்பச்சைசமாங்கிசங்கள்,அலம்பல்செய்யும்புகை யிலையு மந்தமுளதகற்று - அகன்றுவிடுமறுநாளிலானதெல்லாமருந்து- புலம்படவே போம்நோய்களேதேதென்றால்- புலத்தியனே வத்திசுர வெட்டைபோமே ........................................(தகஙூச)

போமப்பா மூன்றுவகைபணைப்பொடுதொந்திப்பும்-புரண்டெ ழுந்த சுரதோஷம் வாய்வுநீரிரத்தம், போமப்பா வரட்சியொடுயிரும ல்தாகம் - பித்தவர்த்தனையோடு தலைநோய்பீனிசமும், போமப்பாவு டல்காந்தல் பீனிசங்கள்கபங்கள் - பொல்லாத விஷபாகம்போம் விக்க லடங்கிப், போமப்பா தாமரையின் மணிப்பருப்புமஞ்சு புகழ்குளவி கூட்டுமண்ணு மந்தயிடைதானே ........................................(தகஙூடு)

இடைசமனாய் வெந்நீரி லாட்டியேகலக்கி-யென்மகனே விக்கலு க்குக் கொடுக்கநிற்கும், விடையவின்னங் கற்கடக சிங்கிசடாமாஞ்சி- மேன்மைபெற சிறுதேக்கு திரிகடுகுகூட்டு, அடையடையா யவித்தி ருக்கும் பூசினியில்பருப்பை - யளவுசம னாகவே தூளாட்டிப்பின்பு, தடையறவே சர்க்கரையி லருந்தத்தீரும் - தாக்குதற்குக்குடிநீரைச்சா ற்றக்கேளே ........................................(தகஙூசு)

சாற்றக்கேள் சிறுநாகஞ் சித்திரமூலம் - சண்பகமும் வளையலு ப்புச் சுக்குங்கூட்டி, வேற்றுமையில்லாதுசமனாகவேநருக்கி - விடுமொ ண்டுபடிசலமு மெட்டொன்றாய்குறுக்கி, நாற்றிசையுங் கீர்த்திபெறவ ந்திசந்தியருந்த - நாள்மூன்றில் விக்கல்நிற்கும் நன்றாய்க்கேளு,நேற் றியொரு இயாழங்கொள் கார்த்திகையினிலையும் - நீதிசிறு வழுதலைவே ர் சிற்றரத்தைநீட்டே ........................................(தகஙூஎ)

நீட்டடா கொடுவேலிவேர் சமனாய்நொறுக்கி - நீரிரண்டுபடிவிட் டு யெட்டொன்றாய்க்குறுக்கி, நாடடடா வந்திசந்தி மூன்றுநாளருந் த- நலமாகும் விக்கலுக்குந் தூபங்கேளு, கூடடடா தோலடையிலை கு ங்கிலியஞ்சிலையும் - கொம்பரக்குமயிலிறகு மகிலாவின்நெய்யும், கூட டடா சமன்கூட்டிப் பொடிச்சதையுந்தூபம் - புகைத்திடவேவிக்கல் நிற்கும் பின்புகேளே ........................................(தகஙூஅ)

பின்புகேள் விக்கலுக்குத்திரிபுகையையப்பா-புகலுகிறோம்கொ
ம்பரக்கு மஞ்சள்சடாமாஞ்சி,மஞ்புமனோசிலைதேவதாரமகில்கடடை-
வழுக்கிருவேர்சமனு மணக்கிலையுஞ்சாற்றி, லின்பமுடனே யரைத்து
த் துணியிற்சேர்த்து - யியலாகத்திரிபிடித்துலர்த்திக்கொண்டு, முன்பு
திரி புகையேற்ற விக்கல்தீரும் - மூரணவந்தத் தளம்போட வகையைய
க்கேளே............................................(தகஙக)

வகைகேளுமேரண்ட மவிச்சுத்துத்தயில-மங்கையர்கள் முப்பா
லு மாவின்நெய்யுங்கலந்து,பகையாமல் சாரித்துத்தலைமயிரின்கரியும்-
பருத்தோகைமயிலிறகும் சுடடகரிகூடட,நகையாமலேலிச்சு நாடிமு
தல்நாழி- நற்சீலைப்பாளத்தில் தளம்போடுநன்றாய்,தி கயாதேவிக்கல்
விழுந் தோடுங்கண்டாய் - சீர்கண்டு யிவ்வண்ணம்சிறந்துசெய்யே ()

ஏரண்டச்சலவையெண்ணை.

சிறந்துசெய்யு மேரண்டச்சலவையெண்ணை - செப்புகிறேன்கு
டடுக்குச் சலசூத்திரமாகத், துறந்துசொல்லா ரவித்தூற்று மேரண்ட
த்தெண்ணை-சோர்வன்றிப் படியொன்று ஆவின்பால்நாழி, மறந்திடா.
மூலைப்பாலுமுழக்குக்கூடடி- மைந்தனே யிளநீர்ப்பூ வுருவிச்சாறுங்,
குறைந்திடாதிருநாழிதுளசிநெல்லி - கொடுப்பையொடு மொசுமொ
சுக்கைச் சீந்திச்சாறே ........................................(தகசக)

சாறுமொடக் கொத்தான்கற் றாழஞ்சாறுஞ்-சதாவேரி கரிசாலைக
ற்பூரவள்ளி, மாறுபடா சிறுகீரைக் கருப்பஞ்சாறு - வகையொன்றிக்க
ளாபடிதான்வளமாய்ச்சேர்த்து, வேறுமினிக் கற்கவகைநிலப்பனைநன்
னாரி- வெட்டிவேரிலாமிச்சு முத்தக்காசு, கூறரியவழுக்கிருவல்லி கொ
டடிநெய்தல்-கோஷ்டமொடு திரிகடுகு திரிபலையுங்கூடடே (தகசஉ)

கூடடுதாமரைவளையஞ் சிற்றரத்தையேலம்-கொடுமதுரமிலவுங்
கம் படடைபத்திரி,நாடடுமிருசீரகமு முந்திரிபேரீத்து-நற்கெந்தஞ்
சாதிக்காய் பத்திரிகிரும்பு, தீடடுவெந்தயஞ்சீனிகற்கண்டு மாசிக்காய்
த்- திறக்கவகைக்கொருகழஞ்சி தூளாயாடடி,பூடடுபுகளிளநீர்தண்ணீ
ராவிடடரைத்து - புகழ்சாறு பால்கற்க யெண்ணையுடன்கலக்கே... ()

எண்ணையுடன் புகடடியோர் தாழிசேர்த்து - யியல்பாகக் காப்
பணித்து சிறுகொதியுமிடடுப்,பெண்ணையிடப்பாகம்வைத்தோர் தனை
த்தியானித்துப்- பூசித்து மூன்றுநாள் பதத்தில்வடிகட்டி, திண்ணயமா
யொருகலசத் திடடுப்பின்பு- நீர்க்குறுணி தாழியொன்றில்விடடதிலே
வைத்துப், புண்ணியந்தான்செய்தவற்கு நேர்ப்புடன்மண்டலந்தான்-
பேறுபடவைத்தபின்பு பூடடக்கேளே..........................(தகசச)

பூட்டக்கே ளந்திசந்தி வொருகாண்டி - புகட்டுவாய் பலநாளிற் புனிதமாகும், நீட்டக்கேள்மேகவெட்டை யத்திரூடு - நேரான கன்பிரளி வரட் சிதாகம், கூட்டானசோழித்தவர்த்தனையோ டிவையும்- கூறுக வரண்டவுடல் பூரித்துபருக்கு, மாட்டானசலவைவெண்ணெய்செய் யுமாண்மை - யப்பனே சொல்லிவிட்டோ மிச்சாபத்தியமே(தகசு)

சுரக்கியாழம்.

பத்தியமாஞ் சுரங்களுக்குக் கியாழங்கேளு - பண்புசெறி காஞ்சொறிவேர்முத்தக்காசு,வெற்றிசிறுவழுதலைவேர்சீந்திபற்பாடகம்-வேர்க்கொம்புபேய்ப்புடலும்வெவ்வேறாகச்,சித்திபெறவகையொன்றுகழஞ்சிமூன்று-திரமாகவிடித்தவது மூக்கூறிட்டு,எத்திசையும்புகழிரண்டுபடி சலமெட்டொன்று யிறக்கிநீ தேன்கழஞ்சி யிட்டருந்தவியல்பே.

இயல்பான பலசுரங்களெல்லாம்போகு-மின்னவகைச் சுரங்களுக்கு மியம்பக்கேளு,இயல்பானநல்ஞரி முத்தக்காசு-மிலாமிச்சுத்திரிகடுகுகொத்தமல்லி,இயல்பான செந்தொட்டிவேர்பற்படாக-மென்மகனே புடோல்வகைக்கு மிருகழஞ்சியிடித்து, வியல்பாக மூன்றாகூறிட்டதற்குச்சலந்தா - னிருநாழிவிருவகையுமெட்டொன்றாய்குறுக்கே.

குறுக்கியது வந்திசந்தி தேன்கலந் துபின்னும் - கூறரிய திப்பிலியும் வெதுப்பித்தூளிட்டு,விறுக்கியே மூன்றுநாளருந்துசுரமெல்லாம்-விட்டோடே யோடிவிடு மின்னம்வகைகேளு, மறுக்கியே வருநேட்லைகியாழமப்பா-வளர்சீந்தி தொட்டையிலை வேருங்கூட்டி,நறுக்கிய முத்தக்காசு தூதுவண்டங்காரி - சஞ்சீவி செவ்வியமுந் திரிகடுகுகூட்டே()

கூட்டு பேராமுட்டிப் பற்படாகம்-கொத்தமல்லிபேய்ப்புடல்திப்பிலியின் மூலம், வாட்டமற வகையொன் றுகழஞ்சிரண்டு- மசியவேயிடித்ததையு மூக்கூறிட்டு,திட்டுவாயிருநாழி சலமெட்டொன்றாய்த், திருந்தவைத் துயருந்திடவே தேன்விட்டப்பா-பூட்டுடைய சுரங்களெல்லாம் போகும்போகும், புகலுகிறே னின்னவகை புகலுறேனே.. ()

பலசுரக்கியாழம்.

புகலுகிறே னின்னமொரு பலசுரக்கியாழம் - பேய்ப்புடல்தொட்டையிலை செம்முள்ளிவேரும், புகலுவேன்முப்புரத்தை யெரித்தான்வேரும் - புனிதமுறும் வேர்க்கொம்பு வகைக்குநாற்கழஞ்சு, புகலுவே னிடித்ததுவும் மூக்கூறிட்டுப் - பூட்டாகூறுக்கு யிருநாழிநீர்தான், புகலுவே னெட்டொன்றாய் குறுக்கியந்திசந்தி- பொடிதூவித்திப்பிலிதேன் விட்டருந்தப்போமே........................(௲ருய)

அருந்தப்போ மின்னமொரு கியாழங்கேளு-அப்பனே திப்பிலி யுஞ் சீந்திரண்டும், பொருந்தவே நாற்கழஞ்சி தட்டிப்பின்பு- பொலி வாகச் சலமும்ரெண்டுபடியும்விட்டு,விருந்தாக வெட்டொன்ருய்க்கு றுக்கிப்பின்பு-விறடங்கவிருபோதுந்தேன்கலந்துவுண்ணு,மருந்தாலே சுரந்தீரு மப்பாகேளு- வாதசிலேற் பனசுரத்தின் வகையைத்தானே. (௩௱௨)

தாமென்றமலைதாங்கி தூதுகண்டங்காரி-சாதகமாய் நன்னாரிசிறு காஞ்சோறி,மானென்ற தோடைசிறுவழுதலையின்வேரு-மகத்தானதிப் பிலிம்வேர்க் கொம்புமல்லால்,கோனென்ற பேய்ப்புடலோர் வகைக்கி ருகழஞ்சி,குமுறவிடித்ததைமூன் றுகூறுகச்செய்து,தேனென்றதொரு கூறுக் கிருநாழிநீரும்-திட்டெனவே வெட்டொன்ருய்க் குறுக்கித்தின மூன்றே ........................................ (௩௱௩)

மூன்றுநா ளந்திசந்தி தேன்கலந்துகொள்ள - மூக்கியஞ்சேர்மே ல்பொடிக்கு வகையைக்கேளு,மூன்றுநாள்திரிகடுகு வெதுப்பித்துவு-மூரணந்தீ ரின்னமேற் பொடியைச்சொல்வோம், மூன்றுடனேயிலவு ங்கப்பட் டையொடுமதுரம் - மூளகினிய சிற்றரத்தைத்திப்பிலியுஞ்சம ஞய், மூன்ருகவெதுப்பியதூள் போட்டருந்து, முத்தோஷ சுரத்துக் கு முறையைக்கேளே ........................................ (௩௱௪)

முறைகேளு தூதுகண்டங்காரிநிலவேம்பு- முத்தக்காசுகொத்தம ல்லிசிற்றரத்தைசெவ்விய,முறைகேளு சீந்திசிறு காஞ்சொறிநன்னாரி-மூள்ளிவேர்த்தோடையிலை விஷ்ணுகாந்தி,முறைகேளு திரிகடுகுதிரிப லைபேய்ப்புட லு முதுகோஷ்டஞ்சன்னயிலவுங்கமுமுக்கழஞ்சி,முறை கேளுவகைவகைக்குச் சமனுகவிடித்து-முக்கூறிலொருகூறி லிருநாழி நீரோ........................................ (௩௱௫)

## சீதவாதசுரத்துக்கு.

நீர்விட்டு வெட்டொன்ருய்க் குறுக்கிப்பின்பு - நீட்டடா வந்திச ந்தி திப்பிலிமேற் பொடியும், பார்புகழத் தேனுமொருகாசிடைதான் விட்டு - பண்பாகக் கொடுத்திடவே பாறிப்போகும், சீர்சீதவாதசுரம் போகவப்பா - செப்புகிறேன் சிற்றுமுட்டிவேர்க் கொம்புமிளகு,பே ரான கொத்தமல்லி பேராமுட்டிவேரும் - பிறியமுடன் வகையொன் று கழஞ்சிமூன்றே ........................................ (௩௱௬)

கழஞ்சியாயெடுத்திடித்துமுக்கூறிட்டு-கருத்தாகவொருகூறுக் கி ருநாழிநீரும்,வழஞ்சியாவெட்டொன்ருய்வற்றவைத்து-வாகாசத்தேன் கலந்துமூன் றுநாளருந்து,தெளிந்துபோமிராச்சுரத்துக்கின்னமப்பா- செப்புகிறேனிலுப்பைப்பூமுந்திரிகைப்பழமும்,தழஞ்சியாம்பெருங் குமிழ்வேர் மதுரம்தாரி-தாமரையின் வளையமொடு யிருவேலிவேரோ.

இருவேலி வேரோடுமுத்தக்காசு - யியல்பானவேர்க்கொம்புசிறு காஞ்சோரி, வருநெல்லிப் பருப்புடனே வகைக்குமுக்கழஞ்சி- மசிய வே யிடித்ததையும் முக்கூறிட்டுப், பருவமாயொருகூறுக்கிருநாழிநீரும்-பண்பாக வெட்டொன்றாய்ப் பாகமாக்கி, ஒருநாளுக்கிருபோது கலந்தேயூட்ட - வொழிந்துவிடும்வாதசுர மொடுக்கங்கேளே (தூாடுள)

## வாதசுரக்கியாழம்.

ஒடுங்காதவாதசுரகியாழமப்பா- உரைக்கிறேன்குறுந்தொட்டிநொச்சிமுத்தக்காசு,கொடுங்கூத்தன் துதிகண்டங்காரிபற்படாகங்-கூறரிய நிலவேம்பு வாதத்தைமடக்கி,நெடுஞ்சிறிய நெருஞ்சில்வேர் தோடை வேரீர்க்கில் நெல்லிர்க்குவேப்பீர்க்கு மாவிலையினீர்க்கு,இடும்பானதிரிகடுகு நாரத்தைமீர்க்கி-லிவைசேர வகையொன்று கழஞ்சிமூன்றே()

வகையொன்றுகழஞ்சிமூன் றாகநீயிடித்து-வாகாசமூன்றிலொன்றுக் கிருநாழிநீரும்,நகையாமலெட்டொன்றாய் குறுக்கிப்பின்பு-நாட்டடா மேற்பொடிதிப்பிலியுங்கூட்டிப்,பகையாம லந்திசந்திதேன்கலந்தூட்டப்-பறந்தோடும்வாதசுரம்பழஞ்சுரங்கள்போகத்,திகையாமற்கியாழமொன்று செப்புகிறேனப்பா-திரிபலையுஞ் செவ்வியமு முத்தக்காசே.............................................. (தூாடுக)

முத்தக்காசரத்தை கொத்தமல்லி சித்திரமூல- மொசுமொசுக்கை வெங்கார மக்கிராகாரஞ், சிற்றாமுட்டி பேராமுட்டி தோடைவேரிலையுஞ்-செம்முள்ளி நெருஞ்சியொடுசெந்தொட்டிவேரும், வெற்றிபெறமுமுக்கிருமலைதாங்கிவில்வம்-வெட்டிவேரிலாமிச்சி கரிசாலைபுடோலும், எத்திசையும் புகழ்துதிகண்டங்காரி- யிலுப்பைப்பூச் சிறுபூளை நீர்முள்ளிவேரோ.............................................. (தூாசுய)

முள்ளிவேர்நன்னாரிகற்றாழைச்சரகு-முன்னைவேர் பெருங்குமிழ்வேர் முப்புரங்களெரித்தான்,கள்ளமில்லா நிலவேம்புவிஷ்ணுகாந்தி-கற்கண்டு கிரும்புசிறு தேக்கிலேனுடு,தெள்ளுகோஷ்டம் பேரீச்சுமுந்திரிகைமதுரம்-தேசாபுரம்சர்தனத்தின் பொடிதேவதாரம்,விள்ளு கடுகுரோகணிபற்படாகமிலவுங்கம்-வீழியுடபட்டைதாமரைவளையஞ்சேரோ

சேரடாவகையொன்று கழஞ்சியொன்று - திறமாக விடித்ததூள் பதின்கூறிட்டு, வாரடா கூறொன்றுக்கிருநாழிநீரும் - வற்றவைச்செட்டொன்றா யந்திசந்தியாகப், பாரடாதிப்பிலித்தூள் தூவித்தேன்விட்டுப் - பருவமா வஞ்சுதின மருந்தினுக்கால், சீரடா சகலசுரம்விட்டுவாங்கும் - சித்திரமா யின்னமொரு கியாழங்கேளே............ (தூகசுஉ)

# ஈஅஅ அகத்தியமுனிவரருளிச்செய்த

## விஷபாககுரத்திற்கு.

இன்னமொருகியாழங்கேள்விஷபாககுரத்துக்- கியம்புகிறேனீர்முள்ளிசிறுபூளைவேரும், மின்னமில்லா விலாமிச்சமருக்கிருநன்னாரி - பெருங்குமிழ்வேர் சீந்திலொடு மூன்னைபாதிரியுஞ், சன்னயிலவுங்கமொடு விழிகுறுந்தொட்டி - தாமரையின் வளையமொடு நெரிஞ்சிமுத்தக்காசு, நன்னயஞ்சேர் கறிமுள்ளிசிறுகாஞ்சோரி-நல்லசிற்றாமணக்கம்வேர் கற்றாழஞ்சருகே.......................................(தாகூரு)

சருகுடனே மலைதாங்கி பற்படாகஞ்-சாரணைவேர் தோடைவேர் கூவிளமலரொடு, மருவுசிற்றாமல்லிவேர் பேராமல்லி- வாதத்தைமடக்கிவேர் திரிகடுகுசெவ்வியும், பெருகு திப்பிலிமூலம் சிற்றரத்தைகோஷ்டம்-பேர்பெரிய சிறுதேக்கு தெசாபுரமேல,மூருவாக வகையொன்று கழஞ்சிரண்டு-மொன்றாக விடித்தத்தூள் மூக்கூறாக்கே...(தாகூச)

ஆக்கியதோ ரொருகூறுக் கிருநாழிநீரு-மப்பனே யெட்டொன்றாய் குறுக்கிவாங்கி,தேக்கியதோர்பொரிகாரங் கழஞ்சிமூன்று-திரமாகச் சுத்திசெய்து பொரித்துக்கொண்டு,நீக்கியே யந்திசந்திபொரிகாரந் தூவி-தினைவேமேடமூன்றுநாளருந்திளுக்கால்,பாக்கியங்கள்செய்தவர்க் கிந்நூலின்படியே-பத்தியாய்க் கொண்டுவரப் பறக்கும்விஷபாகம்.

## ஏலாதிமாத்திரை.

பாகமாயேலாதிமாத்திரைதன்னைப்- பாடுகிறேன்புலத்தியனேபண்பாய்க்கேளு, ஏகமாமேலமிலவுங்கம்வால்மிளகு- இசைந்ததிரிகடுகுடனே சன்னயிலவுங்கம், வேகமுள்ள சிற்றரத்தை திப்பிலியின்மூலம்- வெட்டிவே ரிலாமிச்சுசெவ்வியமதிவிடையம், தாகம்விடு மதிமதுரஞ் சீரகங்களிரண்டுந் - தாளிசபத்திரி கடுகுரோகணியுஞ்சேரே (தாஅன)

சேரப்பா திரிபலையுங் குருசாணியோமம்- தெசாபுர மக்கிறுகாரமுத்தக்காசு, சேரப்பா சாதிக்காய் பத்திரிகிரும்பு - சிறுநாகங் குங்குமப்பூ கற்கடகசிங்கி, சேரப்பா வமுக்கிரு நன்னாரிகொத்தமல்லி - சீனிகற்கண்டு முந்திரிகை பேரீச்சு, சேரப்பா மாதளையி னோடுபொரிகாரஞ்-சிலைகெவுரி தாரம்விசுவா சூரசங்கெந்தம்..........(தாகூஎ)

கெந்தமடா மலாக்காயுங் கூகைநீறுங்-கெடியானகோரோசனைகஸ்தூரிபுழுகும், பந்தமுள்ள சாதிலிங்கம்சாம்பிராணிகாந்தம்-பகராதவமுதசர்க் கரையுங்கூட்டு,இந்தவகைக்கொருகழஞ்சி சுத்திவகைப்படியே-எடுத்தபின்பு செந்தூரம் சேரும்வகைகேளு,மூந்தரச செந்தூரங்காந்தமப்பிரக - முறையோடே தாம்பிரமும் வங்கஞ்செந்தூரம்.

செந்தூர மிந்தவகைக் கொருகழஞ்சு- சேரடாயிவையெல்லாங்கல்வத்திட்டு, பந்தூரு மிரண்டுநாளிஞ்சிச்சாற்றில் - பண்பான மாதுள

ம்பூச் சாற்றிலிரண்டுதான், வெந்தூரு மாதளம்பழச்சாற்றிலாட்டு- வி
தருமலிரண்டுநா ளானபின்பு, விந்தூரும்பனிநீரி லிரண்டு தினமரைத்
து - மேலான குளிகைசிறு பயறளவுகட்டே.......... ..... (தகசுகூ)

. கட்டியதோர் குளிகைதன்னை நிழலுலர்த்திக்-கலைக்கொம்புச் சிமிழி
லே யடைக்குமுன்னே, தட்டில்லாதானியபுடமண்டலந்தானப்பா-தா
ழ்விலாதிருந்தபின்புதானெடுத்து, அட்டியில்லாதனுபானமப்படிநோ
ய்கண்டு-அருந்தினல்பிணிபலவுமண்டாதையா, திட்டித்தாற்போல்கே
ட்கும் பூரணகெற்பணியின் - சீதசுரம் சுவாசமுடன் சன்னிக்குள்ளே.

## சன்னிசுரஞ்சுவாசத்திற்கு.

சன்னிசுரஞ் சுவாசமே லேப்பமொடுதணியச் - சாற்றுகிறேன்மு
லைப்பாலில் தனித்துண்டையொன்று, உன்னியே யிருபோது மூன்று
தினஞ்செலுத்த - ஓடுமடா மதலைமூத லனைவருக்குமூட்டு, பின்னிநின்
ற தொந்திப்புச் சுரதோஷந்தீரப் - பிசகாமல்மிளகுடையயியாழமிஞ்
சிச்சாற்றி, விந்நிலத்துத் தோடையிலை மிளகியாழத்தி - விட்டருந்தத்
திட்டெனவே நிற்குமின்னங்கேளே ....................... (தகளக)

## சன்னிபதிமூன்றுக்கும்.

இன்னங்கேள்சன்னிபதி மூன்றுக்குமப்பா-இஞ்சியொடுசிற்றரத்
தைமூலைப்பால்வேப்பந்தோ,லின்னங்கேள்முருங்கைத்தோல்வெள்ளு
ளித்தயில- மிதற்கிசையப்புட்டவில்பூநாகத்திட்டா, வின்னங்கேள்சன்
னிபல சுரங்கள்தோஷி-மென்மகனே விட்டோடு மியல்பாம்யாரு,இன்
னங்கேள் க்ஷயரோகந் தீரவென்று-வியல்பானபுட்டவியல்தேனுமேற்
பொடியே. ........................................ (தகளஉ)

மேற்பொடிகேள் திப்பிலி சிற்றரத்தை தன்னை, வெருகடிநா ளு
டன்குளிகை வெதுப்பிலொன்றுசேர்த்து - மேற்பொடி யிப்படியே
தா னருந்தினக்கால்- விட்டோடும் க்ஷயரோக மிருமலெல்லாம், மேற்
பொடியே பின்னுமனு பானஞ்சொல்வோம்,விருனகிருணியதிசார
ந்தீர,மேற்பொடியாஞ் சாதிக்காய் பத்திரிகிரும்பு-வெட்பாலைகுருசா
ணி யக்கிருகாரம் ................................. (தாஎரு)

காரமுடன்பெருமரத்துப்பட்டைசடாமாஞ்சி-கருஞ்சீரகம்வா
ல்மிளகு மலைதாங்கி,பாரமுள்ள மூத்தக்காய்மாதளத்தின்தோடு-பாங்கா
ன வதிவிடையம் வெதுப்பித்தூளாய்,ஈரமுள்ள மூத்தக்காசு பெருமர
த்துப்பட்டை-யினியமலை தாங்கிவேர் சிற்றரத்தைசமனுய்,சிராக நறுக்
கியிரு நாழிநீரில்-திரமாகக் கிரும்புபத்து முடிந்துபோடே. (தகளச)

மூடிச்சிட்டு இரும்புடனே யெட்டொன்றாக்கி-மூலமதி சாரம்வ யிற் றனேச்சனுக்குப்-படிச்சிட்ட வந்திசந்திகிரும்பனைத்துக்கலக்கிப்-பதியவே குளிகையிட்டு மேன்பொடிதேன்சேர்த்து,குடிச்சவுடன்நா லஞ்சு தினத்தில்திற்கும்-குன்மமெனும் வாய்வுக்குக் கூறக்கேளே...()

## குன்மவாய்வுக்கு

கூறக்கேள்சாரணைவேர் சுக்குவேப்பலகு-கொடியதொரு கியாழுத்திற் குளிகைநீட்டி,கூறக்கேள்வியாதிகண்டுவனுபானத்தூட்ட-கொடுபிணிகளனுகாதுகுளிகைவெகுபோக்கு,கூறக்கேள்மூலமொடுகிருணி வாய்வுக்கு-கொஞ்சமொரு லேகியத்தைக்கூட்டடாநீ,கூறக்கேள் பழம்புளியும் கூகைநீருங் குறைவில்லா வெள்ளுள்ளிப் பருப்புங்கூட்டே.

பருப்புடனே வகைக்குமொரு பலந்தானப்பா-பண்பானகாமொன்றாப் படிமுக்காலும்,விருப்புடனேவெல்லம்நாற்பலமுங்கூட்டி-விரைத்திடிக்க விருசாமம்லேகியமாமேலும்,தரும்புவன மந்திசந்திதான் திக்காயளவு-தானருத்தமூலமென்றகிருணிவாய்வு,மிருப்பிருந்துபுடைந்திலாயும் கழிச்சல்சோதகஞ்சீத- மேப்பமொடு பொருமல்வலி யெல்லாம்பேயே ........................................................ (தாஎஎ)

## வேறு.

பேய்ப்புடல் கடுக்காய்நெல்லி பெரியதோராடாதோடை,காய்ப்புள்ள கண்டங்காரி மரமஞ்சள் கடுகுசெம்முள்ளி, தாய்ச்சுக்கோடிசைந்தவேலிப் பருத்தி திப்பிலிதானப்பா, வாய்ப்புடன் வகைக்குமூன்று கழஞ்சிதா னிடித்துப்போடே.............................. (தகஎஅ)

போடுமுக்கூறுசெய்து பொலிவுடனொருகூறுக்கு,நாடியேயிருநாழிநீர்நலம்பெறக்கடுகுமூணி,பேடியாதொருகழஞ்சுமூன்றாக்கிமுடிஞ்சுப்போட்டு, வாடவேயெட்டொன்றாக்கிவடித்தந்திசந்திகொள்ளே.

கொள்ளவே வளிசுரங்கள்கூறியமலபந்தங்கள்,தள்ளவே கியாழஞ் சொன்னோம்தனிவிஷசுரக்கனப்பு,மெள்ளவேமூர்ச்சைவேர்வைகுளிர் நளிர்கண்டதற்கு,எள்ளலாய் கியாழந்தன்னையியம்புவேனெளியசுக்கே

## வேறு - மலபந்தமுதலானதுகளுக்கு.

சுக்குசெவ்வியங் கொத்தமல்லி துடியாங்கெண்டுபறங்கி புடோல்,கக்குந்திப்பிலி திப்பிலிமூலங்கண்டங்காரியிலவுங்கம்,மிக்கயேலமதி மதுரம் மிருந்த சேந்திபற்படகம், பக்கநாரிக்கொடிதூவி மூத்தக்காசு பரித்தெடுமே ............................................................ (தகஅக)

எடுமேயாடா தோடையிலையிலாமிச்சிறுவேலிருகழஞ்சி, படுமேயிடித்துப் பொடியாக்கிப் பண்பாய் மூன்றுகூறுமிட்டு,இடுவாய்கூறு

த் திருநாழிநீரு ருழக்காய் வற்றிவரும், கெடுவாயென்றே விட்டோடு
ம் கியாழமொன் றின்னங்கேளே ............................ (௲௧௮௨)

## வேறு.

இன்னங்கேள்மூத்தோஷவிஷசுரக்கழிச்ச-லியல்பில்லாக்கக்கலோ
டும் நளிர்குளிர்தீர,நன்னயஞ்சேர்கொடித்தூவி நாரிமுத்தக்காசு-நல்
லதிரி பலையோடுவிழிப்பட்டை,மின்னியதோ ரிருவேலியிலாமிச்சம்
வேரு-மிகுத்ததாமரைவளைய மிவைபத்துந்தான்,சொன்னவேர் வகை
க்குழக் கழஞ்சிகூட்டித் - தூளாக விடித்துமூக் கூறுசெய்யே...... ()

செய்யடாவொருகூறுக்கிருநாழிநீருஞ்-சிறக்கவேவிட்டதையுமெட்
டொன்ருய்க்குறுக்கி, வையடாயிருபோதுமூன் றுதினமருந்து-மகத்தா
ன குளிர்சுரங்கள் மாறல்விஷபாகம்,மெய்யடாவந்திசுரக்குறுவேர்வை
தாகம் விகடசுர மித்தனையும்விட்டேயோடும்,பொய்யடாவொன்றுமி
ல்லை விஷபாகமொழியப் - பூட்டுகிறேன் கியாழமொன்று மலைதாங்கி
வேரோ ........................................ (௲௧௮௪)

## விஷசுரத்துக்கு.

மலைதாங்கி திரிகடுகு புங்கம்பட்டை - வகையஞ்சுக்கொன்றைாவ
ராகல்பட்டை, நிலையாக வெட்டியதை யிடித்துக்கூருய் - நேராகமூ
ன்ருக்கி யொருகூறுக்குச், சலமுமிரு நாழிதனை யெட்டொன்ருக்கி-த
சமூன் ருறுபொழு துண்ணத்தீரும், பலசுரக்களழியவே சுரமும்போ
கும்- பண்டுற்ற நடுக்கல்சுரம் பறக்குங்கொத்தமல்லி ...... (௲௧௮௫)

கொத்தமல்லி திரிகடுகு போரூட்டி - கோலத்தோலியம்வகை
க்குமொரு கழஞ்சிகூட்டி, பத்தறவே யரைத்துவொரு நாழிநீரிற் - ப
ரிவுடனே கலக்கியதை யெட்டொன்ருக்கி, வெற்றிபெற வொவ்வொ
ருபோதருந்தவந்து - வீறடங்கி நடுக்கலென்ற வெப்புந்தீரும், சத்தி
யமாய் மிளகு கியாழந்தானுண்ண-தானடுக்கல் சுரந்தீரும் சத்தியமா
ஞ்சுக்கே ........................................ (௲௧௮௬

## வேறு.

சுக்கோடு கொத்தமல்லி துலங்குதேசு புராமூன்று, மொக்கத்தட்
டியொருபடிநீ ருடனேயெட்டொன் ருய்குறுக்கி, மிக்கவந்தியம்பொ
ழுது விரைந்துவூணுங் கழிந்தபின்பு, சிக்கக்கியாழ மொருபோதாய்த்
திவசந்தோறுங் கொண்டிடுமே ............................ (௲௧௮௭)

கொண்டுவரவே விஷமழியுங் குறுவேர்வையும்போம் பசியெடு
க்குங், பண்டேவந்த உள்சுரமும் பறக்குமேது பணையாது, விண்டார்
வெறு வெந்தயஞ்சிவக்க வெதுப்பிமிளகிட்டொருபடிநீ, ருண்டாம்ய
டிக்கி யெட்டொன்று வுண்ணுமிரவி லிப்படியே............ (௲௧௮௮)

வேறு.

இப்படியஞ்சுநாளிரவிற்கொண்டிட, வெப்பொடுஉள்சுரமாந்தம்வேர்வையுங்,குப்பெனக்குதித்திடுங் குடல்குளிர்ந்திடுஞ், செப்பிடுமினிச்சுரமாந்தை சுக்கெடே.......................................... (தகஅகூ)

வேறு.

சுக்குநறுக்குமூலமொடு துலக்குமொசுமொசுக்கை வேரிவைகள் ஒக்கவகைக்கோர்கழஞ்சுதட்டி யொருபோதருந்தவோர்படிநீர், தக்ககாழாக்கெனக்குறுக்கிதாக்கப்பஞ்சதாளாயிட்டு, வொக்கக்குடிக்கநெஞ்சிருமல் வேறுஞ்சுரமாந்தையும்பேயே.............................. (தககூ௰)

வேறு.

பேய்ப்புடல்பற்படாகம் போராமுட்டி மிளகுசுக்கு, வாய்ப்புள்ள விஷ்ணுகாந்தி மகிழ்ந்தநா ரத்தைப்பட்டை, காய்ப்புடன் வகைக்கோர்மூன்று கழஞ்சிலை யிடித்துக்கூறாய்த், தேக்கிய முதற்குறுக்குத் தினமிருநாழிநீரே .................................................. (தககூக)

நீரிருநாழிக்கேதா னொருகூறு நேயத்தோடு,வீரமாவெட்டொன்றுக்கிவிரும்பித்தேன்கலந்தருந்த, சீராப்புச்சுரமுந்தீரும் தீனதுவினைத்தேயறும்,பாராமற்றலைநோய்போக்கும் பகர்சீந்திக்கியாழங்கேளே

வேறு - சிலேற்பனசுரத்திற்கு.

சீந்திமுத்தக் காசுவெட்டி பேய்ப்புடல் பற்படாகஞ்சுக்கு - இரமாக வதிற்பாதி சேர்த்திடித்துக் கூறாய்ப், பாந்தமா யொருகூறுக்கிருநாழி நீரும் - பண்பாக யெட்டொன்றாய் குறுக்கியதை வாங்கி, சாந்தமாய்த் தேன்கலந்து மூன்றுதினமருந்து- தகர்ந்து சிலேற்பன சுரந்தான் தணியுமப்பா, காந்தவெளித்தாறாப்புண் கிரந்திக் கெல்லாம்-களிம்பொன்று சொல்லுகிறேம் கண்டுபாரே .............................(த கூகூ)

களிம்பு.

கண்டுபார் களிம்புக்கு வகையைக்கேளு - கடுஇரதந்துத்தமொடுகாசுக்கடடி, பண்டிலுள்ள வெள்ளைக்குங்கிலியம்நேராய்ப்-பதியவேசமான கல்வத்திட்டடில், விண்டவதில் கல்சுண்ணம் நெல்லிக்காயளவு-வேதிச்சு யரைத்தாவின் வெண்ணெயதின்றொட்டி, கொண்டாடவிருசாமம் நன்றாயாட்டி - கூறாக்கிச் சிமிழிலே யடைத்திடாயே... (தககூச)

அடைத்திடடகளிம்பதனைப் புண்பொடிகட்கிட்டு-அப்பனேபழந்காடி புளியிலையும்வெந்து,புடைத்திட்டபுண்கழுவிக்களிம்புபோட-போகாதகிரந்தியொடுசூலைப்புண்கள்,படைத்திட்டதிவையெல்லாம்பறந்தேயோடும்-பழையபுண்கள் கருந்தழும்பாம் பதின்கோடிபலனே.

கொடித்தூவிவேரிழைச்சுக்கிழியாய்கட்டி-கோவின்பால்வெள்ளாட்

டுப்பால் சரிநீர்விட்டு,அடுப்பிலே வேகவைத்து நீர்வற்றும்போது-அப்பனே கிழிப்பிழிந்து வப்பால்கொள்ள,இடுக்கிலே படடயெலிபோலவிஷிமழியு-மிசைந்தமலக் கட்டுசலம் விஷபாகமெல்லாந்,தடித்திடாதேபோகுஞ் சுரவீறில்லைச்-சாதகமாய் வேறுசுரஞ்சாற்றுறேன்கோரம்.

வேறு.

கோரைக்கிழங்கு கொடித்தூவி கோஷ்டஞ்செவ்வியங் கொத்தமல்லி,வீரமுடைய தூதுவளைவிஷ்ணுகாந்தி யிலாமிச்சு,சாரமுடைய யதிமதூரந் தனித்தசுக்கு யிலவுங்கம், பாரப்புடோல் முள்ளிவேர் பற்படாகம்பகரோலம்............................................(௲௧௯௭)

ஏலந்திப்பிலி திப்பிலிமூல மிசைந்தகண்டங்கத்திரியும்,ஞாலத்தாடா தோடையிலை நன்னாரிவேர் சீந்தியொடு, சீலத்துடனேயிருகழஞ்சி சேரவிருபதுக் கொன்றிடித்து,காலத்துடன்மூக் கூறுசெய்து காயப்போட்டுக் கொள்வீரே............................................(௲௧௯௮)

கொள்வீரொரு கூறுக்கிருநாழி நீர்விட்டொன்றுக்கியதை-புள்ளேகுடிக்க மூன்றுதினத்தோடுஞ்சுரவீ றற்றுவிடும், கள்ளந்தீருங்கசடுமறும் காலகால மருந்திவர,வள்ளல்போல் விருந்தாடுமயக்கந்தவிர்க்குமாமயிலே............................................(௲௧௯௯)

மயிலேசன்னி தோஷமுதல் வாதபித்தஞ் சிலேற்பனமும், குயில்போலிரைச்சல் மலபந்தங் கூறுஞ்சலக்கட்டிவையெல்லாம், பயிலாய்த்தீரும் விஷபாகம் பண்பாய்க்காட்டுச் சீகந்தான், ஒயிலாய்மூன்றுகழஞ்சிதன்னை யொவ்வோர்கழஞ்சி நீரிலிடே ....................(௲௨௱)

இடுவாய்சலந்தா னிரண்டுபடி யெட்டொன்றாக்கி யந்திசந்தி,விடுவாய்மூன்று தினத்தாலே விஷமு மழியுஞ் சுரமும்போம் - கெடுவாயின்ன நற்சுரையின் கேடில்லாமலுலர்ந்ததண்டு,வடுவாய்மூன்றுதண்டியிரு நாழிநீரில் வற்றவையே....................(௲௨௱௧)

வற்றவைப்பா யெட்டொன்றாய் மருத்துமந்திசந்தியுண்ணு, மற்றேபோகும்விஷபாக மறையக்கேளு மின்னவகைப், பற்றச்சுரைதான் தழைபச்சை யரிந்துகமுநீர்படியொன்றில்,வெற்றிபெறவே வேகவைத்து மிளகுமுள்ளி தட்டியிட்டு, சித்தியாகத் தேனுடனே சேர்த்துஅருந்தத்தீர்ந்திடுமே............................................(௲௨௱௨)

வேறு.

தீர்ந்திடுமே விஷபாகம் வீக்கஞ்சோபம் - சிக்குமலக் கட்டுநீர்தெளிந்துபோகும், தீர்ந்திடுமே வேர்க்கொம்பு ஓமம்வெள்ளுள்ளி சி

ரகங்கள் மூன்றுடனே கிரும்புசேரு,தீர்ந்திடுமேயிலவுங்கங்கடுக்ரோணி - திகையாமல் வகைக்கொரு கழஞ்சியொன்று, தீர்ந்திடுமேயிலைவயிடித்து முக்கூறிட்டுத்- திரமாகக் கூறொன்றுக் கிருநாழிநீரோ (தஉாக)

நீரோடுமுடிச்சிடவேமருந்தைக்கேளு- நிறைக்கிறேன்சாதிக்காய்பத்திரிகிரும்பு,பேரானதும்பிராஷ்டம் வகைக்குக்கால்கழஞ்சு-பிசகாமலச்கூறு முடிச்சுமிட்டு,சீராக வனல்மூட்டிபெட்டொன்றுக்கித்-தினமொன்றுக் கிருபோது முடிச்சனைத்துக்கொள்ளு, நேராகயிப்படியே மூன்றுதின மருந்த - நின்றுபோம் பிணியனைத்தும் நிலைகெட்டோடும்............................................ (தஉாச)

வேறு.

ஓடிடும் விஷசுரமொட்டிய தளைச்சுரம்,பாடிய வுட்சுரம்பணைப்புத் தோன்றுதல், கூடிய மலசலக் கட்டுகொண்டதுஞ், சாடிடுஞ்சவ்வீரவைப்பு கல்லுப்போடே........................................ (தஉாரு)

வேறு - வீரவைப்பு.

கல்லுப்பு வெடியுப்புச் சீனக்காரங்- கட்டியதோர் நவாச்சாரமன்னபேதி, வெல்லவல்ல மயில்துத்தம் ரசமோடேழும் - விளம்புதல்சவ்வீரவைப்புச் செயநீராக, நல்லதொரு கெங்காசலக் குப்பிக்கேற்கநலம்பெறவே யெழுசீலை மண்ணுஞ்செய்து,சொல்லவரிதானசிவன் சத்திபூசைத்- தொழில்முடித்து மண்பாண்டக் குப்பிவையே (தஉாசு)

வைத்துமண் குப்பிக்கு மட்டாயிட்டு - வாகாக முத்தீயு மாறுமேல்தான், பத்திரமாய் மூன்றுதின மெரித்துப்பின்பு - பாங்குடனேபூசைவிதிப் படிநடத்தி, மற்றுநாள்குப்பியெடுத்தாற் பதங்கமேறி-வாதியென்றவீரமெனும் வகுப்பார்பாரீர், கத்தின்கீழ்ப்பிட்டியது செந்தூரமாகும்-சாத்தையவிரிச்சார் விட்டலாக்கலாமே ......... (தஉாஎ)

அரைத்துவைத்த செந்தூரம் வில்லையாக - அடைபிடித்து வுலரவைத்து அப்பால்நல்ல,புரையறவேவராகபுடம்போட்டுப்பின்பு-புடம்பிரித்துச்செந்தூர மதனைவாங்கி,நிரைநிரையாய் தொச்சியிலைச்சாற்றிலோர்நாள்-நேரான யிஞ்சிருலைப் பாலிலோர்நாள், வரையாது மூன்றுதின மரைத்துப்பின்பு-மாத்திரையுங் கடலைபிர மாணம்செய்யே.

செய்துவைத்த மாத்திரையை நிழலுலர்த்தி- சேர்த்திடுவாய் சிமிழிலது சென்றகால, முய்வதுக்கு நறுநெய்தேன் தனிலோருண்டை-யுண்ணுமிரு போதுமரை மண்டலத்தில், நய்யும்விஷ பாகசுர மகோதரமுங்குன்மம் - நற்காச சுவாசமொடு காசக்கூறும், பையநகன்றுபிறிந்துதடடுக்கெட்டுப் - பழவினையும் பறந்தோடு படிசொன்னேமே ()

### பத்தியம்.

சொன்னேம்நாம்பத்தியத்து வகைகளைக்கேளு-சுத்திசெய்த வுப்பதனைச் சுகமாய்க்கூட்டு,சொன்னேநாம்வெள்ளாட்டுப்பால்நெய்கூட்டு-துவரையுடன் வழுதலங்காய்ப்பிஞ்சுங்கூட்டு, சொன்னேநாமுருங்கையிலைச்சாறுகூட்டு-துடுக்காக மற்றொன்றுமாகாதப்பா,சொன்னநாம்கிரந்தியொடு கரப்பான்போகச் சூட்டுகிறேன் வகையாகச்சீனமெனும் புகையே........................................................(௲௨௱௰)

### வேறு - சீனப்புகை.

சீனப்புகைக்கு வகைகேளாய் சிறந்தசாதி லிங்கம்கடுகு,மூனமில்லாக் கெந்தகமு மொவ்வோரிடையாய்ச் சமன்கூட்டி,பானபச்சைபுகையிலைச்சா றதனில்நன்று யரைத்தபின்பு, ஈனமில்லாதே கடலைப்பிரமாணமா யுலர்த்திடுமே ...........................................(௲௨௱௰௧)

உலர்த்தமருந்தை யெடுத்துவைத்து வோட்டில்புளியஞ் சிராய்த்தணலில், மலந்தேபுகைக்கப் புண்மட்டு மட்டாய்க்கவிய மூடியபின், செலங்குமிழிக்குந் திரைவாங்கிச்சேர்த்துவத்தின்னத்தி,புலர்ந்தபோதும் புகையெடுத்து போக்காயேழு பொழுதினுக்கே.....(௲௨௱௰௨)

எழுபோழுதி வின்னமொரு புகைக்குவகை கேளேதென்னி, லாழுஞ்சாதி லிங்கமுட னரிதாரங் கெந்திகடுகுடனே, ஆழுங்காசு கட்டியிவை யைந்துஞ்சமனாய் விரைடுங்க, நீழப்புகைச்சாங் கான்குழலில்நீணவேழ்போதுவாங்கிவிடே...................................(௲௨௱௰௩)

போதேழினுக்கோ ரின்னமிந்தப் புகைதான்பிடிக்கப் புளியந்தணலில், பாதகேச பரியந்தம் புகைப்பற்ற மருந்தைப் பாப்பியபின், மாதேசூழக் கவுசிளையாய் விளைந்து வேர்வைபொங்கியது, சூதாய்த்திரைபிய வாங்கியது அவரப்படியே சூட்டிடுமே.......-.....(௲௨௱௰௪)

### லிங்கப்புகை.

இடுமேயின்ன மொருபுகைதா னேழுபோது செய்யும்வகை, கடுகோஞ் சாதிலிங்கமனே சிலைபாங்காசுகட்டிகெந்தி, விடுவாந்துத்த மரிதாரம் வகையோர்சமனாய் புகையிலைச்சாற்றில், தடமார் புடையாயரைத்துலர்த்தத் தானேவைக்கத் தக்கதுவே...................(௲௨௱௰௫)

தக்கபுகைக்குத் தான்புளியந் தணலில்மருந்தைப் பரப்பியபின் பக்கம்புகைகள்சிதறாமல்பாங்காய்க் கவியமூட்டியது, கக்கும்புகையால்வேர்வையெல்லாம் கடுகத்திரியைவாங்கிவிடு-மொக்கத்தவருமிப்படி நீ யேழுபோதுமுறச்செய்யே................................(௲௨௱௰௬)

செய்தபின்பு யெழுபோது திரமாய்விட்டுச்சீரகன்று, டையக்குநீர் தனிலிருந்தப் பாலுமூன்றுதினங்கடந்தால், வையம்புகழும்விள

க்கெண்ணை வார்த்துதேய்க்கவுசிலரப்பு, மெய்யாயிதுவொன்றனைவரு
ட மிணங்க முழுகிவருவீரே..............................(௲௨௱௰௭)

வீரமாறு மட்டுமந்த விளக்கெண்ணையைத் தான்முழுகி, வாரந்தீ
ருங் கரப்பன்புண் கிரந்திசேட்டை வியாதியறுங், காரச்சுறுக்கு மற்று
விடுங் கறிகள் பலவுமாகாது, கூறத்துடனே வுப்புமுதற் கோடா திருக்
கச்சொன்னோமே..............................(௲௨௱௰௮)

சொன்னோ மனைமண்டலங் கடந்தால் சுத்திசெய்தவுப்பாகும், பி
ன்னே யவரைப்பிஞ்சு சிறுகீரைமுளைத்தண் டதைவிரும்பி, இன்னதன்
றிவேறொன்று மிணங்கா தொருமண்டலங்கடந்தால், பின்னைப்பன்றி
செம்மறை பிலாக்காயுமருந்து மாகாதே..............................(௲௨௱௰௯)

ஆகாதின்ன மறையக்கே எவரைதுவரை கரும்பயறு, வாகாம்பா
கல்கொம்மட்டி மாங்காய்தேங்காய்பூசினிமீ, னெகாதிருக்கி லாறுதிங்க
ளெல்லாநோயும் பறந்தோடும், சாகாதிருக்க வெள்ளாட்டுக் கறியையு
லர்த்தித்தான்கூட்டே..............................(௲௨௨௰)

## ரசப்புகை.

கூட்டுஞ்சரக்கு ரசப்புகைக்குக் கொடியயிரதம் பாஷாணம்-கூ
ட்டுங்கெந்தி தாளகமுந் துத்தமிவைகள் சமனாக, ஆட்டுப்பச்சைபுகை
யிலைச்சா றதனிலரைத்துத் திரியாக்கி, பூட்டுபுளியந் தணல்நெருப்பில்
திரியையொன்றாய் முழுகாட்டே..............................(௲௨௨௧)

காட்டா யேழுபோதுதிரிப் புகையைக்கட்டாகக் கவுசினையும், பூ
ட்டாய் புகையால் வேர்வைகொண்டுப் புகழுந்திரியைப் பிரித்துவிட்
டால், பாட்டால் துயரந்தான்றணியும் பகலுமிரவும் பத்தியமாய், கூட்
டாய் வெள்ளாட்டுப் பாலன்னமுப்பிலாதே கொண்டிடுமே(௲௨௨௨)

கொண்டபுகை நாளளவு மறுபடியேயாறக் குற்றமன்றி, யுண்ட
பொசிப்புஞ் சமிச்சக்கா லுடன்கையுடனே குளிநீரில், மண்டமுங்கிய
திலிருக்க வைத்தாற்கடிகையிரண்டளவே, அண்டர்துதிக்க வேழுதின
ம் வெந்நீராட வடைவாமே..............................(௲௨௨௩)

அடைவா மின்னமொருபாக மந்தப்புகைக்கு மிடாத்தண்ணீர்,
விடவேயிரதி வெயிற்காற்றி பட்டநீரைப் பனிவிழுமுன், திடமா யே
ழுமிடாத்தண்ணீர் சோத்தலையிற்சொரிவாரால், கடலேபுகலாய்ப் புகல
விருங் கரப்பன் பண்ணுங்காணாதே..............................(௲௨௨௪)

காணாதே போய்விடுங் கிரந்திகடுகிவெழுந்த புண்ணுமுதலாய், வீ
ணேசெத்துவேருமற்று மேனிபழுக்காய் நிறமாகும், ஆணாய்பெண்ணா

ய் பிறந்தோர்க்கு மாமேமுழுக விளக்கெண்ணெ, நாளுதொன்றைவிட்
டொருநாள் நாடிமுழுக நலமாமே.............................(௧௨௨௫)

நலமாமின்னம் புகைக்குநல்ல முறைசொளடுக்கும்புகையேறிப்,
பலநாளளவு மாறியபின் பாங்காய் முழுகும் விளக்கெண்ணெ, விலகா
தொன்றை விடடொருநாள் வீறுமடங்கி யொடுங்கிவிடும், திலதநுதற்
கண் சிவனருளிச் செய்தார் சிடசைசெய்வீரே..............(௧௨௨௬)

## சூலைக்குப்புகை.

செய்யுஞ் சூலைகட்டுக்குத் திரும்புகைதான்செப்புகிறேன், ஐயப்
படாமல் நல்லகெந்தி யதனைக் குன்றுமணியாகப், பையக்கறுத்தக்கார
துள்ள பழுக்காய் கத்திரிக்காய்பிளந்து, வையப்புகழக்கெந்திமணி வ
கையாய்ப் பிளந்துவைப்பீரே..............................(௧௨௨௭)

வைப்பீர்மண்பாண்டந்தனிலே வைக்கலமுக்கிநீர்விட்டு, ஒப்பாய
தின்மேற் கத்திரிக்கா யொன்றோடொன்றுசேராமல், தப்பாமல் நான்
பரப்பியபின் சட்டிகவிழ்த்துதான்மூடிக், குப்பாயேழுசீலைமண்ணுங்
கூறுய்ப்பூசி யடுப்பேற்றே..............................(௧௨௨௮)

ஏற்றியடுப்பில் வெந்தபின்பு யியல்பால் புகைகள் கொள்ளுமட
டுஞ், சாற்றுந்திராயைக்கவுசினையாய்ச் சணத்திலிறக்கிவேறுபுகை,மா
ற்றமேற் சட்டியைத் துளைக்கவருமே புகைகளடிக்கொற்றச், சீற்றமெ
னவே புகைகள்வருஞ் சேரவிடாமல் திகைத்திடுமே........(௧௨௨௯)

திகைக்கயேழு புகையிந்தப் படிசெய்வீர் சூலைபதினெட்டும்,பு
கைக்கறடுமுறடாகப் பற்றும்விரணமுளைப்புண்கள், தகைக்கவோடிப்
போய் விடுங்கா ணல்லசிட்சையிதுவன்றி, மிகைக்கச்சொன்னோம் பு
கைவிட்டால் விளக்கெண்ணைதான் முழுகரிதாம்..............(௧௨௩௰)

## அரிதாரப்புகை.

அரிதாரத்தின் தகடலடைத்தா னழகாய்காலக்கத்திரிக்காய்த், தெரி
யவிரண்டாய்ப் பிளவுசெய்து செய்யுங்கிரிகைப்படிபரப்பிப், பெரிய
தாழி யொன்றினிலே பெருகவைக்கலதிலமுக்கி, விரிவாய்த்தண்ணீர்வி
ட்டபின்பு வென்றுந் தகடடைக்காயவையே..................(௧௨௩௧)

வைத்துமேலேசட்டிகொண்டு வழங்கக்கவிழ்த்திச்சீலைமண்செய்-
யொத்தேயடுப்பி லேற்றியனல் மூட்டியொருசாமங்கிடந்தால், சற்றே
நிம்ப வில்லாமற் றானேதிராயைக்கவுசினைசெய், பத்தாய்வேது புகை
க்குமில்லி பலவாயிடடுப் பாச்சிடுமே.........................(௧௨௩௨)

பாச்சும்புகையால் வேர்வைதனைப்பாசத்தடராப் படிதுவர்த்து,

மூச்சவிடவே திரைப்பிரித்து மூன்றுமிப்படிசெய்வீரோ,வாச்சுதானுற்
புகைபைவிட்டு மறுபத்தியம் விளக்கெண்ணெ,தேய்த்துக்குளிப்பீரொ
ன்றைவிட்டுச் சீராட்டேப்பால் தனைக்கூட்டே...................(௲௨௱௩)

கூட்டா தொன்றைக் கூட்டிலதை கோடாகோடி குணமுண்டா
ம்,நீட்டிதிமிர்த்த வுடம்பசந்து நேரோகுத்துக் குடையுண்டாய், மூ
ட்டிக்கால்கை தனைமுடக்கி முழுதும்வீக்கம் பெரிதாகி, ஆட்டிவிட்ட
பம்பாம்போ லலைவீர்வீணா துகாணே.........................(௲௨௱௪)

காணப்பட்ட சூலைமுதல்கைகால்குளைச்சு கறடுகட்டும், வேணவீ
க்க மதிமயக்கம் வீறுவிரண முள்ளதற்கு, மாணிபடவே சிவஞாமவ
ம் பதனால்தயிலமொன்றிறக்கும்,பூணதன்றுதயிலமொன்றும்போடுவே
சரிலத்தியெடே............................................(௲௨௱௫)

லத்தியெடுத்தே யதில்தயிலம் நலமாய்வாங்கி யிம்மூன்றும், பத்
தியுடனேகலந்துவெயில் பருவத்துடனேபிரட்டிவா, முத்தும்தயிலமு
டற்கொள்ளில் முடங்கிக்கிடந்த கால்கைகள்,செத்தேயிருந்த யுடல்வீ
க்கஞ் சோதத்தெளியுஞ் சிகிச்சையிதே...........................(௲௨௱௬)

துவாலைபோட.

இதுபோல்வேறு மனுபானம் இன்னஞ்சொல்வோ மூ.வாய்ப்ப
ட்டை, சதியவிடித்துப் பழங்காடி தன்னில்வெந்துவிடுமிந்த, விதியா
ல்வந்த வியாதிகளும் விட்டேயோடு மிரணங்கள், புதுசாயாவரையி
லையிடித்துப் போடுத்துவாலை யுச்சிமுதல் ....................(௲௨௱௭)

உச்சிமுதலாய்ப் பாதம்வரை யுடம்பிலுறவே துவாலையிட்டு,அச்
சத்தவிரு டனுக்குடனே பழகாயிளவெந் நீராகுளிக்கத், துச்சந்திருமூ
ன்றுதினந் துவாலையெடுத்துப் போட்டிடுவீர், கச்சுமூலைவாயிதுவன்
றிக்கட்டும்புகையைக் கழற்றக்கேள்..............................(௲௨௱௮)

கேளாய்தண்டுதேங்காயும் கெடியாயிடித்துச்சாறுகொள்ளு,நா
ள்மூணுக்குமந்திசந்தி நன்றாயருந்து மதின்பின்பு, ஆளுமாவின்பால்
தண்ணிச் சாறுமருந்து யதின்மேலும், தாழ்வில்லாமல் நல்லெண்ணெ த
ணிசேறநண்டுச் சாறருந்தே.......................................(௲௨௱௯)

அருந்திப்படியே வெவ்வேறு யடுத்தவடுத்துக் கொண்டவுடன்,
நெரித்துமுறித்து போய்விடுங்கா ணிற்கும்கறடு மற்றுவிடும், பொரு
த்தும்வினையும் போய்விடுமே புண்கள்தனக்கு வுபனியங்கேள், திருந்
தவாவின் பால்தனிலே சித்தரகத்தி வெந்துகட்டே...............(௲௨௱௰)

சேங்கொட்டையெண்ணெ.

கட்டுமருத்திற் கடுப்பெரிப்புக் காந்தல்தணியுங் கண்பொருந்து

மிட்டமுவாயி னிலைகாடி யிசைபவெந்து வுபணியஞ்செய், திட்டமுட னே புளியிலையைக் காடிசேர்த்து வேகவைத்து, சட்டமுடனே புண்க ழுவி தப்பாதிலையைத் தான்கட்டே.......................... (௲௨௪௧)

கட்டாய்குலை கரப்பன்புண் கடியகிரந்தி சிரங்குக்கு, தொட்டால தனுல் விட்டோடச் சொன்னேம்புகைவே துபணியங்கள், மட்டாயசு டு வையாமல் வகுத்தோமின்னம் வகைசொலக்கேள், குட்டாயோடச் செங்கொட்டை கூண்டுமெண்ணை கொடுத்திடுமே............(௲௨௪௨)

வேறு.

செங்கொட்டை யிருகூறு நல்லகெந்தி-தெளிவுள்ள தகட்டாரிதா ரம்மொண்டு, பாங்குடனே படிபாதி கூட்டிநன்றுய்ப்-பரிவுபொடி யுட ன்காய்ச்சத் தயிலமாகும், நீங்காதயொருமிடாத் தண்ணீர்தன்னில்-நீதயி லம் விட்டுவைத்துப் பத்துநேரம், வாங்குவாய் நீமெண்ணைபோ லெடு த்துரவியில் - வைத்தெடுத்துப் புண்ணிலிட்டுக் குளிக்கவாங்கும்.

சலக்கழிச்சலுக்கு.

வாங்காத சலக்கழிச்சல்மாற்றுவிக்கு-மகத்தான தயிலமொன்றுவ கையாய்க்கேளு, பாங்கான யேலமிலவுங்க மதிமதுரம்-பழந்தேவ தார மொடு செங்கழுநீர்கோஷ்டம், நீங்காத சாஸ்திரமாம் வெதிமரமஞ்ச ள் - நீடைசிறு செண்பகமுஞ் சிறுநாகப்பூவும், தேங்காதசதகுப்பை வெந்தயங்கச்சோலம்- திகையாமல் வகையொன்று கழஞ்சியாமே.

ஆருக்கிச் சிறுதேக்கு செவ்வியத்தோல்கிரும்பு - அரத்தையொடு வாய்விளங்கம் வகைக்குமஞ்சுகழஞ்சி, வீருன சிற்றரத்தை திப்பிலியு ம்நல்ல - விளாவரிசி யிவைமூன்று வகைக்குமூக்கழஞ்சு, சீருத செஞ் சந்தனம் கடுகுரோகணியுஞ் - சிறந்தகொத்தமல்லியிவை வகைக்குநா ற்கழஞ்சு, பேருன நெல்லிபத்துப் புழுக்கைவேர்புத்து - பேர்பெரி ய சாதிக்காய் பதின்கழஞ்சும்போடே .............................. (௲௨௪௫)

போட்டடா சந்தனந்தான் பலமொன் றரைத்து - பொன்முசுட் டைவேர் சிற்றுமுட்டி வட்டத்துத்தி, போட்டடா நீர்ப்பூலாவேரால ம்விழுதும் - புகழல்வி நீர்வள்ளி நிலப்பனையின்கிழங்கு, போட்டடாஆ வரையின் பட்டையோடு - பொன்னுங்காணிநாரி கொல்லங்கோவை, போட்டடா முடக்கொத்தான் சிரகஞ்செங்கழுநீர் - பொற்சீந்தியிலா மிச்சுவகைக்குயெழுகழஞ்சே .............................. (௲௨௪௬)

கழஞ்சான யிவையெல்லாம் நொறுக்கிக்கொண்டு - கற்றுழஞ் சோற்றினுலோ ரரைப்பலாத்து, விழைஞ்சதொரு தாழைவிழுது சாற் றிலரைத்து - விளாத்துகுமரிச் சாறுமோர் படியும்விட்டு, தழஞ்சியா

யாவின்பால் படிமூன்றுசேர்த்து - தாக்கடா நல்லெண்ணையாறுபடிய
திலே, வழஞ்சியமாயோர்தாழிக் காப்புக்கட்டி- வாகாகக்கற்கம்பாலெ
ண்ணெவாமே.......................................................(தஉ௲எ)

வார்த்தொன்றாய் கலக்கியடுப் பேற்றித்தீயு- மட்டாகயெரியவே
விநாயகனைப்பணிந்து, நேத்திரமாய் மூன்றுநாள் சிறுகொதியுமிட்டு-
நினைவோடேநாலாநாள் வற்றக்காச்சிப்,பார்த்தந்தப் பதங்கண்டுமெ
ழுகுபதத்தன்னில்-பதருமலேவடித் துப்பக்குவத்திற்,சாற்றினேன்குங்
குமப்பூபச்சைகற்பூரம்- சாதிகோரோசினைகஸ்தூரிசட்டம்போடே()

சட்டமடா புனுகுசட்டம் வகைக்குமுக்கழஞ்சு - தனித்தனியே
பொடித்தொன்றாய்கலந்துபோட்டு, திட்டமாயறுபத்துநாலுசித்துந்-
தெரியவல்ல மாணுக்காமச்சமேகேந்திரா,விட்டிடுவாய் தயிலமது வடித்த
பின்பு- வேறேயொரு கலசத்தில் தயிலம்வாங்கி,கட்டடாதானியபுடந்
தினந்தான்பத்துங்-கடந்தபின்பு தயிலமதைக் கழுத்துக்கீழ்த்தேயே.

கழுத்துக்கீழ்த் தேய்த்தபின்பு தலைக்குமந்தத்தயிலங் - கசியாமல்
தேய்த்தபின்பு சீயக்காயரைப்பாம், பழுத்துவிடும் வெய்யலிலேமுழு
காமல்வெந்நீர்- யாங்குடனே நாலுநாட் கொருமுழுக்குமுழுகு,கொ
ழுத்திறச்சி பாய்தயிர்மோர் புளிகைப்புமல்லால் -குளிர்ந்தசலம் புகை
யிலையும் கூட்டலாகா, அழுத்திவிடுமன்றுவிட்டு மறுநாளேது - அசடி
ல்லே வேண்டியது மருந்துவாயே.......................(தஉ௲ய)

## சிலேற்பன தயிலம்.

வாய்ப்பானதயிலமொன் றின்னஞ்சொல்வோ-மைந்தனே வகை
கேளு யேலங்குந்திரிக்கம், வாய்ப்பான கச்சோலமடவிகச்சோல-ம
ருவுசடா மாஞ்சிகோஷ்டம் நறும்பிசின் சந்தனமும், வாய்ப்பானசா
திக்காய் பழந்தேவதாரம் - வங்காளப் பச்சையகில்சன்னிநாயகமு,மா
ய்ப்பான கருங்காலிலவுங்கப்பட்டை - மாகமதூரம் வெந்தைய மிலா
மிச்சம்வேமே...................................................(தஉ௲க)

வேர்முதலாய் வகையொன்று கழஞ்சியொன்று- வித்தேசமில்லா
மவிடித்தரைத்து,சாறுடன் சலமிரண்டு படியிற்சேர்த்து-தயவாகந
ல்லெண்ணை படிதான்விட்டு,வீரமுடனடுப்பேற்றித் தீயுமூட்டி- வி
நாயகனைப் பூசித்து யொருநாள்விட்டுச், சீரானபதம்பார்த்து மெழு
குபதந் தன்னில் - சித்திரமாய் புழுகுசட்டம் கர்ப்பூரஞ்சேமே(தஉ௲உ

சோடா குங்குமப்பூ கஸ்தூரியிவைகள் - சிறக்கவொரு வராகனி
டை பொடித்துப்போட்டு, வாரடா தயிலத்தை வடித்துப்பின்பு-வை
த்திடுவாய் தானியபுடம் பத்துநாள்தான், சிரடா நாலுநாட்கொருமு

மூக்குமுழுகச் - சீயக்கா யரப்புவெந்நீர் சிக்கானதகற்று, போரடா பால்தயிர்மோர் புளிகசப்புமல்லால் - புகயிலையு மாங்கிஷிங்கள் பொல்லாதுதள்ளே ........................................ (௪௨௫)

தள்ளிவிடமெறுநாள்தான் கூட்டுவதகூட்டு-சடையல்லநீரிழிவுமேகமுந்தல்வெட்டை,தள்ளிவிடுங்கபாலநீர்ப்பிணிசங்களாறுந்-தனலாகவெழும்புருக்கி மூத்திரமன்றி,தள்ளிவிடு மிந்திரகண்டிகல்லடைப்பல்சிறப்புத்-தாகமொடு பித்தவகை யூஷ்டிணமூந்தணியுந்,தள்ளிவிடுஞ்சிலேற்பனநீர் மண்டைப்பிணிசங்கள்-தனிலத்தி மூர்ச்சைக்குத்தயிலங்கேளே.

மூர்ச்சைக்குத்தயிலம்.

தயிலங்கே ளிலுப்பைப்பூ விலாமிச்சோடு-தனிவேங்கைச் சிராயுடனேயமுக்கிருநன்னாரிப்,பயிலான நிலப்பனைவேர்மூத்தக்காசு பங்கயமாம் வளையமொடு நீர்வள்ளிக்கிழங்கு,ஒயிலான குறுந்தொட்டிபூமிசர்க்கரையி-னுடன்கிழங்கு வகையொன்று பலமதஞ்சு,அயிலாகத்திறித்திடம்ப் பாண்டத்திட்டு - அடையவே சலமஞ்சு மரக்காலூட்டே.

ஊட்டியேயடுப்பேற்றித் தீமூட்டி-யொடுங்கவதை யெட்டொன்றாய்க் குறுக்கிப்பின்பு,நீட்டியே நல்லெண்ணை படியுமஞ்சு நேரானவாவின்பால் லவ்வண்ணஞ்சேர்த்து மூட்டுவாய் கற்கவகை யேலமிலவுங்கம்-முதுமதுரஞ் சீரகங்க ளிரண்டுமாமஞ்சள்,கூட்டுவாய்கெந்தமஷி லுடன்செஞ்சந்தனஞ்சிட்டி-கூர்சாதிக்காய்பத்திரிகிரும்புசதகுப்பை.

சதகுப்பை கோஷ்டமொடு செவ்வள்ளிக் கொடியும் - சார்வான தேவதாரம்வெட்டி நெல்லிப்பருப்பும்,விதமாகவகையொன்று கழஞ்சியஞ்சு - வெயிலிலே காயவைத்து யிடித்தாட்டுப்பாலில் - விதம்பல்செய்யாதேகலக்கி யெண்ணைசேர்த்து - வேகவைத்து மறுநாளில்வடிக்கும்போது, பதமெழுகு பதங்கண்டு பச்சைகர்ப்பூரம்- பாங்கான வமினிமூக் கழஞ்சிட்டுவடிமே. ................................ (௪௨௭)

வடித்திடுவாய் விநாயகனைப் பூசைசெய்து - வைத்திடுவாய் தெட்சணை நைவேதனமுஞ்செய்து,கடித்திடுவாய் துடைத்தாப்போல் கலமொன்றிலிட்டுக்-கனவாக வண்டுகட்டித்தானியபுடமாக்கி, முடித்திடவே பத்துநாள் கழிந்தபின்பு - முறையாக நாலுநாட் கொருக்கால் முழுகப்பா, படித்தரமா சீயக்காயரப்பு வெந்நீர்கொண்டு - பருவமாய் முழுக்கன்று பத்தியத்தைக்கேளே. ........................ (௪௨௮)

பத்தியங்கள் பால்தயிர்மோர் புளிகசப்புமல்லால்- பாரடாபுகையிலையும் பச்சைமாங்கிஷிங்கள், சத்தியமாய் விட்டுவிடு மறுநாளைக்கா

கும் - சாற்றுகிறேம் நோய்போகும் வயணந்தன்னை, முத்தியநீர்ப்பி
ணிசமோர்ப் பீனிசஞ்சீயொத்தம்- மூக்கிலே சிராய்பருத்திவிணைபோ
னும்விழுதல்- இத்தனையோர் செம்பித்த செங்காநோயு - மிதிற்பிறந்த
மேகமொடு யெல்லாம்போமே. .......................... (௲௨௫௯)

## விஷமுஷ்டித்தயிலம்.

போமப்பா வொருதலைநோய் கபாலவாய்வும்- பித்தமிஞ்சு சிர
நோவு மண்டைவரு காப்பன், போமப்பா யித்தயிலத்தாலே சொன்
னேன் - பொல்லாத விஷிமுஷ்டித் தயிலஞ்சொல்வோம், போமப்பா
சன்னிசயித்தியத் துடனேவாதம்-புரிசத்து வருதோஷ மசதிமூர்ச்சை
போமப்பா மதிமயக்கம் முயலகன்முகவாதம்-பிறவீச்சு முள்வீச்சு த
னுவாதமுடக்கம், போமப்பா குதிவாதப் பக்ஷவாதம்-ம்பாக்கில்லா
திமிர்வாத மெண்பதுவும்போமே .............. ......... ... (௲௨௬௰)

வாதமென்ற வெண்பதுக்குந் தயிலங்கூட்டு - வகையினுப்பைப்
புன்னைபுங்கு மயில்வேம்பினோடு, நீதமுள்ள நல்லெண்ணெவிளக்கெண்
ணெயல்லால்-நினைவுடனே மயில்நெய்க்கு வயணங்கேளு, பாதமொடுசி
ரங்குலர்த்தி லைவத்திருந்தெடுத்துப் -பால்வெண்ணெ தனில்நொறுக்கி
ப் போட்டுக்காசு, ஈதன்றி மயில்கறியில் வெள்ளாட்டின்பா-லிதின்வெ
ந்துப் டணாக்குத்திக் கடைந்திடாயே. ................ ... ... (௲௨௬௧)

கடைந்திட்ட வெண்ணெதனை யுருக்கிநெய்கூட்டு-கசடற்ற முசுறு
முட்டை குஞ்சுகூட்டி, அடைந்திட்ட தொருபடியில் வெந்நாவிட்டு-
அப்பனேபிழிந்திட்டவஃதுங்கூட்டு,துடைந்திட்ட பூநாகத்தயிலம்வா
ங்கக்- குறையாமலோர்படிதான் சலத்திற்போட்டு,உடைந்திட்டமண்
மணக்கன் கக்கிப்பின்பு -வோர்கலசத்திட்டுவட்டத் தோடுபோட்டே

ஓடுபோட்டுநடுவே துவாரமிட்டு - வோவியம்போற் சீலைமண்
செய் யொருசாணுழம், போடுவட்டக்குழிக்குள்ளே சட்டிவைத்துப்-
பின்புமந்தக் கலசத்தைக் கவிழ்த்துமூடி,நாடிசந்துவாயதற்குச்சீலைம
ண்ணுஞ்செய்து - நாட்டெருவுங் காட்டெருவு மடுக்கித்தீயைமூட்டு,
பாடில்லா திறக்கிவிடு தயிலங்கண்டாய்ப்- பாங்காக வகைக்கொன்றுக்
களைப்படியும்பதியே. ................................ ..... (௲௨௬௩)

பதியான கொடிக்கள்ளி யெருக்குசதிரக்கள்ளி - பரிவான யிலைக்
கள்ளி திருகுகள்ளிப்பாலும்- பதிவான திவ்விலைகள் வாட்டியேபிழியு
ம் - படிவகைக்கு மனையந்தப் பால்களுமவ்வண்ணம்,பதியானகுழலா
தண்டை யிடித்தசாறும்- பாச்சடா அவ்வண்ணம் பருந்தாழிபொன்றி
ல், பதியான யிந்தவகைச் சாறும்பாலெண்ணெ - பதருமல் கலந்துவிடு
பலசரக்குகூட்டே. ........................ ......... ........ (௲௨௬௪)

பலசரக்குப் பெருங்காயம் வசம்புமரமஞ்சள்-படரான சதகுப் பை சன்னிநாயகமும்,விலையதிகங் கத்தூரி சீரகங்கள்மூன்றும்-விரோமம்பூ நாகமயி லெச்சம்விரைந்து, மலையாமல் வகையொன்றுகழஞ்சி யாறு மறுபடி நீ வெள்ளுள்ளிப் பருப்புமஞ்சுபலந்தா, னிலையாகச்சாறுகொண்டு யிவைகளாட்டி-நேயமுடன் றீமூட்டி பெரித்திடாயே.

எரித்திட்டுப் பதத்திலே வடித்துக்கொண்டு - என்மக்காள் கணேசனுட பூசைசெய்து, அரித்திட்ட தயிலத்தைப் பதனஞ்செய்து- அப்பனே வியாதிகண்டு தொட்டுப்போடு, விரித்திட்ட சன்னிமுதல் தோஷம்போகும் - மேலான வாதவகை யெண்பதோடுந்,தெரித்திட்டசெவிநாசி நசியஞ்செய்யுந் - தீருதற்கு வுள்ளுக்கோர் காசுசூட்டே... ()

சூட்டக்கேள் குளிர்நளிர் விஷதோஷசுரத்தைச்- சொல்லுகிறேன் முள்வேர்க்குந் தாகமாகும்,சூட்டக்கேளிடுப்பசைந்துதலையுநோகும் சூட்டெழும்பிக் குளிர்ந்தபின்பு குளிர்சுரமுண்டாகும், சூட்டக்கேள் வாந்தியொடு மலசலமுங்கட்டும்- தியாமாய் நாவரண்டு ம்சாகமாகும் சூட்டக்கேளசதியுண்டாங் கியாழந்தன்னை-சூட்டுகிறேன்வகைகேளுஞ் சீந்திசூட்டே. .......................................... (தஉசுஎ)

சீந்திமுத்தக்காசு பற்படாகத்தோடு- சிறந்தகொடி தூவிவெட்டி யில்ாமிச்சம்வேர்,ஆர்ந்தகொத்தமல்லிசுக்கு நிலவேம்போடு- அதுவகைக்கு யிருகழஞ்சி யளவாய்க்கூட்டிட், பாந்தமறவிடித்துமுக் கூறுசெய்து-பண்புடனே யொருகூறுக் கிருநாழிநீர்தான்,சாந்தமாய் விட்டுயெட்டொன் றாகக்காச்சி-தானருந்து தேன்கலந்து மிருபோதிப்படியே.

இப்படியேமூன்றுதினங்கொண்டாயாகி-லெடுத்தசுரம் குளிர்நடுக்கு விஷபாகப்போகும், வெப்பட்டா திருத்திவிடும்வாய்நீர்போக்கும் மெய்நீரும் வாந்தியும்போம்வீறும்போக்கும்,தப்பாதகைப்புடனேபுளிப்புமோருந்-தள்ளிவிடு ஆறுதினந் தாண்டிமட்டு, மப்படியேகொண்டுநின்ற பேருக்கெல்லா- மழிசுரமு மாறலுட னறைகின்றோமே.

அறைகிறேன் பித்தவெட்டை காசக்கூறு - மதிற்பிறந்த பலரோக மசதிவாந்தி, மறையாத பெருமேக மிருமலீளை - மதிமயக்கங் காந்தலுட னெரிவுதாகம்-முறைவான நெஞ்செரிப்பு வயிற்றிரைச்ச-லூட்டினங்கள் கால்கைகள்காந்தல்போக,நிறையாகவொருநெய்யைச்சொல்லக்கேளு - நிமிஷத்தில் நிற்பதற்குத் தேற்றும்வித்தே. ... (தஉஎய)

வேறு - தேத்தாங்கொட்டைநெய்.

தேத்தாம்விரைகால்படிதன்னைத் தேய்த்துக்கழுவி யுலரவைத்து, நேத்திப்பசுவின் பாலதனில் நனைக்க மூன்றுதினமூறப், பாத்துவதனை

யிருகூறுப் வெட்டிப்பால்விட் டாட்டியபின் - சேர்த்துத்திரட்டி யத
னளவு பசுவின்வெண்ணெ சேர்த்திடுமே ......... ..........(௧௨௭௧)

சேர்த்தபின்புநெய்சட்டி யிதனிற்போட்டுஅடுப்பேற்றி- பேர்த்
திடாதேதிருட்டியெரிக்கிற்கடுகுபொன்னிறமாங் - கூற்றுப்பார்த்துக்
கண்டமருந்து கூறக்கேள்சீரகமேல - மேத்தவதுதானிருகளஞ்சு மின்
னமியம்பவகைகேளீர்.......................................(௧௨௭௨)

கேளுசாதிக்காய்பத்திரிகிரும்பு சிறுநாகப்பூவும் - நீளுநாளிசப
த்திரியும் நீதியுடையவதிமதுரம் - வாளுங்கருஞ்சீரகமேல மிலவுங்கப்ப
ட்டை சதகுப்பை - மீளுதிரிகடு குடனஞ்சும் விராகனிடைக்குக் கூட்
டிடுமே.................................................... (௧௨௭௩)

கூட்டுமீரேழுமருந்துங் குறுகநறுக்கிநிழலுலர்த்தி - நாட்டமுட
னேயிடித்துப் பொடியாக்கியதையும்வடிகட்டி - வாட்டமில்லாநெய்
சட்டி மகிழ்ந்தேநெய்யில் பொடிகளுடன் - சூட்டாய்மூன்று பலஞ்
சீனிகலந்துபொடிபோல்தூவிடுமே.............................. (௧௨௭௪)

தூவிக்கிண்டிவெதுப்புடனே துணிவாயிறக்கிவண்டுகட்டி- ஆவி
க்கேற்றதினம்பார்த்துஅப்பாகொட்டைப்பாக்களவு- மேவியிருபோ
தெண்ணஞ்சு தினமும்விரும்பிக் கொள்வீரால் - சோவித்திருந்தபித்த
வெட்டை கூப்பிட்டோடுங்கண்டாயே .......... .......... (௧௨௭௫)

கண்டாயத்திசுரவெட்டை கால்கையெரிப்புக் காந்தலொடு-பண்
டேயெழுந்த சூடுமுதற் பனைத்தவிருமல் புகைச்சலொடு- துண்டாய்
வந்தகூடியரோகந் தொட்டவியாதியத்தனையும்- வண்டார்குழலாய்புயந்
தோடும்வச்சிரதேகமாக்கிடுமே ................................ (௧௨௭௬)

## வேறு.

ஆக்கியயிந்தநெய்க்குமசடில்லைப்பத்தியங்கள் - நீக்கிடுபுளிகசப்
புநிறுத்தினல்மெத்தநன்று - போக்கிலேகொள்வீராகில் பொறுப்பது
வெகுநாள்செல்லும் - சீக்கிரம்நிவிர்த்தியாகச் செய்காந்த லெரிவைக்
கேளே............. ............................................ (௧௨௭௭)

## வேறு.

காந்தலெரிவுயெடுத்ததற்குக்கியாழமொன்றுகழற்றுகிறேன்-சே
ர்ந்தமினகுமறுகம்வேர் சீராய்ச்சமனாய்த்தாக்கியதைப் - பாந்தமாகநீ
ரோர்படிவிட்டேயெட்டொன்றாக்கியபின் - வார்ந்துவடித்தவெண்ணெ
யிட்டு வளமாய்க்கொள்ளவாங்கிடுமே........................ (௧௨௭௮)

வேறு.வாங்கிடயின்னமொன்றுவகுக்கிறோம் கியாழந்தன்னைப்- பாங்
குடன்புத்தியான பேர்க்கெல்லாம் பலிக்குமப்பா - ஈங்குடன் மாந்

தற்காகச் செய்வது திரமாகாது, சாங்கமாய் செய்வதெல்லாம் தவமுள தேகத்தோர்க்கே............................................ (௲௨௭௧)

வேறு. தேகங்காந்தல்நெஞ்செரித்தல்தீரக்கியாழம்செப்பக்கேள், வேகமுடைய மிளகுவில்வ வேரின்வயிர மிழைத்ததுவும், பாகஞ்சமனுப் தாக்குரொட்டிப் பாங்காய்கொத்தமல்லியிடு, ஏகமாக விருநாழி நீரிவிட்டெட்டொன்றுக்கே........................................ (௲௨௮௰)

வேறு.

ஆக்கிய கியாழந்தன்னை யந்திசந்திக்கு வைத்து, நீக்கிடு பாதிதன்னை நீவடிகட்டிப் பின்பு, தாக்கிட மூலைப்பால்பாதி சாரித்து தனிச்சீரகம், வாக்குடன் சிவக்கநீயும் வறுத்ததைப் பொடிசெய்வாயே.

பொடிவடி கொண்டுரொண்டு பணவிடை பொடிமேல்போட்டுக், குடியிது மூன்றுபோதில் குணங்காந்த லெரிவுநிற்கும், துடியுடனழல் நீர்விட்டுச் சொஸ்தமா யிருக்கச்செய்யும், படியுள்ளோர் தமக்குப்பித்தம் பணைத்தது வாந்திகேளே........................................ (௲௨௮௨)

வேறு.

வாந்தி யரோசிபித்த மதில் வாய்நீரூறல் நெஞ்செரிப்புச், சாந்தியாகக் கியாழமொன்று சாற்றக்கேள் தணிவதற்குப், பாந்தமாம்வில்வ வேரிழைத்துப் பகருங்கொத்தமல்லி, நேர்ந்தநெல்லுப் பொரிமதுரம் தெல்லியுடன்முந்திரிப்பழமு,மார்ந்தசீனிகற்கண்டு மடைவாயொவ்வோர் கழஞ்சொன்றே........................................ (௲௨௮௩)

## வச்சிரவல்லி சூரணம்.

ஒன்றாய்நறுக்கிப்படியொன்றிலொடுக்கியெட்டொன்றுக்கியதை, அன்றாட்க மூன்றுதின மந்திசந்தி கொள்வீரால், சென்றொன்றேவிட்டகன்று திரும்பிப்பாரா தொளித்தோடு, மென்றே கியாஷிமொழிப்படியே யிணங்கச்செய்வீ ரியல்பாமே........................................ (௲௨௮௪)

இயல்பாம் வச்சிரவல்லி யென்றதிதுகா ணினியசூரணங்கள், மயலாகாத சதுரப்பிரண்டை மணிமுந்தின துசமூலமெல்லா, மொயிலாம்வில்லைபோல் நொறுக்கி யுரலில்துவைத்து வுலாவைத்துப், பயிலாயிடித்த தூளைவடி பருவத்துடனே வைத்திடுமே........................................ (௲௨௮௫)

வைத்தபின்புமேல்மருந்துவகைஸபக்கேளுதிரிகடுகு, எத்ததிரிமால் கல்லுப்பு மிசைந்தசெவ்வியஞ் சிற்றரத்தை, மொய்த்தா ரோலமிலவுங்க முதிர்ந்தகெந்தத் திப்பிலிமூலம், சித்தாரொண்டுசீரகமுஞ்சீனமுடனக்கிருகாரம்........................................ (௲௨௮௬)

காரமான யிந்துப்பு கிரும்பு சாதிக்காய் பத்திரி, வீரமுடையவ
முக்கிரு வேரும் வகைக்குநாற் கழஞ்சு, சாரமுடைய கடுகுரோகணி
சாதிக்காயும் வெண்காரம்,பேராம் வகைக்கு மிருகழஞ்சி யொடு நவா
ச்சாரங்கல்மதமே. ........................................ (தஉஅ௭)

## வேறு.

கல்மதம் சாரம்ரெண்டு வகைக்கொரு கழஞ்சுகூட்டு, பல்விதமரு
ந்து கழஞ்சிபார்த்துக் கையதனில்பாதி, வெல்வதுவச்சிரவல்லிபொடி
சேரவ்வண்ணஞ்சீனி,செல்வதுமூன்றுமொன்ருய்த் திரட்டுசூரணந்தா
ன் திண்ணே........................................(தஉஅஅ)

திண்ணடா வந்திசந்தி வெருகடி தேனிலேதான், பண்ணடா குன்
மம்வாய்வு பானவுப்பிசமுந்தீரும்,பிண்ணடாகபாலவாயு வுடனேவெ
ண்கோளழதானும், விண்ணடா காசக்கூறு வெகுண்டுவிட் டோடும்பி
த்தம் ........................................ (தஉஅகூ)

பித்தமா மூஷ்ணரோகம் பெருகிய வெட்டைக்கெல்லாம், தித்தி
யாம் வெண்ணெநெய்பால் மோர்தனைச்செலுத்துவீரால், வெத்தியாய்
நிவிர்த்தியாகும் வேறொன்று மில்லையப்பா, சத்தியம் புளிகசப்புதள்
ளடா சுகமதானே. ........................................(தஉகூய)

## மதனகாமேசுர சூரணம்.

சுகமதா மதனகாமீசுர சூரணத்தைச் சொல்வோஞ், செகம்புகழ
முர்தசற்களா சிற்பத்துக் கழஞ்சிகூட்டி, இகம்பரவமுக்கிருவேரொழில்
கண்டங்காரிதூதி, திகையவே முத்தக்காசுநிலைப்பனைபகர்ந்திட்டாரே.

பகர்ந்தது வில்வவேரும் பாதிரிப்பொன்னுங்காணி,சுதந்தருநாரி
நத்தச் சூரிவேர்சிறுநெருஞ்சி,யுகந்தகீழ்க்காய்நெல்லி யொடுசிறுகீரை
வேரும்,புகழ்ந்த மாதுளம்வேர்வெட்டி விலாமிச்சம்வேரும்போடே

போடம்மான்பச்சரிசிவேரும் பெரியஆவரைவேர்ப்பட்டை,தேடி
ய வத்திப்பட்டை சிறந்தகோ ரக்கர்மூலி,கூடியவித்துச் சாதிக்காய்ப
த்திரி கூகைநீரும்,பாடியகிரும்புமேல முந்திரிப்பழங் கற்கண்டே.

கண்டசித்தரத்தைக்கல்லூர் கல்மதங்கொத்தமல்லி,விண்டதாளிசபத்
திரி மிளகுதிப்பிலி சுக்கோடு-பண்டதி மதுரமொன்று பகர்ந்தனர்கழ
ஞ்சிமூன்று,வண்டலர் குழலாய்மற்ற வகையினி துணைக்கலுற்றோம்.

உற்றசீரகந்தான்ரெண்டு குருசாணியோமம்நெல்லி, சிற்றிலவுங்கம்
பத்திரி சிறுநாகப்பூவதல்லால்,கொற்றவா தேவதாரம்விளாவொடுகோ
ஷ்டந்தக்கோலம், மூற்றுகஸ்தூரிமஞ்சள் கெந்தந்திப்பிலியின்மூலம்.

மூலம் வால்மிளகு தெசாபுரத்தோடு செவிகச்சோலஞ், சீலமா மன்னபேதி சிறந்தமா துளத்தினோடு, கோலமா மக்கிருகாரங் கூறிய வாய்விளங்கம், வால்கோடு மகரப்பூவும் வகைக்கிரு கழஞ்சதாமே.

ஆமொரு கழஞ்சுவீத மவின்குங்குமப் பூவல்லால்,கோவெருது டைய கோரோசினையொடு கூறினோம்பின்,நாமநாறுங் கஸ்தூரிநல்ல நெற் பொரியுங்கூட்டிப், பூமிநாடன் பருத்திப்பருப்பொடு கழஞ்சி பொடியே. .................................................. (௪௨௯௭)

பொடிசெய்வதெட்டெட்டுக்கும் போற்றநூற்றெழுபத்தெட்டு,வெ டிவெயிற் காயவைத்து மெல்லிதா யிடித்துச்சோம்பாய், வடிசெய்து யிதிற்பாதிதான் வங்காளச்சீனிபோட்டு, படியவே புதுப்பாண்டத்திற் பதனஞ்செய் பண்பாய்த்தானே. .............................. (௪௨௯௮)

தானென்று மேகவெட்டை தனித்தாது நட்டமானால், தேனென் று நெய்பால் மாதுளம்பழச் சாற்றில்தின்னப், போனவீரிய விருத்தி ப்புருடர்க்குப் பொங்கிவாழும், ஞானதேசிகன்போற்காயஞ் சுப்பிர மாகநண்ணும் .................................................. (௪௨௯௯)

நண்ணுவீர் நாற்பத்தெட்டுநாள்பாதியருந்துவீரால், புண்ணிய புருடனாவான் பூமகள்விரும்பிவாழ்வாள், திண்ணமாய்ப் பிலனுண்டா குத் தினந்தோறும்பால்கொள்வீரா, லண்ணலா ரருளினாலே யறிந்து செய் யதினாலாமே. .................................................. (௫௱)

அறிந்துசெய் வாதசீத மணுகிடி லிஞ்சிச்சாற்றில், செறிந்திடுவெ ருகடிநீ தின்றுவாபத்துப்போது,பிறிந்திடுங் குடைச்சல்நீங்கிப்பின்னி ய முடக்குந்தீரும்,முறிந்திடா தனுபானத்தில்முத்துநீயருந்துவாயே

அருந்தியநாள்மட்டுக்கு மப்புரம் விடுதிவிட்டால்,திருந்தியேவாத சீதம் பித்தங்கள் சேரொட்டாது- பொருந்திடுபிணிகட்கெல்லாம்புக விடங் கெதிகெட்டோடும்,வருந்தியே புண்ணவாந்தி மலப்பந்த வாய் வுபோமே.................................................. (௫௱௦௨)

வாய்வோடு மூந்நூற்றாறும் வாதங்களெண்பத்தெட்டும், பாய்கி ன்ற குன்மமெட்டும் பலமேக மிருபத்தொன்றும்,நோய்மூல கிருணி பாண்டு விஷபாகம் நொறுக்கும்பின்னும்,சீரத்தங்குளிர்சுரங்கள்தீரும் நோய் நிருமூலமே. .................................................. (௫௱௦௧)

## வேறு - அதிவிடையசூரணம்.

மூலக்கிருணிக் கதிவிடைய முகில்சூரணத்தின் வகைகேளாய், சீ லவிடையம்பெருங்காயம் சிறுநாகப்பூ திப்பிலியுஞ், சாலநிறைந்தசா

திபத்திரி சமன்முக்கழஞ்சு சாதிக்காய், துலக்ஷச மைங்கழஞ்சிதுய்ப
திப்பிலி நாற்கழஞ்சே. ................................................... (௩௱௦௪)

கழஞ்சியெட்டு வேர்க்கொம்பு கடுகுவெள்ளுள்ளி யப்படியே,க
ழஞ்சிபத்து நாய்க்கடுகு கருத்தாய்ப்போடுங்களங்கமற,கழஞ்சிபத்து
த்துப்பிலியு மூலமொடு கட்டாகவிரு, கழஞ்சியபினுங்கூட்டிடுவாய் க
னிவாய்வெதுப்பித் தூளாட்டே. ................................................(௩௱௦௫)

ஆட்டியதற்கு ளஞ்சுபலம் சீனிகலந்து புதுக்கரகத், தாட்டியது
தான் சூரணத்தை யப்பாவந்தி சந்தியொடு, ஆட்டியதுவும் வெருகடி
தானருந்தவனுபா னத்தின்வகை,ஆட்டிமுத்தக் கியாழத்திலு மருந்தே
னிஞ்சிச் சாறுமே. ........................................................(௩௱௦௬)

ஆமேகிருணியாறுவகை யசடுதீரு மனுபானம்,ஆமேசுக்குகடுகெ
ள்ளு அப்பாதிப்பிலி சமனுக, ஆமேவெதுப்பித்தூளாட்டி யதிலேபா
திசூரணமும்,ஆமேகலந்துகொண்டுவா வதிலுலெல்லாமொழிவதுவே.

ஒழிவதற்கு யின்னமொன்று வூட்டவகைகேள் பெருந்தும்பை,வ
ழியாநொச்சில் கருவேம்பி னீர்க்கில்முருங்கை யீர்க்கிலையோடு, நெழி
யாய்கொழுஞ்சி சாரணைவேர் நீதிமுத்தக் காசுக்கு,வெழியாய்நல்லம
லைதாங்கி வேருஞ்சமனு யிடித்திடுமே. .......,.......................(௩௱௦௮)

வேறு.

இடித்ததை முக்கூறிட்டு யியலொரு கூறுக்குத்தான்,படித்தரமா
கவப்பா யாச்சிறு நாழிநீரை,குடிப்பதற் கெட்டொன்றுக்கிக் கொல்வ
துக்கொன் றுகேளும்,முடிப்பதுகிழிமருந்து மிளகுதிப்பிலியுஞ்சுக்கே

சுக்குவெள்ளுள்ளியோமம் சூட்டதிவிடைவசம்பு,திக்கிலாவொண்
டோடேத்தித் தாழ்வில்லாக் கிழியுங்கட்டி,பக்குவத்துடன்தானந்தக் கி
யாழத்திற் பாச்சிப்பின்பு, தொக்கடா வத்திசந்தி துணிந்துதா னறிந்
துகொள்ளே ..........................................................(௩௱௰)

வேறு.

கொள்ளவே மூன்றுதினத் துடனேமூலங்- கூட்டோடே விழுந்
துபோங் குறைதானில்லை, விள்ளுறே னின்னமொரு கியாழந்தன்னை
வேட்பீர்க்கில் கருவேம்பி னீர்க்கில் சுக்கு,விள்ளுறேன் வெள்ளுள்ளிதி
ப்பிலியினோடு- விராகந்தானினமருந்து வகைக்குமூன்று, உள்ளுவே
னுள்ளிதாய்க் கிழிபோல்கட்டி,யொருநாளைக் கிருநாழிநீராவூட்டே.

ஊட்டியதை யெட்டொன்றாய்க் குறுக்கிப்பொட்டணத்தை-
யொருநாளைக் கிருபோது அரைத்ததையுங்கலக்கி, யூட்டியதில்மூன்று
தினம் மூலம்வேரோடு- மோடுங்கா ணின்னமொரு கியாழங்கேளு,ஊ

ட்டியதில் வெள்ளுள்ளி கருவேம்பினீர்க்கு - வோகோகோ சுக்குவேம் பிரக்கில்திப்பிலியு, மூட்டியது சமனாகத் தட்டியேயியாழ- மொட்பா கச் சலமிரண்டு படிதான்சேரே ........................(௲௱௰௨)

சேரடா யிப்படியே மூன்றுநாளப்பா- தினந்தோறு மெட்டொ ன்றாய் குறுக்கிவாங்கி, வாரடா விருபோதுமருந்திருக்கால-மாசகலமூ லம்வேர் மடிந்துபோகு,மாரடா பத்தியங்கள் புளிகசப்புமாற்று-ஆச் சரியங் கியாழங்க ளசடோவில்லை, பாரடா வேணதுண்டுசுருக்கிச்சொ ன்னேம் - பண்பான சிவதைசூரணந்தான்பாரே........ .. (௲௱௰௩)

சிவதைசூரணம்.

பாரப்பா சிவதைசூரணத்தைத்தானும்-பாடினேம்சிவதைபொ ரு பலந்தான்கூட்டு,பாரப்பா திரிபலையுங் கொத்தமல்லிரோணி-பகர் தேசா புரமிந்து செவ்வியமுத்தக்காசு, பாரப்பா திரிகடுகு சீரகங்கள் ரெண்டும்-பண்பாகச் சிறுநாகப்பூ வன்னபேதி, பாரப்பா விலாமிச்சு வகைக்குமுக்கழஞ்சு- பழந்தேவ தாரமிலவுங்க பத்திரியே.. (௲௱௰௪)

பத்திரியுங் கோஷ்டமொடு நல்லகெந்தம்-பரிவான பொரிகாரங்கஸ் துரிமஞ்சள், ருத்திரியா சடாமாஞ்சி வாய்விளங்க - முறையாகவகைக் கொன்றுக் கொன்றறையாங்கழஞ்சு,இத்தனையா நாலேழு மருந்துலர்த் திடித்து-யென்மகனே வடிகட்டி சீனியந்திடைக்கு,அத்தனையு மொன் றாய்க்கலந்துசூரணித்து-அருந்துவாய்வெருகடிதான பானவாயுவுக்கே

வாயுவென்னப் பட்டதுக்குத் தேனிஞ்சிச்சாற்றில் - வளமாக யொருபோது கொள்ளத்தீரும், தேயமுதல் கலக்கியது பழமலம்தீர்க் கட்டுந் - திறந்துவிடு மல்லாது தேகசொஸ்தமுண்டாம், நேயமுள்ள பேர்க்காகு மலக்கட்டில்லை -நினைவுகெட்ட மாந்தருக்குச் செய்யவே ண்டா, மாயமுள்ள மருந்தெல்லா மடக்கம்விட்டுச்சொன்னே- மப்ப னே வொப்பில்லை யனேகநோய்பறக்கும்...................(௲௱௰௫)

வேறு.

பறந்திடும்பத்துநாட்குள் பழமலங்கழியும்வாய்வு,பிறந்திடுமூஷிண ம்போக்கு மிருமலுமீளை நீங்கும்,சிறந்திடுந்தேககாந்தி செய்திடுந்தில வும்வாங்கும்,நிறைந்ததை யுண்டுவந்தால் நீள்பிணி யண்டொட்டாதே

வேறு.

ஒட்டாதகளையோடிருமல்விக்க-லோடிடவே திப்பிலிவெந்தயம்பெ ல்லிப்பருப்பு,தட்டாதசிற்றரத்தைநெற்பொரிசர்க்கரையுஞ்-சமனாகவ கையொன்று கழஞ்சியாறு,முட்டாகக்காயவைத்துத் தூளாயிட்டி-டு

றையோடே வடிகட்டிக்கொண்டு தெய்யில்விரவி,கட்டாக வந்திசந்தி
கொட்டைப்பாக்களவு - கடங்களறத் தின்றுவரில் கள்ளம்போமே.

கள்ளம்போம் களகளத்தயிருமலீளை- கபங்களொடு கயக்கூறுவிக்க
ல்போகும்,கள்ளம்போ மின்னமொன்றுவிக்கலுக்கு-கனிந்ததொருவி
ளாம்பழத்தின் விளையைப்போக்கி, கள்ளமில்லா மூலைப்பாவில் சாரி
த்தப்பால் - கடியநல்ல திப்பிலியை வறுத்துக்கொண்டு, கள்ளமறத்தூ
ளாக்கி வடித்தயிர்ந்து - கால்கழஞ்சு மமுக்கிருவேர் சுட்டகரியே.

கரியான திவையொக்கவொன்றாய்ச்சேர்த்து - சுறந்தகொம்பில்
தேனிலே கலந்துகொண்டு,விரிவானயந்திசந்தி கொள்ளக்கொள்ள-வி
க்கலெல்லாம் பறந்தோடுமிளைப்புமீளை,பிரிவானவிருமலொடு வரட்சி
தாகம்-போானதோஷிமுதல் பிரிந்துபோகும்,தெரியாதவகையெல்லா
ம்சொல்லிவிட்டோம் - சிறந்தமகா வில்வாதிலேகியமாநிலத்தே.

## மகாவில்வாதிலேகியம்.

மாநிலத்தில் வில்வாதிலேகியத்தை- வகையாகச் சொல்லுகிறோ
ம் வரிசையாகக், கானகத்திலில்லாத வில்வவேர்தான் - கனத்தபிரயோ
கத்துக் கஞ்சுதிலாம் நொறுக்கித், தானென்ற பாண்டத்தி லஞ்சுகலநீ
ரும் - சாதகமா யடுப்பேற்றி யெட்டொன்றாக்கிக், கோனென்றவடிக
ட்டி தாழிசேர்த்து - கூறுகவஞ்சுதிலாம் பொடியைப்போடே.

போட்டபின்பு சர்க்கரைதா னுருகிற்றானால் - பிறகுமதை வடிக
ட்டித் தாழிசேர்த்து, நாட்டமுட னிஞ்சிச்சார் நெல்லிச்சாறும் - நல
மாக வகைக்குமொரு தூணிசேர்த்து,வீட்டிமையிலாதகடைமருந்தை
ச் சொல்வோம்-வெதுப்பான வெய்யிலிலே காயவைத்துத், தீட்டடா
தனிமிளகுப் பொடியுமொருகுறுணி-திப்பிலியுஞ் செவ்வியமொடுதூ
ளாறுபடியே ........................................ (௲௨௨)

படியல்லால் பலமாகச் சுக்குப்பத்தஞ்சு-பலமோடு யேலமிலவுங்க
ஞ்சிறுநாகங்,கொடிய தாளிசபத்திரி சிற்றரத்தைமதுரங்-கோட்டமொ
டு பேரரத்தையக்கிராகாரம்,துடியாக வகையொன்று பலந்தானஞ்சு,
சொன்னதின்பின் சாதிக்காய்பத்திரிகிரும்பு, பொடியாகவகையொன்
றுக் கீரைஞ்சுபலந்தான் - பொடியாக்கி மருந்தெல்லாம் வடிகட்டிப்
போடே........................................ (௲௨௩)

வடிகட்டிப் பொடியெல்லாம் கூடச்சேர்த்து- வளம்பெறக்கியா
ழமொடு பாகுசாறல்லால், நெடியதொரு கருப்பம்பால்கொய்மட்டி-
மாதளையாம்-தேத்திபெறுபழச்சாறு வகைக்குமஞ்சுபடிதான்-மூடிவா
க் மூன்சாறுங்கூடக்கூட்டி - முறையோடே வடுப்பேற்றிப்பாகுகாச்

கி, அடிமுடியாயிருக்கின்ற கணேசனைப்பூசித்து- அக்குழம்புபாகிலே மருந்து மமைத்திடுமே.......................................... (௩௱௨௪)

மருந்தான பொடிப்பாகில் தூவித்தூவி - வளமாகக்கைவிடாக்கி ண்டிக்கிண்டி, பொருந்தவேகிளறியபின் நெய்படிரண்டரையும்-பொ லிவுடனே விட்டிளக்கித் தேனுமவ்வண்ணம், திருந்தவே விட்டிளக்கி லேகியமாங்கண்டாய்- தின்னவேயிருபோது கொட்டைப்பாக்களவும், அருந்துவது மண்டலந்தா னனுகாதுநோய்க-ளசடில்லைநோய்க்குமா ர்பாணியெனலாமே .......................................... (௩௱௨௫)

ஆமப்பா தீராத நோயுங்கேட்கு - மதினாலே யொழிகின்ற வியா திசேளு, வேமப்பா குன்மமுதற் குஷ்டம்போகும்- வெட்டைபோம சதியோ டரோசியம்போம், போமப்பா க்ஷயகாச மிருமலீளை-புகை ச்சலொடு நெஞ்செரிப்பு பித்தசோகை, நாமப்பா காமாலைதொந்திப் போடு - நலங்கெடுக்கு மதிசாரம் நாடாதோடும். ....... ... (௩௱௨௬)

ஓடுகிறவயிறிரைச்சல் ரத்தக்கடுப்பு - மூளமாந்தை தலைநோயும் சுரமாந்தைதீரும், சாடுகின்ற யெரிவிரிவுங் காந்தல்தீரும்- தாகமொடு நீரோற்ற முப்பிசமுந்தீரும், வாடாத புலத்தியனேஞானசீலர - வளமா னசிவயோகி மச்சகேந்திரா, நாடுகின்ற நோயெல்லாம் விட்டோடிப் போம் - நல்லபிர யோகமடா பத்தியமும்நலமே. ....... ... (௩௱௨௭)

பத்தியமுப்பு நெய்பால் துவரைபருப்பாம்-பழுதகற்றும் வழு தலங்காய் முருங்கைப்பிஞ்சாகும், சத்தியெனு மூளைத்தண்டு மவரை ப்பிஞ்சாந் - தனிநெல்லி யண்டமொடு விரால்தேளிசுறுமீன், வெத்திபு ரி வெள்ளாடு காடைமுசலுடும்பு - மீன்வகைக ளிதுவெல்லா மூலர்த் தியேகூட்டு,மத்தியிலே விடாமல்நீ மண்டலந்தான்கொண்டால்-மகா நோயுந் தீருமந்த மகிமைநீயறியே. ........................ (௩௱௨௮)

## வில்வாதிலேகியம்.

மகிமைக்கு வில்வாதி லேகியத்தை- வகையாகச் சொல்லுகிறேன் மைந்தாகேளு,மகிமையுள்ள வில்வவேரோ ரஞ்சுபலந்தான்- வாகாக நொறுக்கியே யிருதூணிநீரில்,மகிமையுள்ள பாண்டத்திலிட்டுத்தீமூட் டி-வளம்பெறவே நாளொன்றாய்க் குறுக்கிவடிகட்டி,மகிமையுள்ளசக் கரைதா னியாறுபலத்தை - வற்றிநின்ற கியாழத்தில் மாட்டுவாயே.

மாட்டுவாய் போட்டதிலே தகர்த்துக்காச்சி- வற்றிய திகுழம்பா கிப் பாகாய்திற்கு, மாட்டுவாய் மிளகுபொடி செவ்வியத்திப்பிலியும்- வளமான மகாராஜ யோகதீரா, மாட்டுவா யமலமச்ச சுந்திபுத்திரா - வ கையொன்று படிகால்ாய் வகுக்கக்கேளு, மாட்டுவா யேலமிலவுங்கமி ஞ்சி-மகத்தான சிறுநாகம் தாளிசபத்திரியே.................. (௩௱௨௯)

பத்திரியோ டிவைக்கெல்லாம் வகைக்குவொருபலந்தான் - பகர் சாதிப்பத்திரி கிரும்புபலமறையா, மித்தனையுங் காயவைத்துத் தூளா யாட்டி - யியல்பான சாறுபாகிது பருவங்குழம்பாய், வத்திவரும் பத த்திலே கடைமருந்துத்தூளை - வடிகட்டித் தூவிப்பதைவாகுடனேகிள று, வெத்தியாய்லேகியமாமதிலேநெய்தேன் - விட்டுவர ஆழாக்குவிரவி யதைதக்கின்டே.......................................(௲௯௩)

இன்டியது லேகியந்தா னுண்ணக்கேளு - கேடில்லை கொட்டைப் பாக்களவுஅந்திசந்தி, கின்டியலேகிய மருந்த வயிற்றுவலிகுன்மங் - கின் கிணித்த விருமலோ டீளைகாசங், கின்டிய லேகியத்தினால்நெஞ்செரிப் புவாய்வு - கிருணியதி சாரமொடு பித்தகாமாலை, கின்டிய லேகியத்தி னல் தேககாந்தல் - கிளர்தாகஞ் சோபமொடு வாதந்தொந்திப்பே.

தொந்தித்த பலரோக மூஷிணரோகம் - சோகமொடு விஷபாண்டு சு ரங்களுப்பிசங்கள் தொந்திச்சு வயிற்றுளைச்சல்தோஷம்வாந்தி - குடர்ச் ச்சியாய்வருமிரத்த பித்தரோகந், தொந்தித்தநீரோற்றம் வீக்கமலக்கட்டு த் - துலையாததலைநோவுதுயரந்தீரும், தொந்திப்பாய்லேகியந்தான்மண் டலந்தான்கொள்ளு - கூட்டுகிறேன் குண்டலாதிலேகியத்தைக்கேளே.

## வேறு - குண்டலாதிலேகியம்.

குண்டலாதி லேகியத்தைக் கூறக்கேளுங் குவலயத்தில், மண்டுசங்கம் வேர் நூறுபலமும் செவியமதிற்பாதி, கண்டங்காரியுமவ்வண்ணங்கடுந் திப்பிலி இதன்மூலம், பண்டை மூத்தக்காசு வில்வம்சித்திரமூலம் பகர் ந்தோமே.......................................(௲௯௪)

பகர்ந்தோஞ் சீந்திநிலப்பனை வேர்ப்பலனும் வெட்டிவிலாமிச்சு பகர்ந்ததோர்சிற்றுமூட்டிக் கொட்டிக்கிழங்குமமுக்கிருவேர், பகர்ந் தோம்வகைக்குநாலஞ்சுபலமுங்கூட்டியிடித்தத்தூள், பகர்ந்தோம்பா ண்டந்தனிற் பத்துமரக்கால் பாணிசேர்ந்திடுமே. ..........(௲௯௫)

பாணிசேர்த்துத் திமூட்டி பருவத்துடனே யெட்டொன்றாய்ப் பாணிகுறுக்கி கற்கவகைப் பகர்வோந் திப்பிலிபலமிரண்டு, பாணிக்கி சைய கூகைநீறுபலந்தான் நாலுநாகப்பூ, பாணிக்கிசைய சீரகங்களிர ண்டு பலமும் வகைமூன்றே.......................................(௲௯௬)

மூன்று மேலமில்வுங்க மூத்தக்காசு சிறுதேக்கு, மூன்றுங்கற் கடகசிங்கியொடுமூலஞ்சாந்திப்பெருங்காயம், மூன்றும் வகைக்கிரண் டுபல மிளகுபொடிதா னைப்படியே, மூன்றுஞ் சுக்கும்பொடியனை யா மூழுதுமிடித்துத் தூள்வடியே.......................................(௲௯௭)

வடித்ததூள்க ளொன்றாக்கி வைத்தகியாழங் குழம்பதிலே, கடித்

தாப்போலே யொடித்தூவிக் களறக்கிண்டி வற்றவைச்சு, பிடித்தபிடி பாய் நறுநெய்யோர் படியும்விட்டுக்கிண்டியபின், தடித்தநறுந்தேன் படியொன்று தான்விட்டிளக்கி லேகியமே. ................ (௨௱௩௮)

## வேறு.

லேகியமோர் புதுக்கரகத் திடம்வைத்து-பெண்மகனே வியாதிக ணிரண்டந்திசந்தி, லேகியமோரம்மண்டலந்தா னுண்ணுவுண்ணு-மியல்பான வியாதிபோம் வகையைக்கேளு, லேகியந்தான் சிலேற்பனங்களெல்லாந்தீரும்-மிடற்படுத்தும் வாயுவெலற்றுமெல்லாந்தீரும், லேகியத்தாலிருமலபோம் குண்டவாய்வு-மெட்டுவகைக்குன்மங்கள் பலவுந்தீரும்

தீராத விக்கலொடு வேர்க்காரங்கள்-திரமான பீனிசங்களுதாவேதனைகள், தீராத சுரந்தாஷிஞ் சன்னியோடு- தேகத்திலெங்கல்குத்துக் குடைவுலேச்சலதீரும், தீராதவுப்பிசங்கள் நீரோற்றம்வீக்கஞ்-செரியாமலக்கினியின்மந்தஞ்சீதபித்தந்,தீராத நெஞ்செரிப்பு வாந்திகுந்-தெளியாத பலநோவுந் தெளியுந்தானே. ................ (௨௱௩௯)

தெளியாத ரோகங்கள் பலவுந்தீரும்- செப்பினேன் பத்தியத்தை திரமாய்க்கேளு, தெளியாத புளிகசப்பு புகையிலைமாங்கிஷங்கள்-சிரான கடல்சம்பைப் பாகல் பூசினிக்காய்,தெளியாதுபிலாக்காய்தான் கிரைச்சம்பு யிவைகள்- தீண்டாதே விலக்கிவிடுஞ்சேர்த்தருந்தக்கேளு- தெளிவான நெய்பாலு மிளகுருப்பு - செங்கீரை முளைத்தண்டு வழுதலையுமாமே. ................ (௨௱௪௰)

ஆமப்பா கொடிப்பையோ டவரைப்பிஞ்சு-மப்பனே வெள்ளரிட்டுக்கண்டமாகும்,ஆமப்பா கடல்சம்பைமேதளுமாகு-மந்நேரங்குளிச்சலிப யுலாந்ததாகும், ஆமப்பா முருக்கையிலை பிஞ்சுமாகு- மணக்கீரைத் தழையறுத்துத் தளர்ந்ததாகும்,ஆமப்பா பசுவின்மோர் புளியதாகு - மாச்சரியஞ் சுவாசகுட்டாரி சூரணத்தைக்கேள் (௨௱௪௧)

## சுவாசகுட்டாரிசூரணம்.

சூரணமாஞ் சுவாசமென்ற குட்டாரிதனைச் - சூட்டுகிறேன் திரிகடுகு சிற்றரத்தை, சூரணமா வக்கிரகாரம் வாலமிளகு - சொல்லரிய தேசாபுரம் பொரிகாரஞ்சமனுஞ், சூரணமாந் தாளிசபத்திரி கொட்டிகூட்டி - சூரியபுடத்துனி லுலாத்தித் தூளாயாட்டி,சூரணமாய் வடிகட்டிக் கலந்துபுதுக்கரகத் -தூட்டுவா யனுபானஞ் சொலக்கேளே.

சொல்லக்கேளனுபானந் தேனிஞ்சிச்சார்-சுகமான நறுநெய்யுங்கூட்டிப்பாரு, சொல்லக்கேள் தீருகிறதென்னவென்றால் சுவாசமென்ற தொண்ணூற்றுறும்போகும், சொல்லக்கேளீளையொடியிருமல்காசம்

சூடதிக வெட்டைமுதலீதூளாய்ப்போகும்,சொல்லக்கேளிதற்கொத்
தசெந்தூரம்புகுந்தால்-தொல்லைவினைகள் விழுந்தோடும்சுருதிதானே.

## குமரித்தயிலம்.

சுருதிவெட்டைச் சூட்டுக்குச் செப்பக்கேளு-சுகமான குமரியெ
ன்னுந் தயிலந்தன்னை, சுருதிவெட்டி வோமுத்தக் காசுதானுந் - தகை
வகைக் கிரண்டுபலந் தோணப்போட்டு, சுருதிகொட்டி முட்கொத்
தா னமுக்கிருவேர் - துடியான சிற்றுமுட்டி யிலாமிச்சுநாரி,சுருதிதா
மரை வளையம்சீராஞ் செங்கழுநீர்- துணுக்காக நொறுக்கியிட்டு வகை
மூன்றுபலமே. ...... .................................. (௲௱௪௫)

வகையொன்றுபலமூன்று வீதஞ்சேர்த்து-மைந்தனே யிடித்து
த்தூள் பாண்டத்திட்டுத், தகையாத தூணிநீர் விட்டடுப்பி லேற்றித்-
தோன்றவது நாலொன்றாய்க்குறுக்கிவாங்கி,பகையாமற் சாறுவகை கரி
சாலைச்சார்-பாங்கான சிறுகீரைச் சாறுங்கூட்டு.மிகையாதகொடிப்பை
மொசுமொசுக்கைச்சாறு-.மேற்குமரி நெல்லிக்காய் சாறுஞ்சேரே.

சோடா நீர்வள்ளிக் கிழங்குச்சாறு- சிறந்தநல்ல யிளநீர்தான் திர
மாயப்பா, சேரடா படிதானும் வகைக்குநாலு- சேரவிட்டு நாலொன்
றாய் குறுக்கிவாங்கி, சேரடா முன்வைத்த கியாழத்தோடு - திரட்டுவா
யாவின்பால் படிநாலு, சேரடா தாழியொன்றில் காப்புக்கட்டி- தி
ருந்தயெண்ணை படிநாலு விட்டுச்செய்யே. ............... (௲௱௪௭)

செய்யடாவிநாயகனைப்பூசைசெய்து-திரமாகமேல்மருந்து செ.
ப்பக்கேளு,செய்யடா நெல்விமுள்ளி மதுரமேலஞ் - சிறந்தசிறீநாக
ப்பூ தேவதாரஞ்,செய்யடா மண்சிட்டிமாஞ்சி மரமஞ்சள்- செண்பக
ட்பூபுழுக்கைவேர் செவ்வள்ளிக்கொடியும், செய்யடாநற்கெந்தஞ்செ
ஞ்சந்தனம் - சித்திபெறுஞ் சகஸ்திரமாம் வேதைபோடே- (௲௱௪௮)

போடடா யிலவுங்கப் பட்டைபத்திரியும் - புகழ்பூலாங் கிழங்கு
கோஷ்டம்கிரும்புசாதிக்காய்,போடடா புகழவேவகைமூன்றுகழஞ்சி
புளமே யிடித்தாட்டு யிளநீராலே,போடடாகலக்கியெண்ணை கியாழ
த்தோடு-பொலிவான சாறுபாலுடன் தாழிக்குள்ளே,போடடா வடுப்
பேற்றித் தீயைமூட்டி-புரையற்று மூன்றுநாள்சிறுகொதியும்பூட்டே

பூட்டியபின் நாலாநாள் பதங்கடுகில்நீரும் - பொசியாமல் வற்று
பத மெழுகிலேதான்,நீட்டியே சட்டிமுன்னங் குங்குமங்கஸ்தூரி-நிச
புழுகு சட்டமொடு கோரோசனையும்வகைக்கு, நாட்டியேவகையொ
ன்று கழஞ்சிரண்டு-நறுக்கியிட்டுவடித்திடுவாய்த் தயிலந்தன்னைப்,போ
ட்டியிலலை வண்டுகட்டி தானியபுடம்வைத்து- போக்குடனே நால்நா
ளைக் கொளுக்கால்மாழகே. ...................................(௲௱௫௰)

முழுகடா ரீயக்கா யனைப்புவெந்நீர் - முழுக்கன்று பால்தயிர் மோர் புளிகசப்புமகற்று, முழுகடாமுறைமையோடே மற்றுநாள்கூட்டு-மோசமில்லை குமரியென்னுந்தயிலத்துக்கு,முழுகடா பித்தவெட்டை தலைகண்ணெரிவு- முரடான வுட்சூடுகொந்தல்தீரும்,முழுகடா தேகமொரு காந்திகாணும்- மூக்கினீர் சிறப்புமல பந்தம்போமே.. (தசுஙச)

அரக்கெண்ணெ.

பந்தமுட னரக்கெண்ணெ பித்தவெட்டை சுரங்கள் - பகையானசயித்தியநீர் மூன்றுவகைப் பணைப்பும், கொத்துடனே போவதற்குக் கொம்பரக் கோர்படிதான் - கூறுகப் பொட்டணமாய் கட்டிப்பின்பு சித்தமுடன் சலங்குறுணி தனில்தோளாந் திரமாய்த் - தீமூட்டி யெரித்துநா லொன்றாய் வாங்கி,வைத்தவுடன் குறுந்தொட்டிவமுக்கிறுவேர் - வகையொன்று பலமஞ்சு நொறுக்கிடாயே. .............. (தசுஙு

நொறுக்கியே சலங்குறுணிதன்னிற்போட்டு - நேராக வேகவைத்து நாலொன்றாக்கி,மூறுக்கியே யிவ்வகைகள் பிழிந்தயாழங்கள்-மூட்டுவாய் தயிர்தண்ணீர்ப் படியிரண்டு, மறுக்கியே பசுவின்பால்படியும்நாலு - வாகான பழங்காடி படியிரண்டு, தறுக்கில்லா நல்லெண்ணெப் படியும்நாலு - தாழியொன்று காய்ச்சிட்டு சாற்றக்கேளே. (தசுஙசு)

சாற்றக்கேள் விநாயகனைப் பூசைசெய்து- சதாசிவனைத் தியானித்துக் கற்கந்தன்னை,சாற்றக்கே ளமுக்கிறு குறுந்தொட்டிவேரும்-சதகுப்பை பொன்மெழுகு தேவதாரம்,சாற்றக்கேள் சிற்றரத்தை பேரோல மஞ்சள்-சாதிக்காய் பத்திரிகிரும்புவெட்டிவேரும்,சாற்றக்கே ளிலாமிச்சம் பூழுக்கைம்வர் நன்னாரி-தற்கோலம்கோஷ்டமொடு முத்தக்காசே

முத்தக்கா சதிமதுரஞ் செவ்வள்ளிக்கொடியும்-முறையாக வகையொன்று கழஞ்சிநாலு, சுத்தொக்கக் கியாழம்வைத்துத் யிடித்ததூள்தன்னைச் - சுகமாகக் கியாழந்தயிர் தண்ணீராலாட்டிக், கொத்தொகக்கலக்கியே யொன்றாய்ச்சேர்த்துக் - கொடுந்தீயை மூட்டாமலொழுகுதீயெரித்து, வற்றக்காச்சாமலே மூன்றுநாள் கழித்து- மற்றுநாலாநாளில் வடிக்கும்பதம்பாரே. ............................................ (தசுஙுடு)

பதம்பாரு மெழுகுபதங் கண்டுநீயும்-பருவத்தே புழுகுசட்டம் கோரோஜினையும்போடு,விதம்பாரு வகையொன்று கழஞ்சிரண்டு-மெல்லிசாய்பொடிச்சிட்டு வடிப்பாயப்பா,மிதம்பாருகுளிர்விட்டு வண்டுகட்டிவைத்து-மீறுமல் தானியபுடம் பத்துநாள்கழித்து,பதம்பாரு நாலுநாட் கொருக்கால்மூழ்க- வாகான ரீயக்கா யனைப்புவெந்நீரே.

## மந்தாரகாசத்தயிலம்.

வெந்நீரும் விளாவாமல் முழுக்கன்று தயிர்பால்- வீறுன்புளிகசப்புப் புகையிலையுமாற்றத், கந்நீர்மைநோய்களெல்லாய்விட்டேயோடும் - சாற்றினேன் மந்தார காசத்தின் தயிலம், பன்னீர்போல் தெளிவதற்குக் கியாழந்தன்னைப்- பாடுகிறேன் புலத்தியனே பகரக்கேளு, நன்னாரி குறுந்தொட்டி பொன்னுங்காணி - நலலவட்டத் துத்திமேவா சீந்திதண்டே. ........................................ (தகூருள)

சீந்தியொடு முடக்கொத்தான் சீரார்செங்கழுநீர் - சிறந்தநிலப்பனைக்கிழங்கு நீர்வள்ளிக்கிழங்கு, போந்தஅல்லிதாமரைவேர் வெட்டியிலாமிச்சுப் - புகழாலம்விழுதுமாவரம் பட்டையோடு, சாந்தமலைதாங்கிவேர் நீர்ப்பூலாவேரும் - தறித்திடுவாய் வகையொன்று பலந்தான் மூன்று, சேர்ந்திடிக்க சலமயங் குறுணிதண்ணீர்- நீட்டுவாய்பிடாவிலிட்டுத் தீயைமூட்டே. ................................ (தகூருஅ)

தீமூட்டி யெட்டொன்றாய் குறுக்கிவாங்கி-சீலைவடிகொண்டுபின்பு செப்பக்கேளு, நேயமுடன் கடைமருந்து கற்கஞ்சேர்க்க-நிகழ்த்திகிரேமேலமிலவுங்கமதிமதுரம், மாயருறவாயமாபஞ்சள் சகஸ்திரம்வதி-வாய்விளங்கக்கோலம்கோஷ்டம்சிறுநாகம், நாயருள்ள சதகுப்பை வெற்றையஞ்சாதிக்காய்- நல்லசிறுதேக்காரத்தை செவியங்கூடவே

செவியமொடு செண்பகப்பூக் தேவதாரம்-திகைத்ததுதான்வகைக்கொன்றாமழஞ்சுமழன்று, குவியவே நெல்லிருள்ளி கெந்தங்கஸ்தூரிமஞ்சள்-கூறரிய பழுச்லைகவேர்சாதிபத்திரியும், செவியமுறங்கோதிம்பை கிரும்புதாற்கழஞ்சி - செஞ்சந்தக்கொத்தமல்லி திப்பிலி சிற்றரத்தை, கவியவரு கடுக்ரோணி விள்ளாவரிசிதானும்- கழஞ்சிரண்டுவகையொன்றா காயவைத்துயிடியே. ................................ (தகூய)

இடிபொடியைத் தாழைவிழுதுச்சாற்றிலாட்டி-யியல்யாகச்சாறுபடியொன்றுவிட்டு, வடிவானகுமரியுடசாறுமரைப்படியும்-வளமானநல்லெண்ணை படிமூன்றுகலந்து, மூடிவான கியாழமுன்புவைத்ததிலே சேர்த்து- முகூர்த்தத்தில் மஞ்சளில் காப்புக்கட்டிப், படிவாகக் கம்ணசணையும் பூசைசெய்து- பர்வுடனே யடுப்பேற்றித் தீயைமூட்டே.

மூட்டியே யெரித்திட்டு மூன்றுநாட்கப்பால் - மெழுகுபதந்தன்னிலே வடிக்கும்போது, நீட்டியே புழுகுடனே பச்சைக்கர்ப்பூர-நிசமாங்கோ ரோசனையும் வகைக்குமிருகழஞ்சி, மாட்டியே பொடித்திட்டு வடித்திடுவாய்தயிலம் - வண்டுகட்டி தானியபுடம் வைத்தெடுத்துக்கொண்டு, மூட்டியேநாலுநாட் கொருருழக்குமுழுகு - முறையோடே சீயக்காயனாப்பு வெந்நீர்வாரோ. ................................ (தகூஉ)

வார்த்தெண்ணைமுழுக்கன்று மோர்தயிர்பாலிறச்சி-மருவுதலும்
புளிகசப்பு புகையிலையுமாற்று - வார்த்தெண்ணை முழுகிவர்ல்போம்
நோய்கேளு-மைந்தனே மந்தாரகாச மொடுயேங்கல் - வார்த்தெண்
ணை முழுகையிலேயிருமலீளை-மகத்தான பக்கமந்தாரகாசம்- வார்த்
தெண்ணைமுழுகையிலே கபாலநீர்ப்பாச்சல் - வாதமொடு பொருமல்
குறு வேர்வைபோமே............ ..................... (௲௫௬௪)

குறுவேர்வை நெஞ்சிருமல் நெஞ்செரிப்பு- கூறரிய வரோசிபி
த்தந் தலைநோய் கண்வலியுங் கிறுகிறுப்பு முறிந்தொடுங்கியிவைகளெ
ல்லாம்தான்-கேளடாவுப்புடனே துவரைவழுலங்காய்-மறுவில்லா மு
ளைத்தண்டு நறுநெய்பாலாம்-மற்றொன்று மாகாது வாதராட்சதனே.

### வாதராட்சதக்குளிகை.

வாதராட் சதக்குளிகை தன்னைக்கேளு- வகையாக யுரைக்கிறேன்
மருந்துநீகேள்-பேதமற வளர்சூதம் பெரியலோகம்-பிலமுடைய கா
ந்தமொடு செந்தூரங்கள் - நீதமுடன் வகையொன்று பலந்தானென்
று-நேர்வாள மனோசிலையும் ரசகெந்தியோடு-வேதமுறைநாவிலிங்கம்
வெண்காரந்தானும்-விராகனஞ்சு வகையாகச் சுத்திசெய்யே.(௲௫௬௫)

சுத்திசெய்த மருந்துடனே செந்தூரங்கூட்டி- சுருதிபெறநொ
ச்சியிலைச் சாற்றிலாட்டி-சுத்திபெறத் தூளாக்கி கெங்காசலத்தின் குப்
பி- தோன்றவே சீலைமண் ணேழுதிரஞ்செய்து - சுத்திபெற மருந்த
டைச்சு மண்ணுஞ்செய்து- சூட்சமா யோட்டியடுப் பொன்றுபோ
டு-சுத்தியாய் தாழியொன்றில் நாலுவிரல்மண்ணும்-சொரிந்துகுப்பி
வைத்தபின்பு மணல்கழுத்திற் கொட்டே........ ......... (௲௫௬௬)

கழுத்துமட்டு மணல்கொட்டித் தீயைமூட்டி-கமலவன்னி யொ
ருசாமங் காடாக்கினியும்பின்பு-பழுத்துவிழப் பதினொன்று சாமமா
ட்டி - பார்ப்பளவில் செந்தூர மாகித்தப்பா - மழுத்தரித்தார் பதந்
தொழுது வனுபானத்தில்-வியாதிகண்டு மருந்துகொடு வகையேதெ
ன்னில்-இழுத்துவிடுந் திரிகடுகு வறுத்ததூளி-லினியதே னுடன்கலந்
துவூட்டுவாயே.................................... (௲௫௬௭)

ஊட்டுவாய் பணவிடை செந்தூரங்கூட்டி- யொருநாளைக் கிரு
போதா யொடுங்கமட்டு-மூட்டுவாய் சத்திகுன்மமுத லஷ்டகுன்மம்-
முழங்குபதி னெட்டுவகை குன்மம்போகும்- நாட்டுவாய் வாதவகை
யெண்பத்தஞ்சு- நலங்கெடுக்கும் பலசூலை வாய்வுக்கெல்லாம்- நீட்டு
வாய் சுரசன்னி தோஷத்திற்கு- நெறியிஞ்சி முருங்கைத்தோல் முலை
ப்பால்சேரே.. ........... ..................... (௲௫௬௮)

சேரடா பூநாகம் வெள்ளுள்ளித்தயிலம்-சேரதிலே பணவிடை தான் செர்தூரத்தருந்தப் - பாரடா விரூந்தோடும் பலபலநோய்க ன்று-பாங்கான வனுபானம் பரிந்திட்டாக்கால், வேரடா அற்றுவிடும் வியாதிக்கெல்லாம்- விரணமுதற் புண்பொடிக ளிவைகள்தீரச், சீரடா திரிகடுகுத் தூள்தேனி லூட்ட - சிலேர்பனந் தொண் ணூற்ருறும் சிர ங்குப்போமே ... ... ... ...(௲௬௯)

வேறு.

சிரங்குசொரிவு வெடிப்பரங்கி தீராப்பறங்கி யெரிப்பறங்கி, தர ங்கப்போன்ற வனல்சூலை சன்னிவாத மண்டைநோய், அரங்கம்போ ன்ற பிணிசமு மான தொண்டைப் புத்தளையாப்புப், பிறங்காயோனி லிங்கப்புத் தெல்லாப்புத்தும் போமிதற்கே ... (௲௭௰)

இதுக்கே குஷ்டப்பதினெட்டுமிரங்குங்களநோய் துடைவாழை, யதுகண்பிளவை கிரந்தியுட லூருப் பவுத்திரம் பலவாய்வு, முதுக்கண் செவிநோய் செவிப்புத்து மூலரோகம் விப்பிருதி, கதுக்காங் குறை நோய் விஷகடியும் காணுதோடுங் கண்டறியே ... (௲௭௧)

அசுவாதிசூரணம்.

அறிவாலறிவா யசுவாதி சூரணந்தன்னை யறையக்கேள்- பிறிவாய் வந்த பலரோகம் போகும்படிக்கு வமுக்கிருவேர் - குறியா யிடித்து வடிகட்டி கூட்டுமருந்து திரிகடுகு- நெறியாஞ் சாதிக்காய்பத்திரி நீத மதுரங் கிரும்பாமே ... ... ... (௲௭௨)

ஆமே கடுகுரோகணியும் சமதாகங் குருசாணி - ஆமே வகைக்கு முக்கழஞ்சி யனலில்வெதுப்பித் தூளாக்கி - ஆமே யிருபத்தைங் கழ ஞ்சு மதிகசீனி யிவையொக்க- ஆமேரொட்டி யமுக்கிருவேர்ப் பொடி யுஞ்சூரணமாச்சே ... ... ... (௲௭௩)

வேறு.

சூரணமாச் சதனில்வெரு கடிதான் நெய்யில் - தூடர்ந்து யிரு போது மண்டலந்தானுண்ண - காரணமாய் வரண்டுவெர்றி யிருந்ததே கம் - கனத்தவுடல் பூரித்துப் பருக்குமப்பா- பூரணமாய் தூலித்துப் பூரித்தோர்க்கு- பூட்டடா தேனிலே மண்டலந்தான்வற்றும்- வாரண மாய்பித்தமொடுபாண்டுதீர- வாழ்மேதைப் புளியாதமோரிலூட்டே.

ஊட்டடா யெலிகடிக்குப் பசுவிநீரி- லொடுங்காத சித்துவிஷந் தேட்குவேப்பெண்ணை- பூட்டடா விளக்கெண்ணை மேலும்பூசு- பொ ல்லாத ஈளையொடுசோகைதீர - மூட்டடா வெள்ளாட்டு நீரிலேதான்- மிகுந்த பெரும்பாட்டுக்கு யெள்ளெண்ணைவெல்லம் - நீட்டடா விரி யனுக்கு வெந்நீரிலூட்டி-நிசமேவே பூசிவிட நின்றுபோமே (௲௭௫)

நின்றுபோ மதலையிளைத் திருந்தாலப்பா- நோவின் பாலிலே ஊட்டுவூட்டு- நின்றுபோ மஷ்டகுன்மம் வாய்வுமரோசிக்கு- நீட்டடா கச்சல்பழச் சாற்றிலைதான்- நின்றுபோஞ் சூலைகளுக் கமுரியிலே யூட்ட - நில்லாத சோகைகா மாலைபோக- நின்றுபோம் நிம்பத்தின் சாற்றிலுண்ண- நிலைகெட்டு பிள்ளையில்லா தவற்குக்கேளே. (௲௱௭௬)

பிள்ளையில்லா தார்க்குமப்பா பிரமி யிலைச்சாற்றில் - பிசகாமல் நல்லெண்ணைப் பாகலிலைச்சாறும்- தள்ளாத மிளகுடனே கூட்டியுண்ண - சந்ததிதா னுண்டாகுந் தாட்சியில்லை - கள்ளமுள்ள கைமசக்குக் காய் வெண்ணைதன்னில் - கனகமெழு கோடருந்து கனிவுண்டாகும்- தெள்ளியநற் காயமொடு வுப்பிலிச் சாற்றிலருந்த - தெரிவையர்க்கு மர்தவிடை சிறக்குந்தானே ... ... ...(௲௱௭௭)

குஷ்டத்திற்கு.

தானென்ற குஷ்டமெல்லாந் தீருதற்கு - தனித்த வேப் பெண்ணைதனிற் சாரித்துண்ணு - தானென்ற செய்யான்தான் கடிவிஷங்கள் தீரச்- சலியாதே வெள்ளாட்டு நீரிலூட்டு - தானென்ற மேற்பூச்சு விப்பிருதிதீரச்- சாற்றினேன் வெள்ளுள்ளிவசம்பு வெந்நீரிலருந்து- தானென்று மோற்றடவி வீரியன்கடிதீர - தனிப்பசுவின் பாலிலுண்டு பின்மேலுந்தடவே ... ... ... (௲௱௭௮)

மேலேறுவாய்வுக்கு வயறுநோவுக்கு - வெற்றிலையிற் பொதிந்தூண்டு வெந்நீருங்கொள்ளு- கால்கை முகவெரிவுக்குஞ் சிரங்கும்போகக்- கறுத்தாட்டி நீரிலுண்டு துவாலைபோடு - சாலவே வாதத்துக் கேரண்டத்தயிலம் - தனில்காச்சி யுண்டுமேற் சலியவதைப்போடு - நீலனென்ன வுரும்சன்னிதீர நல்லெண்ணை - நினைவுடனே காச்சி யுண்டு மேலும்பூசே ... ... ... ... (௲௱௭௯)

பூசுவாய் மலங்கக்கு மிருமலுக்கும் - பூட்டடா கொண்டத்தி லருந்திமேற்பூசு- பூசுவாய் குடைவுகெற்ப ரோகவாய்வு - மப்பனே யிஞ்சிச்சா றதனிற்கொள்ளு - நேசமுடன் மேகவெட்டைத் தாதுநஷ்டம்- நின்றதுவும்தீருதற்கு ஆன்பாலிலருந்து, மாசற்றுக்கசப்புடனே புளிப்புமாற்று-மண்டலந்தா னுண்டவர்க்குவல் வினையும்போமே ()

போமப்பா ஆறுதிங்க ளுண்டபேர்க்குப் - பிலமெனு மாயசுவர்த்திக்கும் நடுவன்காண - நாமப்பா சொல்லிவிட்டோம் காயசித்தியாகும் - நலம்பெறவே பன்னிரண்டுதிங்க ளுண்டபேர்க்கு - வேமப்பா தேகமது பொன்னிறம் போற்சிவந்து - வேற்றுருவாஞ் சகத்திரசுதி பிலனுண்டாகும் - ஆமப்பா கண்டதெல்லாந் திண்ணெண்ணுது- ஆச்சரிய மிதின்பெருமையார்கண்டாரோ (௲௱௮௧)

வேறு.

கண்டங்காரி தூதுவளை கடியவாடா தோடையிலை-ஒண்டவுலர் த்திப் பொடியாக்கி யுறுதூள் நன்றாய் வடிகட்டி - பண்டோர்செய்த முறைப்படியே பசரக்கேளு திரிகடுகு- விண்டாரரத்தைப்பொடியி வைகள் வகைக்காழாக்கு விளம்பினனே (தரு அஉ)

விளம்பக்கேளு கொம்புத்தேன் வெதுப்பிச் சட்டிக்காயவைத் துக்-குழம்பாய்க்காச்சியதில்பொடிகள் குமுறத்தூவிச்கிண்டிடவே, தழம்பச்சீனி யாழாக்குத் தானுந்தூவிக் கிண்டியபின், நழுட்டநறு நெய்யாழாக்குநலமாய்விட்டுக் கிண்டிடுமே (தரு அங)

கிண்டியெடுத்த லேகியத்தைக் கிரிகையுடனேபுதுக்கரக- மண் டவலமைத்துமூன்றுநாள் வளமாய்த்தான்றிக் காயளவு - உண்டேயந் திசந்தியோ டொருமண்டலத்தி லொழிவதுகேள்- கண்டாலோடும ந்தார காசசுவாசங் கசநோவே ... ... (தரு அச)

வேறு.

நோவான மகாவாதசன்னிக் கோர்தயிலம் - நோக்குமுன்னே யொழிந்துவிடச் செப்பக்கேளு-காவானமுள்ளுவிளா புன்னைவே ரும் - கழற்சிவேரான துத்திப்பட்டையோடு-பாவாலசீந்திவே ரமு க்கிருவேர்-பற்படகம்நிலவேம்பு யெட்டிவேரும் - கோவானவெட் டியிலா மிச்சம்வேரும் - கொடியசிறு குறிஞ்சாவேர் மலைதாங்கி வேரோ ... ... ... ... (தரு அரு)

மலைதாங்கி தூதிவேர் நஞ்சுண்டான்பட்டை- வாகானமுக்குரு ந்தாம் பட்டையோடு - உலையாதவாவனாவேர் கிளிமூக்குக்கிழங்கு, உசிலம்பட்டையோடுகடப்புநாவல்பட்டை-நிலையான சாரணைவேர் புளியம்பட்டை- செம்பிரண்டை மணிப்பரண்டைக்கிழங்குகூட்டி த்,துலையானபசளைகிழங்கரசப்பட்டை; சுள்ளிவேர்முள்ளிவேர்முள் ளடியின்கிழங்கே (தரு அசா)

கிழங்குவகையல்லாது சீந்திவேரும் கிலுகிலுப்பை வேரழிஞ் சில்பட்டைவேரு - மூழங்கியகொன்றைப்பட்டை ஆயில்பட்டை - மூதண்டநரியனூர் பொரியரிசிகூட்டி - களங்கமில்லா தெருக்கம்பா லத்திப்பட்டைக் - கருவேலப் பட்டையோடு கருங்காலிப்பட்டை- விளங்குபெருவாகைப்பட்டை குமிழய்வேரு-வில்வவேர் வெள்ளறுகு சிவனார்வேம்பே (தரு அஎ)

வேம்பினுடபட்டை முக்குறண்டி நெல்லிப்பட்டை - வீறான தோடைவேர் பனைமேற்கோவை - மாம்பட்டை புரசினுடபட்டை சங்கங்குப்பி-மால்கிழங்கு வேங்கைபட்டை நொச்சிவேருட்-சோம்

பில்லாச்சன்னகரம்பட்டையோடு - சுறுக்குடைய சத்திச்சாரணை யின்வேரும்-விப்புடையயெலுமிச்சுநாரத்தம்வேர் - மிளகுசாரணை ரமுக்கிருவேமோ (௲௮௮)

வேரானமுருங்கைவேர்ப் புன்முருங்கைவேரும் - வெள்ளிலவம்பட்டையொடிலவுங்கப்பட்டைச் - சீரானசங்கம்வேர்சிலந்தியாங் கொடியும்-செண்பகந் தாழையொடு சிற்றாமணக்கம்வேர்- பேரான விளாவின்வேர் பெருங்குறிஞ்சிவேரும்-புங்கம்வேரதின்பட்டையும் வாய்வேருங்கூட்டு - நேரால கொழிஞ்சிவேர் விஷ்ணுகாந்தி - நிலைத் தமுத்தக்காசு கண்டங்காரிகூட்டே ... ... (௲௮௯)

கூட்டடா ஆடுதின்னாப்பாளைகஞ்சாங்கோரை- கூறரியமாவாத மடக்கியுடவேரும் - கூட்டடாபுலித்தோடரிவே ரொழுமுள்வேருங்-கொடியகார்த் திகைக்கிழங்கு வகைக்கிரண்டுபலந்தான் கூட்டடாதரியிட்டு யிடித்ததா லுழக்கு - கொட்டடா நா[illegible]துறுணி! சலம்பாண்டத்தே (௲௯௰)

பாண்டத்திலிட்டதற்குமடுப்பேற்றித்தீலய-பரிவாகயெரியிட்டெட்டொன்றாய்க்குறுக்கிப் பாண்டத்திலிட்டபின்பு சாறுவகைதன்னைபகருகிறேங்கரிசாலைகுப்பைமேனிபாண்டத்திலிட்டதல்லால்துதிகருநொச்சி - பழுதில்லாவெள்ளைநொச்சிமாவிலிங்கவிலையும்- பாண்டத்திலிடுவதற்குப் பெருந்தும்பை கொத்தான்-பகர்வேலிப்பருத்தியிலை பொன்னாங்காணி (௲௯௧)

காணிபொன்னாவரையிலையு மெருக்கிலைபோற்பழுத்தல்,கடியவிதாயிலைவகைக்குக் கால்படியாஞ்சாறு - ஆணியென்றும் வேப்பெண்ணை புன்னையெண்ணை - யழகானநல்லெண்ணை யிலுப்பையெண்ணை - பேணிவரும்புங்கெண்ணை யிவைகள்சமனாய் - பேறுபடவகைக்குழக்குப் பசுவின்கோவியம்பா - லாணியவெள்ளாட்டுப்பால்கோபயமும்வகைக்கு - ஒருபடிதானிடுகற்கமுரைக்கிறேனே (௲௯௨)

உறைக்கிறேன் வெள்ளுள்ளி வசம்புதிப்பிலியு- மொப்பரியகாட்டுச்சீரகமதாகும் - விரைக்கிறேன் சன்னிநாயகமுங்கூட்டு- மீறுமல் வகையொன்று கழஞ்சிமூன்று - அரைக்கிரது சாறுகளால் கலக்கியிட்டு - அப்பனே தாழியொன்றில் காப்புக்கட்டி - நிரைக்கிறேனடுப்பேற்றித்தீயைமூட்டி-நினைவாகப்பதத்திலேவடித்துவையே...()

வடித்துவைத்த தயிலத்தை வண்டுகட்டி - வளம்பெறவே நாள் சென்று யெடுத்துமைந்தா - குடிக்கவொரு களஞ்சியிடு மூன்றுதினமப்பா-கூறுகநகியமிடு காலைகமேற்பூசி - நொடிக்குமுன்னேபதிமூன்று சன்னிபோகும் - நூற்றிரட்டி யிருபதல்லா வாதம்போகு

ம் - முடிக்கமுக வாதமொடு பட்சவாத - மூரசகனுங் குமரகண்ட னெல்லாம் போமே (தருகூச)

போமப்பாவாதமென்ற தெல்லாம்போகும் - பொல்லாத சன்னியொடு தோஷம்போகும் - நாமப்பா அடக்கமெல்லாஞ்சொல்லி விட்டோம் - நன்னூலாஞ் சூத்திரத்தை யடங்கியாடும் - வேமப்பா தொட்டதெல்லாம் வியாதிககாணி - மெய்யுள்ளோர்க் குரைப்பது வேவிசேஷமாகு - மாமப்பா மற்றோரை யடுத்திடாதே - யுரைகிறேன்நாவரட்சிவிக்க லிருமலுக்கே (தருகூரு)

விக்கலுக்கு.

மயிலிறகு சுட்டகரி மதுரஞ்சீனி - வடிதேனில் திப்பிலியும் வகையைக்கூட்டி - ஒயிலாகக் கற்கண்டுஞ் செய்வீராகி - லோடிடும்மே நாவரட்சி விக்கல்சத்தி - பயில்தாக முள்ப்படல மூள்ளோங்காரம்-பகராமற் பகர்ந்ததுவும் பஞ்சாங்கண்டாய் - அயிலாக வின்னமொன்று சொல்லக்கேளு-அப்பனே வதிதாகப்போக வதிநெல்லி (தருகூசு)

வேறு.

நெல்லி நெற்பொரி சர்க்கரை திப்பிலி- கொல்லி மான்கொம்பு கூட்டி யுரைப்பது, வல்லி மாமுலைப் பாலி லுலாத்திடச் - சொல்லி யோடிடும் விக்கலுஞ் சத்தியே ... ... (தருகூஎ)

விலவம் நெற்பொரி சர்க்கரை திப்பிலி- கொல்லி மாமலைத் தேனிற் குழைத்திட - வல்ல விக்கலுஞ் சத்தியு மாறிடுந் - தொல்லை யில்லைச் சுகநீடு காலமே ... ... ... (தருகூஅ)

நீடு மாதளைநெற்பொரி சர்க்கரை - தேடு திப்பிலி தேனிற் குழைத்துண்ண - நாடு விக்க லிருமலும் சத்தியும் - பாடி யோடும் பகரதி மதுரமே ... ... ... ... (தருகூகூ)

வேறு.

அதிமதுரஞ் சீரகம் வெங்காரங்கோஷ்ட- மழகான திப்பிலி வங்காளச்சீனி - இதுசமனு பெலுமிச்சம் பழச்சாற்றிலேதா-னியல்பாக வுய்த்திடவே விக்கல்போகு- மதிசார தோஷமொடு தாகம்நீங்கு-மப்பனே மருந்திடுவறட்சி யிருமலுக்குப், புதுசாகசண்டமாருத லேகியத்தை-புகலுகிறேன் புலத்தியனேகண்டங்காரி... ... (தசா)

வேறு- சண்டமாருதலேகியம்.

கண்டங்காரி தூதுவளை கடியமிளகு தக்காளி, அண்டர்துதிக்குஞ் சங்கிலையு மாடாதோடை துளசியிலை, கொண்டே வகைக்குக்கால் படியாய்க் கூறப்புதிசாஞ் சட்டியொன்றில், மண்ட வதவு மரைப்படியாய் வற்றக்காச்சிக் கொள்வீரே... ... ... (தசாக)

காச்சிக்கொள்வீ ரதின்பிறகு கருப்புக்கட்டிப் பலமஞ்சு, பேச்சில்லாதே பொடிசெய்துபின்புசாற்றில் தூவியது, நீச்சில்லாதே கால்படியாய் நிற்கும்நிதானங் கண்டறிந்து, கூச்சமறவே கடைமருந்து கூட்டவகையுங்கூறுவமே... ... ... (௧௪௱உ)

வேறு,

கூறிய கடுக்காய் திப்பிலியரத்தை - குறையில்லாவகையோன்று கழஞ்சிபத்து - நீறியே வெயிற்காய வைத்திடித்து - நேற்றியா யப்பொடியை வடித்துக்கொண்டு - தேறவே முன்புவற் றியகுழம்பில்- சேர்ந்திடவே பொடியதனைக் கூடத்தூவி- ஆறுதற்கு முன்பாக யடிப்பற்றுமல் - அடிக்கடிநீ பருவமதாய்க் கிண்டுகிண்டே... (௧௪௱௩)

(வேறு.) கிண்டியனைக் கால்படிதேனைக் கிளறவிட்டு வதின்பின்பு-மண்டநறுநெய் மாகாணிப் படியைவிட்டு மத்திக்க - சண்டைமா ருத லேகியத்தைத் தான்றிக்காய்போ லுண்டைசெய்து - கொண்டுவரவே யிருமலெல்லாம் கூப்பிட்டோடுங் கண்டீரோ ... (௧௪௱௪)

கண்டீர்கைப்பு புளியுகற்று கறியுப்புடனே கச்சலக்காய் - விண்டார்முருங்கைப் பிஞ்சவரை வீறிலாத வழுதலையும்-பண்டார் நறுநெய் பால்துவரைப் பருப்புமறுத்த தழைக்கீரை-தண்டாந்தூதி சமூலமும்நீ தள்ளாதரும்பத் தியங்கடந்தே .. (௧௪௱௫)

மந்தாரகாசக்குழப்பு.

கடந்தேயிருமல் மந்தாரகாசமுதலாய்ப் போவதற்கு- வடர்ந்த குழப்பு வொன்றுதனை யறையக்கேளும் புலத்தியரே- தடர்ந்தேகனக மிளகோன்று துய்யநறுநெய் யவ்வண்ணம்-படர்ந்தசீனி யிவைமூன்று வகைக்கோர்பலமாய்ப் பாவுசெய்யே ... (௧௪௱௬)

செவ்வாயிரண்டு சாமமனை தெளியவாட்டிப் பிசின்போல- நய்யும்பருவம் புதுக்கரகத் திட்டுநாலா நாள்முதலாய்- வையம்புகழு மந்திசந்தி வாகாய்தான்றிக் காயளவு- உய்யும்படிக்கு அருந்திவரி லொருமண்டலத்தி லோடிடுமே ... ... (௧௪௱௭)

வேறு.

ஓடிடும் வியாதிகேட்க வுறுதிகேள் தேங்காய்ப்பாலில் - கூறிடும் சிறுபயற்றம் பருப்பிடு கறுத்தபாலால் - நாடிடு மொன்றுய்க்காச்சி நயப்பெற வுப்புப்போட்டு- தேடிடும் படிக்குக்கொள்ளத் தெளிந்துபஞ் சாகப்போமே ... ... (௧௪௱௮)

வேறு - பஞ்சதாரைக்குழப்பு.

பஞ்சதாரை நாற்கழஞ்சு பருத்தசுக்கு முக்கழஞ்சு - இஞ்சிதிப்பிலி யிருகழஞ்சு யேலந்தானு மொருகழஞ்சு- அஞ்சுங்கூட்டிப் பொ

டிசெய்து ஆவின்பாலில் கொள்வீரால் -மிஞ்சுபித்தந் தலைநோவு வெ
ள்ளோக்காள முள்ளதெல்லா - மஞ்சிப்பயந்து தானடுங்கி யடவிக்
கேகிப் போய்விடுமே ... ... ... (தசா௯)
(வேறு,)மலைதாங்கிநன்னாரி முள்ளிவேரு-மகத்தான நெல்லிக்காய் தா
ன்றிக்காயு - மிலையாடா தோடைகொடி தூவியோடு -இசைந்ததொரு
தூதிகண்டங் காரிகூட்டி - யலைவில்லா தொருநாழி நீரிலட்பா - அஷ்
டபாகம்வகைக்காற் கழஞ்சி கூட்டி, நிலவரமாய்த்தேனு மொருகழ
ஞ்சுகூட்டி - நேயமுடன்திப்பிலியும் மேற்பொடியும்போடே ()

வேறு,

போட்டகியாழம் பொடிதேனும் பொருந்தமூன்றும் தினங்
கொள்ள,நாட்டமாகப் பின்னிநின்ற நாடிசெம்மைப் படுங்கண்டாய்,
மீட்டுமத்தோடேமிளகுஞ் சுக்குங்கூட்டிக் கியாழத்தில், வாட்டமின்
றிப் பொடிதேனும் வருந்திக்குடிக்கவளமாமே (தசா௰௧)
வளமாந்தாது தாகநிற்கு மலமும்பந்த மயக்கமறுஞ், சளமாய்
த்திறந்த தலைநோயும் சளிபோன்றேறும் வாய்க்குத்; துளையாங்கால்
கை மேல்வலியு மோங்காரத்தோ டிருமல்நிற்கும், பழையோர்முனி
வோர் நாடிவகைப் பகர்ந்தார்வாந்தி யிருமலுக்கே (தசா௰௨)

வேறு-வாந்திவிக்கலுக்கு.

வாந்தியு மிருமலு மருந்து வீறக்குஞ், சோர்ந்திடு மிளகுடன்
சுக்குத் திப்பிலி: கூர்ந்திடும் வில்வவேர் கொத்தமல்லியும்; சாந்தமா
யிவையஞ்சும் சமன்கொடாக்குமே ... (தசா௰௩)
ஆக்கிய மருந்தஞ்சு மாவுடனுழிநீர் - வாக்குட னெட்டொன்
ருய் வற்றக்காச்சிபின்: போக்குடன் கொண்டவர் பொலிவும் வீறும்
விட்; டேக்கியே பறந்திடுமியல்பதாமிதே... ... (தசா௰௪)

வேறு.

திரிபாலையிருவேலி யிலாமிச்சம்வேர்-சிறந்ததோர் முண்டகத்
தின் வளையமோடு, நெறியான விழிமரப் பட்டையோடு-நிறையொ
ன்ருய் வகைக்குமிரு கழஞ்சிகூட்டி- குறியாகவிடித்ததுவுமுக்கூறிட்
டுக் - கொண்டிடவே யிருநாழிநீரிலிட்டுப், பிறியாம லொருகூறுஅஷ்
டபாகம் - போதிரண்டு கொண்டுவர பிணிநில்லாதே (தசா௰௫)
நில்லாத விஷபாகச் சுரமும்வாந்தி - நெஞ்செரிப்புக் குளிர்தா
கம் வேர்வைகோழை- அல்லாத மலசலங்க ளமூரியாலு - மப்பனே
கண்மயக்க மசதியோடு - எல்லாம்விட்டோடிடுமோஞ் சோகைநீங்கு-
மித்துக்கு கைக்குற்றம்வரி லேருதேபோம். வல்லவர்கள் கண்டறிந்து
கொடுக்கத்தீரு - மாறலாய் வருசுரமும் வாராதன்றே (தசா௰௬)

வேறு-மாறல்சுரத்திற்கு.

மாறல்சுரங்கள் மாற்றுதற்கு வகைகேள் சீந்திபேய்ப்புடலும்-கூறுமுத்தக்காசு வேர்க் கொம்பு பற்பாடகமிவையும்- தேறவகைக்கு வொருகழஞ்சுசிதறவிடித்துக் கூறுசெய்து; பேறுபடவே யிருநாழி நீரி லொருகூறதிற்போட்டே ... ... ... (தசாயஎ)

போட்டே கியாழமெட்டொன்ருய்க் குறுக்கிவாங்கிப்போதிரண்டு; நாட்டமுடனே தேன்கழஞ்சி நயமாய் மூன்றுநாளருந்த - வாட்டமேது மில்லையந்த மாறல்நாலு மூன்றும்போம்-கூட்டமுடைய பலசுரங்கள் குளிருந்தாகம் வேர்வையும்போம் (தசாயஅ)

தாகம்வேர்வை மலப்பந்தஞ் சந்தித்திருந்த தொந்தமொடு.வேகம்சோகம் நீரோற்றம் விட்டேயோடும்பத்தியங்கள் - மோகமடக்கும் புளிகசப்பு மோரும்புகையும் தள்ளிவிடு- மாகந்தெளிய வன்னப்பாலப்பா அருந்தச்சுகமாமே ... ... (தசாயகூ)

திப்பிலாதிசூரணம்.

ஆமேயிருமல் சளத்துக்கு மடங்கத் திப்பிலாதியைக்கேளாமே சூரணஞ் செய்வதற்குஅப்பா திப்பிலிமூன்றுபல - மாமேயொண்டுபலமாஞ்சிற் றரத்தைமிளகுவால்மிளகு-ஆமேயேல மிலவுங்கப்பத்திரிப்பட்டையதிமதுரம் ... ... ... (தசஉய)

மதுரந்திரிபலை சாதிக்காய் பத்திரிகிருப்பு வாய்விளங்கஞ் - சதிராம் கொத்தமல்லி குருசானி தாளிசபத்திரியு-மெதிராஞ் செவியஞ் சிறுதேக்கு மிருசீரகமுந் திப்பிலியு- நதிரங் கூகைநீறுடனே நறுக்குமூலம்நாடிடுமே ... ... ... (தசாஉக)

மூலமமுக்கிரு வேரு மூன்றுகழஞ்சு வகையொன்று- சீலமுடனெ காயவைச்சுத் திரமாயிடித்து வடிகொண்டு- ஞாலம்புகழும் தூதி கண்டங்காரிகரிசாலையுமுலர்த்தி-யோலமெனவேயிடித்தபொடிவடிகால்படியா யுரைத்தோமே ... ... (தசஉஉ)

உரைத்தோ மிந்தப்பொடிகளெல்லா மொன்ருய்கூட்டியதிற்பாதி - உரைத்தோஞ் சீனிகலந்திடவே யோகோ சூரணமானதுக்கு - உரைத்தோம் தேனில்வெருகடியா யிருபோதுண்ண விருபதுநா - ளுரைத்தோ மீளையிருமல் க்ஷயமோடுமேரோசிவாந்தியுமே (தசஉரூ)

வேறு.

வாந்தியுங்குடல்பிரட்டும் வாயுவும் வயிற்றுநோவும் - தீர்ந்திடும் சிலேற்பனங்கள் தெளிவுறு மலசலங்கள்-ஆர்ந்திடுங் கட்டுவிட்டு அதிகூடு மிகுந்தபித்தம்- போர்ந்திடும் நறுநெய்தன்னிற் பேணிநீகொள்ளுவாயே ... ... ... ... ... ... (தசஉச)

கொள்ளுநல் லனுபானத்திற்கூறினேன் வகையாய்கேளு - தெ
ள்ளுமா துளங்கனியின் சாற்றில்நீதின்னும்போது- ஒள்ளிதாஞ்சகல
நோயுமோடிடும் பித்தம்போகும்- தள்ளுதல் புளிப்புகைப்பு மோர்
புகை தானுந்தள்ளே; ... ... ... (௲௨௰௫)

தள்ளியகோழைவாந்தி சிலேற்பனந் தகர்ந்துபோக - வள்ளமேல
கியாழமொன்று வகுக்கிறேன் வயணங்கேளு- கள்ளமில்லாதகொத்த
மல்லியு மேலங்காணி- நள்ளிருவேலிமூன்றும்வகை யொன்றுகழஞ்சி
மூன்றே ... ... ... ... (௲௨௰௬)

கழஞ்சிமூன் றல்லாவின்னங்கழறக்கேள்மதுரஞ்சுக்கு, வழஞ்சி
யநல்லகெந்த மிலவுங்கப்பட்டைநாலு,முள்ளங்களிகூரரெண்டு கழஞ்
சியா யொக்கப்போடு, தழஞ்சியாயிடித்தத்தூளை தயவுடன்கூறுபோ
டே ... ... ... ... (௲௨௰௭)

போடது முக்கூறிட்டுப் பொலிவுட னொருகூறுக்கு, நாடிருநா
ழிநீரு நலம்பெறவெட்டொன்றுக்கித், தேடிநீ யந்திசந்து தினமூன்
று மருந்திணுக்கால், பாடியேவோடுமென்றுபத்தியம்புளியுங்கைப்பே
கைப்பொடு புளிப்புமாற்றிக்கியாழநீ ரருந்திலப்பா, எப்பில்லை
யிருமலீளைசிலேற்பன மென்றவாந்தி, பற்பல வரோசிகூடப் பறந்தி
டும்பாரிலின்னஞ், சொற்பமாய்த் திப்பிலாதி லேகியஞ்சுட்டுறேனே.

திப்பிலாதிலேகியம்.

சூட்டுலேகியந் தானப்பா தொந்திப்பு க்ஷயங்கள்தீர- நாட்டுதிப்
பிலிகழஞ்சி நாற்பதுபத்திஞ்சேரு-கூட்டுசிற் றரத்தைதானுங்கூறுமு
ப்பது கழஞ்சு,தீட்டுநற்கொத்தமல்லி பதின்கழஞ் சென்னற்சேரே()

சேரடாமிளகுசுக்கு செவியந்திப் பிலியின்மூலம், சேரடாமது
ரசெல்லிச் சீரகமிரண்டோடேலஞ், சேரடாநறுக்குமூலம் சிறுதேக்
குங் கூகைநீறுஞ், சேரடா வமுக்கிறுவேர் குருசானிதிருந்தக்கூட்டே.

திருந்தவால்மிளகுதாளிசபத்திரி கடுக்காய்சேரு- பொருந்தவே
வகைக்குமஞ்சு கழஞ்செனப் பூட்டுமென்பு- மருந்தின்னம் வகைக்குமூ
ன்றுகழஞ்சது வகையாய்க்கேளு, விகுந்தி லவுங்கப்பட்டைபத்திரிவி
ளம்பினேமே ... ... ... ... (௲௩௰)

விளம்பினேங் கிரும்புசாதிக்காய்பத்திரியிவைதானஞ்சு - வளம்
பெறக்காயவைத்து யிடித்ததூள்வடியுங்கட்டி- பளம்பெறக் கண்டங்
காரி தூதியுங்கரிசாலைப்பா - ருளம்பெற வகைக்குழக்குப் பொடிவடி
கொண்டுசேரே ... ... ... (௲௩௰௧)

சேரொருபடிநறுந்தேன்காச்சியே தெளிவுதன்னில் - வார்பலம
ருந்துத்தூளை வாக்குடன் தூவிக்கிண்டி- சீர்கண்டுநறுநெய்யுங்கால்ப

டிவிட்டுக் கிளறும்போது-பார்திப்பி லாதிலேகியம்பாக்குப்பிரமாண
ஞ்செய்யே ... ... ... ... (தூசருச)

பிரமாணமுண்டைசெய்து பில்பொருபோதருந்தப்,பிரமாண
மண்டலந்தான் பிசகிலா துன்பாயாகில்-பிரமாணம் வியாதிவாதம் சி
லேற்பனம் பித்தத்தோடு-பிரமாணம் பணைப்புத்தொந்தி பித்தவரட்
சிபோமே ... ... ... ... (தூசருரு)

போமலஞ்சலமந்தங்கள்பொருமல்நெஞ்செரிப்புத்தாகம்-போ
மீளை யிருமல்வாய்வுதிரட்சியுமரோசிபோகும்- போம்வலி குன்மவா
ய்வு வாயூறல் புளித்தயேப்பம்- போமதி சாரமக்கினி மந்தமும்போ
குந்தானே ... ... ... (தூசருசா)

தானென்றபத்தியங்கள்தன்னைக்கேள் புளிகசப்புத்-தானென்றத
யிர்மோரோடுபுகையிலை வரம்பாய்தள்ளு- தானென்றநறுநெய்பாலு
ந் துவரையுமவரைப்பிஞ்சந்-தானென்றமுருங்கைச்சாறு வழுதலைமு
ளைத்தண்டாமே ... ... (தூசருஎ)

ஆமிளகுப்புமஞ்ச ளரைக்கீரைத்தளவுதள்ளி-பாங்கருவேம்புவுள்
ளிசீரகந் தூதிவற்றல்-ஆஞ்சிறுகீரைபொன்னாங் காணியு மழகாய்க்கூட்
டி-ஆமற்றதொன்றுகாது அறைகிறேனறைகிறேனே (தூசருஅ)

வேறு-பீனிசத்திற்குநசியம்,

அறைகிறேன் பீனிசத்துநசியந்தன்னை- யப்பனேயாவெண்ணையு
ழக்காழாக்கு- அறைகிறேன் குங்குமப்பூ பச்சைகற்பூரமோடு- அபின்
மருந்துங்கஸ்தூரிவகைக்குக்கால்கழஞ்சி-அறைகிறேன் பொடிச்சிட்டு
வேகவைத்துபதத்தி-லதைவடித்துஆரவைத்து மப்பால்கேளு- அறை
கிறேனவ்வலக்கு றுணைவாயிலிட்டு - அதின்பின்புநாசியிலே நசியஞ்
செய்யே ... ... ... (தூசருகூ)

நசியஞ்செய்யிப்படியே யந்திசந்தி - நாள்மூன்றில் குணங்கண்
டால்பின்னுமப்பா-நசியஞ்செய்நாலுநாளாறுநாள்தான் - நாசிநீர்ப்
பாச்சலொடு புண்ணுமாறும்-நசியஞ்செய் சூலைபீனிசமும்போகும்-
நாகரிகமாகுமின்னம் நசியங்கேளு-நசியமொன்று தேங்காய்நெய் யு
ழக்குவாங்கி-நலமானகுங்குமங்கஸ்தூரிசேரே ... (தூசருய)

சேரப்பாவெந்துகொண்டுநசியஞ்செய்யத்- தீராதபீனிசநீரொல்
லாந்தீரும் - ஆரப்பாவறிந்தமட்டும் சொல்லிவிட்டோ - மாருக்குஞ்
சொல்லாதேயடங்கியாடு-பாரப்பா யிந்தநூல் பார்க்கப்பார்க்க-பண்
டிதத்தின்-திறமெல்லாம் பரிவாய்த்தோணும்-நேரப்பாயுள்ளவர்க்குச்
சொல்லுசொல்லு-நெறிகுறிக ளில்லார்க்கு நீயூட்டாதே ([illegible])

பூட்டாதேவதைமாறி மருந்திடாதே-பொற்பூவும்வாசனையாய்ப் பூட்டுபூட்டு;மூட்டாதேமுறையோடே யேதுஞ்செய்ய- மோட்சகெ திவந்தடையுமோசமில்லை-கூட்டாதேயினமருந்து கூட்டுகூட்டு-கோடான - கோடிபிணி சூலையும்போம்-காட்டாதேயெந்நாளும்பலநோயெல்லாய்-படைபட்டுவோடிடுமேகன்னரோகம். ... (௲௪௪௨)

வேறு.

கன்னரோகங் காதெழுச்சி காணுகுறியைக் கருதக்கேள்- முன்னஞ்சூடுகொண்டதின்மேல் மூலங்கடுத்து மேலேறி- அன்னமொறுத்துப் பசியன்றி யதிநித்திரை சோம்பலுங்கொடிதாய்ப், பின்னுங்கபால வாய்வாகிப் பீனிசங்கூடப் பிறந்திடுமே ... (௲௪௪௩)

கூடப்பிறந்த செவிக்கிரைச்சல் குடையுங்குத்துச்சலமோடு,வாடாநீராம் நாசிதனில் வறட்சியிரும லுண்டாகும், தேடாதன்னம் விஷம்போலே தியக்கமயக்க முண்டாகும், நாடாசீதங் கனத்துடலம் நய்யுமலநீர்க் கட்டிடுமே ... ... .. (௲௪௪௪)

கட்டுங்கண்ணி லொளிமயங்கும் கால்கையசைந்துவுளைவுண்டா, முட்டிச்சளியொன் றெனக்குற்று மூச்சுச்சுவாச மதிகரிக்கும், வெட்டுப்பட்ட பண்போலே மேனியெங்கும் விதனமுண்டா, மட்டுப்படாத செவிரோக மருந்துவெண்ணெ வைப்பீரே .. (௲௪௪௫)

மருந்துவெண்ணெ.

வைப்பீருண்ணநெய்தனக்குவகைகேள்நறுநெய்மருந்தரத்தை, வெப்பாலரிசி சீரகமும் விளாங்காய் சாதிக்காய்பத்திரி, ஒப்பாங்கிரும்பு மதிமதுர மோமமிரண்டு தாளிசபத்திரி, அப்பால் திரிபால் திரிகடுகு மிளகுகொத்த மல்லிவகை ... ... (௲௪௪௬)

வகையாரிடையா யதினிடை நற் சீனிகூட்டி மருந்துதனைத்,திகையவெதுப்பிப் பொடியாக்கிச் சினிகலந்து நெய்நாழி, பகையில்லாதே வெந்திறக்கித் தேனுமளாவிப் பதத்துடனே, நகையாதிறக்கியுண்டுவர நசியஞ்செய்ய நலமாமே ... .. (௲௪௪௭)

ஆமேசெவிக்குள் வருரோக மடங்கா நறுநெய் வேப்பெண்ணெ, மாமால்துயின்ற கடல்நுரையும் வசம்புவெள்ளுள்ளிவால்மிளகு; நாமாதுடல்போல் நற்சோகி நற்சீரகம் பூச்சிக்கூடும்,போமோவெந்துவிட்டடைக்கும் புனிதமாகும் காதெழுச்சி ... ... (௲௪௪௮)

சகலரோகந் தனக்குமெண்ணெ தானேலாதித் தயிலத்தைப், புகலாய்வைத்து முழுகிவரப் போமேசகல பீடையுந்தான், இகலாததுவே,சீரத்துக்கேற்குஞ்சீர சவுக்கியமாம், சுகமாயிருக்கும்படிசொன்னேம் பித்தசிலேர்ப்பன சுரம்போமே ... ... (௲௪௪௯)

பித்தசிலேற்பன சுரந்தன்னைப் பேசுங்காலை வகைகேளாய், குத்
துங்குளையு மிடுப்பசைந்து குளறிப்பேசுங் குறுவேர்வை- கத்துமிரு
டல் கைகால்கள் கடுக்குமூர்ச்சை யசதியுண்டா- மெத்தக்காது குடை
ந்திரையும் வெதும்புநாவு முலர்ந்திடுமே ... ... (தசருய)

உலர்ந்தேநாவிற் பிலாமுட்போ லுறையுந்தாகம் வயிறிரையும்-
கலந்தேபிறந்த மான்போலே காதல்கொடுக்குங் கடைசிவக்கு- மலந்
தான்கட்டுஞ் சிரங்கனக்கு மனமுங்குமட்டு மதிமயக்கு- மலர்ந்தேமு
கமும் பசந்திலங்கும் சாத்தியமென்னவறைவீரே ... (தசருக)

அறையுங்குணத்தின்படியிருந்தா லதற்கோர்கியாழமருந்தக்கே
ள்-சிறந்தமுத்தக் காசுடனே தெசாபுர மிலாமிச்சம்வேர் - நிறைந்த
பற்படாகமிரு வேலிவெட்பால் நெற்பொரியும்- துறந்தமாவி னிலை
யிறகில் சொன்னேமிதுதான்கொத்தமல்லி ... ... (தசருஉ)

இதுவொன்பதுவுஞ் சமன்கூட்டியிடித்துநாழி நீரிலிட்டு - யது
தானெட்டி லொன்றாக்கி யரத்தைப்பொடிமேல் முலைப்பாலும்-விதி
யாலிரவு பகலுமிரு போதுகுடிக்க விடாதாகில் - பதியவிதிலே மாத்
திரைகள் பாங்காய்கொடுநோய் பறந்திடுமே ... (தசருங)

பறந்தவியாதி யேதென்றால் பழையசுரமும் வகைதோஷம்- நி
றைந்தசன்னி பதிமூன்று நெடுமூச்சசதி நெஞ்செரிப்புப்- பிறந்தவி
க்கல் பித்தசிலேற்பன தோஷசுரமும் பிறிந்தோடும்- சிறந்தமலமூத்
திரம்நிகழுந் தெளிந்தேவிழியுஞ் சிறந்திடுமே ... (தசருச)

இடும்பைசெய்வா றேதென்னி லீரேழுநாள்வீறுடுங்கும்- படு
பாடனேகங் கைகடந்த பருவமெனவேடலைவுண்டாம்-நெடுநாள்மல
முங் கட்டிவிடும் நிகழ்கடுகுரோகணி கடுக்காய் - திடமாயிந்துப் புட
னேபேய்ப் புடலுங்கியாழத்துடன்கூட்டே ... ... (தசருரு)

கூட்டிக்கியாழ முலைப்பாலுங் குறுகி யிஞ்சிச்சாறுடனே - ஆட்
டிக்கொடுக்க மேற்பொடிதிப் பிலியுங்கோடா சூடியிட்டு- மூட்டமல
பந்தமுங்கழியும் மூர்ச்சைதெளியுஞ் சன்னியும்போம்-தாட்டாமனா
க்கட்புலத்தியனே சகலதோஷந் தணிந்திடுமே ... (தசருசு)

வேறு-கற்பமுறை.

தணியப்பா வுலைமுகத்தில் தருத்திகொண்டு - தரமாக வூதிவிடு
அழுகமட்டும்-பணியப்பா வெடுத்ததனை யாறவைத்துப்-பாங்காகப்பி
ன்பொருக்கா லழுகவூது-தணியப்பா பின்புமது குகையில்வைத்து-
துலங்கவே பின்பொருக்கால் நன்றாயூது - அணியப்பா காந்தமது தத
ராப்போல்திற்கு - மாகாகா காந்தசத் தருமைதானே (தசருஎ)

அருமையென்ற காந்தத்தை யுறுகுகையில்வைத்து- அப்பனே மூன்றுதிர மழுகவூது - பெருமையென்றகாந்தமது சத்தாய்போனு ற்-பேச்சேது சூதமொரு பலத்தைத்தாக்கிக் - கருமையென்றகாந்த மது சோதித்தேற-கருவளையல் வீரமொடு காரங்கூட்டி- யுரிமையெ ன்ற சாரமுடன் புழச்சாற்றாலாட்டி- யுலர்த்துவாய் பணம்போலே வில்லைசெய்யே ... ... ... (தசஅ௩அ)

வில்லைசெய்தமருந்தெல்லாஞ் சமனாய்ச்செய்து-மீறியதோர்கா ந்தசத் திருக்கும்போது - சொல்லுவேன் சத்துக்குச் சமனாய்த்தாக் கு-அடியாகவொவ்வொன்றிற் கொடுக்கவாங்கும்- அல்லாது சமனாகத் தாக்கிப்பின்பு-அப்பனேயோடுகொண்டு மூடிக்கொண்டு - வல்லதொ ருகுகையமூகநன்றாயூது-மகத்தான காந்தமது வங்கந்தானே (௯)

தானென்ன காந்தமதுவீயமாக - சாஸ்திரமெல்லாம்படித்தே னருமையெய்தே- நானென்ற வாணவத்தால் வெளியிற்போட்டேன்- நாட்டாதே கள்ளமொன்ற பிள்ளைக்கெல்லாம்-வானென்ற வீயமதைப் பதனம்பண்ணு - வண்மையா யதினுடைய நாகங்கேளு - வேனென் ற வயப்பொடிதான் பலந்தானஞ்சு - வெள்ளையுடன் தாளகமுஞ் சூத ங்கூட்டே ... ... ... (தசகூ௰)

கூட்டுவாய் கற்கமொடு சாரந்தன்னைக்- குறிப்பாக வகைக்கொர் பலவிதங்கூட்டி - மூட்டுவாய்ப்பூரித்து கழஞ்சியொன்று - முற்றிய தோர் வெண்கருவி னீராலாட்டு- ஆட்டுவா யிருசாம மனாத்துபின்பு- வளமாக வில்லைசெய்து ரவியிற்போடு-நாட்டுவா யுலர்ந்தபின்புகுகை க்குள்ளாக-நலமாக வைத்ததனைக் குகைவாய்மூடே ...(தசகூக)

மூடப்பா ஓடுகொண்டு சீலைசெய்து- முன்போலே யுருக்கியெ டு வெண்கலமாய்நிற்கும் - தேடப்பா முன்போலே சோதித்தேறு - செகமெல்லா மிரும்பினுட வியங்காணர்- ஆடப்பா விதினாட்டுச் சித் தராட்டு-அரகரா காந்தமது கூடித்தானல் - விடப்பா பிலத்துதடா மறவியேது- மிதமிஞ்சு மென்றுசொல்லி மறைத்திட்டாரே(தசகூ௨)

மறைத்திட்டா ரயத்தினொடு காந்தந்தன்னை - மக்களே யவமிருத் துத் தட்டுமென்று - குறைத்திட்டா ரறுசுவையும் கழற்றுமுன்பே- கொள்வதற்கு முதல்கற்ப மென்றுகூறு - நிறைத்திட்டே னுலகமெல் லாஞ் சித்தாய்ப்போக - நிலையானதாறுவகை யுறுதிசொன்னேன்- மு றைத்திட்டர் தப்பாமல் கற்பமுண்ண- முந்தவே அயமதவு மொழி ந்திட்டேனே ... ... ... (தசகூ௩)

மொழிந்ததொரு அயக்காந்தம் பலந்தான்ரொண்டு - மூத்தமிழ் சேர் புலத்தியனே வகையொன்றுக்கு- தெளிந்ததொரு தங்கமதுபல

ந்தான்றொண்டு- சேரவே மூன்றுமொன்று யுருக்கியாட்டு - குளிர்ந்த தொரு கல்வத்திற் பொடியாய்ச்செய்து - கூறப்பா கண்டிடைக்குச் சவ்வீரத்தை- வழிந்தோடு மச்சதிலேபனியிற்போடு-மாட்டாதங்க விடைசூதந்தானே ... ... .. ... (தசுசுச)

சூதமுறவாலையதாய் நாள்மூன்றில்தான்-சுறுக்காக நித்தியமொருசாமமாட்டி- நாதமுற முலைப்பாலா லாட்டுஆட்டு- இராப்பனியிற்போட்டுவிடு மூன்றுநாள்தான்-வாதமுறவேதையிடும் வாதிக்கல்லோ-வயித்தியத்தில் வாலைரச மாகச்சொன்னேன்- வேதையிதிலொட்டாது ஆசியாதே-வேதைக்குக் குறுவேளா விளம்பக்கேளே (தசுசுடு)

விளம்புவேன் வாலைரசங்கண் டிடைக்கிரட்டி - மீறியதோர் கெந்தியிடு சிலைபத்தொன்று-வளம்பெறவே பொற்றலையின் சாற்றாலாட்டு-வாசமா யிரண்டுநாளரைத்தபின்பு உளம்பிலக்கக் குப்பியிலேயுலர்த்தியிட்டு-உத்தமனே வாலுகையிற் றீயைமூட்டு- தளம்பெறவேமூன்றுநாள் முத்தீயிட்டு-தப்பாது தளமுறச்செந் தூரந்தானே ()

செந்தூரம் சிவப்பென்றால் முருக்கம்பூவொவ்வா - தேகமதுக் கழிவேது வயிரவனைப்பூசி- செந்தூர மெடுத்தடக்கிச் சிவனைப்பூசி-தேவியொடு கணபதிக்குப் பூசைபண்ணு - செந்தூரந் தின்பதற்குத் தீட்சைமுன்னே-செயமாகக்காரியமோ டிலக்கணமுஞ்சொன்னேன்-செந்தூரங் குன்றியிடை மூதண்டத்தின்-திறமான லேகியத்தில் பொதிந்துதின்னே ... ... ... (தசுசுஎ)

தின்னவே லேகியந்தான் முன்பேசெய்வாய்-தீட்சையிரு நூற்றுள்ளே திட்மாய்ச்சொன்னே - னண்ணலே லேகியத்தை யாருஞ்சொல்லா- ரழகாகக் காசிடை லேகியத்திற்கொள்ளு-உண்ணவே மண்டலங்கொள் வயசுகண்டு- உத்தமனே நோயென்ற தெல்லாம்போகும்-அன்னமொடு பால்சீனி பத்தியந்தா- னப்பனே மத்தொன்றுமாகாதென்னே ... ... ... (தசுசுஅ)

ஆகாது யென்றுசொன்ன தேதென்றாக்கா - லவமிருத்து தட்டுதற்குப் பத்தியம்வேணும்-வாகாகச் செந்தூரம் நோய்கொண்டோர்க்கு- வளமான வனுபான மறிந்துகூடடி-தாகான மண்டலமே குன்றிவிதஞ் - சாற்றினேம் நோயெல்லாந் தவறுண்டேபோம் - வாகான பத்தியங்கள்காக்கவேண்டா-மத்தியமாம் புகையிலையும்புளியுந்தானே

தானென்ற ரெண்டும்விட்டுக் கொண்டாற்கேளு- தவறாது சகல வியாதி களுந்தீரும் - ஊனென்ற வுடம்பெடுத்தாற் சாகாக்கல்வி-யுற்றவனே யிதுக்கல்லோ தளஞ்செந்தூரம்-மானென்ற பெண்கள்வலைக்குள்ளேசிக்கி - மாள்வதற்கோ செந்தூரவைப்பச்சொன்னேன் - தா

னென்ற பொய்விட்டு தன்னைக்காணுஞ்-சாதகமாய் லட்சியத்திற் குறி யைப்பாரோ ... ... ... ... (தசஎய)

பாரப்பா வாசியினால் யோகமாகும்- பரிவான தீட்சையினாற் சித்தியாகும்- காரப்பா சாபமெல்லாம் நிவர்த்திசெய்து- கற்பத்திலமுதகற்பங் காந்தங்கொள்ளு-சேரப்பாசித்திபெற கெதியினாலே- செந்தூர மெடுத்தாலே தெளிந்துகாணும்-பேரப்பா கேட்டுடனே யெமதூதர்கள்-பேசாதே யோடுவர்காண் பின்பாராதே ... (தசஎக)

பாராதே சித்தாந்த மொன்றுமில்லை- பஞ்சகர்த்தாள் சடலமது வேருமட்டுஞ்- சேராதே யென்றுசொல்லும் வேதாந்தத்தைத்-தெளிந்தறிய மாட்டார்கள் சைவமாடு- கூராதே பூரணமே தெய்வமன்றிக்-கோவிலுக்குச் சுயம்புவந்து யாதார்த்தைச் - சேராதே இருப்பதென்ன வென்றுசொல்லி - செப்பேடா சித்தாந்தந் தெளிவாமாடே ()

தெளிவான மனத்தோர்க்கு வாதஞ்சொன்னேன்- திடமற்ற மூடருக்குத் திடமுஞ்சொன்னேன்- தெளிவான மனத்தோர்க்குவயித்தியஞ்சொன்னேன்-செய்முறைக்குக்கற்பத்தி னெறியுஞ்சொன்னேன்-தெளிவான மனத்தோர்க்கு நூலுஞ்சொன்னேன்- சித்தியுடன் முத்திபெறயோகஞ்சொன்னேன்,தெளிவான மனத்தோர்க்குமவுனஞ்சொன்னேன்- தீட்சையொடு பூசைவிதி செப்பினேனே; (தசஎஙு)

செப்பினேன்வாதத்தில்லட்சங்காப்பு,திரமானவயித்தியத்தில்கொண்டுலெட்சஞ் - செப்பினேன்வாதநூ லாயிரந்தான்-தெளிவாகவொண்டுகெண்டந் திறத்தைத்தேர்ந்து - செப்பினேன்சூதந்தாளிருநூறப்பா-தீட்சைவிதி யிருநூறுந் தெளிவாய்ச்சொன்னேன்- செப்பினேன்ஞானமாயிரந் தான்தேர்ந்து- தெளிவாக விருநூறுந்திறந்திட்டேனே()

திறந்திட்டேன் வயித்தியத்திற்குறுக்கிலட்சஞ்-செப்பினேன் னதிற்பாதி யதனைத்தேர்ந்து- திறந்திட்டேன் வாதத்தின் சூத்திரம்போற்-றெளிவாக வயித்தியத்திற் சூத்திரஞ்சொன்னேன்-திறந்திட்டே னிவ்வண்ண மாகமூன்றுஞ்- சிறுபிள்ளைக் காணாலும் வயித்தியந்தான்-திறந்திட்டேன் பூரணசூத்திரந்தா னப்பா - செயலிருபத் தோராயிரத்தாறு நூறே ... ... ... (தசஎரு)

நூறான விருத்த மொன்றுங்காட்டி- நவலை மனுபவத்தினால் நாலுகாண்டம் - வீறான திதைக்குறுக்கிச் சூத்திரம்போல் - வெட்டவெளி பூரணசூஸ்திரத்தைச் சொன்னேன்- கூறான திருநூற்றுப் பதினாறுக்குள் - கொட்டினேன் சரிதையுடன் கிரிகைசொன்னேன்- பேறான யோகமொடு ஞானத்தோடு - சீலத்த சுவாசந்தனிலே பேணிக் காணே ... ... ... (தசஎசா)

காணப்யா விட்டகுறை மார்க்கந்தோணும் - கைவிட்டசூஸ்திர மாய் வெளியிற்போட்டேன் - தோணப்பாகற்பத்தினேர்மையாவுந் துடியாகக் குறுக்கியதை நூருய்ச்சொன்னேன் - பேணப்பாகற்பநூ லிருநூறுஞ்சொன்னேன் - பிலத்தமாந்திரிகை மைஞ்ஞூறுஞ்சொன் னேன்-பூணப்பாயிந்திரமு மயேந்திரஜாலம்-பூட்டினே னுயிரந்தான் புகழ்ந்துபாரோ ... ... ... (௲௯௱௭௭)

பாரப்பாவடிதொடுத்துக்கற்பங்கொண்டு - பரிவாகவுண்டுவருங் காலந்தன்னில்-தாரப்பாவாதமொடுபித்தத்தாலே-தனித்த சிலேற்பன த்தாலே தாறுமாறுந்- தூரப்பாபாரமாக்கற்பங்கொண்டு-சுழன்றுநீய லையாதே நோய்கள்வரும் நோய்கள் - காரப்பா செந்தூர மிௗங்கள் தோறுங்-கட்டாய்செந்தூரித்துகடக்கவையே (தசஎஅ)

வையப்பாகற்பங்கள் கொள்ளுமுன்னே-வகையானலேகியங்கள் சூரணங்கள்-செய்யப்பா கிருதங்கள்தயிலமோடு- கெட்டியாய்ச்செய் துகொண்டு கிரமத்தோடே-பொய்யாகஉரைப்பதென்னபுத்திசொன் னேன் - புலத்தியனே வதுக்குரைத்த வயித்தியமப்பா - மெய்யாகு மென்றோர்க்குமெய்யாநிற்கும் - விளம்பவென்றால் பொய்யாகும்வி ளம்பக்கேளே ... ... ... ...(௲௯௱௭௯)

கேளப்ப ரகற்பூரச் சலாசத்துத்தான்-கெடியாகப் பலமொன்று பொரிகாரந்தான் - நாளப்பா பலமொன்று ரெண்டுங்கூட்டி- நலமா னபருத்திவே ரத்திவேர்த்தோல்- நீளப்பா பாங்காகக் கியாழஞ்செய் து-நிசமாக விட்டாட்டு வொருநாள்மட்டு- மாளப்பா வஞ்செருவிற் புடத்தைப்போடு-ஆறியெடு கல்வத்தி லாட்டத்தானே (தசஅ0)

ஆட்டத்து ளாகுமடாவெண்கருவைவிட்டு- அரைத்துவில்லைசெ ய்துரவி யுலர்த்திக்கொண்டு - மாட்டவே யஞ்செருவிற் புடத்தைப் போட்டு - வாகாக வரைத்தரைத்து வஞ்சுதரமானல்-நாட்டவே வெ ண்பொடியா மதனையுண்ண-நலமானபெருவயறு மகோதரங்குஷ்ட ம்- ஓட்டப்பா நீர்ச்சிறுப்புக் கல்லடைப்பு - மோடுமெப்பாவெடியுப்பு ச் சுண்ணநீரோ ... ... ... ... (தசஅக)

வெடியுப்புப் பலம்பத்துப் பூநீறுபத்து - வேகமடா பழச்சா றுஞ் சாமமாட்டு- அடியுப்புக் கரண்டியிலே வார்த்துவைத்து- அப்ப னே கொதிக்கவைக்கச் சுண்ணமாகும்- கொடிதப்பா பீங்கானில்நீற தாகும் - கூறினேன் வயித்தியனுட வுப்புநீறே-துடியப்பாசலாசத் துத் தனக்குமுன்னே- தோயப்பா பலநோயுந்தணியுமன்றே ()

### வேறு-காமரசம்.

தணிந்தகாமரசந்தன்னைச் சாற்றக்கேளுபெரும்பாடும் - தணிந்தேபோகுமெலும்புருக்கித் தாதுநட்டம்ப்றமேகம்- தணிந்தேபோகும்ஷீணங்கள் சகலசுரங்கள் பண்புடனே-தணிந்தேபோகும்நீரிழிவு மோ்ராசிகாந்தல்வாந்தியுந்தூதே ... ... ... (தச௮௩)

தூதுவளம்பூமுருக்கம்பூ சொல்லும்வகைக்குநன்னாரி-பாதநெரிஞ்சிலேலநிலப் பனையும்வகைக்கோர்பலமாகும்- ஓதுமதுரம்நன்னாரிவொவ்வொன்றிரண்டாஞ்சதாவேலிப் - போதமூன்றுபலமுலர்த்திப் பொடித்தூள்வடியுங்கல்கண்டதுவே ... ...(தச௮௪)

கண்டபசுவின்பால்பதக்கு காச்சிப்பின்னைப்பொடிதூவிக் -இண்டித்திரண்டுவரும்போது பிளர்சர்க்கரைதேன்நெய்மூன்றும்- கொண்டவகைக்கோர்படிவிட்டுக் கூட்டித்தான்றிக்காயளவு-வண்டலுண்டு புளிகசப்பு மருந்தார்பெருமைவகைகேளீர் ... (தச௮௫)

பெரும்பாடுடனேயெலும்புருக்கி பிறமேகங்களோடிப்போம் தருந்தாதுகளுமிகஉண்டாஞ் சாருங்காணமிவையென்று-வரும்பார்வதிக்குவெள்விடையோன் மகிழ்ந்தேயருளிச்செய்ததுகா-ணிரும்பாருலகிலிதுபெரிதாமெந்தமருந்துஞ்சிறிதாமே ... (தச௮௬)

### பாலாட்சசூரணம்,

ஆமாம்பாலாட்சசூரணத்தை யறையக்கேளும்புலத்தியனே- ஆமாமுந்திரிப்பேரீச்சுமக்கிருகாரமதிமதுரம்- ஆமாங்கோஷ்டங்கொத்தமல்லி யமுக்கிருவேர்சடாமாஞ்சி - ஆமாமேலமிலவுங்க பத்திரிபட்டை யரத்தையெட்டே (தச௮௭)

எட்டாஞ்சாதிக்காய்பத்திரி கிரூப்புமிருசீரகமோடு- எட்டாந்திரிபால்திரிகடுகு மினியதாளிசபத்திரியும் - எட்டாஞ்சிறுநாகப்பூவுமிலாமிச்சம் வேர்வால்மிளகு- எட்டாஞ்செவியம்நன்னாரி கீழ்காய்நெல்லிநெற்பொரியே (தச௮௮)

பொரிசிற்றரத்தைநல்லகெந்தம் புகழ்சேர்வெட்டிவேர்தகர-மரிதாரந்திப்பிலிமூல மொடுசமமாகசுருசாணி - விரிவாமாதுளம் பழத்தோடுமேன்மைபெறுதக்கோலமல்லால்- தெரிதற்கூகைநீறு முத்தக் காசுஞ்சமனுய்சேர்க்கழஞ்சே (தச௮௯)

சேரக்கழஞ்சாய்க்காயவைத்து இடித்ததூளைவடிசெய்து - காரமுடையவங்காளச் சீனிசமனுய்க்கலந்தபின்பு - சாரமுடனேபுதுக்கரகந் தன்னிலடக்கியனுபானம் - நேரமறிந்துதேனிஞ்சிச் சாறும்நறுநெய்நீட்டிடுமே (தச௯௰)

இடுமேஅந்திசந்திவெருகடியாயொருமண்டலமிணங்கக், கொடுமேயதனூற்குணங்கேளுமருட்டும்வாந்திநெஞ்செரிப்பு; விடுமேயத்திசுரம்வெட்டைமேகந்தாதுநட்டமுதல் - படுமேயிருமல்களைக்குடும்பணைப்பும்யாவும் பறந்திடுமே (தசகூக)

வேறு

பறந்திடக்களைமேல்வந்த சுரம்போகக்கியாழங்கேளு- திறந்திட்டேன்வற்பூலாவேர் வில்வவேர்சிற்றுமுட்டி- யறைந்திட்டேன்விஷ்ணுகாந்தி நன்னாரியிவையோடைந்தும் - குறைந்திடா தொவ்வொன்றுக்குப் பலஞ்சுக்குமிளகுகூட்டே ... ... (தூசகூஉ)

கூட்டடாயிரண்டுமொன்றுக் கனாப்பலந்தானுமாக- நாட்டடாகட்டியஞ்சு கூறிட்டுவொருகூறுக்கு - மூட்டடா சலமிரண்டு படிவிட்டுயெட்டொன்றுக்கி - ஆட்டடாவந்திசந்தி யதிசூடுகளையுமாறும் ()

மாறுமேகளைசுரங்கள் வந்துள்ளபலநோயுந்தான்- வீறுமேயடங்கிப்போகும் வேறொருகுணமுமில்லை - தேறுமேவியாதியெல்லாந் தெளியுமேசிந்தையில்லை - ஆறுமேமருந்தில்நோய்க ளண்டாதுஅருளுமாமே ... ... ... ... தூசகூச

வேறு - சொர்ணகருஷ்ணவயிரவம்

ஆமப்பா புலத்தியனே சொர்ணகருஷ்ண - வயிரவத்தை யறைகிறே னன்பாய்க்கேளு - ஆமப்பா தங்கம்ரெண்டு காசுதன்னை - யச்சமாய் மேலசாகத் தகடுதட்டி - ஆமப்பா சாதிலிங்கங் கழஞ்சுநாலு-மதுவுட்னே சவ்வீரம் வெண்காரமணியும் - ஆமப்பா சுத்துசெய்து தகட்டில்வைத்து - அடைவாகப் பொதிந்தபின்பு மறைகிறேனே ()

அறைகிறேனொருசட்டிக்குள் கற்சுண்ண - மளந்துவொரு படிபோட்டு அதிலேதானும் - குறையாம லொருபடி சாராயம்விட்டு - கூறுகநீற்றியதைக் குகையுஞ்செய்து - நிறையாகச் சட்டிக்குள் குகைநடுவேவைப்பாய் - நீதியாய் தங்கத்தின் தகட்டுப்பொட்டணத்தை- மறையாமல் பதியவைத்து மேலுஞ்சாராயம்-தழுவாம லரைப்படியும் விட்டிடாயே (தசகூரு)

விட்டபின்பு கற்சுண்ண நீறால்மூடி - மேற்சட்டி கவிழ்த்தியேசீலைமண்செய்து - சட்டமாய் விநாயகனைப் பூசைசெய்து - தாயாரையர்ச்சித்து அடுப்பிலேற்றி- இட்டமாய்தியானித்துக் கமலவன்னி-யெரியிடுவாயிருசாமம் செந்தூரமாகும்-மஷ்டதிக்கும் வெல்லுமடா சதநோய்க்கு - மாணியடா வனுபானத் தாட்டுஆட்டே (தசகூஎ

ஆட்டடாகோழிமுட்டைத் தயிலம்வாங்கி - யதிலேதா னிருகழஞ்சு தயிலந்தன்னில்- பூட்டடா செந்தூரம் பணவிடைதா னென்று - போதிரண்டு மண்டலந்தான் பூட்டுபூட்டு- மூட்டடா மவுனமற்றப் பசாசுபேய்கள் - முரணான க்ஷயகாசங் குன்மநஷ்டம்-நீட்டடா மேகவகை நீரிழிவுசோகை- நில்லாத கிறாணியொடு பவுத்திரங்கள் போமே

போமப்பா பவுத்திரங்கள் கரப்பனொடு கிரந்திப்- புண்பொடிகளையாப்பு புடைத்தெழுந்த விரணம் - போமப்பா விஷபாகம்பாண்டு பெருவயறு - பொல்லாத பித்தகாமாலையொடுசோகை- போமப்பா மூலமுளைப் பீனிசம் நீர்ப்பாச்சல்- பொருமலொடு தாகமல்லாவிளையிருமலுந்தான்- போமப்பா பலரோக மெல்லாம்போகும்- பிணியறிந்து வனுபானம்பூட்டலாமே ... ... (௩௪௯)

ஆமப்பா வாகடத்திற் சூத்திரத்தை யெல்லா - மறைந்திட்டேனனுவொன்றுமடக்கமில்லை- வேமப்பா நோயெல்லாம்படுதீப் பற்றும் வேறுள்ளநோய்க்கெல்லாம் விபரமில்லை - சோமப்பாவிந்தநூல்தொகையேதென்றால் - சொல்லுகிறே னாயிரத்தைஞ் ஞாறுஞ் சொல்லும் நாமப்பா வுள்ளபடி சொல்லிவைத்தோம் - நாதாக்கள் கடாக்ஷத்தால் சூத்திரந்தான்முற்றே ... ... ... (௩௫௰)

—*❁*—

அகத்தியமுனிவருளிச்செய்த

## வயித்தியகாவியம் - ௩௫௰

## முற்றிற்று.